முத்துலட்சுமி ராகவன்



# ஏழு ஸ்வரங்கள்...

முதல் ஸ்வரம்...

சந்தம் தந்தம் சொந்தம்

## முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# ஏழு ஸ்வரங்கள்...

### முதல் ஸ்வரம்

## 'சந்தம் தந்த சொந்தம்...




*நான் செதுக்கும் சிற்பத்தில்..*
*உன் உருவம் எப்படி வந்தது..?*

மாட மாளிகைகளும்.. கூட கோபுரங்களுமா ஒளிர்ந்து கொண்டிருந்தது மாமல்லபுரம்.. நீண்ட நெடும் வீதிகள் பல்லவர்களின் செல்வச் செழுமையை பறைசாற்றின.. வீதிகளில் இருந்த அங்காடிகளில் குவிந்திருந்த ஜனத்திரளின் இரைச்சல் கடலோரப் பாறைகளின் மீது ஓங்கி அடித்துக் கொண்டிருந்த அலைகளின் இரைச்சலை விட அதிகமானதாக இருந்தது.. அங்காடிகள் தோறும் ஏற்றுமதி.. இறக்குமதிப் பொருள்கள் குவிந்து கிடந்தன.. துறைமுகத்தில் வந்து நின்ற 'நாவாய்' களிலிருந்து இறக்கப்பட்ட பொருள்கள் துறைமுகத்தில் நிரம்பிக் கிடந்தன.. இவைகளைக் கண்டு களித்தபடி தனது புரவியில் சென்று கொண்டிருந்தான் நரசிம்மன்..

மாலை மயங்கி இருள் சூழ்ந்த அந்நேரத்தில் டலலைகளின் இரைச்சல் ஓங்காரமிட்டது.. அந்த ங்காரத்தினால் அவனை அச்சப்படுத்த இயலவில்லை.. எண்ணற்ற போர்க்களங்களைக் கண்ட அந்த மாவீரன் எதற்கும் அஞ்சாதவன் என்பதை உணர்ந்த கடலலை மௌனமாக தனது தோல்வியை ஒப்புக் கொண்டு கடலுக்குள் பின்வாங்கியது..

கடற்கரையை ஒட்டிய மரத்தடியில் புரவியிலிருந்து குதித்து இறங்கிய நரசிம்மன், புரவியை மரத்தில் கட்டிவிட்டு கடலோரக் குன்றுக்கு கடற்கரை மணலில் கால்கள் புதைய நடந்தான்..

குன்று என்று சொல்வதை விடச் சிற்பங்களின் தொகுப்பு என்று சொல்வதே சாலச் சிறந்தது என்று சொல்லாமல் சொல்வதைப் போல.. சிற்பங்களால் எழுந்திருந்த குன்றின் சுவர் அவனது கலாரசிக மனதை காந்தமென பற்றி இழுத்தது.. சுவரின் மீது குடைந்து வடிக்கப் பட்டிருந்த சிற்பங்களின் நுணுக்கத்தில் அவன் மனம் லயித்தது.. அப்போ   கடலோரமாக..

"ஜல்.. ஜல்.." என்ற சதங்கையின் சப்தம் கேட்டது..

'யார் அது..?'

நரசிம்மனின் ரசனைக்கு இடையூறு நேர்ந்ததில் அவனுக்குள் எரிச்சல் ஏற்படவில்லை.. மாறாக அந்த சலங்கை ஒலியின் மூலத்தை அறிந்து கொள்ள அவன் விழைந்தான்..

அவன் பார்வை கூர்மையாக.. இருளைத் துளைத்து.. கடலலைகளின் வெண்மை நிற எழுச்சியின் பின்னணியில் ஏதேனும் கடல்மோகினி தென்படுகிறாளா என்று துழாவியது..

அலைகடலின் ஆவேச சப்தம் சலங்கையொலியை அமிழ்த்த முயன்று ஓங்காரமிட்டது.. நரசிம்ம பல்லவனின் செவிகள் கூர்மையாகின.. அவன் செவிகளைத் தீட்டிக் கொண்டு சலங்கையின் ஒலி வந்த இடத்தை நோக்கி நடந்தான்..

அவன் நெருங்க.. நெருங்க.. சலங்கையின் ஒலி..

"ஜல்.. ஜல்.." என்ற சப்தத்துடன் பின் வாங்கியது..

"யார்..?" நரசிம்மன் அதட்டினான்..

இருளின் போர்வையில் அவனுக்குப் பதில் கிடைக்க வில்லை.. நூதனமான அந்த அனுபவம் அவனுக்குள் ஆச்சரிய அலைகளை செழுத்தின.. அலையோரமாக நின்ற பல்லவனின் பாதங்களை ஓங்கி அறைந்து தன் இருப்பை உணர்த்தி மீண்ட அலைகளால் அவன் தேடும் கடல் மோகினியை அவன் கண்களுக்கு காட்ட இயலவில்லை..

"இந்த இரவு வேளையில் இங்கிருப்பது யார்..?" நரசிம்மன் குரலெழுப்பினான்..

இப்போது சலங்கை ஒலி நின்று அவன் கேள்வியை செவி மடுப்பதைப் போல மௌனமாக இருந்தது.. அலை கடலின் ஓரமாக ஒரு வெண்மைநிற ஒளி தோன்றி.. அருகிலிருந்த மரக்கலத்தின் பின்னால் மறைவதைப் போல இருந்தது..

நரசிம்மன் வேக நடையுடன் சடுதியில் அவ்விடத்தை அணுகினான்.. ஓடத்தின் பின்னால் மறைந்திருந்த உருவத்தின் கை பற்றி அருகினில் இழுத்தான்.

அவன் பற்றியிருந்த கர˙ வெண்ணையின் குழைவோடு இருந்தது.. போதாக்குறைக்கு.. அந்தக் கரத்தில் வளையல்கள் உருண்டன..

வளைகரத்தின் மென்மையில் நரசிம்மனின் இறுகியபிடி தளர்ந்தாலும்.. அவள் முற்றிலுமாக அந்தக் கரத்தை விட்டு விடவில்லை. அவன் உணர்ந்த வெண்மையின் குழைவு.. அந்த தரிர் கரத்தை விடுவிக்க அனுமதிக்கவில்லை..

"யார் நீ..?"

முகம் சரியாகத் தெரியாத நிலவின் ஒளியில் மோகினி போல் நின்ற அந்த வடிவத்திடம் அவன் கேட்டான்.. பதில் வரவில்லை.. "இந்த இருள் சூழ்ந் வேளையில் இங்கே என்ன செய்கிறாய் பெண்ணே..? தரிமையில் ஒரு பெண்.. ஆளரவமற்ற கடற்கரை ஓரமாக நடமாடுவது உகந்ததல்ல என்று உனக்குத் தெரியாதா..? இலை.. உன் பெற்றோர் அதை உனக்குச் சொல்லி வளர்க்கவில்லையா..?"

அவனது கோர்வையான கேள்விக்கு பதில் கிடைத் விட்டது.. அந்த வெண்ணிற ஒளி யான்ற பெண் வடிவம் வாய்திறந்தது..

"என் பெற்றோர் என்னை நன்முறையிலேயே வளர்த்திருக்கிறார்கள்.. இளவரசே..! மகேந்திர பல்லவ சக்கரவர்த்தியின் ஆளுகைக்கு உட்பட்ட கடலோர கிராமத்தில் தங்களின் மகளுக்குயாதொரு ஆபத்தும் நேராது என்ற நம்பிக்கையையுட அவர்களே எனக்கு அளித்தார்கள் அரசே..!"

அவளின் வினயமான அறிவு ட்பம் கொண்ட பதில் நரசிம்மனின் இதழ்களில் புன்னகையை வரவழைத்தது.. நிலவின் மங்கிய ஒளியில் ஓவியம் ரோல நின்ற பெண்ணின் முக வடிவை முழுதாக பார்த்து விடஅவன் விரும்பினான்..

அவளை அணுகினான்.. அவன் நெருங்கிய வேளையில் அவள் பின் வாங்கினாள்.. அமர்ந்திருந்த அவளின் சலங்கை ஒலி ஒலித்தது..

"ஜல்.. ஜல்.."

நரசிம்மனின் செவிகளை அந்த சலங்கை ஒலியின் நாதம் நனைத்தது.. நரசிம்மனுக்குள் பரவிய இதமான மெல்லிய உணர்வு அவனுக்குள் குளிர் சேர்ந்த ஓர் நூலிலை போன்ற அனுபவத்தை உணர்த்தியது..

நரசிம்மனை அந்த சலங்கையின் நாதம் ஏதோ செய்தது.. அந்த இரவுப் பொழுதும்.. அலைகடலின் ஓரமும்.. மங்கிய நிலவொளியும்.. அதில் தெரிந்த அலை போன்ற வடிவமுடைய பெண்ணழகும்.. அவளது கரம் உணர்த்திய வெண்மையின் குழைவும் அவனை எங்கோ அழைத்துச் சென்றன...

அவன் கலைப்பிரியன்.. ஆடலிலும்.. பாடலிலும் மனதை இழப்பவன்.. அவற்றில் லயிப்பவன்.. அவை யிரண்டிலும் வல்லவன்.. சிற்பக்கலையை நேசிப்பவன்..

நரசிம்மன் பாடினால் கேட்பவர் மயங்கிப் போ அவன் எதைக் கேட்டாலும் சாசனம் பண்ணிக் கொடுத்து விடச் சித்மாகி விடுவார்கள்..

அவன் ஆடினால் அந்த நடராஜன் நேரில் வந்து அவனுக்கு கேட்ட வரத்தை அளித்து விடுவார்..

அப்படிப்பட்ட கலைஞனும்.. ஆடல்கலை வல்லுனனும்.. மிகச் சிறந்த பாடகனுமான நரசிம்மன் கலாரசிகனாக இருந்ததில் வியப்பேதும் இல்லை.. போர்வாளை விட அவன் கலைகளையே அதிகம் நேசித்தான்..

அந்த நரசிம்மன்.. இருள் சூழ்ந்த இரவில்.. அலைகடலின் பின்னணியில்.. நிலவின் ஒளியில்.. மாய மோகினியைப் போன்ற கடல் மோகினியின் வடிவில்.. 'ஜல்.. ஜல்.. என்ற சலங்கையின் நாதத்தில் மயங்காமல் இருப்பானா..?

"அது அலைகடல் பெண்ணே..!" அவள் இளநகையுடன் சொன்னான்..

அவன் நெருங்குவதில் அந்தப் பெண் வடிவம் பின் வாங்கினால் கடலுக்குள்தான் செல்ல வேண்டியிருக்கும் என்பதை அவனது வார்த்தைகள் அவளுக்கு உணர்த்த முற்பட்டன..

"அறிவேன் அரசே..!" மோகினி வடிவம் பதில் சொல்லியபடியே அலை கடலுக்குள் பின்வாங்கியது..

"நில் பெண்ணே..!"

"ஏன் அரசே..?"

"நான் அரசனில்லை.. இளவரசன்தான்.. சக்கரவர்த்தி மகேந்திர பல்லவர்தான் இந்த நாட்டுக்கு அரசர்..! இதை நீ அறிய மாட்டாயா..?"

"அறிவேன் அரசே..! தாங்கள் இந்த நாட்டின் சக்கரவர்த்தியாக இல்லாமல் இளவரசுப் பட்டம் சூட்டப் பெற்றவராக இருக்கலாம்.. ஆனால்.. கலைகளுக்கு தாங்கள் அல்லவோ பேரரசர்..!"

அந்தப் பெண்ணின் தழைந்த குரலின் நெகிழ்வில் அவன் பெருத்த வியப்பை அடைந்தான். அந்தக் குரலின் நெகிழ்வு சொல்வதென்ன..? அவனை அவள் அறிவாளா..?

"நீ.. நீ.."

"சொல்லுங்கள் அரசே..!"

"நீ கடல்மோகினியில்லையா..?"

அவனது கேள்விக்கு அவள் பதில் சொல்லாமல் கலகலவென்று நகைத்தாள்.. வெள்ளிக் காசுகளை சிதற விட்டதைப் போன்ற அவளது சிரிப்பொலியுடன் சலங்கையின் சப்தமும் சேர்ந்து கொள்ள..

"ஆம் அரசே..! நான் கடல் மோகினிதான்.." என்று சொல்லியபடி கடலோரமாக அவள் ஓடி விட்டாள்..

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*




# 1

உருவத்தோடு போராடலாம்..
நிழலோடு எப்படிப் போராடுவது..?

**மா**லை மயங்கிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் கடற்கரை மணலின் துகள்கள் தங்க நிறத்தில் தகதகப்பதை தனது செல்போனில் படம் பிடித்தான் சித்தார்த்தன்.. கடலோரக் கோவில்களின் சிற்ப நுணுக்கங்களை ஆச்சரிய ˙ டன் பார்வையிட்டவனுக்கு இதை உருவாக்கியவன் மகா கலைஞன் என்ற சிலிர்ப்பு ஏற்பட்டது..

உலகம் முழுவதும் அறியப்பட்ட அந்த சிற்ப நகரமான ாமல்லபுரத்தின் கடற்கரையில் அலைகள் கால் நனைக்க

நின்றவனுக்கு.. இந்தக் கலை பொக்கிசங்கள் எங்களின் இந்தியத் திருநாட்டைச் சேர்ந்தவை என்ற பெருமிதத்தில் நெஞ்சு புடைத்தது...

"ஆ.. ஆ.. ஆ:..

மெலிதான ராகத்தில் அவன் தூக்கி வாரிப் போட திரும்பிப் பார்த்தான்.. மாலை மயங்கி இருள் சூழ்ந்து கொண்டிருந்த அந்த வேளையில் கடற்கரையில் ஜன நடமாட்டம் குறைந்திருந்தது..

கைவண்டிகளின் விளக்கு ஒளிர்வும்.. கடற்கரை ஓர உணவகங்களின் விளக்குகளும் அந்தக் கடற்கரையை வெளிச்சமிட்டுக் காட்டினாலும்.. சுற்றிப் பார்க்க வந்தவர்கள் அந்த இடத்தை விட்டு அகன்று கொண்டிருந்தார்கள்..

அங்கொருவரும்.. இங்கொருவருமாக இருந்த கடற்கரையில் அந்த சுகமான ராகம் எங்கிருந்து வருகிறது..?

சித்தார்த்தன் செல்போனை அணைத்துவிட்டு.. காற்றில் கலந்து வந்த ராகம் வந்த திசையை நோக்கி நடந்தான்..

ந்து ரதங்கள்' எனப்படும் 'பஞ்ச பாண்டவரின் ரதங்கள்.. தெற்கிலிருந்து வடக்காக சரிந்த சிறு குன்றிலிருந்து செதுக்கப் பட்டிருந்தது... இவை ஒற்றைக்கல் கோவில்களாக.. சிறு தொகுதியாக கடற்கரை ஓரத்தில் கம்பீரமாக வீற்றிருந்தது.. பஞ்ச பாண்டவ ரதங்கள் என்று அழைக்கப்படும் இந்த ஐந்து ரதங்களுக்கும்.. மகா பாரதத்திற்கும்.. யாதொரு தொடர்பும் இல்லை.. எதனால் இந்தப் பெயர் உருவானது என்று யோசித்தபடி நடந்த

சித்தார்த்தனை.. அந்த இருள் படறத் தொடங்கிய நேரத்திலும் மாமல்லபுரத்தின் சிற்பக்கலை கவர்ந்தது..

இயற்கையான பாறையை மேலிருந்து கீழ்நோக்கிச் செதுக்கித் தோற்றுவிக்கப்பட்ட ஒற்றைக்கல் கோவிலே 'ரதம்' என்று அழைக்கப்படுகிறது.. இதன் தோற்றம் 'தேர்' போலவே அமைந்திருப்பதால்.. 'தேர்' என்ற பொருள்படும் 'ரதம்' என்ற பெயர் இவற்றுக்கு சூட்டப்பட்டது.. இந்த ரதக் கோவில்களே.. பல்லவர்காலத்துக் கோவில்களுக்கு பின்னால் கட்டப்பட்ட கோவில்களுக்கு முன்மாதிரியாக அமைந்தன.. இவற்றின் மேல்பகுதி விமானம் என்று அழைக்கப்படுகிறது..

ஒவ்வொரு ரதக் கோவில்களிலும் தனி விதமாய் தூண்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன.. ஒவ்வொரு ரதத்திற்கும் ஒரு கருவறை உண்டு.. கருவறைக்கு இருபுறமும் வாயிற்காப்போரும் உண்டு..

அந்த ரதங்களை ஒட்டிய பகுதியிலிருந்துதான் அந்தப் பெண் குரலின் கானம் கேட்டது.. சித்தார்த்தன் தூண் மறைவில் ஏதேனும் பெண் இருக்கிறாளா என்று தேடியபடி ஐந்து ரதக் கோவில்களுக்குள் சுற்றினான்..

*"ஏழு ஸ்வரங்களுக்குள்..*
*எத்தனை பாடல்..?"*

உணர்வுமலைகளை ஒன்று சுமந்ததைப் போல நெகிழ்வுடன் வந்தது அந்த கீதம்.. காற்றினிலே வரும் கீதத்தைப் பாடும் நாயகி யாராக இருப்பாள் என்று சித்தார்த்தனின் உடல் சிலிர்த்துப் போனது..

ஐந்து ரதக் கோவில்களில் ஆள்கள் இல்லை.. அங்கொருவரும்.. இங்கொருவருமாக இருந்தவர்கள் கடற்கரை மணலில் நடமாடிக் கொண்டிருந்தார்களே தவிர.. ரதத்தின் அருகில் வரவில்லை..

'பின்னே.. இந்த இருட்டு வேளையிலே ர கோவிலுக்குள்ளே வந்து எந்தச் சிற்பத்தைப் பார் போகிறாங்க..?'

அப்படிப்பட்ட ஆளரவற்ற தனிமையில் கானம் இசைப்பவள் யாராக இருக்கக் கூடும்..?

'மோகினியா..?'

அவனுக்கு உடல் வியர்க்கவில்லை.. சிரிப்புத்தான் வந்தது.. மோகினிப் பேய்க்கு இவ்வளவு இனிமையான குரலா..?

'ஆயகலை அறுபத்தி நான்கும் கற்ற மோகினி பால..'

அவனுக்கு அந்த மோகினியைப் பார்த்தே ஆக வேண்டும் போல தோன்றிவிட்டது..

ஆளில்லாத இடத்தில் மோகினியே வந்த பாடும் போது ஆண்பிள்ளை சிங்கமான அவன் அஞ்சி விலகிப் போவதா..?

'யாரடி நீ மோகினின்னு மோகினிப் பேயை மீட் பண்ணிக் கேட்கலைன்னா நானெல்லாம் என்ன ஆம்பளை..?'

சித்தார்த்தன் அச்சமில்லாமல் அந்த பாடல் வந்த திசையில் காற்றினில் வந்த கீதத்தின் சுவடைப் பற்றியபடி கீதத்தின் மூலத்தைத் தேடிப் போனான்..

இப்போது மிக அருகில் அந்த பாடல் ஒலித்தது..

*"ஏழு ஸ்வரங்களுக்குள்..*
*எத்தனை பாடல்..?*
*இதய ஸ்வரங்களுக்குள்..*
*எத்தனை கேள்வி..?*
*காணும் மனிதருக்குள்..*
*எத்தனை சலனம்..?*
*வெறும் கற்பனை சந்தோசத்தில்*
*அவரது கவனம்..*
*ஏழு ஸ்வரங்களுக்குள்..*
*எத்தனை பாடல்..?"*

சித்தார்த்தன் நின்று விட்டான்.. பொருள் பதிந்த அந்தப் பாட்டில் அவன் மனம் லயித்தது.. இந்தப் பாடலை இதற்கு முன்னால் கேட்டிருக்கிறோமா என்று அவன் யோசித்தான்.. அவனது நினைவுக் குவியல் இல்லை என்ற பதிலைத் தந்தது..

அவன் இக்கால இளைஞன்.. நகரத்தில் பிறந்து வளர்ந்தவன்.. மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவன்.. காதைக் கிழிக்கும் பாப் இசைக்கும்.. டிஸ்கொதே ஆட்டங்களுக்கும் பழக்கப்பட்டவன்..

இதுபோன்ற ஆழ்ந்த குரலுடன் கூடிய அருமையான தத்துவப் பாடலை அவன் கேட்டதே இல்லை..

ஏனோ தெரியவில்லை.. அவன் இதயக் கதவை அந்தப்பாடலின் கேள்விகள் தட்டித் திறந்தன..

*"காலை எழுந்தவுடன்*
*நாளைய கேள்வி..*

*அது கையில் கிடைத்த பின்னும்..*
*துடிக்குது ஆவி..*
*ஏனென்ற கேள்வியொன்று*
*என்றைக்கும் தங்கும்..*
*மனிதன் இன்பம் துன்பம் எதிலும்..*
*கேள்விதான் மிஞ்சும்..*
*ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்..?"*

ரதத்தின் தூணில் சாய்ந்து நின்று கண்களை மூடிக் கொண்டான் சித்தார்த்தான்.. கடலலைகளின் சப்தம் அந்தப் பாடலுக்கான தாள லயம் போல அவனுக்குத் தோன்றியது.. ஓர் அலையாய் எழுந்து அவன் மனதை நனைத்த அந்தப் பாடலின் சங்கீதத் திவலைகளில் நனைந்தது அவன் மனது.

இதுபோன்ற நுட்பமான அலையுணர்வை இதற்கு முன்பு அவன் அறிந்ததில்லையென்று அவனது அறிவு அவனுக்கு அறிவுறுத்தியது. சித்தார்த்தன், அடுத்த ரதக் கோவிலுக்கு நகர்ந்தான்..

ஏனோ அவன் மனதில் பாரம் வந்தது.. இன்னதென்று விளங்காத ஏக்கம் அவன் மனதைச் சூழ்ந்தது.. ஏன்.. எதற்காக.. என்று தெரியாமல் அவனை காந்தம் போல வசியம் பண்ணி இழுத்த அந்தப் பாடலின் ஒலியின் சுவடைப் பிடித்த வண்ணம் குரலுக்குரிய மோகினியை அவன் தேடிக் கொண்டிருந்தான்.. அவன் கண்கள் பனித்ததிற்கான காரணம் புரியாமல் குழம்பினான்..

*"எனக்காக நீ அழுதால்..*
*இயற்கையில் நடக்கும்..*
*நீ எனக்காக உணவு உண்ண*
*எப்படி நடக்கும்..?*

*நமக்கென்று பூமியிலே*
*கடமைகள் உண்டு..*
*அதை நமக்காக நம் கையில்*
*செய்வது நன்று..*
*ஏழுஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்..”*

ஏன் இந்தக்குரல் அவனை ஈர்க்கிறது..? சித்தார்த்தன் பித்துப் பிடித்தவனைப் போல ஆனான்.. ஜென்ம.. ஜென்மமாக அவன் அறிந்த குரலைப் போல அந்தக் குரல் அவனை வசியப்படுத்தி இழுப்பதற்கான தாத்பர்யம்தான் என்ன..? அதைப் பாடும் மோகினியை அவன் அறிவானா..? எ ப் பிறப்பில் அவளை அவன் அறிவான்..?

*“ஆரம்பத்தில் பிறப்பும்..*
*உன் கையில் இல்லை..*
*இதில் அடுத்தடுத்த நடப்பும்*
*உன் கையில் இல்லை..*
*பாதை வகுத்த பின்பு*
*பயந்தென்ன லாபம்..?*
*அதில் பயணம் நடத்திவிடு*
*மறைந்திடும் பாவம்..*
*ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்..?”*

உருக்கமான தொனியில் ஒலித்த குரலை அவன் சமீபித்து விட்டான்.. ஐந்தாவது ரதத்தின் தூண்களில் ஒன்றில் சாய்ந்து நின்று பாடிக் கொண்டிருந்தாள் அந்தப் பெண்.. காலடியோசையில் திரும்பிப் பார்த்தவளின் பாடல் நின்றது.. அவளது விழிகள் சித்தார்த்தனின் முகத்தை கூர்ந்து பார்த்தன.. அதில் தெரிந்த தவிப்பு.. சித்தார்த்தன் கொண்ட தவிப்பிற்கு இணையாக இருந்தது.. இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி சிலைகளாக நின்றார்கள்..



# 2

## செதுக்கி வைத்தது சிற்பமா..?
## இல்லை உனது உருவமா..?

நான் கடல் மோகினிதான் என்று அறிவித்து விட்டு சோழிகளை அள்ளி வீசியதைப் போலச் சிரித்தபடி ஓடிய அந்த மாய மோகினியின் பின்னால் ஓட விழைந்தது மாமல்லனான நரசிம்மனின் மனம்.. அவனும் ஓட முனைந்தான்..

"இளவரசே..! தாங்களா..?" என்ற குரல் அவனைத் தடுத்து நிறுத்தி பூவுலகுக்கு கொண்டு வந்தது..

திரும்பிப் பார்த்தான்.. அங்கே சிற்பி ஆயனர் குவித்தபடி நின்று கொண்டிருந்தார்..

"தாங்கள் எனக்குக் கரம் குவிப்ப ா..? தவறு பெருமானே..!"

நரசிம்மன் கடல் அலைகளின் ஸ்பரிசத்தைத் துறந்து கடலை விட்டு வெளியே வந்தான்.. ஆயனர் குவித்த கரங்களை விலக்கவில்லை.. மறுப்பாக தலையை அசைத்தவர்..

"இந்தக் கரங்கள் தங்களுக்கும். சக்கரவர்த்திப் பெருமானுக்கும் மட்டும்தானே குவிந்து வணக்கம் சொல்லும் அரசே..? தங்கள் இருவரையன்றி வேறு யாருக்கு இந்தக் கரங்கள் குவியும்..?" என்று கரகரத்த குரலில் நெகிழ்வுடன் சொன்னார்..

அதற்குள் கடற்கரை மணலில் ஏறிவிட்ட நரசிம்ம பல்லவன் சிற்பியின் கரங்களைப் பற்றிக் கொண்டான்..

"இந்தக் கரங்கள்.. உயிரற்ற பாறையை உயிருள்ள தாக்கும் சிற்பங்களைச் செதுக்கும் சிற்பியுடையவை ஆயனர் பெருமானே..! படைப்பவர் வணங்ககக் கூடாது.."

"அந்தப் படைப்புக்கு வழி வகுத்துக் கொடுத்தது தாங்கள் அல்லவா.. வாளைக் கூர்மையாக்கி யுத்தகளம் புகுந்து குருதிப் புனலில் நீராடுவது மட்டுமே ஷத்திரிய தர்மம் என்ற நியதியைக் கொண்டிருக்கும் போது.. போருடன் ஆயகலைகள் அறுபத்தி நான்கையும் அறிந்து வைத்திருக்கும் தங்களைப் போன்ற கலைஞன் இந்த பூவுலகில் உண்டோ..?"

"போர்க்களம் புகுபவனுக்கு கலைகளின் மீது விருப்பம் இருக்கக் கூடாது என்று யார் நியதி வகுத்தது ஆயனரே..! வாளேந்தும் கரங்கள்.. யாழ் மீட்டக்கூடாது என்று என் தந்தையான மகேந்திர பல்லவச் சக்கரவர்த்தி சட்டம் இயற்றியிருக்கிறாரா என்ன..?"

நரசிம்மனின் கேள்விக்கு மறுமொழி கூற முடியாமல் குழைந்து நின்றார் ஆயனர்.. குவிந்த அவரது கரங்களை விலக்கி விட்டு அவருடன் இணையாக நடக்க முயன்றான் நரசிம்மன்..

ஆயனர் அவ்விதம் நடக்கவில்லை.. அவர் நரசிம்மனுடன் இணையாக நடப்பதைத் தவிர்த்து.. இரண்டடி பின் தங்கியே நடை பயின்றார்.. அதை ஓரவிழிப் பார்வையில் கண்டுணர்ந்த நரசிம்மன் தனக்குள் நகைத்துக் கொண்டான்..

'மன்னர்கள் மாற முயன்றாலும்.. மக்கள் அதற்கு அவ்வளவு எளிதில் உடன்பட்டு விடவதில்லை..

கடலோரப் பாறையில் அமர்ந்தவனுக்கு எதிரே நின்ற ஆயனரைப் பார்த்து புருவங்களை சுருக்கினான் நரசிம்மன்..

"கால்கள் கடுக்க நிற்க வேண்டும் என்ற வேண்டுதல் எதுவும் வைத்திருக்கிரீர்களா சிற்பி பெருமானே..?"

"அல்ல இளவரசே..!"

"பின் எதற்காக நிற்கிறீர்கள்..? அமருங்கள்.."

கம்பீரமாக தன் எதிரே இருந்த பாறையைக் காட்டினான் நரசிம்ம பல்லவன்.. தயக்கத்துடன் சற்றுத் தள்ளி இருந்த அளவில் குறைந்த சிறு பாறையில் உட்கார்ந்தார் ஆயனர்..

"சிற்ப வேலை எந்த அளவில் இருக்கிறது ஆயனரே..?"

"ஒரு குறைவுமில்லாமல் விரைந்து நடந் கொண்டிருக்கிறது அரசர் பெருமானே.."

"தங்களுக்கான உளிகள் கூர்மையுடன்.. தாங்கள் கேட்கும் வடிவமைப்பில் தரப்பட்டனவா..?"

"ஆம் அரசே..! தங்களின் கட்டளைப்படி.. தமது சேவகர்கள் அனுதினமும் என்னை அணுகி.. எனது தேவைகளை கேட்டறிந்து அதன்படி எனக்கான உளிகளைத் தயாரித்து அளிக்கிறார்கள் அரசே..! தங்களுக்கு எந்தன் வந்தனம்.."

"இது எனது கடமையல்லவா..? வந்தனம் எதற்காக ஆயனரே..! தங்களின் வாழ்க்கைக்குத் தேவையான வசதிகள் குறைவின்றி கிடைக்கிறதா சிற்பியாரே..?"

"தங்களின் ஆணையும்.. சக்கரவர்த்தியின் ஆதரவும் எங்களுக்கு இருக்கும்போது வாழ்க்கையின் வசதிகளில் எந்தக் குறையும் ஏற்படாது இளவரசே..! அத்துடன் எனது வாழ்க்கை நான் வடிக்கும் சிற்பங்களில் அல்லவா அடங்கியிருக்கிறறது..? அதை அள்ள அள்ளக் குறையாமல் எமது கைகளுக்கு வழங்கியுள்ளீர்களே அரசே..! அதைவிடப் பெரிதென்று இந்த உலகில் ஏதேனும் இருக்கக் கூடுமோ..?"

"ஆஹா.. ஆஹா..! உத்தமமான வாசகங்களை மொழிந்தீர்கள் சிற்பியாரே.. இந்த உலகம் கலைகளால் பிணைக்கப் பட்டதல்லவா..?"

ஆயனரின் வார்த்தைகளை ஏற்கும் விதமாய் தலையை ஒப்புதலாக அசைத்தான் நரசிம்ம பல்லவன்.. அந்த உரையாடல் ஆட்சி பீடத்தில் ஏறப் போகும் ஓர் இளவரசனுக்கும்.. அவன் நிழலில் வாழும் ஓர் குடிமகனுக்கும் இடையில் நடக்கும் உரையாடலாக இல்லாமல்.. ஆய கலைகளில் ஈடுபாடுடைய ஓர் கலைஞனுக்கும்.. அவன் ஆராதிக்கும் ஓர் சிற்ப கலைஞனுக்கும் இடையில் நடக்கும் தோழமை கொண்ட சம்பாஷணையாக அமைந்திருந்தது..

நரசிம்ம பல்லவனின் பார்வை.. கடலோரமாக அமைந்திருந்த சிறு குன்றுகளின் மீது படிந்தது.. அந்தக் குன்றுகளின் மீதும்.. அவற்றின் அருகாமையில் இருந்த பெரும் பாறைகளையும் பார்த்தவனின் மனம் கனவுலகில் சஞ்சரிக்க ஆரம்பித்தது.

"இது போன்ற சிற்பங்கள் இவ்வுலகில் எங்கும் இல்லை என்ற பெயரை பல்லவர்களின் கட்டிடக்கலை

ஈட்ட வேண்டும் ஆயனரே..! இங்கிருக்கும் குன்றுகள் குடைவரைக் கோவில்களாக உருமாற வேண்டும்.. இந்தப் பாறைகள் காலத்தால் அழியாத மகோன்னத சிற்பங்களாக காலாகாலத்திற்கும் நிலைத்து நிற்க வேண்டும். இது சிற்பங்களின் நகரமாகத் திகழ வேண்டும்.. சிறு கல்லில் கூட எண்ணற்ற சிற்பங்கள் இடம் பெற்றிருக்க வேண்டும்.. அவை பல்லவர்களின் நாமத்தை இந்த பூவுலகின் எட்டுத் திக்கிலும் அறை கூவி வர வேண்டும்.."

பல்லவன் சொல்லச் சொல்ல.. ஆயனரின் மனதிலும் அந்தக் காட்சி விரிந்தது..

அந்தக் கடல்வெளியெங்கும் சிற்பங்களின் அழகு நிரம்பியிருக்கிறது.. குன்றுகள் குடைவரைக் கோவில்களாக கடலலைகள் தாலாட்ட கம்பீரமாக உயர்ந்து நிற்கின்றன.. பாறைகள் எல்லாம் சிற்பங்களாக நிமிர்ந்து நிற்கின்றன.. எங்கும் சிற்பம்.. எதிலும் சிற்ப

சிற்பம்..! சிற்பம்..! சிற்பம்..!

ஒரு சிற்பிக்கு இதைவிட பேரானந்தம் இருக்க முடியுமா..?

"நடக்கும் அரசே..!" உணர் சூளுரைத்தார் சிற்பி..

"ஓர் தினம்.. இந்தக் கடற்கரை முழுவதும் சிற்பங்களாக குவிந்திருக்கும்.. கற்பாறைகள் குடைவரைக் கோவில்களாக மாறியிருக்கும்.. அவற்றின் புடைத்த கல்பகுதியின் உள்புறத்திலும் வெளிப்புறத்திலும் எண்ணற்ற சிற்பங்கள் செதுக்கப் பட்டிருக்கும்.. இங்கிருக்கும் பாறைகள் சிற்பங்களாகி கதை பேசும்.. இதை சிற்ப நகரமென்று இந்த அவனி சொல்லும் மன்னவரே..!"

உணர்வின் குழைந்த அந்த இரு கலைஞர்களும் உணர்ச்சி மேலிட்டால் மௌனம் சாதித்தார்கள்.. கடலலைகளின் சப்தம் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்த அந்த வேளையில் மௌனம் அழகான ஆரணங்கைப் போல அவர்களுக்கு மத்தியில் வீற்றிருந்தது..

"ஜல்.. ஜல்.."

சலங்கை ஒலி.. மௌனமெனும் ஆரணங்கை வழிஅனுப்பி வைத்ததில் நரசிம்ம பல்லவனின் செவிகள் கூர்மையாகின.. அவன் ஆயனரைப் பார்த்தான்..

"உமது செவிகளில் இந்த ஒலி விழுந்ததா.. ஆயனரே..?" பரபரப்புடன் கேட்டான்..

"எந்த ஒலி..?" என்று ஆயனர் மொழிந்து வைத்ததில் ம்மனின் பரபரப்பு அதிகரித்தது..

"நள்ளிரவிலும் தாம் பணிபுரிவதுண்டா ஆயனரே..?" அவன் வினவினான்..

எதற்காக இப்படியொரு வினாவை இளவரசன் எழுப்புகிறான் என்று கிஞ்சித்தும் புரியவில்லை ஆயனருக்கு..

சற்று முன்புதான்.. அந்தப் பாறைகளிலும்.. குன்றுகளிலும் சிற்பங்களை அவன் கண்டான்.. சடுதியில் குனம் மாறி சிற்பங்களிலிருந்து நள்ளிரவுக்கு ஏன் தாவினான்..?

"உண்டு மன்னவரே.. என் மனம் சிற்பங்களில் ஆழ்ந்திருக்கும் போது.. நள்ளிரவை நான் பார்ப்பதில்லை.. தீப்பந்தத்தின் ஒளியில் சிற்பங்களை செதுக்குவதுண்டு.."

"அவ்வாறெனில்... அந்தக் கடல் மோகினியை தாம் பார்த்திருக்க வாய்புண்டு.. இல்லையா ஆயனரே..?"

"எந்தக் கடல் மோகினி இளவரசே..?"

மகா கலைஞனும்.. கலை நுணுக்கங்களும் கொண்ட இளவரசனுக்கு என்ன ஆனது என்ற கவலையுடன் விசித்திரமாக அவனை நோக்கினார் ஆயனர்..

***ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'***



## 2

## காற்றோடு பாடல் சொன்ன.. மோகினி நீயல்லவோ...!

அந்தப் பெண் அழகாக இருந்தாள்.. உயரமாக.. ஒல்லியாக.. சந்தனத்தையும்.. மஞ்சளையும் கலந்து அரைத்துப் பூசினதைப் போல அவளது மேனியழகு இருந்ததை அந்த மெலிதான வெளிச்சத்திலும் சித்தார்த்தனால் இனம் காண முடிந்தது..

'என்னவொரு அழகு..!'

அவனால் வியக்காமல் இருக்க முடியவில்லை.. மங்கிய நிலா வெளிச்சத்தில் ஒரு தேர்ந்த சித்திரக்காரன் வரைந்த ஓவியத்தைப் போல தோற்றமளித்தவளை மெலிதான ஆச்சரியத்துடன் அவன் பார்த்தான்..

'இவ்வளவு அழகை வைச்சுக்கிட்டு.. இந்த இருட்டு வேளையில.. மாமல்லபுரக் கடலோர ரதக் கோவிலில

உட்கார்ந்து.. கச்சேரி பண்ணுகிறதைப் போல பாடிக்கிட்டு இருக்காளே.. இவளுக்குப் பயமாய் இல்லையா..?'

நினைத்ததை அவளிடம் கேட்பதற்கு வாய் திறக்கப் போனான்.. அவள் முகத்தைப் பார்த்தபோது ஏனோ அவனுக்குப் பேச தோன்றவில்லை.. அவளுடைய முகம் அறிமுகமான முகத்தைப் போல அவனுக்குத் தோன்றியது.. இதற்கு முன்னால் இந்த முகத்தை வெகு அருகினில் அவன் பார்த்திருக்கிறான்.. எங்கேயென்றுதான் அவனுக்கு நினைவு வரவில்லை..

அவளுக்கும் அதே நிலைதான் என்பது அவன் முகத்தில் பதிந்த அவளது பார்வை அவன் முகம் முழுவதும் படர்ந்து துழாவியதிலிருந்து தெரிந்தது.. வாய் விட்டுக் கேட்டு விடலாமா என்று நினைத்தான்.. எங்கே..? நினைக்கத்தான் அவனால் முடிந்தது.. கேட்க முடியவில்லை..

அவனுக்குத்தான் அந்த இஞ்சி இடுப்பழகியின் முகத்தைப் பார்த்தால் வேறு எதையும் பேச தோன்றவில்லையே..

அசையாமல் நின்ற இருவரில் முதலில் சுதாரித்துக் கொண்டவள் அந்தப் பெண்தான்.. அறிமுகமில்லாத வாலிபனின் முகத்தை அப்படிப் பார்த்துக் கொண்டிருக் கிறோமே என்ற கூச்ச உணர்வுடன் அங்கிருந்து நகர முற்பட்டாள்..

அவள் கிளம்புவதை சித்தார்த்தனின் மனம் பதிவு செய்த அதே நொடியில் அவன் அவளிடம் பேசிவிட்டான்..

"எக்ஸ்கியூஸ் மீ.."

அவனின் குரலில் என்னவோ அவன்

'என்னங்க.. கிஸ்.. மீ.. என்று சொல்லி விட்டதைப் போல அவள் வெகுண்டாள்..

"என்ன மிஸ்டர்..? தனியா நிக்கிற பொண்ணுகிட்ட ஈட்டா பண்ண வந்தீங்களா..?"

அவளது படபடப்பில் அவனுடைய எங்கேயோ பார்த்த மயக்கம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட்டது.. அவன் தனது வழக்கமான நிமிர்வு கலந்த மிடுக்குடன் அவளைப் பார்வையிட்டான்..

உச்சி முதல் உள்ளங்கால்வரை அளந்த அவன் பார்வையில்..

'மாப்பிள்ளை கெட்டார் பா.. என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் அவள்..

நினைத்ததுடன் நிறுத்திக் கொள்ளாமல்..

"என்ன சார்..? என்னைப் பெண் பார் வந்திருக்கீங்களா..?" என்று கேட்கவும் செய்தாள்..

"தேவைதான் எனக்கு.." என்றான் சித்தார்த்தன்..

"யார் தேவை..?"

"நிச்சயமா உங்க தேவை எனக்கில்லைங்க.."

"பிழைச்சீங்க.."

"இதைப்பாருடா.. இல்லைன்னா என்ன செய்வதாய் உத்தேசம்..? 'லேடி டான்' கையில் இருக்கிற துப்பாக்கியில சுட்டுப் பொசுக்கியிருப்பீங்களோ..?"

"ஆக.. உங்களைப் போல ஆள்கள் இருக்கிற இடத்துக்கு வருகிற பெண்கள்.. 'லேடி டானா'த்தான் இருக்கனும்ங்கிறிங்க..?"

"நிச்சயமா.."

"இல்லேன்னா நீங்க அடங்க மாட்

"ஷ்யூர்.. ஷ்யூர்.."

"ஓகே.. உங்க ஆசையைக் கெடுப்பானேன்.."

தோளைக் குலுக்கி கையை விரித்தவள் தனது ஹேண்ட் பேகிலிருந்து கைக்கு அடக்கமான அந்தப் பொருளை எடுத்தாள்..

"என்னது அது..?" சித்தார்த்தான் விசாரித்தான்..

"துப்பாக்கி..! நீங்க ஆசைப்பட்டிங்கள்ல.." இலகுவாக அவள் பதில் சொன்னாள்..

"அதுசரி.. என்னவோ நான் வைரம், வைடூரியம் மேலே ஆசைப்பட்டதைப் போல இல்ல பேசி வைக்கறிங்க.. இது கையில இருக்கிற தைரியத்திலதான் இந்த இருட்டு வேளையிலே தனியாய் நின்னு பாடிக்கிட்டு இருந்தீங்களா..?"

"தனியாய் பாடறதுக்கு ரசனையும், ஞானமும் தான் வேண்டியிருக்கனும்ன்னு கேள்விப்பட்டிருக்கேன்.. துப்பாக்கியும் இருக்கனும்ன்னு இப்ப நீங்க சொல்லித்தான் கேள்விப்படறேன்..

"எந்தக் காலத்தில இருக்கீங்க நீங்க..? பாழுது விடிஞ்சு பொழுது போகிற வரைக்கும் பெண்கள் எத்தனை தொல்லைகளுக்கு ஆளாகிறாங்கன்னு டிவி நியூஸிலேயும்.. பேப்பரிலயும் பார்க்கறதில்லையா..?"

"இது சுதந்திர இந்தியா.."

"அதுக்கு..?"

"நள்ளிரவில் ஒரு கன்னிப் பெண் உடல் முழுக்க நகைகளைப் போட்டுக்கிட்டு ஊரைச் சுற்றி வந்தாலும் பத்திரமா வீடு வந்து சேர்ந்தாகனும்.. அப்பத்தான் இந்தியா சுதந்திரம் வாங்கினதா அர்த்தமாகும்ன்னு சொல்லி யிருக்காங்க.."

"யாரும்மா..?"

"நம்ம தேசத்தந்தை மகாத்மா காந்தி.."

"சொன்னவரையே சுட்டுத்தள்ளி சொர்க்கத்துக்கு அனுப்பி விட்ட பூமிம்மா இது.. அதனால.. வீணாய் இது போல ரிஸ்க்கை எடுக்காமல் வீடு போய் சேருங்க.."

"ஆகட்டும் மகனே.."

"என்னது மகனா..?"

சித்தார்த்தனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.. இருந்திருந்த இந்த அழகான பெண்ணுக்கு அவனுடன் சொந்தம் பாராட்ட வேறு உறவுமுறை கிடைக்க வில்லையா..?

"யாருக்கு யார் மகன்..?"

"ஏன்..? எனக்குத்தான் நீங்க மகன்.."

அவள் அலட்டிக் கொள்ளாமல் பதில் சொன்னாள்.. இதற்குப் பதில் அவள் கையிலிருக்கும் துப்பாக்கியால் சுட்டேவிடலாம் என்று அவன் வெறியாகிப் போனான்.

"என்னைத் தத்தெடுக்க நீங்க ரெடியாய் இருக்கலாம்.. தத்துவர நான் ரெடியில்லை.. என்ன உலகமடா இது..? தனியாய் நிற்கிறாங்களேன்னு

அட்வைஸ் சொல்ல வந்தா.. இவங்க அதுதான் சாக்குன்னு தத்தெடுக்கப் பார்க்கிறாங்க.. மகனாமில்ல.." அவன் பொருமினான்..

"ஹலோ மிஸ்டர்.."

"மகன் போய் மிஸ்டர் வந்தாச்சா..?"

"மகன்னு உறவு கொண்டாடினது நீங்கதான்.. நானில்ல.."

"நானா..?"

"நீங்களேதான்.. யாரும்மா.. பூமிம்மா.. பாரும்மா.. வீடு போய் சேரும்மான்னு வார்த்தைக்கு வார்த்தை அம்மா போடறீங்க.. என்ன..? உங்க மனசில ஃபீடிங் பாட்டில் குடிக்கிற பாப்பான்னு நினைப்பா..?"

"சேச் .." அவன் அவசரமாக மறுத்தான்..

"உங்களைப் போய் ஃபீடிங் பாட்டிலோட இருக்கிற பாப்பான்னு யாராவது சொல்லுவாங்களா..? யாரு நீங்க..?"

அவன் கேட்ட விதத்தில் தான் யார் என்ற சந்தேகம் அவளுக்கே வந்து விட்டது.. அந்த கோபத்துடன்..

"அதை நான் சொன்னா நல்லாயிருக்காது சார்.. நீங்களே சொல்லுங்க.." என்றாள்..

'அப்பாடி... மகனை விட்டு விட்டா அவனுக்கு சந்தோசம் வந்தது.. அந்த சந்தோசத்துடன்..

"துப்பாக்கி வைத்திருக்கிற லேடி டாண்..!" என்றான்..

"நினைச்சேன்.."

ஹேண்ட்பேகில் துப்பாக்கியை வைத்தபடி அவள் சொன்னாள்.. வெகு காலம் பழகியவளைப் போல வெகு இயல்பாக அவள் அவனுடன் வார்தையாடியதில் அவனுக்குள் இருந்த வியப்பு அதிகரித்தது..

ஐந்து ரதக் கோவிலின் படிக்கட்டில் அவள் இறங்கினாள்.. நியான் விளக்கின் மஞ்சள் ஒளியில் அவளின் மஞ்சள் நிறம் இன்னும் அதிகமாக பளீரிட்டதில் அவன் அசந்து போனான்..

"நீங்கள்ளாம் தனியா வர்றதே தப்புங்க.." மனது தாங்காமல் சொல்லி விட்டான்..

அவன் மனது புரிந்ததைப் போல அவள் மென்மையாக சிரித்தாள்..

ான் தனின்னு யாருங்க சொன்னது..?" என்று கேட்டாள்..

'அப்படின்னா என்ன அர்த்தம்..? இவள் கல்யாணமானவளா..?'

அவன் பார்வை அவள் கழுத்தை ஆராய்ந்தது.. தடிமனான சங்கிலி தாலிக் கொடியைப் போன்று தோற்ற மளித்ததில் அவன் ஏமாற்றமாக உணர்ந்தான்..

'முட்டாள்.. இவள் சிங்கிளா இருந்தா ட்டும்.. தூக்கிக்கிட்டுப் போய் தாலி கட்டிவிடப் போறியா..?'

அவனது மனச்சாட்சி வக்கணையாக கேட்டு வைத்தது.. இது போன்ற சந்தர்ப்பங்கள் அதற்கு அல்வா கிடைத்ததைப் போல.. அதுவே சமயம் கிடைத்தால் அவனைப் போட்டுத் தாக்குவதற்காக காத்திருக்கும் கேட்டகிரி.. சான்ஸ் கிடைத்தால் விட்டு விடுமா..?

'ம்ம்ம்.. ஸ்வாஹா பண்ணிக்கிட்டு போகிறதுக்கு ஏற்றதைப் போலதான் இருக்கா..

மனது ஜொள்ளு விட்டாலும் அவள் மாற்றானின் மனையாட்டி என்பதில் உற்சாகம் வடிந்து அடங்கியது..

"எங்கேங்க உங்க ஹஸ்பெண்ட்..? தனியா விட்டுட்டு எங்கே போனார்..? கூட வந்தவர் துணையா நிற்க வேணாமா..?" பகையாளியைப் பற்றி விசாரிப்பதைப் போல அவன் விசாரித்தான்..

"அவரைத்தாங்க நானும் தேடிக்கிட்டு இருக்கேன்.. என்றாள் அவள்..

"என்னது..?" அவனால் நம்ப முடியவில்லை..

கணவனைக் காணோம் என்று தேடிக் கொண்டிருப்பவள்.. ரதக் கோவில் தூணில் சாய்ந்து பாட்டுப் பாடிக் கொண்டிருப்பாளா..?

'ஒருவேளை.. அது குடும்பப் பாட்டா இருக்குமோ.. கூட்டத்தில் தொலைந்து போன கணவன் இந்தக் குடும்பப் பாட்டைக் கேட்டதும் ஓடி வந்திருவாருன்னு பாடியிருப்பாளோ..

துடைத்து விட்டதைப் போன்ற அவள் முகத்திலிருந்து அவனால் எதையும் அனுமானிக்க முடியவில்லை.. அலைகடலின் ஓரத்திலே அவள் முகத்தை உற்றுப் பார்த்து உணர்வுகளைப் படிக்க அவன் முயன்றான்..



# 3

## வந்தவள் கடல் மோகினியா..?
## இல்லை.. ஜெகன் மோகினியா..?

ஆயகலை அறுபத்தி நான்கையும் கரைத்துக் குடித்தவனும்.. ஆடல் கலையில் நிகரற்றவன் என்று புகழப்படுபவனும்.. சிற்பக் கலையை நேசிப்பனுமான பல்லவ குலத் தோன்றல்.. நரசிம்ம வர்மனுக்கு என்ன ஆனது என்ற அச்சரேகை ஆயனரின் மனதில் ஓடியது..

அர்த்த ஜாமத்தை நெருங்கிக் கொண்டிருந்த அந்த நடுநிசி வேளையில் பல்லவ குலத்தின் பட்டத்து இளவரசனுக்கு கடல் மோகினியைப் பற்றிய ஆராய்ச்சி எதற்காக உதயமாக வேண்டும்..?

“இளவரசே...

தயக்கத்துடன் அழைத்த ஆயனருக்கு.. தாங்கள் சரியாகத்தானே உள்ளீர்கள் என்ற ஆதங்கத்தை வினவ இயலவில்லை..

அரசாளும் மன்னவன் கலைஞனாக இருந்தாலும் அவனிடம் வினவ வேண்டியதைத்தான் வினவ முடியும். எதையும் வினவிவிட முடியாது..

கைகளைப் பிசைந்த ஆயனரின் தர்ம சங்கடம் நரசிம்மவர்மனின் கவனத்தில் பதியவில்லை.. அவன் செவிகள் மீண்டும் அந்த சலங்கை ஒலி கேட்கக் கூடுமோ என்று முனைப்பாக காத்திருந்தன..

கடல் மோகினியின் சலங்கை ஒலி நரசிம்ம பல்லவனின் செவிகளை ஏமாற்றி விடவில்லை..

"ஜல்.. ஜல்..

இப்போது அந்த ஒலி.. அவர்கள் அமர்ந்திருந்த பாறைகளுக்கு அருகில் ஒலித்தது.. நரசிம்மவர்மன் பரபரத்தான்.. அவனது பரபரப்பில் ஆயனரின் அச்சம் கூடியது..

'இளவரசருக்கு என்ன ஆனது..?'

"ஆயனரே..!"

"அரசே..!"

"இந்தக் கடல்வெளியில் மோகினி இருக்கிறாள்.."

அவ்வாறா என்று கேட்க முடியமல் ஆயனரின் நாவு உலர்ந்து விட்டது.. உளி பிடிக்கும் அவரின் கைகள் நடுங்கின.. கடலோரமாக சிற்பங்களை செதுக்கும் மனிதரிடம் கடல் மோகினியைப் பற்றிக் கூறினால் அவர் என்ன ஆவாரோ என்ற கவலை கிஞ்சித்தும் இன்றி ரசிம்மன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்..

"சற்றுமுன் அவளை நான் பார்த்தேன் ஆயனரே.."

ாரை இளவரசே..?"

"கடல் மோகினியை.."

இளவரசருக்கு ஏதோ ஆகி விட்டது என்று முடிவே செய்துவிட்டார் ஆயனர். கடல் மோகினியைப் பற்றிய கவலையை விட.. அதை கண்டதாகக் கூறும் இளவரசனைப் பற்றிய பயம் ஆயனரை பீடித்துக் கொண்டது..

'சக்கரவர்த்தி என்ன மொழியப் போகிறாரோ.. சிற்பங்களைப் பார்வையிடப் போன இளவரசன் சிற்பங்களை விட்டுவிட்டு கடல் மோகினியை பார்வையிட்டு வந்ததைப் பற்றி அறிந்தால் கடற்கரை சிற்பங்களுக்கு தடை சொல்லி விடுவாரோ..

எண்ணற்ற கற்பனைகளையும்.. லட்சியங்களையும் வைத்திருந்த அந்தச் சிற்பியின் மனம் பதைத்தது..

"அவளுடன் உரையாடினேன்.."

கனவில் மிதப்பவனைப் போல விழிகள் செறுக மொழிந்தவனை கவலை மேலிட நோக்கினார் ஆயனர்..

'இவரை அரண்மனைக்கு அனுப்பி விடுவதுதான் உத்தமமான செயலாக இருக்கக் கூடும்..

ஆனால் எப்படி அதை செயல்படுத்துவது.?

ஆயனருக்கு சிகையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது... நாட்டின் மன்னவனிடம்... நடு நிசியாகி விட்டது.. தாங்களோ சிற்பங்களை விடுத்து கடல் மோகினியைப் பற்றி மொழிகின்றீர்கள்... எனவே அரண்மனைக்குக் கிளம்பிச் சென்று விடுங்கள் என்று எப்படி அவர் மொழிவார்..?

"உரையாடலின் இடையினிலே அவள் ஓடிவிட்டாள் ஆயனரே..! முற்றுப் பெறாத அந்த உரையாடலை என்றாவது ஓர்நாள் நான் முழுமையடையச் செய்வேன் ஆயனரே..!"

என்னவோ.. முற்றுப் பெறாத சிற்பத்தை செதுக்கி முழுமையடைய வைத்து விடுவேன் என்ற வகையில்

இளவரசர் மொழிந்து வைத்ததில் ஆயனர் பலத்த சிரவேதனைக்கு ஆனானார்..

'ஆதிகேசவப் பெருமாளே..! அபயம் தாரீர்..

மனதுக்குள் பாற்கடலில் துயில் கொண்டிருந்த பரந்தாமனின் நித்திரையைக் கலைத்து.. அலைகடலின் ஓரமாக அவர் உதவிக்கு வரவேண்டுமென்று வேண்டினார் அந்த ஏழை சிற்பி..

அவருடைய வேண்டுதலில் பெருமாளும் மனமிரங்கி அனுகிரகம் செய்தார்.. அவர்களை அணுகிய கடல் மோகினி..

"ஜல்.. ஜல்.." என்ற சலங்கையின் ஒலியுடன்..

"தந்தையே..!" என்று தனது திருவாயைத் திறந் அழைத்தாள்..

"இதோ கடல் மோகினி..!" உற்சாகக் கூவலுடன் ள்ளி எழுந்த நரசிம்மன்..

"தந்தையா..?" என்று ஆயனரை ஆச்சரியத்துடன் நோக்கினான்..

"ஆம் அரசே..!" பெருமிதத்துடன் மொழிந்த ஆயனர்.

"இவள்தான் என் புதல்வி சிவகாமி..!" என்று பாசத்துடன் இளவரசருக்கு அறிமுகம் செய்வித்தார்..

"தங்களின் புதல்வியா..?"

"ஆம் அரசே..

"சற்றுமுன் கடலோரமாக இவளைக் கண்டபோது என்னிடம் இவள் கடல் மோகினியென்று சொன்னாளே.."

'அப்படியா கதை..?'

ஆயனரின் மனம் அமைதி கண்டது.. அதுநாள்வரை நடுநிசியிலும் அவருக்கு உறுதுணையாக நின்ற கடலில் எந்த மோகினியும் வசிக்கவில்லையென்ற நிச்சயத்தில் அவரின் சுவாசம் சீரானது..

'அடியேனைக் காப்பாற்றி விட்டாய் ஆதிகேசவப் பெருமாளே..!'

அவர் நன்றியுடன் பெருமாளை நித்திரைக்கு அனுப்பி வைத்தார்..

"அம்மா சிவகாமி..! இப்படியா மன்னவரிட மொழிந்து வைப்பது..?" மகளைக் கண்டித்தார்..

"அல்ல தந்தையே.." சிவகாமி மறுத்தாள்..

"அரசர்தான் என்னைக் கடல் மோகினியா என்று வினவினார்.."

"நீ அல்லவென்று மறுத்திருக்க வேண்டுமல்லவா..?"

"வேண்டும்தான்.."

சிவகாமியின் குறும்பு தவழ்ந்த வதனத்தில் நாணம் படர்ந்தது.. அவளின் மின் வெட்டும் பார்வை வீச்சு இளவரசனைத் தாக்கி மீண்டது.. இளவரசனின் உடலில் மின்னல் பாய்ந்ததைப் போல உணர்ந்தான்..

"அரசரின் கற்பனை சக்தியை மறுக்க மனம் வரவில்லை தந்தையே.. சிவகாமி நகைத்தாள்..

சோழிகள் இறைத்ததைப் போன்ற அந்த நகைப்பில் மனம் மயங்கினான் மகேந்திரவர்மனின் மகனான நரசிம்ம வர்மன்..

'என் நாட்டில் இப்படியொரு பேரழகியா..?'

அனுதினமும் அங்கு வந்து போகிறான்.. அவளை அங்கு கண்டதில்லையே..

"என் புதல்வி நாட்டியம் பயின்று கொண்டிருக்கிறாள் இளவரசே.. ஆயனரே விளக்கம் சொன்னார்..

"மெய்யாகவா..?" ஆர்வத்துடன் அவளை நோக்கினான் நரசிம்மன்..

"ஏனென்று கேளுங்கள் தந்தையே..! இந்தப் பல்லவ திருநாட்டில் பாராளும் வேந்தர் மட்டும்தான் நடனக் கலையில் திறமை மிக்கவராக இருப்பாரா..? அவருடைய குடிமகள் அவ்வாறு இருத்தல் ஆகாதா..? அதை பொய்யென்று உரைப்பாரா..?" சிவகாமியின் சொற்களில் மெலிதான சினம் கலந்திருந்தது..

"தவறு சிவகாமி.. மன்னவரின் இயல்பான உரையில் நீ விகல்பம் காண்பது மெத்த தவறு.. ஆயனர் ஆட்சேபித்தார்..

"தங்களின் புதல்வியைக் கடிந்து கொள்ள வேண்டாம் ஆயனரே.. கலை பொதுவானது.. நடனக் கலையை நான் மட்டும் சொந்தம் கொண்டாடுவதாக நினைத்துக் கொண்டு தங்களின் புதல்வி சினம் கொள்கிறாள்.. அவ்வாறு அல்ல.. நான் மெய்யாகவா என்று கேட்டது. நானறிந்த நடனக்கலையை தங்களின் புதல்வியும் அறிந்து கொண்டிருக்கிறாள் என்ற ஆர்வத்தினால் தான்.. தங்களின் புதல்வி நடனக் கலையை பயின்று கொண்டிருப்பதைக் குறித்து சந்தேகம் கொண்டு வினா எழுப்பவில்லை..

நரசிம்மனின் நீண்ட விளக்கத்தில் தன் இமைகளை உயர்த்தி அவனை கீழ்பார்வையால் நோக்கினாள் சிவகாமி.. அடர்ந்த அவளின் இமைகள் பட்டுப் பூச்சிகளின் சிறகைப் போல அழகுற விரிந்திருந்ததை நரசிம்மனின் கலைமனம் கண்டு ரசித்தது.. அவள் மீதிருந்து வந்த ரம்யமான நறுமணத்திரவியத்தின் வாசனையை அவனது நாசி முகர்ந்தது.. அவளின் கூந்தல் வளைவில் சூடியிருந்த முல்லை மலரின் மணத்தை நுகர அவன் மனம் ஏங்கியது..

ஆடலரசியின் பார்வை.. அவனியின் அரசனிடம் சிக்கித் தவித்தது.. ஆயனர் அறியாத வகையில் அவர்கள் இருவரின் நயனங்களும் தமக்குள் சம்பாஷித்துக் கொண்டன.. அந்த நயன பாஷையின் சம்பாஷணையை உணராதவராக ஆயனர் கடல் மோகினியைப் பற்றிய மர்மம் விலகிய நிறைவுடன் தமது புதல்வியை நோக்கிப் புன்னகைத்தார்..

"குழந்தா ..! எமக்கும்.. இளவரசருக்கும் பருக பானம் தயாரிப்பாயா..?"

"இதோ தந்தையே..! ஒரு நொடியில் தயாரித்துக் ாண்டு வருகிறேன்.."

சிவகாமி ஆனந்தத்துடன் உறுதியளித்து விட்டு அகன்றாள்.. அவளை நரசிம்மனின் பார்வை தொடர்ந்தது..

"ஜல்.. ஜல்..

அவளின் சலங்கை ஒலியை செவி மடுத்த செவிகள் இவை மோகினியின் சலங்கை ஒலியே என்று நரசிம்மனின் மனதோடு மொழிந்து வைத்தன..

'இவள் மோகினிதான்..' நரசிம்மன் நினைவு கொண்டான்.

அந்த மயக்கும் மோகினி சற்றுப் பொழுதில் சூடான கஞ்சி நிரம்பிய கலயங்களோடு அவர்களை அணுகினாள்.. பனி பொழிந்த அந்த நிசி வேளையில் அவள் தயாரித்து தந்த சூடான பானம் அமிர்தத்திற்கு நிகரானதாக இருந்தது..

'தேவலோக மங்கையின் கர ˙ பட்டால் கஞ்சியும் தேவாமிர்தம்தானே..

## *ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



# 3

## *நீயென் மணவாட்டியா..?*
## *இல்லை மாற்றானின் மனையாட்டியா..?*

'இது விநோதம்.. என்று தோன்றியது சித்தார்த்தனுக்கு..

இருள் நிறைந்த நேரத்தில் தனிமையாக ரதக் கோவிலின் தூணில் சாய்ந்து நின்று பாடிக் கொண்டிருக்கும் பெண்ணின் கைப்பையில் துப்பாக்கி இருக்கிறது.. தனியாக வந்தாளா என்றால் இல்லை என்கிறாள்.. எங்கே உனது கணவனென்றால் தேடிக் கொண்டிருக்கிறேன் என்கிறாள்..

'பேசாம வழியைப் பார்த்துக்கிட்டுப் போயிருக் கலாமோ.. காலங்கடந்த ஞானோதயம் அவனுக்குள் வந்தது..

அழகான பாடல் அவனை ஈர்த்ததில் வந்த வம்புதானே இது..?

"ஏங்க.. ஹஸ்பெண்டைத் தேடுகிறவங்க குடும்பப் பாட்டைப் பாடித்தான் தேடுவீங்களா..? அந்தப் பாட்டையும் யாருமில்லாத ரதக் கோவிலில போய் பாடிக்கிட்டு இருக்கீங்க.. உங்க ஹஸ்பெண்ட் என்ன அந்த ரதக் கோவிலிலா இருக்கார்..?"

கேட்டபடி திரும்பி ஐந்து ரதக் கோவிலைப் பார்த்தவனுக்குள் மின்னல் பாய்ந்தது.. உடல் தூக்கிப் போட பார்வையைத் திருப்பிக் கொண்டான்.. அவள் முகத்தைப் பார்த்தான்.. வெளிறிப் போயிருந்த அவள் முகத்திலும் அவனைப் போலவே நூதன உணர்வு படிந்திருந்ததில்..

"என்னங்க..?" என்றான்..

"நத்திங்... அந்த ரதக் கோவில்களைப் பற்றிப் பேசாதீங்க.."

அவள் குரலில் இழையோடிய அச்சத்தில் அவன் புருவங்கள் உயர்ந்தன..

"ஏன்ங்க..?" அவளிடமே விசாரித்தான்..

"நத்திங்...

"ஒன்றுமில்லாததற்கா இப்ப ப்படறிங்க..?"

"இது பயமில்ல.."

"பின்னே.."

"உங்களால் புரிந்துகொள்ள முடியுமோ என்னவோ.."

"சொல்லுங்க.. புரிஞ்சுக்க முடியுதான்னு டிரை பண்றேன்.."

அவள் ஐந்து ரதக் கோவிலை ஓர் முறை திரும்பிப் பார்த்துக் கொண்டாள்.. அவள் முகத்தில் வந்து போன

திகிலில் அவனையுமறியாமல் அவனும் அந்த ரதக் கோவில்களை பார்த்து வைத்தான்.. அவனை ஈர்த்த அந்தக் கோவிலின் வசிய சக்தியில் சட்டென்று தன் பார்வையை விலக்கிக் கொண்டான்..

'என்ன இது..

அவனுக்கு அந்த இடத்தை விட்டு அகன்று விட வேண்டும் போல இருந்து.. புருவங்களை சுழித்தபடி அவளைப் பார்த்தான்..

"மத்தவங்களுக்கு தெரியாத ஓர் அமானுஷ்ய சக்தி உங்களுக்குத் தெரியுதுன்னு வையுங்க.. உங்களுக்கு எப்படியிருக்கும்..?"

'எப்படியிருக்கும்..?' ஐந்து ரதக் கோவிலைப் பார்ப்பதை மிகக் கவனமாக அவன் தவிர்த்தான்..

"நீங்க அப்படி ஃபீல் பண்றீங்களா..?"

"சம் டைம்ஸ்.."

"ஈஸிட்..? ஏன் நீங்க ஒரு டா டரை கன்சல்ட் பண்ணக்கூடாது..?"

"எதுக்கு..? பைத்தியம்னு அவர் முத்திரை குத்தறதுக்கா..? எவ்வளவு நல்ல எண்ணம் சார் உங்களுக்கு.. நீங்கள்ளாம் ரொம்பவே நல்லா வருவீங்க.."

அவளுடைய கோபத்தில் அவன் ஐந்து ரதக் கோவிலை மறந்தான்.. சிரித்தான்..

"நம்புங்க.. நான் உங்களுக்கு ஐடியாதான் சொன்னேன்.."

"நம்பிட்டேன்.."

"நீங்க என்ன மாதிரியான அமானுஷ்யத்தை பார்த்தீங்க.."

"'பார்த்தீங்க' இல்லை.. பார்க்கறேன்.."

"இப்பவுமா..?"

"இப்பவும்ன்னா.. இந்த செகண்டிலன்னு இல்லை.. திடிர்ன்னு புகை போல கசமுசன்னு என் முகத்துக்கு நேரா ஒரு புகைப்படலம் வந்து நிற்குது..."

"தென்..?"

அவனுக்கு சுவராஸ்யம் வந்து விட்டது.. இதுபோன்ற நிகழ்வினை எதிர்பார்த்து அவன் மகாபலிபுரத்துக்கு வரவில்லை..

'ஜஸ்ட் எ ரிலாக்ஷேசன்..' என்றுதான் கிளம்பி வந்தான்..

வந்த இடத்தில் அடுத்தடுத்து நூதன அனுபவங்கள்.

"நான் முழிச்சுப் பார்த்தவுடனே அந்த புகை படலம் கலைந்து மறைஞ்சு போயிடறது.."

"ஓ.. எப்பவும் புகை போல்தான் வருமா..?"

"சம் டைம்ஸ்.. ஆரஞ்சு நிறத்தில இருக்கிற பூக்களைப் பிய்த்துப் போட்டா எப்படியிருக்கும்..? அப்படிவரும்.."

"அதுவும் கலைஞ்சு போயிரும்.. அப்படித்தானே..?"

"அப்படியேதான்.."

"இதை உங்க ஹஸ்பெண்ட் ட்டச் சொன்னீங்களா..?"

"யார்கிட்டச் சொல்லச் சொல்கிறீங்க..?"

அவள் புரியாமல் கேட்டதில் அவனுக்கு என்னடா இது என்று ஆகிவிட்டது.. அவன் என்ன கடலில் போகும் கப்பல் மாலுமியிடமா சொல்லச் சொன்னான்..? கட்டிய கணவனிடம் சொல்லச் சொன்னேன்.. அதற்குப் போய் இப்படியா பேந்த பேந்த விழித்து வைப்பா ..?

"ஹஸ்பெண்டுங்க.. உங்க ஹஸ்பெண்ட்..!"

அவன் கழுத்தில் தாலி கட்டுவதைப் போல பாவனை செய்தபடி சொன்னான்.. அவள் முகம் மாறியதில் ஒருவேளை வேறு மதமாக இருப்பாளோ என்ற சம்சயத்தில் மோதிரம் மாட்டுவதைப் போலவும் பாவனை செய்து வைத்தான்..

"உங்க மோனோ ஆக்டிங்கை கொஞ்சம் நிறுத்தறிங்களா..? சகிக்கலை.." அவள் தலையில் அடித்துக் கொண்டாள்..

வழியோடு போகாமல் வாய் வளர்த்ததிற்கு இது தேவைதான்.. என்று நினைத்துக் கொண்டான் சித்தார்த்தான்..

"உங்களுக்கு என்னதாங்க பிரச்னை..? ஹஸ்பெண்ட் கூட வந்தவங்க அவரைக் காணோம்ன்னு தேடிக்கிட்டு இருந்தீங்கன்னா நானும் கூடச் சேர்ந்து தேடறேன்.. அதை விட்டுட்டு தலையில் அடிச்சுக்கிட்டு மூட் அவுட் பண்ணக் கூடாது.. என் மோனோ ஆக்டிங்கைவிட இது படு மோசமாக இருக்கு.." கடுப்புடன் சொன்னான்..

"ஏங்க.. எனக்கு கல்யாணமே ஆகலை.. அதை முதலில் தெரிந்துக்கங்க.. இல்லாத ஹஸ்பெண்டுகிட்ட சொல்லச் சொன்னா எங்கேன்னு போய் சொல்லுவேன்.. அவனைவிட அதிகமாக அவள் கடுகடுத்தாள்..

"வாட்..? உங்களுக்கு கல்யாணம் ஆகலையா..?"

சித்தார்த்தன் உற்சாகத்துடன் அவளை உற்று நோக்கினான்..

"ஆமாம் சார்.. அதுக்காக நீங்க கல்யாணம் பண்ணிக் கிட்டவளைப் பார்க்கிறதைப் போல பார்த்து வைக்க வேணாம்.." என்றாள் அவள்..

அவனுக்கு சிரிப்பு வந்தது..

"அப்புறம் எதுக்காக உங்க ஹஸ்பெண்டைத் தேடிக் கிட்டு இருக்கேன்னு சொன்னீங்க..?"

"இந்த உலகத்தில் எங்கே அவர் பிறந்திருக்கார்ன்னு தேடிக்கிட்டு இருக்கேன்னு சொன்னேன்.."

அவள் ஐந்து ரதக் கோவிலைப் சொன்னாள்..

"அதைப் பார்க்காதீங்க.." என்றான் அவன்..

"ஏன்..?" அவள் விழிகள் மின்னின..

"என்னன்னு தெரியலை.. அங்கே ஏதோ ஒரு பவர் இருக்கிறதைப் போல நான் ஃபீல் பண்றேன்.." அவன் உடல் சிலிர்த்துக் கொண்டது..

"நீங்களுமா..?" ஆச்சரியத்துடன் அவள் கேட்டாள்.

"நீங்களும்ன்னா..? வாட்'ஸ் த மீனிங்..? நீங்களும் அதைப் ஃபீல் பண்ணினீங்களா..?"

"ம்ம்ம்.." அவள் தலையசைத்தாள்..

"அடிக்கடி ஃபீல் பண்றேன்.." என்று சொன்னவளை வியப்புடன் அவன் பார்த்தான்..

"அப்படி ஃபீல் பண்ற இடத்திலேயா தைரியமா தனியா நின்று பாட்டுப் பாடினீங்க..?"

"யெஸ்.. எதனால என்னை இந்த இடம் ஈர்க்குதுன்னு நான் தெரிந்துக்க வேணாமா..? அதோட.. இந்த மகாபலிபுரத்திலதான் நான் பிறந்து வளர்ந்தேன்.. பிறந்ததில் இருந்து என்னை இம்ப்ரெஸ் பண்ணும் அந்த ஐந்து ரதக் கோவிலில என்ன இருக்குன்னு கண்டறியாம என்னால உறங்க முடியாதுன்னு ஆகிருச்சு.."

இப்படிப்பட்ட வார்த்தைகளை அன்றைய தினத்தின் காலைவரை சித்தார்த்தன் நம்பியிருக்க மாட்டான்.. கேட்க நேர்ந்திருந்தால் தோள்களைக் குலுக்கிக் கொண்டு போயிருப்பான்..

அப்போது அப்படிச் செய்ய அவனால் முடியவில்லை.. அந்தப் பெண்ணின் வார்த்தைகளில் உண்மை இருப்பதை அவன் மனம் உணர்ந்தது..

"தனியாய் வரலைன்னு சொன்னீங்களே.." இதமாக வினவினான்..

"நான் தனியில்லைன்னு சொன்னேன்.. இந்தக் கடல்.. ஐந்து ரதக் கோவில்கள்.. இந்தப் பாறைகள்ன்னு எல்லாமே என் துணையாய் நிற்கறப்ப நான் தனின்னு ஃபீல் பண்ணினதே இல்லை.. அதைத்தான் சொன்னேன்.. மற்றபடி நான் இங்கே தனியாத்தான் வந்தேன்.."

"பயமாய் இல்லையா..?"

"இல்லை.. அமானுஷ்யம் பழகிருச்சு.. இது நான் பிறந்து வளர்ந்த ஊர்.. இங்கே எனக்கென்ன பயம்..?"

முத்துப்பற்கள் தெரிய சிரித்தவளிடம் காலம் காலமாய் பேசிப் பழகிய உணர்வை உணர்ந்தான் சித்தார்த்தன்..

"பை தி வே.. ஐ ஆம் சித்தார்த்தன்.." கை நீட்டினான்..

"நான் யாமினி.." அவள் கை குவித்தாள்..

அவன் தோள்களைக் குலுக்கியபடி கைகளை பேண்ட் பாக்கெட்டில் விட்டுக் கொண்டான்.. சற்று நேரம் அவனிடம் பேசிவிட்டு விடை பெற்றவளிடம் மீண்டும் எப்போது சந்திக்கலாம் என்று கேட்க நினைத்து.. அந்த நினைவை ரப்பர் கொண்டு அழித்தான் சித்தார்த்தன்..

அந்தக் கேள்வி.. அவனுக்கும் அவளுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் அந்த விசித்திர பந்தத்தை விகல்பபடுத்தி விடலாம்.. வேண்டா




யாமத்தில் பூத்த மல்லியைப் போல அழகுற விளங்கிய அந்த சுந்தர மங்கையின் நிலவு வதனத்தை ஆழ்ந்து நோக்கியபடி தன் கரத்திலிருந்த கலயத்திலிருந்த கஞ்சியை துளிக்கூட மீதம் வைக்காமல் சுவைத்துப பருகினான் பல்லவ அரசிளங்குமாரன்..!

பாறையிலும் சிங்காதனத்தில் அமர்ந்திருப்பதைப் போல அமர்ந்திருந்தவனின் தோரணையில் மனம் மயங்கினாள் அந்த மைவிழி...! அவனுக்கென்று உருவாக்கப் பட்ட இருக்கை போல அந்தப் பாறை பின்புறம் உயர்ந்தும்.. முன்புறம் தாழ்ந்து சமதளமாகவும் அமைந்திருந்தது..

நாட்டைப் பற்றிய சங்கதிகளை ஆயனருடன் உரையாடியபடி அவளையே அள்ளிப் பருகுவதைப் போல பார்த்துக் கொண்டிருந்தான் பல்லவன்.. அவளின் மெலிதான அலங்காரத்தில் அவன் மனம் மையல் கொண்டது.. கைகளில் சிறு வளையலும்.. கழுத்தினில் மெலிதான ஆபரணமுமாக இருந்தவளின் வதனத்தில் 'சப்பிரம்' எனப்படும் வெண்மையான ஒளி இருப்பது போல அவனுக்குத் தோன்றி வைத்ததில் மோகம் அவனுக்குள் அனல் மூட்டி குளிர்காய முற்பட்டது.. அதனால் அவளுடன் மறைமுகமாக சிருங்காரம் பேச அவன் விழைந்தான்..

"ஆயனரே..! தங்களின் புதல்வி ஆடல் கலையில் வல்லுனளோ இல்லையோ.. சுவை ததும்பும் கஞ்சி வைத்துக் கொடுப்பதில் சிறந்த வல்லுனள் என்பதில் எள் அளவும் சந்தேகமில்லை.. சுவை மிகுந்த கஞ்சி வைப்பதில் இவளுக்கு நிகர் இவள்தான்.. ஆஹா..! என்ன சுவை..! என்ன சுவை.."

கரங்களை விரித்து இமைகளை மூடி ரசித்து அவன் ரத்த விதத்தில் ஆயனர் பாவம் மகிழ்ந்து போனார்..

"செவி மடுத்தாயா குழந்தா ..?" பெருமையுடன் மகளின் வதனம் நோக்கினார்..

"செவி மடுத்தேன் தந்தையே.." சிவகாமியின் வதனத்தில் சீற்றம் ததும்பியது.

எள்ளும்.. கொள்ளும் வெடித்துச் சிதறும் வதனத்துடன் அவள் சக்கரவர்த்தியின் திருக்குமரனை நோக்கினாள்..

'என்ன ஒரு வஞ்சகப் புகழ்ச்சி..!' வெகுண்டாள்..

"அரசே..! இந்தக் கடல் மோகினி.. கஞ்சி வைப்பதில் மட்டும் வல்லுனள் அல்ல.. ஆடல் கலையிலும் வல்லுனள் தான்.. தாங்கள் அதை சந்தேகித்தால்.. சோதித்துப் பார்த்து செவ்வனே அறிந்து கொள்ளலாம் ஐய்யனே..!" என்றும் உரைத்தாள்..

"சோதிப்பதெனில்.. என்னுடன் நடனமாடி வெல்ல வேண்டும் என்றுதான் நான் உரைப்பேன்.. ஏனெனில்.. ஆடல்கலையில் அனைத்தும் அறிந்தவன் நான்..!" செருக்குடன் உரைத்தான் நரசிம்மன்..

"அதை தாம் உரைக்கக்கூடாது மன்னவரே... நம்மிருவருக்கும் பொதுவான நீதி வல்லுனர் ஒருவர் உரைக்கவேண்டும்.."

"வேண்டாம் சிவகாமி..! நீ இப்போததான் நடனக் கலையை பயில ஆரம்பித்திருக்கிறாய்.. நான் அப்படியல்ல.. அதில் கரை தேர்ந்தவன்.. மிகச் சிறந்த நடனக் கலைஞன்..!"

"ஆகட்டும் அரசே..! அவ்வாறே இருக்கட்டும்.. தாமே நடனக் கலையின் மொத்த உடைமைக்காரராக இருந்து கொள்ளுங்கள்.. அதில் எமக்கு யாதொரு ஆட்சேபணையும் இருக்கப் போவதில்லை.. எனினும்.. மாதராகப் பிறப்பெடுத்தவர்கள்.. கஞ்சி சமைக்க மட்டும்

என் உகந்தவர்கள் என்ற தங்களின் உரையை நான் தகர்க்க வேண்டுமல்லவா..? அதற்காகவே தங்களுடன் நடனமாடி என் திறனை மெய்ப்பிக்க விழைகிறேன்.."

"யாம் உரைத்ததில் என்ன தவறு ஆயனகுமாரி..? மாதர்களின் திறன் சுவை மிகுந்த உணவு வகைகளைத் தயாரித்து அளிப்பதில்தானே வெளிப்படுகிறது..?"

"அவ்விதம் உரைப்பதாக இருந்தால்.. அரசர் பெருமானே..! எமது கூற்றையும் கேளுங்கள்.. ஒரு க்ஷத்திரியனின் திறன் அவனது வாள்முனையில் அல்லவா வெளிப்படவேண்டும்..? ஆடல்கலையில் ஏன் வெளிப் படுகிறது..?"

"வாளேந்தும் ஷத்திரியன் போர் முனையைத்தான் விரும்ப வேண்டுமா சிவகாமி..? யுத்த களத்தை தவிர்த்து ஆடல்கலையில் அவன் மனம் லயிக்கக் கூடாதா..?"

"கூடாது என்று யாம் இயம்பவேயில்லையே.. அரசர் பெருமானே..! இதே கூற்றைத்தானே.. எம் குல பெண்டிர் சார்பாக யாம் இயம்புகிறோம்..? இல்லத்தாருக்கு அமுது சமைத்து படைக்கும் பெண்டிர் அடுக்களையைத்தான் விரும்ப வேண்டுமா அரசிளங்குமாரரே..? சமையல் களத்தை தவிர்த்து.. ஆடலிலும் பாடலிலும் அவள் மனம் செழுத்தக் கூடாதா..?"

"அற்புதம்..!"

சிவகாமியின் சொல்லாடலை ரசித்துப் பாராட்டினான் நரசிம்மன்.. வனப்பு மிக்க சிவகாமியின் வதனம் நாணத்தைப் பூசிக் கொண்டது.. அந்தத் தருணத்தில் தேன் சொட்டும் இனிய நிகழ்வுகளை நுட்பத்துடன் நுகர்ந்தாள் அந்த ஆரணங்கு..

"ஆயனரே..? தமது புதல்வி கஞ்சி வைப்பதில் ட்டுமல்ல.. வார்த்தையாடுவதிலும் வல்லுனள்தான்.."

நரசிம்மனின் புகழ்ச்சியில் ஒளிர்ந்திருந்த நையாண்டியில் மனம் நைந்த நங்கைக்குள் சினம் துளிர்த்தது..

"மன்னர் பெருமான் ஒரு தீர்க்கமான தீர்மானத் தோடுதான் இருக்கிறார் என்று எண்ணுகிறேன்.. தந்தையே..! மாதராகப் பிறந்தவர்கள் ஒன்று.. அமுது தயாரிப்பதிலும்.. அதைப் பக்குவமாக ஆடவருக்குப் படைப்பதிலும் வல்லுனளாக இருத்தல் தகும்.. அல்லது.. ஆடவரின் மனம் மகிழும்படி உரையாடுவதில் வல்லுனளாக இருத்தல் தகும்... என்னே மன்னவரின் கணிப்பு..! என் இதயம் நெகிழ்கிறது தந்தையே..! உடல் சிலிர்க்கிறது.."

"அதற்கு குளிர்காற்று காரணமாக இருக்கலாம் ஆயனரே.. போர்வை கொண்டு போர்த்திக் கொள்வதே உத்தமம்.."

"மன்னரின் ஆலோசனைக்கு மெத்த வந்தனம் தந்தையே..! எமது குளிரை யாம் விரட்டிக் கொள்வோம்.. மன்னர் பெருமான் அது குறித் கவலை கொள்ள வேண்டியதில்லை.."

"அவ்வாறு உரைத்தல் ஆகாது ஆயனகுமாரி..! ஒரு மன்னவன் தனது குடிமக்களின் நலன் குறித்து கவலை கொள்வது தவறாகுமா..?"

"தங்களின் கவலையில் யாம் பிரமித்து விட்டோம் இளவரசே..! என்னே தமது கவலை..! தாங்கள் மட்டுமே ஆடல் கலையில் வல்லுனராக இருத்தல் வேண்டும்.. தங்கள் குடிமக்களின் ஒருத்தி அந்தக் கலையை பயின்று தேர்ந்து விடக் கூடாது.."

"ஊஹூம்..? ஆயனகுமாரியின் சிந்தனை அவ்வாறு செல்கிறதா..? ஆகட்டும் ஆயனரே..! ஆடல் கலையில் தங்களது புதல்வியும் வல்லுனள்தான்.. யாமே உரைத்து விட்டோம்.. மகிழ்ச்சிதானே சிவகாமி..?"

நரசிம்மனின் விழிகளில் பிரதிபலித்த பெருந் தன்மையில் சிவகாமியின் சுயம் திமிறியது..

"இளவரசே..! எமக்கு மகிழ்ச்சியில்லை.." என்றாள்.

"என்ன ஆயனரே..! தம் புதல்வியின் மனம் மகிழும்படி வார்த்தைகளை உரைத்து விட்டேன்.. அதன் பின்னும் இவள் மகிழ்ச்சி கொள்ளவில்லையெனில் யாம் என்ன செய்வது..?"

அவன் ஆயனரிடம் நியாயம் வைத்தான்.. அவர் தமது புதல்வியை பார்த்தார்..

"என்ன இது குழந்தாய்..? சிறு பிள்ளைத்தனமா இளவரசருடன் பிணங்கலாமா..?" கடிந்து கொள்ளும் தொனியில் உரைத்தார்..

"தந்தையே..! தங்களின் சிற்பக்கலை வல்லமையை யாரேனும் குறைத்து மதிப்பிட்டால்.. தங்களால் அதைப் பொறுத்துக் கொள்ள இயலுமா..?" சிவகாமி துக்கத்துடன் வினவினாள்..

நரசிம்மன் துணுக்குற்றான்.. சிவகா மனம் வருந்துகிறாளா..?

அவனது கேலிப் பேச்சில் அவள் மனம் நைந்து விட்டதை உணர்ந்தவன் அதைச் செப்பனிட விழைந்தான்..

அதற்குள் தமது அன்பு குமாரத்தியின் மனதுக்கு இதமாக உரையாடி அவளது மனத்தாங்கலை சமன் செய்ய முயன்று கொண்டிருந்தார் ஆயனர்..

"இதற்குப் போயா வருத்தப்படுகிறாய்..? மன்னவருக்கு உன் ஆடல் திறனைப் பற்றிய சங்கதி எட்டியிருக்காது அம்மா.. அதனால் உரைத்து விட்டார்.. இதையா மனதில் கொள்வது..? அருமையான குழந்தையம்மா நீ.."

"அல்ல தந்தையே.. தங்களால் என் உணர்வுகளை மதிப்பிட இயலவில்லை.. தங்களைப் பார்த்து.. தாங்கள் மண்பாண்டம் செய்வதில் மட்டுமே வல்லுனர்.. சிற்பக்கலையில் வல்லுனராக இருத்தல் சாத்தியப்படாது என்று உரைத்திருந்தால் தங்களின் மனம் எந்த அளவுக்கு நோகும்..?"

'மெய்தானே.. என்று ஆயனருக்குத் தோன்றி விட்டது.. ஒரு கலைஞரைப் பார்த்து.. பாராட்டுதல் மொழிகளை உதிர்க்க வேண்டாம்.. இந்தக் கலையை விட நீ வேறு கலைக்கு தகுந்தவர் என்ற ஒரு மொழியே போதும்.. அந்தக் கலைஞரின் மனம் தகர்ந்து சிதிலமாகி விடாதா..?

ஆயினும் பாவம்.. ஆயனர் என்ன செய்வார்..? அவருடைய செல்வக் குமாரியை பரிகசித்துப் பேசியது பட்டத்து இளவரசர்.. அவரிடம் நியாயம் கேட்க ஆயனரால் இயலுமா..?

பேசா டந்தையாகிப் போன அந்த சிற்பக் கலைஞரை ஆதுரத்துடன் நோக்கினான் அரசிளங்கமரன்..

"விளையாட்டாய் வார்த்தையாடியதில் தங்களின் திருக்குமாரியின் மனம் நைந்து விட்டது போலும்.. இதை சமன் செய்ய என்ன வழியென்று கேட்டுச் சொல்லுங்கள் ஆயனரே..! அவள் எதைக் கேட்டாலும் செய்து கொடுக்க யாம் சித்தமாக இருக்கிறோம்.."

"யாம் யாசிப்பது ஒன்றுதான் தந்தையே..! யாம் ஆடல் கலையில் வல்லுனள் என்பதை இளவரசர் உணர்ந்து அங்கீகரிக்க வேண்டும்.. என் மனம் மகிழ வேண்டும் என்பதற்காக.. வெறும் வாய் மொழியில் உரைத்தல் கூடா ."

சிவகாமி கோரிக்கை வைத்தாள்.. யாமத்தின் கடற்கரையில் அலைகளின் ஓசை யாழ் மீட்டுவதைப் போல இருந்த அந்த அற்புதமான சூழலில்.. அவளுக்கும்.. அரசிளங்குமரனுக்குமான நடனப் போட்டி முடிவாகியது..

---

## *ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



# 4

## *நீ யார்..? நான் யார்..?<br>நினைவில் வந்தது யார்.. யார்..?*

'சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸின்' தலைமை அலுவலகம் அமைந்திருந்த வளாகத்துக்குள் சித்தார்த்தனின் கார் திரும்பியது.. ஓங்கி உயர்ந்திருந்த கட்டிடத்தின் வெளிப்புறம் முழுவதும் கண்ணாடிச் சுவர்களால் மறைக்கப்பட்டிருந்தது.. உள்ளேயிருந்து வெளியில் பார்க்க

முடிந்த கண்ணாடி அது.. வெளியில் இருப்பவர்களால் உள்ளே பார்க்க முடியாது.. கருமை கலந்த கண்ணாடி தடுப்புச் சுவரால் வேயப்பட்டிருந்த அந்தக் கட்டிடம்.. 'சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனி'யின் செல்வச் செழுமையை சொல்லியது..

அகன்ற போர்டிகோவில் சித்தார்த்தனின் கார் நின்றதும் வாசலில் நின்றிருந்த செக்யூரிட்டி ஓடி வந்து கதவைத் திறந்தான்.. கம்பீரமாக இறங்கிய சித்தார்த்தன்.. மடமடவென படிகளில் ஏறிக் கதவருகே போவதற்குள் பாய்ந்து அவனுக்கு முன்னால் வந்து நின்று வாசல் கதவைத் திறந்து விட்டான்..

அந்த சுறுசுறுப்பை மெச்சிய புன்முறுவலுடன் லேசாக தலையசைத்தபடி உள்ளே போய் விட்டான் சித்தார்த்தன்.. ஜாக்பாட் அடித்ததைப் போன்ற சந்தோசத்துடன் நின்று விட்டான் செக்யூரிட்டி..

"என்ன குமாரு, ஜெர்க் அடிச்சதைப் பா நின்னுட்ட..? சைட் ஏதாச்சும் வொர்க் அவுட் ஆகிருச்சா..?"

வெகு ஜாலியாக விசாரித்தபடி வந்து நின்றான் 'தாமு' எனப்படும் தாமோதரன்.. சித்தார்த் குருப் ஆஃ கம்பெனியின் ஜெனரல் மேனேஜர் அவன்தான் என்றாலும் அந்தப் பதவிக்கான மமதையும் செருக்கும் இல்லாமல் அடிமட்ட ஊழியர் வரை கலந்து உரையாடுவான்..

தாமோதரனின் இந்த அணுகுமுறை சித்தார்த்தனின் மிகப் பெரிய பலம்.. சித்தார்த்தனின் வலது கரமாக மட்டுமல்லாமல் இடது கரமாகவும் இவனே செயல்பட்டுக் கொண்டிருந்தான் என்றால் அது மிகையாகாது..

"எம்.டி என்னைப் பார்த்து தலையை அசைச்சாரு ..." பூரிப்பாக சொன்னான் குமார்..

"அதுக்கே இப்படி ஆகிட்ட ா..? கிழிஞ்சது போ.. நான்கூட ஏதாச்சும் சைட்டுக்கு 'ஸ்கெட்ச்..' போட்டுத் துக்கிட்டியோன்னு நினைச்சேன்.. கடைசியில் இவ்வளவு தானா..?" டையை சரி செய்தபடி சிரித்தான் தாமு..

"சைட்டுக்கு என்ன சார்..? மெனக்கெட்டா கிடைக்காமலா போயிரப் போகுது..?" குமார் சொன்னான்..

"ஆனாலும் உனக்கு அதீத நம்பிக்கைதான் குமாரு.. எதுக்கும் உன் மூஞ்சிய அடிக்கடி கண்ணாடியில பார்த்துட்டு ஸ்கெட்ச் போட உட்காரு.."

ஆலோசனை வழங்கிவிட்டு உள்ளே நடந்த தாமோ தரனுக்காக கண்ணாடி கதவை திறந்து விட்டான் குமார்..

"வெரிகுட்..! உன் மூஞ்சிக்கென்ன குமாரு.. விளக்கெண்ணை குடிச்ச குரங்காட்டம் அழகாகத்தானே இருக்கு.. நீ நடத்து குமாரு.. ஜெயிச்சுக் காட்டுவ பாரேன்.."

குமாரின் முதுகில் தட்டிக் கொடுத்து விட்டு உள்ளே போனான்.. ரிசப்சனில் இருந்த வயலெட் இவனைக் கண்டதும் அவசரமாக போனை வைத்தாள்.. அதுவரை போனை காதுக்கு கொடுத்திருந்தவளைப் பார்த்தபடிதான் தாமோதரனும் வந்தான்.. உதடு பிரியாத அவளது பேச்சுச் சப்தம் எதிர் முனையில் இருப்பவருக்கு கேட்குமா.. கேட்காதா என்ற சந்தேகம் நீண்ட காலமாக அவன் நெஞ்சில் குடியிருந்தது.. அந்த அளவுக்கு பக்கத்தில் இருப்பவருக்குக் கூட கேட்காமல் பேசுவதில் வயலெட் கெட்டிக்காரி..

"குட்மார்னிங் சார்.."

அப்போதுதான் அவனைப் பார்த்ததைப் போல காலை வணக்கம் சொன்னாள் வயலெட் ஜோசபின்..

"குட்மார்னிங் வயலெட்.. உங்க செல்போனுக்கு மன்த்லி டென் ருபிஸ் ஆகுமா..?" என்றான் தாமோதரன்..

"சார்..?" புரியாமல் விழித்தாள் வயலெட் ஜோசபின்

"ரீசார்ஜ் அமௌண்டைச் சொன்னேன்.."

நிற்காமல் போய் விட்டான் தாமு..

'இவனுக்கு கழுகுக் கண்..!' தலையை ஆட்டிக் கொண்டாள் வயலெட்..

'ரிசப்சனிஸ்டா இருக்கிறவளுக்கு இது கூட இல்லைன்னா எப்படி..? ம்ஹூா..

உதட்டைப் பிதுக்கிவிட்டு போனை எடுத்து.. விட்ட பேச்சைத் தொடர்ந்தவளுக்கு ஆச்சரியம் அலை மோதியது..

'அது எப்படி.. என் செல்போனுக்கு மன்த்லி ரீசார்ஜா பத்து ரூபாய்தான் செலவாகுதுங்கிறதை இவன் கண்டு பிடிச்சான்..

அதுதான் தாமோதரன்.. சித்தார்த்தனின் நண்பன் மற்றும் ஜெனரல் மேனேஜர்.. சித்தார்த்தனின் அறைக் கதவை அவன் திறந்த போது.. மேஜையிலிருந்த லேப் டாப்பை நோண்டிக் கொண்டிருந்த சித்தார்த்தன் நிமிர்ந் பார்த்தான்..

"வாடா.." என்றான்..

"வந்தேன் நண்பனே.." உற்சா ாய் சித்தார்த்தனுக்கு எதிரில் இருந்த சோபாவில் உட்கார்ந்த தாமோதரன்..

"இன்றைக்கு உனக்காக என்னென்ன மீட்டிங் காத்திருக்குது.. நீ எந்த பிஸினெஸ் லன்ச்சை அட்டெண்ட் பண்ணனும்.. ஈவினிங் எந்தப் பார்ட்டிக்குப் போகனும்ங் கிறதையெல்லாம் ஒப்பிக்கிறேன்.. கேட்டுக்கறியா..?" என்றான்..

"அதுக்குத்தான் செக்கரட்டரி இருக்காளே.. நீ எதுக்காக இந்த வேலையையும் இழுத்து உன் தலைமேலே போட்டுக்கிற..? இருக்கிற வேலை போதாதா..?" லேப் டாப்பின் திரையிலிருந்து பார்வையை விலக்காமல் சொன்னான் சித்தார்த்தன்..

"கிழிஞ்சது போ.. இதையும் மறந்திட்டயா..? அப்பா சித்தார்த்தா..! போதி மரத்தடியை விட்டு கொஞ்சம் வெளியே வாப்பா.." தாமோதரன் தலையில் அடித்துக் கொண்டான்..

"தலை வலிக்கப் போகுது.."

"என் தலை..! வலித்தா வலி எனக்குத்தான்..

"உனக்கு அடிபட்டா இரண்டு மடங்கு அதிகமா எனக்கு வலிக்கும்டா தாமு.."

"ச்சு.. த்ச்சு.. நெஞ்சைத் தொட்டுட்டடா சித்தார்த்தா.. இந்த டயலாக்கை விட்டுட்டு கொஞ்சம் என் மூஞ்சியைப் பார்க்கறியா..?"

"உன் மூஞ்சியிலே என்னடா இருக்கு..?"

"அதைச் சொல்லு.. என் மூஞ்சியில என்ன இருக்கப் போகுது..? நானென்ன டீன் ஏன் பெண்ணா..? கரடு முரடான என் மூஞ்சியில நீ பார்க்கிறதுக்கு எதுவுமே இல்லைதான்.."

தாமோதரன் பேசப்பேச.. சித்தார்த்தனின் மனதில் மகாபலிபுரக் கடற்கரை வந்தது.. கடலோர ரதக் கோவிலின் தூணில் சாய்ந்து நின்று பாடிக் கொண்டிருந்த அவளும் வந்தாள்..

ாமினி..!" அவன் வாய் முணுமுணுத்தது..

"என்னது..? யார் நீயா..? அடேய் பாவி..! நான் உன் நண்பேண்டா.. இப்படிச் சொல்லித்தான் மொத்தக் கம்பெனியையும் அரட்டி வைச்சிருக்கேன்.. நீ வேற.. அதை இல்லேன்னு ஆக்கி விடாதேடா.. கோடி புண்ணியம் உனக்கே கிடைக்க காட் கிட்ட நான் ரெகமெண்ட் பண்றேன்.."

"போடா டேய்.." சித்தார்த்தனுக்கு சிரிப்பு வந்தது..

சிரிப்பின் ஊடே அவன் மனம் யாமினியிடமே மையம் கொண்டது.. அவள் முகத்தை மெலிதான வெளிச்சத்தில் பார்த்த தருணத்தை அவன் நினைவு கூர்ந்தான்..

'அவள் முகத்தில் என்ன இருந்தது..?'

"என்னடா ஆச்சு..? உனக்கு நீயா சிரிச்சுக்கற..? சித்தார்த்தா..? ஆர் யூ ஆல்ரைட்.." தாமோதரன் கவலையுடன் கேட்டான்..

"நத்திங்.. ஒரு கையை ஆட்டி எதுவும் இல்லையென்று மறுத்தவன் மீண்டும் லேப்டாப்பில் பார்வையை பதித்தான்..

"போதி மரத்தடியை விடவே மாட்டே..

"போதி மரத்தடியா..? எதைச் சொ

"உன் கையில் இருக்கிற லேப் டாப்பத்தான் சொல்கிறேன்.. கடையைக் கட்டு சித்தார்த்.. என்னைப் பாரு.."

"பொறுடா.. முதலில் இதைப் பார்த்துக்கறேன்.."

சித்தார்த்தன் மும்முரமாக லேப்டாப்பை ஆய்வு செய்து கொண்டிருந்ததில் தாமோதரன் மணி பார்த்தான்.. அதி முக்கியமான வேலைகள் அவர்களின் தலைக்கு மேல் குவிந்து கிடந்தன.. அவற்றின் நினைவின்றி சித்தார்த்தன் லேப் டாப்பில் ஆழ்ந்திருந்த்தில் தாமோதரன் கவலை கொண்டான்..

'ஒருவேளை வீடியோ கேம் விளையாடறானோ..?'

செய்தாலும் செய்வான் என்ற நினைவில் எழுந்தான் தாமோதரன்.. எந்த விதமான கணிப்பிற்கும் அப்பாற்பட்டவன் சித்தார்த்தன்.. எதை எப்போது செய்வான் என்று யாராலும் சொல்லிவிட முடியாது.. உச்சி வெயிலில் சூடு பறக்கும் காபியையும் குடிப்பான்.. மார்கழிப் பனியில் நடுநிசி இரவில்.. சாலையோர ஐஸ் வண்டியில் ஐஸ்கிரிம் வாங்கிச் சாப்பிடவும் செய்வான்..

"நம்ம எம்.டி. வினோதமான பிறவிடி.."

மதிய உணவில் அந்தக் கம்பெனியின் பெண்களின் வாயில் உணவுடன் சேர்ந்து இந்த மதிப்பீடும் அரை படுவதை பற்றி! சித்தார்த்தன் அறிவானா என்றிருந்தது தாமோதரனுக்கு..




## சதிராடும் என் மனதை.. சதிராடி கலைத்தாயே...

அலைகள் கொஞ்சும் மகாபலிபுரக் கடலோரமிருந்த சிறு குன்றில் சமன் செய்யப்பட்ட பாறையில் தீப்பந்தங்களின் ஒளியில் ஆயனரும், சிவகாமியும் நின்றிருந்தார்கள்.. ஆயனரின் முகத்தில் கவலைக் குறிகள் தென்பட்டன..

"அவசரப்பட்டு விட்டாய் அம்மா..! பாராளும் வேந்தருடன் சரி நிகிர் சமானமாக ஆட முடிவு செய்தது தவறோ என்று என் உள்ளம் அஞ்சுகிறது மகேள..!"

"ஆடல் கலைக்கு அரசென்றும், குடிப்பிறப் பென்றும் பேதம் கிடையாது தந்தையே..! நானறிந்த கலையை அரசிளங்குமரரும் அறிந்திருக்கிறார்.. நான் பயின்றதைப் போலவே அவரும் பயின்றிருக்கிறார்... அவர் நடனக்கலையில் வல்லுனர் என்பதை இந்த நாநிலமே மொழிகின்றது.. அவ்வாறு இருக்கும் போது என்னை மட்டும் அவர் தாழ்வாகப் பேசுதல் தகுமா தந்தையே..?"

"அல்ல மகளே..! நரசிம்மபல்லவரைப் பற்றி நீ இன்னமும் முழுமையாக அறிந்து கொள்ளவில்லை.."

ஆயனர் மொழிந்த போது சிவகாமியின் மனம்..

'ஆம்தானே.. என்றது..

'அவரைப் பற்றி என்ன அறிந்தேன்..?' என்று வினவியது..

'அதன் பொருட்டுத்தான் அவரை நடனப் போட்டிக்கு அழைத்தாயோ.. அவளது மனச்சாட்சி நகைத்தது..

'அல்ல.. அல்ல.. நடனக்கலையில் எமக்கிருக்கும் திறனை அறிவுறுத்தவே அவரை வாதுக்கு யா அழைத்தோம்..

சிவகாமியின் மனம் கச்சை கட்டிக் கொண்டு மனச்சாட்சியுடன் வாதுக்குப் போனது.. கேலி நகையுடன் மனச்சாட்சி தன் திருவாயை மூடிக்கொண்டது.. தூரத்தில் கேட்ட புரவியின் குளம்போசையில் தந்தையும்.. மகளும் திரும்பிப் பார்த்தார்கள்..

நரசிம்மன் புரவியில் வந்து கொண்டிருந்தான்.. நிலவொளியில் தெரிந்த அவனுடைய கம்பீரமான வடிவழகில் சிவகாமியின் மனம் சிக்குண்டது.. அவன் அரசிளங்குமரன்.. நாளைய சக்கரவர்த்தி.. இன்றைய பட்டத்து இளவரசன் என்பதை வாகாக மறந்து போனது அவள் மனம்.. அவனுடைய நீண்ட கரங்களும்.. நெடிதுயர்ந்த கம்பீரமான தோற்றமும்.. நிமிர்ந்த நடையழகும்.. செதுக்கி வைத்த சிலை போன்ற முக அமைப்பும் மட்டுமே அப்பேதையின் இதயத்தில் பதிவாகியதில் அவள் மனம் சதிராடியது..

நரசிம்மன் வழக்கமான மரத்தடியில் புரவியை நிறுத்தி புரவியிலிருந்து குதித்து இறங்கும் லாவகத்தை சிவகாமியின் விழிகள் பருகிக் கொண்டிருந்த வேளையில் ஆயனர் தமது குமாரத்தியின் முகம் பார்த்து..

"இளவரசர் வந்து விட்டார் அம்மா.." என்றார்..

'இதை எம்மிடம் மொழிகிறீர்களா தந்தையே.. யாம் அறிய மாட்டோமா..?' அவள் மனதுக்குள் வினவிக் கொண்டாள்..

வெகு தொலைவில் அவனது புரவி வந்தாலும்.. அவனது புரவியின் குளம்போசையை அவளது செவிகள் வெகு எளிதாக இனம் பிரித்து அடையாளம் கண்டு விடுகின்றனவே.. இதை அவளுடைய தந்தை எப்படி அறிவார்..?

*'ஓராயிரம் புரவிகளிடையே - நின்*
*புரவியின் குளம்போசையை*
*யாம் அறிவோம்..*
*பல்லாயிரம் மாந்தரிடையே - நின்*
*பாதங்களின் ஓசையை*
*யாமறிவோம்..*

அவளாக இயற்றிக் கொண்ட பாடலுக்கு அவள் ஆடிக்கொண்டிருந்ததை ஓர்நாள் நரசிம்ம பல்லவன் பார்த்து விட்டான். அப்பாடலின் பொருளை உணர்ந்தவனின் முகத்தில் வந்த ஒளிர்வில் சிவகாமி நாணிப் போனாள்.. சிக்கிக் கொண்ட உணர்வில் அவள் இதயம் மத்தளம் வாசித்தது..

'கண்டு கொண்டானோ.. அவள் தவித்துப் போனா

அவனது இதழ்களில் பரவிய இளநகை 'ஆம்' என்று கட்டியம் மொழிந்தது.. சிவகாமி அகம் மறைத்து அவனிட சீறினாள்..

"இதுதான் பல்லவகுல திலகத்துக்கு அழகோ மன்னவரே..?"

"எமக்கு எதுவெல்லாம் அழகு என்று எமக்கு எப்படித் தெரியும் கடல்கன்னி..? எம் திருமுகத்தைப் பார்வையிடும் மங்களுக்கு அல்லவோ அனைத்தும் தெரியும்..?"

அவனது குறும்புப் புன்னகை அவளை ஈர்த்ததில் அவள் அவ்வுலகை மறந்து போனாள்.. அவனும்.. அவளும் மட்டுமே இருப்பதைப் போன்ற ஓர் மாய உலகில் பவனி வருவதைப் போன்ற கிறக்கம் அவள் சிரத்தில் ஏறியது..

'இவன் மயக்கும் வித்தையில் கரம் தேர்ந்தவன்..

தன்னை சமாளித்துக் கொள்ள வெகுவாக பிரயத்தனப் பட்டுப் போனாள் சிவகாமி.. ஒருவாறாக தன்னை நிலை நிறுத்திக் கொண்டு நிமிர்ந்தவளின் திடத்தை நரசிம்மனின் கூரிய பார்வை குலைத்தது..

'வேண்டாம் மன்னவனே.. தன் மனதுக்குள் போராடினாள் சிவகாமி..

'இவ்வாறு பார்க்க வேண்டாம்.. எமது மனது சருசாக மாறிப் போகிறது.. உமது ஓர் சிறு பார்வைப் பொறியில் அது மாறிக் கொள்கிறது.. இந்தப் பேதையின் மீது கருணை டுங்கள்..

மனதில் அவனைப் பற்றிய மயக்கம் இருக்க.. வெளியில் அகம் மறைத்து.. முகம் முழுவதும்.. முள்புதரை டிக்கொண்டு சீறிப் பாய்ந்தாள் சிவகாமி..

"எமது நடனத்தை மறைந்திருந்து பார்ப்பது.. மன்னவருக்கு அழகல்ல என்றே யாம் மொழிந்தோம்..

மற்றபடி.. மன்னவரின் வடிவழகைப் பற்றி எமக்கு என்ன தெரியும்..?"

நரசிம்ம பல்லவனின் முகம் பாராமல் வேறு திக்கில் பார்த்தபடி மொழிந்தவளின் விரல் நடுக்கத்தில் நகைத்தான் அவன்..

"அவ்வாறா சிவகாமி..?" ஆழ்ந்த குரலில் வினவவும் செய்தான்..

"எமது வடிவழகைப் பற்றி தமக்கு எதுவும் தெரியாதா..?"

ரகசியமான அவனது தொனியில் அரண்டு போனாள் அந்த ஆரணங்கு.. அச்சம் சொட்டும் விழிகளின் மீது.. இமைகள் படபடவென்று அடித்துக் கொள்ள அவ்விடத்தை விட்டு ஓடிப் போனாள்..

வெகு தினங்கள் வரை நரசிம்ம பல்லவனின் அந்த ரகசியக் குரல் அவளது செவிகளில் இரவும், பகலும் ஒலித்துக் கொண்டே இருந்தது.. சொப்பனத்திலும் ஒலித்த அந்தக் குரலின் ஈர்ப்பில் துவண்டு போனாள் சிற்பிமகள்..

"நேரம் தவறாமைக்கான மிகச் சிறந்த உதாரணம் நமது சக்கரவர்த்தியும், இளவரசரும்தானம்மா.."

ஆயனரின் குரல் சிவகாமியை நிகழ்காலத்திற்கு இழுத்து வந்தது.. ஏனோ.. அந்த வேளையில் மகேந்திரச் சக்கரவர்த்தியைப் பற்றிய உரையாடலை சிவகாமியின் மனம் விரும்பவில்லை.. அழகான நாதத்தின் இடையே அபஸ்வரம் நுழைந்ததைப் போல் அவள் உணர்ந்தாள்..

"சக்கரவர்த்தியைப் பற்றிய உரை.. தற்போது தேவைதானா தந்தையே..?" சிவகாமி சிணுங்கலுடன் வினவினாள்..

"தேவைதான் குழந்தாய்..! நம்மை ஆளும் மன்னாதி மன்னரைப் பற்றி நீ அறிந்து கொள்ள வேண்டாமா..?"

'அவரைப் பற்றி அறிந்து எமக்கென்ன ஆகப் போகிறது தந்தையே..! அவருடைய திருக்குமாரரைப் பற்றி அறிந்து கொண்டாலாவது அதில் பொருள் உள்ளது..

"சக்கரவர்த்தியைப் பற்றி என்ன எண்ணினா'

'எதுவும் எண்ணவில்லை தந்தையே..! அவரது புதல்வரைப் பற்றித்தான்.. சதா சர்வகாலமும் எனது நினைவு சுழன்று கொண்டிருக்கிறது..

"சக்கரவர்த்தி ஒரு சமாதான விரும்பி மகளே..! ம கந்திர பல்லவ சக்கரவர்த்தியின் சமாதான விழைவைப் பற்றி இந்த அம்புலியே அறியும் குழந்தாய்..!"

ஆயனரின் குரலில் பாசமும், நெகிழ்வும் கலந்து சொட்டின..

உண்மைதான்.. மகேந்திரவர்மனின் மனம் அத்தகையதுதான்.. அவன் ஒரு தேர்ந்த கலாரசிகன்.. எளிதில் அணுகக்கூடிய மாமன்னன்.. சமாதான விரும்பி.. அவன் புகழை அவனி அறியும்.. அவனிடமிருந்துதான் கலைகளை ஆராதிக்கும் தன்மையும்.. அவற்றைப் பயின்று அதில் மிகப்பெரும் வித்தகனாக மாறும் திறமையும் நரசிம்ம வர்மனுக்கு வந்திருந்தன..

மகேந்திர வர்மன் கலைகளை ரசித்து ஆராதிப்ப தோடு நிறுத்திக் கொண்டான்.. அவனது புதல்வனான நரசிம்மவர்மனோ.. அதற்கும் மேலே பயணித்து.. ஆடலையும், பாடலையும் ஆழ்ந்து பயின்றான்.. ஆடல் கலையில் வல்லுனன் என்ற நாமத்தையும் பெற்றான்..

வாளேந்தும் ஷத்திரியனுக்கு ஆடலும், பாடலும் எதற்கு என்று மறுக்காத தயாளன் மகேந்திரவர்மன்..

"யாம் யாரம்மா..?"

ஆயனரின் வினாவில் திகைத்தாள் சிவகாமி..

"இது என்ன வினா தந்தையே..? தாங்கள் எனது அருமை தந்தையார் என்பதை எம் வாய்மொழியில் செவி மடுக்க விருப்பம் கொண்டீரா..?"

"இல்லை மகளே..! யாம் தமது தந்தை.. எம பணி என்ன..?"

"இதையும் எம் வாய்மொழியில் செவி மடுக்க வேண்டுமா தந்தையே..? இந்த அம்புலி புகழும் சிற்பக் கலை வல்லுனர் அல்லவோ தாங்கள்..!"

"புகழுரை எதற்கம்மா..? யாம் ஒரு சிற்பி..! அவ்வளவே.. அரசவையை யாம் நாடிப் போனால்.. காலதாமதமின்றி நொடிப்பொழுதில் சக்கரவர்த்தியின் தரிசனம் எமக்குக் கிடைத்து விடுகிறது.. எமக்கு மட்டுமல்ல.. அனைத்து மாந்தருக்கும் இவ்வாறேதான்.. நமது மன்னர் மகேந்திரசக்கரவர்த்தி.. அரசர் என்ற ஆணவம் இல்லாதவர் அம்மா.. மக்களால் எளிதில் அணுக முடிந்த மாமன்னர்..! காஞ்சி ஏகாம்பரரேஸ்வரரைப் போற்றி வாழும்

வீர சைவர்..! அவருடைய குடிமக்களாக நாம் இருப்பதற்கு பெருமை கொள்ள வேண்டும் குழந்தாய்.."

ஆயனரின் உரை சிவகாமிக்கு அலுப்பையே தந்த எதன் பொருட்டு ஆயனர் இவ்விதம் உரைக்கிறார் என்ற ஐயம் அவள் அகத்தில் எழுந்தது..

பாராளும் சக்கரவர்த்தியின் திருமகனிடம்.. அவர திருமகளின் மனம்  க்கிக் கொண்டு விட்டதை அறிந் விட்டாரோ..?

சிவகாமியின் மனதில் துயரம் வந்தது.. அவர்களை சமீபித்துக் கொண்டிருந்த இளவரசனின் எழிலில் அவளது மனம் ஆடியது..

'இவன் எனக்குக் கிட்ட மாட்டானா..?'

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 5

## *உன் முகத்தைப் பார்த்த போது.. எங்கேயோ பார்த்த நினைவு..!*

தாமோதரனுக்கு மண்டை காய்ந்தது.. குவிந்திருக்கும் வேலைகளைப் பற்றிய நினைவின்றி இந்த சித்தார்த்தன் அவனை இந்த அளவுக்கு சோதிக்க வேண்டுமா என்றிருந்தது அவனுக்கு..

கயாவது இதைக் கண்டிருக்கிறோமா..?'

சுவரில் முட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது தாமோதரனுக்கு..

தி கிரேட் 'சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனி'யின் கிரேட் எம்.டியான மேன்மை மிகு சித்தார்த்தன்.. தனது அலுவலக அறையில்.. காலை வேளையில்.. லேப் டாப்பை மடியில் வைத்துக் கொண்டு வீடியோ கேம் விளையாடிக் கொண்டிருக்கிறான் என்று வெளியே சொன்னால் என்ன சொல்வார்கள்..?

'தலையில் அடித்துக் கொள்வார்கள்..

அதைப் போல தன்னால் தலையில் அடித்துக் கொள்ள முடியவில்லையே என்று தாமோதரனுக்கு ஆற்றாமையாக இருந்தது..

"சித்தார்த்.." கூப்பிட்டுப் பார்த்தான்..

சித்தார்த்தனிடம் அசைவில்லை.. என்னவோ.. பன்னாட்டு நிறுவனத்துடன் வியாபார ஒப்பந்தம் போட்டுக் கொண்டிருப்பவனைப் போல வெகு தீவிரமாக லேப் டாப்பை உற்று.. உற்று பார் க் கொண்டிருந்தான்..

'கழுதையில என்னத்தைத்தான் பார்த்துத் தொலைக்கிறான்..?'

தலைமுடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது தாமோதரனுக்கு.. இப்படியா ஒருவன் முதலாளியாக பிறந்து விட்ட மமதையிலே தோழனென்றும் பாராமல் தனது ஜெனரல் மேனேஜரைப் பித்துப் பிடிக்க வைப்பான்..?

'இவனைக் கூப்பிட்டா வேலைக்கு ஆகாது.. நானே போயி என்னன்னு பார்த்துத் தொலைக்க வேண்டியதுதான்.'

மனதுக்குள் நினைத்துக் கொண்ட தீர்மானத்தை உடனடியாக நிறைவேற்றும் திட்டத்துடன் சோபாவை விட்டு எழுந்து தாமோதரன் சுற்றி வளைத்து சித்தார்த்தனின் அருகே போய் அவனது சுழல் நாற்காலியின் பின்புறமாக நின்று.. குனிந்து.. அவன் லேப்டாப்பில் அப்படி என்னத்தைக் கிழித்துக் கொண்டிருக்கிறான் என்று பார்த்தான்.. பார்த்தவன் அரண்டு போனவனாக..

"பே.. பே.. பே ' .." என்று அலறி வைத்தான்..

"உஸ்ஸ்.." சித்தார்த்தன் ஆள்காட்டி விரலை வாயில் வைத்து தாமோதரனின் அலறலை அடக்கினான்..

"கீப் கொயட்..

"நான் கொயட்டறது இருக்கட்டும்.. நீ எதுக்காகடா விட்ட விடிகாலையிலே.. லேப் டாப்பில.. பேயைப் பார்த்துக்கிட்டு இருக்க..? உனக்கே இது நல்லா இருக்கா சித்தார்த்..?"

"கொஞ்சம் கூட நல்லா இல்லைதான்.."

சித்தார்த்தன் ஆமோதித்ததில் தாமோதரனுக்கு 'அப்பாடி' என்றிருந்தது.. அவன் ஆசுவாச பெருமூச்சை விட்டான்..

'நண்பனுக்கு புத்தி வந்திருச்சு.. திருந்திட்டான்..

இனி மேலாவது மேலப்டாப்பை மூடிவிட்டு.. அன்றைய அலுவல்களைப் பற்றி அவனுடன் மாட்டாடுவான் என்று

தாமோதரன் பேராசைப்பட.. அந்தப் பேராசையில் இடியைக் கொண்டு வந்து இறக்கினான் சித்தார்த்தன்..

லேப்டாப்பில் தெரிந்த ஆவியின் உருவத்தை அப்படியும் இப்படியுமாக விரல்களை பல வடிவங்களில் ஒன்று சேர்த்து விஅு பார்த்தவன் உதட்டைப் பிதுக்கினான்..

"இதைப் போய் நல்லா இருக்குன்னு எந்த இடியட்டாவது சொல்லுவானா..?" தாமோதரனிடம் கேட்கவும் செய்தான்..

"ஏண்டா டேய்..! உனக்கே இது நல்லாயிருக்கான்னு நான் இதைக் காட்டியாடா கேட்டேன்..?" தாமோதரனுக்கு அழுகையே வந்து விட்டது..

'இவன்கிட்ட ஜி.எம்மா வேலை பார்க்கிறதுக்கு என்னவெல்லா பாடாய் பட வேண்டியிருக்கு.. மனுசர் கூட கோர்த்து விட்டாப் பரவாயில்லை.. இவன் பேய்கூட கோர்த்து விடறானே.. இவன் பேசறதைக் கேட்டுட்டு.. என் மூஞ்சியாடா நல்லாயில்லைன்னு பேய் கொதிச்சு எழுந்துட்டா நான் என்ன பண்ணுவேன்..?'

மனதுக்குள் புலம்பிய தாமோதரனுக்கு லேப் டாப்பின் திரையைப் பார்க்கக் கூட தயக்கமாக இருந்தது..

"ஏண்டா இப்படி படுத்தற..?" நொந்து போ கேட்டான்..

"அப்ப.. நீ இதைச் சால்லலையா..?"

சித்தார்த்தன் 'அதை' விடவேயில்லை..

"பாருடா சித்தார்த்தா..? நீ எனக்கு படியளக்கிற பாஸா இருக்கலாம்.. அதுக்காக.. பேய்கிட்டயெல்லாம் போட்டுக்

கொடுத்து.. கோள் மூட்டி விட்டு.. பேய்க்கும் எனக்கும் பகையை வளர்த்து விடாதே.. உன்னை கெஞ்சிக் கேட்டுக்கறேன்.." தாமோதரன் கையெடுத்துக் கும்பிட்டு விட்டான்..

"ஈஸிட்..? அப்படின்னா அது கூட ரண்டா பழகறதுக்கு ரெடியாய் இருக்கே போல..?"

சித்தார்த்தன் 'ஆர் யூ ரெடி..? ரெடி..?' என்ற தினுசில் கேட்டு வைக்க.. தாமோதரன் தண்ணீர் பாட்டிலைத் தேடினான்..

உலர்ந்து போயிருந்த உதடுகளுக்கும்.. நீர் வற்றிப் போயிருந்த தொண்டைக்கும் உடனடியாக தண்ணீர் தேவைப்பட்டது..

"இந்தா.."

சித்தார்த்தன் எடுத்துக் கொடுத்த தண்ணீர் பாட்டிலை.. 'தேடினேன் வந்தது..' என்ற ரீதியில் ஆவலாக கைப்பற்றிய தாமோதரன் அவசரமாக தொண்டையில் சரித்து.. அரை பாட்டில் தண்ணீரைக் காலி செய்தான்..

"போதுமா..?"

தண்ணீர் பாட்டிலை திருப் க் கொடுத்த தாமோதரனிடம் வெகு அக்கறையாக சித்தார்த்தன் விசாரித்து வைத்ததில்.. தாமோதரனுக்குப் பற்றிக் கொண்ட வந்தது..

ாலாங்கார்த்தாலே தலையாலே தண்ணீர் குடிக்க வைச்சுக்கிட்டு அக்கறைப்படறான்.. படவா..!'

அந்தக் கடுப்புடனே அவன் நண்பனுக்குப் பதில் சான்னான்..

"இப்போதைக்கு எப்படிடா மச்சான் தெரியும்..? எனக்கு இன்னும் கொஞ்சம் தண்ணீர் தேவைப்படுமா.. படாதாங்கிறது.. நீ லேப்டாப்பை மூடி வைக்கிறதிலதான் இருக்கு.."

"உன்னை இது என்னடா பண்ணுச்சு..?"

சித்தார்த்தன் என்னவோ லேப் டாப்பைக் காட்டி... அது குறித்துத்தான் கேட்டு வைத்தான்.. ஆனால்.. அவன் விரல் நுனி காட்டிய திசையில் லேப் டாப்பின் திரையில் தெரிந்த ஆவியின் உருவப்படம் இருந்ததில் தாமோதரன் மறுபடியும் தண்ணீர் பாட்டிலைத் தேடினான்..

"உனக்காக கிணறு தோண்ட வைச்சிருவ போல இருக்கே.."

முழு பாட்டில் தண்ணீரையும் ஒரே மூச்சில் குடித்து விட்டு மூச்சு வாங்க உட்கார்ந்திருந்தவனிடம் கேலியாக கேட்டு வைத்தான் சித்தார்த்தான்..

"கேட்பேடா கேட்ப.. கேட்கிறவன் கேணை ஜி.எம்மா இருந்தா.. நீ லேப்டாப்புல பேயைக் கூப்பிட்டுக்கிட்டு வந்து கேள்விநேரம் நடத்துவ..? உனக்கு நான் என்னடா கெடுதல் பண்ணினேன்..?"

"ஒன்னும் பண்ணலையே.."

"அப்புறம் என்ன அலுவலுக்காகடா பே ரண்ட் ரிகவஸ்ட் கொடுக்கச் சொல்கிற..?"

"வேண்டாம்ன்னா.. உன் சார்பா நான் அதுக்கு மெயில் அனுப்பட்டுமா..?"

"என்ன கழுதைக்கு..?"

"மூன்லைட் டின்னரை உன்கூட செலபரேட் பண்ணத்தான்.."

"அதை நீயே பண்ணு.. என்னை விட்டிரு.. இப்ப என்ன கழுதைக்கு பேய் முகத்தைப் பார்த்துக்கிட்டு இருக்க.."

"ஏண்டா..? பார்த்தா என்ன..?"

"பேசாதே.. கொலைவெறியில இருக்கேன்.. ஏழு கழுதைக்கு ஆகிற வயசாச்சு.. இன்னும் கல்யாணம் பண்ணிக்காம என்னைக் கலங்கடிக்கிறான்னு உன் அம்மா பாவம்.. என்னைப் பார்க்கிறப்பல்லாம் சொல்லிப் புலம்பறாங்க.."

"அதுக்கு..?"

"பேய் முகத்தைப் பார்' ாம.. உன் அம்மா கை காட்டற பெண் முகத்தைப் பார்' ப் போனாலாவது வேலைக்கு ஆகும்.."

"என்ன வேலை..?"

"உனக்குக் கல்யாணம் ஆகிற வேலைதான்.."

"பாருடா தாமு.. கோபம் வந்தா என் முதுகில நாலு மொத்து மொத்திக்க.. அதை விட்டுட்டு.. கல்யாணம்.. கில்யாணம்ன்னு என் அம்மா பேச்சைக் கேட்டுக்கிட்டு என்னை பிரெயின் வாஷ் பண்ண நினைக்கிற வேலையை விட்டிரு.. சொல்லிட்டேன்.."

"உக்கும்.. என்னை மட்டும் அந்தப் பேச்சைவிட்டிறச் சொல்லு.. நீ மட்டும் இந்த லேப்டாப்பை விட்டிராதே.."

"ஏண்டா.. இது உன்னை..

சித்தார்த்தன் சொல்லி முடிப்பதற்குள் அவன் வாயைப் பொத்தி.. அவன் சொல்ல வந்த பேச்சை பாதியில் நிறுத்தினான் தாமோதரன்..

"திரும்பவும் இது உன்னை என்ன பண்ணுச்சுன்னு ஆரம்பிச்சு வைக்காதே.. எதுவும் என்னை எதுவும் பண்ணலை.."

அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே.. அறைவாசலில் கதவில் 'டொக்.. டொக்' என்ற விரல் தட்டும் சப்தம் கேட்டது..

"யெஸ்.. கமின்.."

சித்தார்த்தனின் வாயை மூடிக் கொண்டிருப்பதை மறந்து தாமோதரன் சொல்லி விட்டான்..

"கேண்டிடேட்ஸ் வந்துட்டாங்க சார்.. அவங்களோட ஃபைல்ஸை கொண்டு வந்திருக்கேன்.. இண்டர்வியூ ஆரம்பிக்கிறதுக்கு முன்னாலே நீங்க ஒரு தடவை படிச்சுப் பார்த்துட்டா பெட்டரா இருக்கும் சார்.."

சொல்லிக் கொண்டே உள்ளே வந்த வயலெட்.. சுழல் நாற்காலியில் சரிந்திருந்த சித்தார்த்தனையும்.. அவன் பின்னால் நின்று அவன் கழுத்தை வளைத்து வாயைப் பொத்திக் கொண்டிருந்த தாமோதரனையும் கண்டு மிரண்டு பின் வாங்கினாள்..

"சார்.. எனிதிங் சீரியஸ்..?"

சித்தார்த்தனைப் பார்த்து அவள் கேட்ட கேள்வியில் உடனடியாக போலிஸை வரவழைத்து தாமோதரனைப்

பிடித்துக் கொடுத்து விடும் உத்தேசம் மலையளவுக்கு இருந்தது..

'மகனே..! நான் பேசற போன்காலையா கணக்குப் பண்ற..?' அவள் விழிகளின் வன்மத்தில்.

"தேவைதான் எனக்கு.." என்றான் தாமோதரன்..




அவனை உண்ணுவதைப் போல பார்த்த சிவகாமியின் பார்வையில் நரசிம்மன் ஓர் கணம் நின்றான்.. அவனது புருவங்கள் உயர்ந்தன.. பரிதவித்த அந்தக் கன்னியின் பார்வையில் கட்டுண்டது அவனது மனம்..

'ஏன் இவ்வாறு அள்ளிப் பருகுவதைப் போல் நோக்கி வைக்கிறாள்..?'

மனதுக்குள் வினாவை எழுப்பியவாறு அந்தக் குன்றில் தாவி ஏறினான் நரசிம்மன்.. அதில் சிவகாமியின் அகம் படபடத்ததை அவளது இமைகள் படபடத்து அறிவுறுத்தியதில் மல்லையின் கடற்கரையின் எழில் கூடியதைப் போல இருந்தது அவனுக்கு..

"வந்துவிட்டேன் ஆயனரே..!" கம்பீரமான அவனது குரலில் சிவகாமியின் இமைகள் மூடித்திறந்தன..

"வரவேண்டும் இளவரசே..!" ஆயனர் கரம் குவித்து வரவேற்றார்..

"தாங்கள் பருக ஏதாவது.? சிவகாமி.."

புதல்வியை அழைக்கத் திரும்பியவரை கையமர்த்தி தடுத்தான் நரசிம்மபல்லவன்..

"ஊஹீம்.. ஆடல் வல்லமையை நிரூபிக்க நின்றிருக்கும் தங்களின் புதல்வியை சமையல்கூடத்திற்கு அனுப்ப வேண்டாம் ஆயனரே..! எதற்கு வம்பு..?"

"ஏன் இளவரசே..?"

"தங்களின் புதல்வியின் திருக்கைபட்ட அமுது சுவைத்து.. ருசியில் எம்மை மயக்கி வைக்கும்.. யாமும் அதன் சுவையில் கட்டுண்டு தங்களின் புதல்வியை ஏகத்துக்கும் பாராட்டி வைப்போம்.. தங்களின் புதல்விக்கு சினம் மேலிட்டு விடும்.. அபிநயிக்கும் கரங்களை அடுக்களைக்குள் அனுப்ப நினைப்பதாக எம்மீது புகார் சொல்லி நியாயசபையை அணுகினாலும் அணுகி விடுவார்.. ஒரு குவளை கஞ்சிக்கு ஆசைப்பட்டு இத்துனை அனர்த்தங்களை தாம்பூலம் வைத்து அழைக்க வேண்டுமா ஆயனரே..?"

நரசிம்மனின் நீண்ட பேச்சில்..

"அப்பப்பா.." என்றாள் சிவகாமி..

நரசிம்மனின் பார்வை இருளுக்குள் துழாவ ஆரம்பித்தது..

"எவரையேனும் துழாவுகிறீர்களா இளவரசே..?" யக்கத்துடன் வினவினார் ஆயனர்..

"தங்களின் தந்தையாரைத் துழாவுகிறேன் சிற்பியாரே.."

"எமது தந்தையா..? இது என்ன விந்தை அரசே..? அவர் விண்ணுலகம் சன்று விட்டாரென்று தாங்கள் அறிவீர்களே.."

"அறிவேன்தான்.. ஆயினும் தங்களின் புதல்வி 'அப்பப்பா' என்று அழைக்கிறாளே.. அதனால் துழாவி விட்டேன்.."

இளவரசனின் பரிகாசத்தை உணராத அப்பாவியான ஆயனர் சிரத்தை அசைத்து அசைத்து அவன் சொல்வதை செவி மடுக்க.. சிவகாமியின் இதழ் மட்டும் வெகு எழிலாக கீழ் வளைந்து அவள் கண்டுகொண்டாள் என்பதை அவனுக்கு உணர்த்தியது.. அதில் அவனது விழியிரண்டும் மின்னல் கொண்டன.

"ஓர் வார்த்தை தாம் உதிர்த்தால்.. ஒரு கோடி வார்த்தைகளை இளவரசர் உதிர்க்கிறாரே தந்தையே..! இந்த வித்தாரப் உரையை மெச்சித்தான் 'அப்பப்பா' என்றேன்.. மற்றபடி. விண்ணுலகம் சென்று விட்ட எமது தந்தையின் தந்தையை கூவி அழைக்கவில்லை..'

"அவ்வாறா ஆயனரே..?"

"அவ்வாறேதான் தந்தையே.."

"யாம்தான் சரியாக புரிந்து கொள்ளவில்லையோ..?"

"இளவரசர் என்றுமே தவறாக பொருள் பவரல்ல தந்தையே.."

"இருக்கட்டும் சிற்ப குமாரி..! தங்களின் ஆணைப்படி ஆடல் போட்டிக்கு வந்து விட்டேன்.. இந்த நடனப் போட்டியை சீர்தூக்கிப் பார்த்து நியாயம் சொல்லும் நியாயசபையின் தலைவராக தமது தந்தையும் இங்கிருக்கிறார்.. இனி ஆடல் போட்டியை ஆரம்பிக்கலாம் அல்லவா..?"

"அதையே யாமும் கூற விழைந்தோம் அரசே..!"

"ஓ..! தாம் இதற்காகத்தானே இத்தனை கா காத்திருந்தீர்கள்..?"

நரசிம்மனின் பரிகாச உரைக்கு பதில் உரை கூற செவ்வாய் திறந்தவளின் இதயம் ஆம்' என்றது..

'உமைக் காணவே இத்துனை காலமும் காத்திருந்தேனோ எம் மன்னவா..!' அவளது இதயம் விம்மியது..

"தங்களின் புதல்வி கூட பேசாமடந்தையாக ஆகிவிடக் கூடுமென்பதை இன்றுதான் அறிந்தேன் ஆயனரே.." நரசிம்மன் உரக்க நகைத்தான்..

சிவகாமி பதிலேதும் உரைக்காமல் அவளது கால் சதங்கையை சமன் செய்வது போல சிரத்தைத் தாழ்த்திக் கொண்டாள்.. நரசிம்மனின் புருவங்கள் மீண்டும் உயர்ந்து இறங்கின..

அவளின் உணர்வுகளை அவதானித்தவனின் இதயம் மென்மையானது.. சிரம் கவிழ்ந்திருந்த அவளின் கூந்தல் தோள் வழியாக படிந்து இறங்கி.. புவியைத் தொடுவதைப் போல தொங்கியது..

'இவள் பேரெழில் கொண்டவள்..' என்று நினைத்துக் கொண்டான்.. மனோகரம் நிரம்பிய அவ்வேளையில்.. அவளின் கூந்தலை வளைத்துத் தொங்கிக் கொண்டிருந்த பூச்சரத்திலிருந்து எழுந்த சுகந்தமான நறுமணம் மனம் மயக்கும் ரம்யம் கொண்டதாக இருந்தது..

மல்லையின் கடலலைகள் தாலாட்டுவதைப் போல தொடர்ந்து ஓர்விதமான தாள லயத்துடன் கரையோரம் பாறைகளில் மோதியதில் இளவரசனின் கலாரசனை கொண்ட மனம் தன் வயமிழந்து சிவகாமியின் வசம் சென்றது..

"யாம் தயாராகி விட்டோம் தந்தையே..!"

சிவகாமி.. சமதளமான அந்தக் குன்றின் நடுப்பகுதியில் வந்து நின்றாள்.. நாற்புறமும் தீப்பந்தங்கள் செருறுகப் பட்டிருக்க நடுநாயக பாறைத் திட்டில் நடுவராக வீற்றார் ஆயனர்.. அபிநய சரஸ்வதியின் கரங்கள் அபிநய முத்திரையைப் பிடிக்க..

"*ஆடாத மனமும் உண்டோ..* என்று பா நடனமாட ஆரம்பித்தான் நரசிம்மன்..

அருமையான அவனது குரல் வளத்தில் மயங்கிப் போனாள் அந்த நடன மாது.. தேக்கு மரம் போன்ற அவனது பரந்தமார்பின் குறுக்கே இறுக்கியிருந்த பட்டாடையை நோக்கியபடி தனது சதங்கையணிந்த பாதங்களைச் சுழற்றினாள் அந்தக் கலைவாணி..

"*ஆடாத மனமும் உண்டோ..?*

*நகை அலங்காரமும்*

*அழகு சிங்காரமும் கண்டு*
*ஆடாத மனமும் உண்டோ..?"*

நரசிம்மனின் பாடல் எழுப்பிய வினாவில் பாவை பைத்தியமானாள்.. அவனை மயக்கும் அலங்காரம் அவளுடையதா என்ற ஐயம் அவளுள் எழுந்தது..

தேவலோக மாந்தரைப் போன்ற மேனி எழிலுடன் திகழும் அரசர்குலப் பெண்டிரைவிடவா அவள் எழில் கொண்டவள்..?

*"வாடாத மலர்போல்*
*உன் விழிப் பார்வையில்..*
*கைவளையோசை தரும் இன்ப*
*இசைக் கோர்வையில்.."*

அவளது ஐயத்தைத் தகர்ப்பதைப் போல நரசிம்மன் பாடிவைக்க.. சிவகாமி பெருத்த உற்சாகம் கொண்டாள்.. அந்த உற்சாகத்தில்..

*"ஈடேதும் இல்லாத கலைச்சேவையில்*
*தனி இதம் கண்ட*
*உமைக் கண்டும் இப்பூமியில்..*
*ஆடாத மனமும் உண்டோ..?"*

என்று பதிலுக்கு வினா எழுப்பியடி சுழன்றாடி அவனருகில் வந்தாள்.. இருவரும் இணைந்து நின்று அபிநயம் பிடித்த அழகான அந்தத் தருணத்தில் மோகனமான அவளது பார்வை அவன்மீது மன்மதனின் மலர்கணைகளை தொடுத்தது...

*"ஆடாத மனமும் உண்டோ..?*
*நடை அலங்காரமும்*

*அழகு சிங்காரமும் கண்டு*
*ஆடாத மனமும் உண்டோ..?"*

அவளின் பாடல் வரிகள் அவனது நடையெழிலை அவள் மோகித்ததை வெளிப்படுத்தியதில் நரசிம்ம பல்லவன் கள்ளூரும் போதை கொண்டான்..

அதில் ஆயனர் அங்கு வீற்றிருப்பதை மறந்து போனவனாக சிவகாமியை நெருங்கி ஆடலானான்.. நடனத்தில் லயித்திருந்த ஆயனர் அதைக் கலைக் கண்களைக் கொண்டு பார்க்க.. அவரது அருமைப் புதல்வியோ அதைக் காதல் கண்களைக் கொண்டு பார்த்தாள்..

*"நாடெங்கும் கொண்டாடும்*
*புகழ் பாதையில்..*
*வீர நடைபோடும் திருமேனி*
*தரும் போதையில்..*
*ஆடாத மனமும் உண்டோ..?"*

மனம் ஆடியதைச் சுழன்றாடியவாறு பாடி முடித்த சிவகாமியின் மனம் அந்த நடனம் முடிவுற்றபோது முழுமையாக நரசிம்மனின் வசத்தில் தஞ்சமாகியிருந்தது..

தீர்ப்பைச் சொல்ல யத்தனித்த ஆயனரின் சங்கடத்தை உணர்ந்தவனாக அவரைச் சைகையில் கையமர்த்தினான் அரசிளங்குமரன்..

"தயக்கம் கொள்ள வேண்டாம் சிற்பியாரே..! தங்களின் செல்வக் குமாரியின் நடன வல்லுமையை யாம் போற்றிப் புகல்கிறோம்.. நடனத்தில் எமைவிட தங்களின்

புதல்வியின் வல்லமையே சிறந்து விளங்கியதை யாம் உணர்ந்தோம்.. யாம் ஆடற்கலையில் வல்லுனனாக இருக்கலாம்.. ஆயினும்.. எமைவிட தமது புதல்வியே ஆடலில் சிறந்தவள் என்பதை மனமார யாம் ஒப்புக் கொள்கிறோம்.."

கம்பீரமான குரலில் அவன் சொன்ன கூற்றை ஒப்புக் கொள்வதைப் போல மல்லையின் கடல் அலைகள் குன்றின்மீது வந்து மோதித்திரும்பின.. அன்றைய தினத்தின் அற்புதமான நினைவலைகளை என்றுமே நிலைத்து நிற்கச்செய்ய வேண்டும் என்று நரசிம்ம பல்லவன் உத்தேசித்தான்..

எந்தக் குன்றின் மீது அவனும் சிவகாமியும் ஆடல் போட்டியை நிகழ்த்தினார்களோ.. அந்தக் குன்றில் ரதக் கோவில்களை உருவாக்க வேண்டும்..

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 6

## காலங்கள் தோறும் உன் நினைவு என்னைத் துரத்துமா..?

**சி**த்தார்த்தனின் லேப்டாப்பில் இப்போது காட்சி மாறியிருந்தது.. கடற்கரையோரம் தெரிந்த ரதக் கோவில்களின் பிண்ணனியில் எதை உணர்ந்தானோ.. தாமோதரன் எக்கி.. சித்தார்த்தனின் தோள் வளைவில் குனிந்து லேப் டாப்பை அணைத்தான்..

முறைத்த சித்தார்த்தனை கண்டு கொள்ளாமல் வயலெட்டின் பக்கமா திரும்பியவன்..

"என்ன..?" என்றான்..

"எம்.டியை பார்க்க வந்தேன்.."

அவளது கடுப்பில் நீ எம்.டியா இல்லை ஜெனரல் மேனேஜரா என்ற கொதிப்பு தெரிந்தது..

'இருக்காதா பின்னே..? இந்தக் கம்பெனியில என்னைவிட்டா வேற எவன் இவள் பண்ணுகிற ஓசிப் போன் கால்களையெல்லாம் நோட் பண்றான்..?'

தாமோதரன் சித்தார்த்தனின் ப ாக கைகாட்

"பார்த்துக்கங்க.. இவர்தான் எம்.டி." என்றான்..

'நக்கல்..?' வயலெட்டின் வன்மமான விழிகளில் அனல் பறந்தது..

அந்த அனல் வீச்சைப் பற்றித் துளிக்கூட அலட்டிக் கொள்ளாமல் 'ஹ.. என்று அதைத் தட்டி விட்டு விட்டு வெகு அலட்சியமாக சித்தார்த்தனின் எதிரே இருந்த சோபாவில் உட்கார்ந்தான் தாமோதரன்..

"யெஸ்.." ஒருவழியாக சித்தார்த்தன் அந்த ஒற்றை வார்த்தையை உதிர்த்து விட்டதில் மகா சந்தோசமாகிப் போன வயலெட்..

"இந்த ஃபைல்களை டேபிளில் வைத்துட்டுப் ட்டுமா சார்..?" என்றாள்..

"வொ ..? உங்க டேபிளில் இடமில்லையா..?"

முகம் சுளித்த சித்தார்த்தன்.. எங்கே அவனுடைய லேப்டாப்பிற்கு டேபிளில் இடமில்லாமல் போய் விடுமோ என்று எண்ணமிட்டவனைப் போல.. லேப்டாப்பை நகர்த்தி டேபிளின் நடு மையத்தில் இழுத்து வைத்தான்..

தாமோதரன் சாய்ந்து லேப் டாப்பை சித்தார்த்தனின் பக்கமாக நகர்த்தி விட்டு..

"அது எங்கேயும் கால் முளைத்து ஓடிப் போகாது சார்.. உங்க லேப்டாப் ஒட்டுண்ணி போல உங்களோடதான் பசைபோட்டு ஒட்டிக்கிட்டு இருக்கும்.. ஸோ.. லீவ் திஸ் வொர்ரிங்.. நம்ம கம்பெனியின் சின்ஸியர் வொர்க்கர் கை நிறைய ஃபைலைச் சுமந்துகிட்டு வந்து நிற் றாங்க.. பாருங்க.. பாவம்.. அவங்களுக்கு கை வலிக்குமில்ல..? அவங்க பாரத்தை இறக்கி இந்த டேபிளில் வைச்சுட்டுப் போக பர்மிசன் கொடுங்க எம்.டி.சார்.." என்று வரவழைத்துக் கொண்ட பவ்யத்துடன் சொன்னான்..

"பாரம் சுமக்கிறது" பெண்களுக்கு பழக்கமானதுதான் எம்.டி.சார்.." வயலெட் சீறினாள்..

"இப்ப நான் என்னத்தைச் சொன்னேன்னு ரிசப்சனிஸ்ட் எரிமலையா குமுறுகிறாங்க எம்.டி. சார்..?" கையை விரித்து நியாயம் கேட்டான் தாமோதரன்..

"பத்துமாதம் குழந்தையைச் சுமக்கிறது பெண்கள் தான்.. ஆண்கள் இல்லை.." வயலெட்டின் முகம் சிவந்து போனது..

அந்தச் கப்பு நாணத்தினால் வந்ததல்ல.. கோபச் சிவப்பில் அவள் மூச்சிரைக்க நிற்க.. அவளை ஏற இறங்க

பார்வையிட்டு அவளது ரத்த அழுத்தத்தை எகிற வைத்தான் தாமோதரன்..

"இன்னும் உங்களுக்கு மேரேஜ் ஆகலையில்ல..?"

அவனது கேள்வியில் எகிறிய வயலெட்டின் ரத்தம் கொதிநிலைக்கே போய்விட்டது.. யுத்தம் முற்றுவதற்குள்..

"தாமு.." என்று சித்தார்த்தன் குறுக்கிட்டுவிட்டான்..

'ம்ம்ம்.. இப்ப வந்து நாட்டாண்மை பண்ணு.. இவ்வளவு நேரமும் உணக்கையா வேடிக்கை பார்த்துக் கிட்டு உட்கார்ந்திருந்தயே. அப்பவே வந்து தீர்ப்பைச் சொல்லியிருக்க வேண்டியதுதானே.. தாமோதரன் பல்லைக் கடித்தான்..

"இதெல்லாம் என்ன ஃபைல்..?"

தொட்டு விட்டால் தோசம் வந்து விடும் என்று அஞ்சியவனைப் போல சித்தார்த்தன் சுழல் நாற்காலியை ஓரடி பின்னால் நகர்த்தி விட்டு அந்தப் ஃபைல்களை தொட்டாமல் பார்த்து வைக்க.. தாமோதரன் மானசீகமாய் தலையில் அடித்துக் கொண்டு..

"அதெல்லாம் ஊரான் கம்பெனி ஃபைல் இல்லை சார்.. சாட்சா உங்க சொந்தக் கம்பெனியோட ஃபைல்தான்.." என்று வார்த்தைகளைப் பல்லிடுக்கில் கடித்துத் துப்பினான்..

"ஐ..ஸீ.." சித்தார்த்தன் தலையை ஆட்டினான்..

"வெறுமனே பார்த்தா மட்டும் போதாது சார்.. ஃபைலைத் திறந்து உள்ளே என்ன எழுதியிருக்குன்னு பார்க்கணும்.." வலியுறுத்தினான் தாமோதரன்..

"எனக்கென்ன வேற வேலையே இல்லையா..?"

சித்தார்த்தன் எரிந்து விழுந்ததில் வயலெட் விசித்திரமாக அவனைப் பார்த்துவிட்டு.. தாமோதரனையும் பார்த்து வைத்தாள்..

"இங்கே என்னத்துக்கு பார்க்கறிங்க..? எம்.டியை தானே பார்க்க வந்தீங்க..? அங்கே மட்டும் பாருங்க.."

தாமோதரன் கையை சித்தார்த்தன் இருந்த திசையில் நீட்டி வயலெட்டின் பார்வைக்கு வழி காண்பித்தான்..

'என்னடா இது..

வயலெட் நொந்து போனாள்.. அவள் வருகின்ற போன் கால்களுக்கும்.. மனிதர்களுக்கும் பதில் சொல்லி வழியைக் காண்பிப்பாளா இல்லை.. நாள் முழுவதும் அந்த ஃபைல்களை கை கடுக்க சுமந்து கொண்டு.. கால் கடுக்க அங்கேயே நிற்பாளா..?

உதவி வேண்டி தாமோதரனை இறைஞ்சலுடன் பார்த்து வைத்தாள்..

'இதுக்குத்தானே நான் பேசினேன்.. நீ என்னவோ.. பாரம் சுமப்பது பெண்களின் உரிமைன்னு சண்டைக்கு வந்த..? இப்ப மாட்டிக்கிட்டு முழி.. உன் வம்புக்கு நான் வரமாட்டேன்..

தாமோ ரன் அவளது தவிப்பை கண் குளிர வேடிக்கை பார்த்தபடி கைவிரல்களால் சித்தார்த்தனின் டேபிளின் மீ தாளம் போட்டான்..

'சமயம் பார்த்து பழிவாங்கறான்..'

வயலெட் ஒரு முடிவுக்கு வந்தாள்.. சாட்சிக்காரனின் கால்களில் விழுவதைவிட சண்டைக்காரனின் கால்களில் விழுந்து விடுவதே சாலச்சிறந்தது.. சாட்சிக்காரன்தான் லேப்டாப்பைத் தவிர்த்து வேறு எதையும் டேபிளின் மீது வைக்க அனுமதிக்க மாட்டேன் என்று அடம் பிடிக்கிறானே...

"எம்.டியிடம் நீங்க ஒரு வார்த்தை சொல்லுங்க ஜி.எம் சார்..?" வயலெட் சற்று முன்னால் தாமோதரனிடம் போர் முரசைக் கொட்டியதை மறந்து வெகு தன்மையா பேசினாள்..

'இஃது..!' தாமோதரன் அவளை ஒரு மார் பார்த்து வைத்தான்.. அதில் அவள் முகம் சிவந்த

அந்தச் சிகப்பு கோபத்தினால் வந்ததல்ல... ாணத்துடன் ஃபைல்களைக் கட்டிக் கொண்டவளைப் பார்த்து..

'பாருடா.. என்று மனதுக்குள் சிலாகித்தான் தாமோதரன்..

'ஓசி போன் கால் அம்மணிக்கு வெட்கப் படக்கூடத் தெரியுமா..?'

போனால் போகிறதென்று அவளுக்கு உதவ தீர்மானித்தவனாக லேப்டாப்பை நோண்ட ஆரம்பித்த சித்தார்த்தனின் கைகளைத் தட்டி அவனது கவனத்தை ஈர்த்தான் தாமோதரன்..

"என்ன" .ா..?"

கவனம் கலைந்ததில் தாமோதரனைக் கடித்து தின்று விடுவதைப் போல கத்தி வைத்தான் சித்தார்த்தன்..

அதில் அரண்டு போன வயலெட்.. திரும்பி ஓடி விடலாமா என்று யோசித்தாள்.. காத்துக் கொண்டிருந்த வேலை என்ன என்பது நினைவுக்கு வந்ததில் ஓட முடியாமல் கால்களில் இரும்புக்குண்டு கட்டப்பட்டதைப் போல அசைவில்லாமல் அங்கேயே நின்று விட்டாள்..

"இன்றைக்கு இண்டர்வியூ எம்.டி சார்.." தாமோதரன் அழுத்தமாக எடுத்துச் சொன்னான்..

ாருக்கு..?" என்று கேட்டு வைத்தான் சித்தார்த்தன்..

"நிச்சயமா எனக்கு இல்ல.. நான் உங்க கம்பெனி ஜி.எம். இவங்களுக்கு இல்ல.. இவங்களை உங்களுக்கு அடையாளம் தெரியும்ன்னு நினைக்கிறேன்.."

"கொஞ்சநேரத்துக்கு முன்னாடி உன்னை ஒரு வழி பண்ணிடறதைப் போல உன்கூட சண்டை போட்டவங்க தானே..?"

"அருமையான அடையாளம் சொல்கிறிங்க எம்.டி. சார்.. அதை மட்டும் கவனிங்க.. இவங்களுக்கு இன்னொரு அடையாளமும் இருக்கு எம்.டி சார்.."

"இவங்க அன்மேரிடு.. அதுதானே..?"

"சுத்தம்..! ஏன்சார் இப்படி சோதிக்கறிங்க..? இவங்க உங்க கம்பெனியோட ரிசப்சனிஸ்ட்.."

"எனக்கே அடையாளம் சொல்கிறியா..?"

"வேற வழி..? சாருக்குத்தான் லேப்டாப்பைத் தவிர.. மிச்சமெல்லாம் மறந்து போயிருச்சே.. ம்ஹீம்.. சினிமாவில தான்.. இதைப்போல அம்னீஷியாவை பார்த்திருக்கேன்.."

"புலம்பாதேடா.."

"புலம்ப வைச்சிட்டிங்களே சார்.. இண்டர்வியூ எனக்கும்.. இவங்களுக்கும் இல்லை.. உங்களோட செக்கரட்டரி போஸ்டுக்கு.."

"ஏன்..? என் செக்கரட்டரி எங்கே போனாள்..?"

"கிழிஞ்சது போங்க.. அவங்களுக்கு மேரேஜ் ஆகி.. ஹஸ்பெண்ட்கூடப் போயிட்டாங்க.. அதைக் குற்றம்ன்னு நீங்க சொல்ல மாட்டிங்கன்னு நம்பறேன்.."

தாமோதரனின் இடக்குப் பேச்சில்.. சித்தார்த்தனின் செக்கரட்டரியாக வேலை பார்த்த தீபா திருமணமாகி போய் விட்டாள் என்ற விவரம் அவன் நினைவுக்கு வந்தது..

"அந்த போஸ்ட் வேகண்டா இருக்கிறதினாலதான் நாம பேப்பரில அட்வெர்டைஸ்மெண்ட் கொடுத்தோ அப்ளை பண்ணினவங்களுக்கு இண்டர்வியூ லெட்டர் அனுப்பினோ அந்த லெட்டரை நம்பி வந்திருக் கிறவங்களோட பயோட டேட்டா அடங்கிய ஃபைல்கள் தான் இதெல்லா ..."

வயலெட்டின் கையில் இருந்த ஃபைல்களை ாட்டினான் தாமோதரன்..



# 7

## ஏழேழு பிறவிகளிலும்.. என்னுடனே வருவாயா..?

மாமல்லனின் மனம் சங்கல்பம் எடுத்துக் கொண்டது.. அவர்கள் நின்று கொண்டிருக்கும் குன்று மற்றவர்களுக்கு மகோன்னதத்துவம் கொண்டதாக காட்சியளிக்கும்படி செய்ய வேண்டும்.. சரித்திரத்தில் அழியாத கலை பொக்கிசமாக அது திகழ வேண்டும்.. அங்கு உருவாகும் ரதக் கோவில்களை அவனியே பார்வையிட வருகை புரிதல் வேண்டும்..

அது வெறும் குன்றல்ல..! மாமல்லனின் காதலி சிவகாமியின் பாதங்கள் சதிராடிய குன்று அது.. அவளது கலைப்பாதங்கள் சுழன்றாடிய இடங்களை காலங்கள் கடந்தும் நிற்கும் கற்கோவில்களாக மாற்ற வேண்டும்..

"சிந்தனைவயப் பட்டிருக்கிறீர்களே அரசே..?"

ஆயனரின் வினாவில் நரசிம்மன் நனவுலகுக்கு மீண்டு வந்தான்.. எழிலே வடிவாக எதிரே நின்றிருந்த சிற்பியின் புதல்வி.. சிவகாமி செல்வியைப் பார்த்தான்.. அதுவரை அவனையே விழியகற்றாமல் பருகுவதைப் போல பார்த்துக் கொண்டிருந்த சிவகாமியின் பார்வை.. அவனுடைய பார்வையை சந்தித்ததும் அவசரமாக புலம் பெயர்ந்தது... அகம் இன்ப உலா கொண்டது..

"தாமே வென்றீர்கள் சிற்ப குமாரி..!"

மென்மையான அவனது உரையில் அவளது விழிகளில் கண்ணீர்த்துளிகள் அரும்பு கட்டின.. அவனை வெல்லவா அவள் நினைத்தாள் என்ற துடிப்பில் அவை குன்றின் பாறையில் விழுந்து சிதறின..

"மனம் நோக உரைக்க வேண்டாம் மன்னவரே..! தம்மை வெல்லும் துணிவு இந்தப் புவனத்தில் எவருக்குண்டு..?"

மக்கில்லையா..?"

"அல்ல அரசே..! எமது ஆடல் கலையை தங்களின் முன்பாக சமர்ப்பிக்கவே யாம் விரும்பினோம்.. அல்லாது தங்களை வாதுக்கு அழைத்து எமது திறனை நிரூபிக்க விழையவில்லை.."

சிவகாமி விம்மி விட்டாள்.. அவளது உரையில் நரசிம்மவர்மனின் மனம் உருகி விட்டது.. ஆயனரின் புதல்வியின் மனதில் அவனுக்கான அரியாசனத்தை அவன் கண்டான்.. அந்த அவனியை வென்றாலும் கிட்டாத செருக்கு.. அந்த ஆரணங்கின் அகத்தை வென்று விட்டதில் அவனுக்கு கிட்டியது..

ஆண்மையின் வெற்றிச் செருக்குடன் அவளை உண்டு விடுவதைப் போல நோக்கி வைத்தான்..

"கண்ணீர் எதற்காக சிவகாமி..? இது களிப்படைய வேண்டிய பொழுதல்லவா..?" அவளை சமாதானப் படுத்தும் விதமாக உரையாற்றினான் நரசிம்மன்..

"எதனால் களிப்படையச் சொல்கிறீர்கள் மன்னவரே..! எம் அகத்தில் உயர்வாக நினைத்திருக்கும் அரசிளங் குமரருடன் நடனமாடி வென்று விட்டேன் என்று களிப்படையச் சொல்கிறீர்களா..?"

"அல்ல சிவகாமி..! எம்முடன் இணைந் நடனமாடியதற்கு களிப்படையச் சொல்கிறேன்.. இன்றைய தினம் எம் வாழ்வில் மறக்க இயலாத தினமாக மாறிப் போனது சிவகாமி.."

"எமக்கும்தான்.."

கம்மிய குரலில் கூறிய சிவகாமிக்கு அதற்கு மேல் உரையாற்ற முடியாமல் உணர்ச்சிப் பெருக்கில் நாத்தழுதழுத்தது..

"இனியாவது அரசர் பருக சூடான கஞ்சி தயரித்து ாண்டு வரலாமல்லவா மகளே..?" ஆயனர் வினவினார்..

"இதோ.. ஒரு நொடியில் கொண்டு வருகிறேன் தந்தையே.." சிவகாமி விரைந்தாள்..

கடலலைகள் ஓங்காரமிட்டு.. ஓடிவந்து தொட்டுச் சென்ற கற்பாறைகளைப் பார்த்த வண்ணம் சிற்பியும், நரசிம்மனும் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.. நரசிம்மனின் உள்ளத்தில் உல்லாசம் பொங்கித் ததும்பியது.. மன்னர் மகனான அவனது அடையாளத்தை அறவே மறந்து.. அவனை அவனுக்காகவே விரும்பி நோக்கிய ஆடலரசியின் காதல் வதனம் அவன் மனதில் மோகத்தீயை மூட்டியது..

தீப்பந்தங்களின் ஒளியில் அமர்ந்திருந்தவனிட சூடான கஞ்சி நிறைந்த குவளையைக் கொண்டு வந்

கொடுத்தாள் சிவகாமி.. இனிப்பான அக்கஞ்சி.. பாலும், வெல்லமும் கலந்த அரிசிப் பாயாசமாக இருந்ததில் அவன் நாவில் சுவையூறியது..

"தம்மை ஆடலரசி என்று ஒப்புக் கொண்டு விட்டோம் சிவகாமி.. இனியாவது தமது சமையலின் ருசியை பாராட்டலாமல்லவா..? சிவகாமியின் கரங்களில் மந்திர கோலிருக்கிறது.."

நரசிம்மனின் பாராட்டில் நாணி தலை குனிந்தாள் சிவகாமி.. அருகிலிருந்த ஆயனர் செவிமடுக்க இயலாதபடி தாழ்ந்த குரலில்.. பதிலுரைத்தாள்..

"எமது கரத்தில் எதுவுமில்லை பேரரசே..! எமது இதயத்தில் ததும்பும் பிரியமானது கரங்களின் வழியாக இறங்கிக் கஞ்சியில் கலந்திருக்க வேண்டும்.. மற்றபடி யாம் மந்திரக் கோலை கண்டறியாத பேதை மாமன்னரே..!"

"ஊஹீம்..?" கேலியுடன் வினவிய நரசிம்மன் காலிக் கலயத்தை நீட்டினான்..

அதை வாங்கிக் கொள்ளக்குனிந்த சிவகாமியின் தோள் வழியே வழிந்த மலர்ச்சரத்தில் அவனது பார்வை படிந்தது.. மோகிக்கும் அவனது பார்வையில் பாவையின் மேனி செந்தணலாய் தகித்தது..

"மந்திர கோல் நின் கரத்தில் இல்லை சிவகாமி.. கண்களில் இருக்கிறது.." நரசிம்மன் முணுமுணுத்தான்..

"அல்லும் பகலும் உன் நினைவை எனில் விதைத்து அது ஆட்டி வைக்கிறது.. உன் விழிகளின் சுழற்சியில் என் இதயமும் சுழல்வதை அறிவாயா நடன அரசி..?"

பதிலளிக்க இயலாமல் இதழ்களை அரிசிப் பற்களால் கடித்த வண்ணம் அங்கிருந்து அகன்று விட்டாள் அந்த ஆடலரசி..

"விடைபெறுகிறேன் ஆயனரே..!"

நரசிம்மன் குன்றிலிருந்து குதித்து தனது புரவியைக் கட்டியிருந்த மரத்தடியை நோக்கி நடந்தான்.. மரத்தை அணுகியபோது.. மரத்தின் மறைவிலிருந்து வெளிப் பட்டாள் சிவகாமி.. நரசிம்மனின் கரம் புறவியை விட்டு விட்டது..

"சிவகாமி..?..!"

அவனது தேகம் சூடேறியது.. மரத்தின் மறைவை விரைவாக அணுகி.. சிவகாமியை நெருங்கினான்.. அவள் இரண்டடி பின் வாங்கினாள்..

"ஏன் சிவகாமி..?" கரகரத்த குரலில் வினவினான்..

"அல்ல அய்யனே..! தம்முடன் போட்டிபோட முயன்றமைக்கு மன்னிப்புக் கோரவே யாமிங்கு வந்தோம்.. தந்தையின் முன்னிலையில் தங்களிடம் பேச தயக்கமாக இருந்தது.. அவர் ஆரம்பத்திலேயே இந்த வாது வேண்டாம் அம்மா என்று தடுத்தார்.. யாம் செவி மடுக்கவில்லை.. தங்களுடன் நடனமாட என் மனம் விழைந்தமைக்கு இந்தப் போட்டியை காரணமாக்கிக் கொண்டேன் என்பதை தாங்கள் ஏற்றுக்கொண்டால் போதும் மன்னவனே..! எமக்கு வேறு எதுவும் வேண்டா ..."

ரம் வேண்டா

நரசிம்மனின் கரம்.. சிவகாமியின் வளைக்கரத்தைப் பற்றி அருகிலே இழுத்து அணைத்தது.. விலக வேண்டும் என்று மனம் அறிவுறுத்தினாலும் விலக முடியாத காதலின் ஜ்வாலையில் சிவகாமி சிறு விம்மலுடன் நரசிம்மவர்மனின் பரந்த மார்பில் முகம் புதைத்தாள்.. நரசிம்மனின் கரம் அவளது தலையை பரிவுடன் கோதியது..

"கண்ணீர் துளிகளை சிதற விட வேண்டாம் சிவகாமி.. இது மகிழ்வான தருணம்.. எம்மேல் தமக்கு அன்பில்லையா..?"

"என்ன மொழி உரைத்தீர்கள்..?"

சிவகாமிதுடித்து விட்டாள்.. வதனத்தை உயர்த்தி அவன் வதனம் பார்த்தவளின் விழிகளில் தெரிந்த அளப்பறியா பிரியத்தில் அவன் பிரமித்து விட்டான்..

"எம் அகம் முழுவதும் தங்களின் திருமுகம்தான் இளவரசே..! எமக்கா தங்களின் மீது பிரியமில்லை..?"

நரசிம்மனின் மனம் மீண்டும் ஆண்மையின் செருக்கை அடைந்தது அவனது நெஞ்சத்தில் தஞ்மெனச் சாய்ந்துத் தழுவிக் கொண்டிருந்த அந்தப் பூங்கொடி மேனியாளை அவனும் இறுகத் தழுவிக் கொண்டான்.. அவனது மார்பில் முகம் புதைத்திருந்த சிவகாமியின் உச்சந்தலையில் முகம் புதைத்தவனின் நாசி.. அன்றொரு தினத்தில் அவன் முகரத் துடித்த அவளது கூந்தலின் மலர்வாசனையை முகர விழைந்தது..

நரசிம்மனின் சூடான இதழ்கள் தந்த முத்தத்தை தனது உச்சந்தலையில் உணர்ந்த சிவகாமியின் மேனி

நடுங்கியது.. வெண்ணையைப் போல மிருதுவான அவளது மேனியின் குழைவில் வழுக்கி இறங்கிய அவனது கரங்கள்.. அவளது மென்மையான சருமத்தில் அழுத்திப் படிந்து அவளை இறுக்கி அணைத்துக் கொண்டதில் அவளது உடலுக்குள் இன்பமான வேதனை உருவானது..

நரசிம்மனின் முகம் இறங்கி அவளது கழுத்து வளைவில் இதழ்களைப் பதித்தபோது சிவகாமி தாள முடியாத பெண்மையின் தவிப்போடு அவளது விழிகளை மூடிக் கொண்டாள்..

நரசிம்மனின் நாசி ஆசைதீர அவளது கூந்தலில் சூடியிருந்த மலர்களை முகர்ந்தது.. அதன் வாசனையில் அவனது உடலில் கட்டி வைக்கப்பட்டிருந்த உணர்வுகள் பிணைத்திருந்த தளைகளை அறுத்தெரிந்து விட்டு ஆவேசத்துடன் அவன் உடலில் பிரவேசித்தன..

"என்னவளே..!"

நரசிம்மனின் இதழ்கள் முணுமுணுத்ததில் சிவகாமி பேரானந்தம் அடைந்தாள்.. அத்துமீறிப் பிரவேசித்த அவனது கரங்களை அவளது வளைகரங்களினால் தடுத்து நிறுத்த இயலவில்லை.. கரையுடைந்த வெள்ளமாக அவளை ஆக்ரமித்தவனின் வேட்கை நிறைந்த மோக வெறியில் அவள் திணறிப் போனாள்..

"யாம்.. தம்முடையவள்தான் மன்னவரே..! அதில் மக்கு யாதொரு சந்தேகமும் வேண்டாம்.. ஆயினும்.. இந்த புவனம் அறிய தாங்கள் இன்னும் எமக்கு மாலையிட வில்லையல்லவா..? அதை மனதில் கொள்ள வேண்டும் இளவரசே..!"

சிவகாமியின் மன்றாடலுக்கு பலன் இருந்தது.. இறை ம்பிக்கை மிகுந்த சைவ பக்தரான மகேந்திர சக்கரவர்த்தியின் மகன் தனது மோகத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டு சிறு முத்தத்துடன் சிவகாமியிட விடை பெற்றான்.. அவனது புரவி மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த சிவகாமி மெதுவாக குன்றை நோக்கி டக்கலானாள்..

அதுவரை மரத்தின் அந்தப் புரமாக மறைந்திருந்த அந்த உருவம் வெளியே வந்தது..

## ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



# 7

## உன்னை நான் சந்தித்தது.. விதிக்கப்பட்ட விதியா..?

"ஓ.. ஐ.. ஸீ.."

சித்தார்த்தனின் வார்த்தைகளில் மகிழ்ந்து போ விட்டான் தாமோதரன்.. வயலெட்டைப் பார்த்து..

"இனிப் பார்த்துருவான் பாருங்க.. என்றும் சொன்னான்..

சித்தார்த்தனோ தாடையைத் தடவியபடி லேப்டாப்பை பார்க்க முனைய.. வயலெட் தாமோதரனிடம் கண் ஜாடை செய்து அதைக் கவனிக்கச் சொன்னாள்.. அதை உணராத தாமோதரன்.. அவள் அவனைப் பார்

கண்ணடித்து வைக்கிறாள் என்று தப்புக் கணக்கு போட்டு விட்டான்..

பதிலுக்கு கண்ணடிக்கும் ஆசை அவனுக்குள் வந்தது.. மனதிற்குள் சைவத்துள் சைவம்.. சிறந்த சைவமென்று.. ஏகா பரேஸ்வரன் ஆலயத்திலேயே குடியிருக்கும் தாயும், தந்தையும்.. இதை ஏற்றுக் கொள்வார்களா என்ற சந்தேகம் எழுந்ததில்.. நல்ல பிள்ளையாகி..

'வாட் இஸ் திஸ்.. என்று விதியை நொந்தபடி விழிகளால் வயலெட்டை அதட்டினான்..

"நினைப்புத்தான்.." வயலெட் வாய் விட்டே சொல்லி விட்டாள்..

ஒரு பெண்ணே வாய்விட்டு அவன் மீதான அவள் நினைவைச் சொல்லிய பின்பும் மரத்திலும் அசையாத நெடுமரமாய் நிற்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டு விட்ட தாமோதரன்..

"இது ஆபீஸ்.. இங்கே எந்த நினைப்பும் இருக்கக் கூடாது.." என்று வயலெட்டுக்கு சொல்வதைப் போல அவனுக்குச் சொல்லி வைத்தான்..

"ஆல்ரெடி.. எனக்கு ஆள் இருக்கு சார்.." கடுப்பா தனது ரகசியத்தைச் சொல்லி விட்டாள் வயலெட்..

'அப்புறம் என்ன கழுதைக்கு என்னைப் பார் கண்ணடிச்சே..?' எரிச்சலடைந்த தாமோதரன்..

"அதான்.. நம்ம ஆபிஸ் டெலிபோன் ஆல்வேஸ் எங்கேஜ்டாவே இருந்து வைக்குதா..?" என்று கேட்டுப் பழிதீர்த்துக் கொண்டான்..

ரன்ஸ் கிடைச்சிருச்சுன்னு போட்டுத் தாக்கறானே.. நுழைந்து போக எண்ணிய வயலெட்..

"அதை விடுங்க சார்.." என்று குழைந்தாள்..

"விடுகிறதா இருந்தா நீங்கதான்ம்மா விடனும்.. ஏன்னா.. அது உங்களோட ஆள்.." என்றான் தாமோதரன்..

'இவனுக்கு இருக்கிற கொழுப்பைப் பாரேன்.. என்ன அலுவலுக்காக என் ஆளை நான் விடனுமாம்..?' வயலெட் கொதிப்பேறிப் போனாள்..

"இப்படின்னு தெரிந்திருந்தா இந்த வேலையை நான் ஒப்புக்கிட்டிருக்கவே மாட்டேன் சார்..?"

"எந்த வேலையை.. மிஸ் வயலெட்..? ரிசப்சனிஸ்ட் வேலையையா..? இப்பவும் ஒன்னும் கெட்டுப் போகல.. உங்களுக்கு இவ்வளவு சலிப்பா இருந்தா தாராளமா உங்க வேலையை ரிசைன் பண்ணிட்டு உங்க ஆள் கூடப் போயிரலா ..."

"எதுக்காக சார்.. என் வேலையை நான் ரிசைன் பண்ணனும்..? வேலையிருந்தாத்தான் ஆளும் நிலைப்பா ..."

"ஹ..! என்ன ஒரு காதல்..!"

"யதார்த்தமான காதல்..!"

"உண்மையை உரக்கச் சொன்னதுக்கு பாராட்டுக்கள்.."

"அதை நீங்களே வைச்சுக்கங்க.. எனக்கு வேணா

"அப்படிங்கறிங்க..?"

"ஆமாம்கறேன்..

"ஒகே..! தகுதியில்லாதபோது பாராட்ட ஏத்துக் கறதுக்கு மனச்சாட்சிக்கு உறுத்தலாத்தான் இருக்கும்.. பரவாயில்லை... விட்டு விடுங்க... வேலையைச் சொல்லலைம்மா.. பாராட்டைச் சொல்றேன்.."

"வேலையை விட்டுவிட நான் ரெடியா இல்லை சார்.. நான் சொன்னது எனக்கான ரிசப்சனிஸ்ட் வேலையை இல்லை.. அடிசனலா ஒப்புக்கிட்ட இந்த வேலையைத்தான் சொன்னேன்.."

வயலெட் கையிலிருந்த ஃபைல்களைக் காட்டினாள்.. தாமோதரன் அவற்றுக்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்று லேப்டாப்பை காதலியைப் பார்ப்பதைப் போல பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த்தனைப் பார்த்தான்..

"ஏன் சார்..?" வயலெட் கிசுகிசுத்தாள்..

'ம்ஹூம்..! ஆளிருக்குன்னு சொல்லிட்டு ஹஸ்கி வாய்சில பேசி வைக்கிறா.. அனல் பெருமூச்சுடன் அவளை ஏறிட்டான் தாமோதரன்..

"லேப்டாப்பில அப்படி என்னதான் இருக்கு..?"

"ம்ம்ம்.. இதுதான் இருக்கு.."

தாமோதரன் லேப்டாப்பைத் திருப்பிக் காண்பிக்க.. திரையில் தெரிந்த புகைவடிவத்தில் கையில் இருந்த ஃபைல்களை நழுவவிடப் போனாள் வயலெட்..

"பே.. பே.. பே.."

ஊமை போல உளறிக் ாட்டியவளிட

"இதுக்குத்தான் பேசாம இருந்தேன்.. நீங்களா வினையை இழுத்து விட்டுக்கறிங்க.. ஃபைல்களை டேபிலில் வைத்துட்டுப் போங்க.." என்றான் தாமோதரன்..

"இண்டர்வியூ..?"

"இண்டர் ஈமில் சொல்றேன்.. வரிசையா அனுப்பி வையுங்க.."

"தேக்யு சார்.."

மனமார நன்றி சொல்லி விட்டு கைகளில் இருந்த ஃபைல்களை சித்தார்த்தனின் டேபிள் மீது இறக்கி வைத்தாள் வயலெட்.. வலித்த கைகளை உதறி விட்டுக் கொண்டவள்.. வெளியேறாமல் அங்கேயே நின்றதில்..

"இன்னும் என்ன..? இன்னொரு தரம்.. அந்த லேப்டாப்பைத் திருப்பிக் காட்டனுமா..?" என்று கேட்டு அவளை அலற வைத்தான் தாமோதரன்..

"நீங்க அரட்டறதிலேயே குறியாய் இருங்க சார்.."

"வேற எதிலே குறியாய் இருக்கனும்னு நீங்க நினைக்கறிங்க..?"

"நான் எதையும் நினைக்கலை.. ஏன் சார்.. நம்ம எம்.டி எதுக்காக அதையே உத்து உத்துப் பார்த்துக்கிட்டு இருக்கார்..?"

"ஏன்ம்மா..? அப்படியே உங்க ஆள் உங்களை உத்து உத்துப் பார்க்கிறதைப் போல இருக்கில்ல..?"

"ஆமாம் சார்.. எப்படிக் கண்டுபிடிச்சீங்க..?"

ஈனைத் திருஷ்டியினாலதான்ம்மா.."

"யானை திருஷ்டியா...? அதை ஞானத் திருஷ்டின்னுல்ல சொல்லுவாங்க..?"

"நான் இப்படித்தான் சொல்லுவேன்.. நேரம்மா.. பேய்க்கு வாழ்க்கைப்பட்டா புளியமரம் ஏறனுமாம்.. பேயை காதலியைப் பார்க்கிறதைப் போல உத்து உத்துப் பார்க்கிற நண்பனுக்கு நண்பனா வாழ்க்கைப்பட்டா.. இப்படித்தான்.. ஞானத்திருஷ்டி.. யானை திருஷ்டியா மாறிரும்.."

தாமோதரனின் அங்கலா ப்பில்..

"த்ச்சு.. த்ச்சு.." என்று அனுதாபப் பட்டாள் வயலெட்.

"இந்த அல்ட்ரா மாடர்ன் ஆபிசிலேயுமா பல்லி சவுண்டு கொடுக்குது..?" தாமோதரன் விட்டத்தை உற்று உற்றுப் பார்த்தான்..

"வேணாம் சார்.. எம்.டி உத்து உத்துப் பார்க்கறதே போதும்.. நீங்களும் கூட்டுச் சேர்ந்துராதீங்க.. என்ற வயலெட்..

"என்னவோ பாங்க.. இன்றைக்கு இண்டர்வியு உருப்பட்டாப்புலதான்.." என்று நல்வாக்குச் சொன்னபடி விட்டால் போதும் என்று அங்கிருந்து ஓடியே விட்டாள்..

'ம்ஹீம்.. அவளால் ஓட முடியுது.. என்னால அது முடியலையே..

ஏக்கத்துடன் சித்தார்த்தனைப் பார்த்தான்.. அவன் அப்போதும் உன்னிப்பாக லேப்டாப்பைப் பார்த்துக் கொண்டிருக்க.. அதைப் பறிமுதல் செய்து மூடி வைத்தான்..

"டேய்.. டேய்.." என்ற சித்தார்த்தனை..

"கொன்னே போட்டிருவேன்.." என்று வெறி கொண்ட வேங்கையாக அதட்டி அடக்கி வைத்தான்..

"உன்னாலே எனக்குத்தாண்டா இம்சை.. இப்பப்பாரு.. அந்த வயலெட் நீ பேயைக் காதலிக்கறேன்னு கம்பெனி முழுவதும் தண்டோரா போடப் போறா.. ஏய்ய்.. அவ நடமாடும் பி.பி.சிடா.. போதாக்குறைக்கு கையில போன் வேற இருக்கு.. கர்ணனுக்கு கவசக் குண்டலம் போல அவளுக்கு அந்த போன்.. பசை போட்டதைப் போல அவ கையில எந்த நேரமும் போன் ஒட்டிக்கிட்டு இருக்கு.. நம்ம கம்பெனி பத்தாதுன்னு ஊரெல்லாம் போன் பண்ணி ஒலிபரப்பப் போறா பாரு.."

"விடுடா.."

"எதை விடச் சொல்ற.. லேப் டாப்பை

"பேச்சை விடச் சொன்னேன்..?"

"இப்ப என்ன அலுவலுக்கு லேப்டாப்பை நோண்டிக் கிட்டு இருக்க..? அதிலயும் கூகுலுக்குள்ள போயி வினோதமான ஆப்சன்களைக் கேட்டுக்கிட்டு இருக்க..? என்னதாண்டா ஆச்சு..?"

"தாமு.."

சித்தார்த்தன் ஆழ்ந்த குரலில் அழைத்ததில் தாமோதரனின் புருவங்கள் உயர்ந்தன..

"என்னடா விசயம்..?"

"நேத்து ஈவினிங்ல மகாபலிபுரம் போனேன்டா.."

"அதுக்கென்னடா..? போனவன் சுத்திப் பார்த்துட்டு வந்திருக்க வேண்டிய தானே..?"

"அப்படித்தாண்டா நானும் பிளான் பண்ணி யிருந்தேன்.. பட்... கிளம்பறப்ப ஒரு பாட்டுச் சத்தம்..!"

சித்தார்த்தன் விவரித்தான்.. யாமினியைப் பற்றிச் சொன்னான்..

"அவளை முதன்முதலா பார்த்ததைப் போல எனக்குத் தோணலைடா.. காலம் காலமா அவளுடன் பழகியதைப் போல ஓர் ஃபீலிங்.. அதைவிட என்றைக்குமில்லாம.. அன்றைக்கு அந்த ஐந்து ரதக்கோவில்களைப் பார்த்தப்ப எனக்குள்ளே ஒரு வைப்ரேசன் ஃபார்ம் ஆச்சுடா தாமு.. அவளைக் கேட்டா அவளுக்கும் அப்படித்தான்னு சொல்கிறா.. போதாக்குறைக்கு.. புகை போல ஓர் அமானுஷ்யத்தை அவ அடிக்கடி பார்க்கிறாளாம்.. அந்த ஐந்துரதக் கோவில்கள் அவளை இம்ப்ரெஸ் பண்ணுதாம்.. அலைபோல இழுக்குதாம்.. எதனால அவளை மட்டும் அத இழுக்குதுன்னு தெரிஞ்சுக்க அடிக்கடி அங்கே வருவாளாம்.. மகாபலிபுரத்திலேதான் அவள் பிறந் வளர்ந்தாளா அமானுஷ்யத்தைக் கண்டு அவள் பயப்படலைடா தாமு.. பழகிருச்சுன்னு சொல்றா.. ரதக் கோவில்கள் இம்ப்ரெஸ் பண்றதிலேயும் அவளுக்கு பயமில்லையா அவ தனியில்லைன்னு சொல்கிறாடா மச்சான்.. அந்தக் கடலும் வானமும்.. ரதக்கோவில்களும் துணையாய் இருக்கிறதைப் போல பேசறாடா.."

விழிகள் செறுகப் பேசிய நண்பனைக் கவலையுடன் பார்த்தான் தாமோதரன்.. இவன் மட்டும் ஏன் இப்படிப்பட்ட

வினோதமான மனித ஜீவன்களை சந்தித்து வைக்கிறான் என்றிருந்தது அவனுக்கு..

'சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனி..' என்பது ஒரு மிகப் பெரிய பரந்த சாம்ராஜ்யம்.. அதன் மன்னவனாக இருப்பவன் அதற்குரிய உயரத்தில் இருக்க வேண்டாமோ.. இப்படியா.. வினைகளைத் தேடிப் போய் தெரிந்து கொள்வான்..?




மரத்தைவிட்டு வெளியேவந்த உருவத்தின் கண்கள் அந்த காரிருளிலும் கடுமையான கொடூரத்துடன் மின்னின.. புரவி போன திசையை அந்த உருவம் நிஷ்டூரமா பார்த்தது.

"யௌவனமும்.. வனப்பும் கலந்த உனது போகன எழில் வடிவைக் கொண்டு சிவகாமியின் மனதை மயக்கி விட்டாயா நரசிம்ம பல்லவனே..?" வாய் விட்டுச் சொன்னது அந்த உருவம்.

நிலவின் ஒளியில் அந்த உருவத்தின் தேகத்தை மறைத்திருந்த காவியுடை தென்பட்டது. தோளைச் சுற்றி அங்கிபோல கட்டியிருந்த காவியுடையும்.. நீண்டு வளர்ந்த செவிகளும்.. மொட்டைச் சிரமும்.. அந்த உருவம் ஒரு சமணத் துறவியென்பதை கட்டியம் கூறி அறிவித்தன.

"உன்னைவிட இந்த நாகநந்தி எதில் குறைந்து போனான் பல்லவனே..? யாமும் ஒர் அரசனே..! துறவறத்தை மேற் கொண்டால் பிறப்பால் நான் அரசன் என்பது பொய்யாகிப் போய் விடுமா..?"

இருள் சூழ்ந்த அந்த இரவில் இறைந்தான் நாகநந்தி.. கடலோரக் குன்றில் ஒளிர்ந்த தீப்பந்தத்தின் மீது அவனது பார்வை போனது. அவன் விழிகள் வெறுப்பையும்.. நெருப்பையும் கக்கின.

"அவள் ஆடலரசியென்பதை உமக்கு முன்பே யாமறிவோம் நரசிம்மா.. மலைப்பாறைகளும்.. குன்றுகளும்.. குகைகளும் சமணத் துறவியின் இருப்பிட மாகும்.. இங்கு வந்து சதிராடிய சிவகாமியின் பாதச் சலங்கையின் நாதத்திற்கு இந்த நாகநந்தி அடிமை. இதையறியாமல் எங்கிருந்து தோன்றினாய் பல்லவனே..? இணையற்ற பேரெழிலை உடைய இந்த சிவகாமி எமக்கே உரியவள்."

சபதம் போல 'இரைந்த அவனது சப்தத்தில் வானத்தில் இடி இடித்த எங்கிருந்தோ வந்த கார்மேகங்கள் ஒன்று சேர்ந்து பேய் மழையைக் கொட்டியதில் ஒளிர்ந்து கொண்டிருந்த தீப்பந்தங்கள் அணைந்து விட்டன. குன்றின் மீது எவருமில்லை.

'ஆயனரின் இல்லத்திற்குத் திரும்பியிருப்பார்கள்..

நாகநந்தியின் உள்ளத்தில் சினம் துளிர்த்தது.

'சிற்பிக்குத்தான் குன்றில் பணி.. சிவகாமிக்கு என்ன பணி..? இந்த மெல்லியலாள் எதற்காக பாதம் நோக நடந்து குன்றிற்கு வருகைபுரிய வேண்டும்..? அதனால் அல்லவோ நரசிம்மனின் பார்வையில் பட நேர்ந்தது..

அல்லவெனினும்.. அந்நாட்டின் ஆடலரசியை ரசன் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது என்ற ண்மையை உணர்ந்துதான் இருந்தான் நாகநந்தி...

'இவள் பல்லவநாட்டின் கலை பொக்கிசம் என்பதால் தானே பல்லவன் உரிமையுடன் இவளை நெருங்கி றவாடுகிறான்..? இவளை இந்நாட்டிலிருந்தே அகற்றும் வழிமுறைகளை யாம் அறிவோம் நரசிம்மவர்மா..! யாம் கரடுமுரடான மலைக் குகைகளை எமது வசிப்பிடமாக கொண்டவன், தம்மைப் போல அரண்மனையின் ஹம்ச துளிகா மஞ்சத்தில் துயில் கொண்டு எழுபவனல்ல.. எமது வழிமுறைகளும்.. சதிகளும்.. கரடு முரடாகவே இருப்பவை. அவற்றைத் தம்மால் சிந்தித்துக்கூடப் பார்க்க இயலாது பல்லவனே..!'

குரூரமான சமனத் துறவியின் வெஞ்சினத்தை அறியாமல் மழையில் நனைந்தபடி அரச மாளிகையை அடைந்தான் நரசிம்மன்.. அரண்மனை வாசலில் புரவியை நிறுத்தி குதித்து இறங்கியவனிடமிருந்த புரவியின் கடிவாளத்தை ஓடி வந்து பற்றிக் கொண்டான் காவலாளி..

"புரவியை லாயத்தில் கட்டிவிடு சேவகனே.."

கம்பீரமாக உத்தரவிட்டு நரசிம்மவர்மன்.. அரண்மனையின் நீண்டபடிகளில் தாவியேறினான்.. வழி நெடுக ஒளிர்ந்த தீப்பந்தங்களும்.. எண்ணை விளக்குகளும்.. அந்த மாளிகையை ஒளி மிகுந்த தேவலோக மாளிகை போல வெளிச்சம் போட்டுக் காட்டின.

வேக நடை போட்டு அரண்மனையின் மேல் டத்தில் ஏறியவனை..

"நரசிம்மா.." என்ற குரல் தடுத்து நிறுத்தியது..

'இது சக்கரவர்த்தியின் குரல் அல்லவா..?'

நரசிம்மன் நின்று திரும்பிப் பார்த்தான்.. அவனையே கூர்மையாக துளைக்கும் பார்வை பார்த்தபடி அணுகி வந்தார் மகேந்திர வர்ம பல்லவச் சக்கரவர்த்தி..

குடிமக்களால் எளிதில் அணுக முடிந்தவர் என்ற பெரும் நாமத்தைப் பெற்றவரும். இணையற்ற கலா ரசிகரும்.. போர்களற்ற சமாதானத்தை உலகம் முழுவதும் நிறுவ முயன்ற சமாதான விரும்பியும்.. காஞ்சியின் ஏகாம்பரசேவரரை அனுதினமும் வேண்டி வணங்கி வாழ்வை நகர்த்தும் வீர சைவருமான மகேந்திரப் பல்லவ சக்கரவர்த்தியின் முன்பாக தயங்கி நின்றான் அவரின் திருக்குமரன்..

மகேந்திரவர்மனின் விழிகள் மழையில் நனைந்திருந்த மகனின் சிகையையும், ஆடைகளையும் அளவிட்டன.

"நகர்வலம் போனாயா மகனே..?"

தந்தையின் கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் தடுமாறிப் போனான் நரசிம்ம வர்மன்..

"ஆம் தந்தையே.. பொதுப்படை முணுமுணுத்தான்..

"வலுத்த மழைக்கு ஒதுங்க நம் மகரில் மாளிகைகளும்.. கூட கோபுரங்களும் இல்லாமல் போய் விட்டனவா மகனே..? ஏதேனும் ஒரு மாளிகையின் திண்ணையில் நீ ஒதுங்கி நின்றிருக்கலாமே..?"

மகேந்திரவர்மனின் அறிவுக் கூர்மையில் திணறிப் போய் விட்டான் நரசிம்மவர்மன்.

காஞ்சியில் மாட மாளிகைகளுக்கும்.. கூட கோபுரங்களுக்கும்.. குறைவில்லைதான்.. மல்லையின் கடற்கரையில் இவற்றைத் தேடினாலும் கிடைக்காதே..

வரும் வழியில் நனைந்து விட்டவன்.. ஒதுங்க எங்கு இடம் தேடுவான்..?

"மழைக்கு அஞ்சி ஒதுங்குவது வீர பல்லவர்களுக்கு அழகல்லவே தந்தையே.." சமயோசிதமாக பதிலுரைத்து விட்டான் நரசிம்மன்..

"மெய்யே உரைத்தாய்.." மெச்சுதலான புன்னகை சக்கரவர்த்தியின் இதழ்களில் வெளிப்பட்டது.

"ஆயினும் மகனே.. உடல் நலனையும் பேனிக் காக்க வேண்டுமல்லவா..? வீரனுக்கு அதுதான் முக்கிய தேவையும் கூட.." வலியுறுத்தினார்.

"ஆகட்டும் சக்கரவர்த்தி..! இனி அவ்விதமே செய்ய முயல்கிறேன்.." நரசிம்மன் மறுமொழி கூறினான்..

"அவ்விதம் செய்ய முயல மட்டும்தான் முடியுமா மகனே.." உரத்த குரலில் நகைத்தார் மகேந்திரவர்ம சக்கரவர்த்தி..

பதில் உரை ாமல் மௌனமாக நின்ற மகனை வாஞ்சையுடன் பார்த்தவரின் விழிகளில் வாஞ்சையைத் தாண்டிய வேறு பலவும் இருந்தன..

"நீ பட்டத்து இளவரசன் நரசிம்மா.. அதை மனதில் ் ாண்டு நடந்து கொள்வது உனக்கும் நல்லது.. இந்தப்

பல்லவ நாட்டுக்கும் நல்லது. காஞ்சித் தலைவன் காஞ்சியை விட்டு அடிக்கடி மல்லையின் கடலோரக் குன்றுகளில் நடமாடிக் கொண்டிருப்பதாக நமது ஒற்றர்கள் வாயிலாக அறிகிறேன்.."

மகேந்திரவர்மனின் மறைமுக உரையில் நரசிம்மன் துணுக்குற்றான்.. 'தந்தையார் என்ன உரைக்க விழைகிறார்..?'

"போர்மேகம் இல்லாத உலகம் காண யாம் விழைந்தால் மட்டும் போதாது இளவரசனே..! நமது எதிரிகளும் விழைய வேண்டும்.. நாற்புறமும் போர் மேகங்கள் சூழ்ந்திருக்கும் இவ்வேளையில் பட்டத்து இளவரசன் தலைநகரை விட்டு அடிக்கடி நீங்குவது உசிதமல்ல மகனே..!"

"எமது வீரத்தில் தமக்கு நம் க்கை அற்றுப் போய் விட்டதா மன்னவரே..! எமைக் காத்துக் கொள்ள யாம் அறிய மாட்டோமா..?"

"அது மட்டும் போதாது நரசிம்மா..! இந்த பல்லவத் திருநாட்டையும் தாமே காப்பாற்ற வேண்டும்.. கடமையை மறவாதே மகனே..! ஒருபுறம் சோழர்கள் விடுதலை வேண்டிய போரில் இறங்க முற்படுகிறார் மறுபுறம் சாளுக்கிய புலிகேசி யுத்த முழக்கம் செய்யும் உத்தேசத்துடன் அலைகிறான்.. அமைதியென்னும் அருமருந்து காணக்கிடைக்காததாக உள்ளது மகனே..! நீ வாளேந்தி போர்க்களம் புக வேண்டிய அரசிளங்குமரன்."

"அதில் குறைவேதும் உள்ளதா தந்தையே..?"

"அல்ல மகனே..! ஆயினும்.. வாள் பிடித்த கரங்களுடன். கால்கள் சதங்கைகளையும் சேர்த்துப் பிடிக்கின்றனவாமே.."

"யாம் நடனக்கலையை பயன்றதில் தவறேதும் உள்ளதா அரசே.."

"அவ்வாறு யாம் நினைத்திருந்தால்.. தாம் பயின்ற போதே தடை சொல்லியிருப்போமே.. கலைகளை பயில்வதற்கும்.. ஆராதிப்பதற்கும் தடை சொல்பவனல்ல மகேந்திர பல்லவன்.."

"பின் எதற்காக இம்மொழியை உரைத்தீர்கள் என்பதை யாம் அறியலாமா மன்னவரே..?"

"சமீப காலமாக தாம் நடனப்பயிற்சியில் அதிக கவனம் செழுத்துவதாக அறிந்தேன் மகனே..! கற்றறிந்த கலையை சாதகம் பண்ண வேண்டிய அவசியம் நடனக் கலைஞனுக்குத்தான் உண்டு. நாடாளும் அரசன் அனுதினமும் போர் பயிற்சியில் கழிக்க வேண்டியவன்.."

நரசிம்மன் அமைதி காத்தான்.. அவனால் மறுமொழிகளை உதிர்க்க இயலாது.. பட்டத்து இளவரசனுக்கு தளைகள் பல உள்ளன.

"போ ட்டும்.. குன்றின் மீது சதிர்போட்டி நடத்த நீ ஆசைப்பட்டிருக்கலாம்.. அதன் பொருட்டு சாதகம் செய்திருக்கலாம். குற்றமில்லை.."

'முடிந்த ஆசுவாசப் நெடும் மூச்சை விட்டான் நரசிம்மன்..

'இனி அறைக்குச் சல்ல மன்னர் வழி விட்டு விடுவார்..

மகேந்திரவர்மன் வழி விடவில்லை.. அசையாமல் நின்றபடி..

"நமது அரசவையில் நடன நர்த்தகியாக.. மல்லையின் தலைசிறந்த சிற்பியான ஆயனரின் மகளான சிவகாமியை தேர்வு செய்திருக்கிறேன் மகனே.. எமது தேர்வு சரியானது தானா..?" என்று வினவினார்.

நரசிம்மவர்மனின் வதனம் மாறியது.. அதில் உருவான உணர்வு அலைகளை அவதானித்தபடி மகேந்திர வர்மனின் வதனமும் மாறியது..

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 8

## எங்கோ உன்னைப் பார்த்த பொழுதில்.. என்னை நான் தொலைத்தேன்...

"எனக்கென்னவோ தாமு.. அவளை பர்ஸ்ட் டைமா நான் மீட் பண்றதைப் போலவே தோணல..."

"பின்னே..?"

"காலம் காலமா அவளை தெரிந்து வைத்திருக் கிறதைப் போல தோணுதுடா.."

'இது என்னடா வம்பாப் என்றிருந்தது தாமோதரனுக்கு..

சித்தார்த்தனின் அப்பா மிகப் பெரும் கோடிஸ்வரர்.. விவேகானந்தன் என்றால் தெரியாத வி.ஐ.பிக்களே இருக்க

ட்டார்கள்.. அந்த அளவுக்கு அவர் ஹை சொசைட்டியில் பல்யமானவர்.

சித்தார்த்தனின் தந்தை இப்படியென்றால்.. தாய் அவருக்கும் மேலே பிரபலமான அரசியல் தலைவரின் மகளாக இருந்தார். சித்தார்த்தனின் அம்மாவான நிருபமாவின் அப்பா.. தேசிய அளவிலான மிகப்பெரும் அரசியல்கட்சியின் தமிழக் கிளையின் தலைவர்.. அனைத்து அரசியல் கட்சிகளின் நன்மதிப்பையும் கட்சி பேதமின்றி பெற்றவர். இந்தியாவின் தலைநகரம் வரை அவரது செல்வாக்கு பரவியிருந்தது.

இப்பேற்பட்ட தாய் தந்தைக்குப் பிறந்த சித்தார்த்தன் எப்படி இருக்க வேண்டும்..? அவனுக்குப் பின்னால் பிறந்த நீரஜாவைப் போல பரம்பரைப் பணத்திமிருடன் இருக்க வேண்டாமோ..?

"லீவ் தட் மேட்டர் சித்தார்த்.. நீ உன் தங்கையைப் போல இருக்க வேண்டாம்.. அட்லீஸ்ட்.. உன் பேரண்ட்ஸின் பெருமைக்கு பங்கம் வராததைப் போல இருக்கலாமில்ல..?"

"வாட் ஃபார்..? `என் பேரண்ட்ஸின் நிழலில் நான் குளிர் காய விரும்பலைன்னு எத்தனை தரம் சொல்லியிருக் கன்..? இந்த 'சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனி' நான் எஸ்டாபிலிஷ் பண்ணினது.."

"இல்லேன்னு நான் சொன்னேனாடா..? இதோட.. நிருபமா குருப் ஆஃப் கம்பெனியின் வாரிசும் நீதான்ங்கிறது இல்லேன்னு ஆகிடுமாடா..?"

"அது என் அப்பாவோட கம்பெனி.."

"உன்னைத் திருத்த முடியாது.."

"தெரியுதில்ல..? அப்புறமும் ஏன் டயத்தை வேஸ்ட் பண்ற..?"

"டேய்.. உனக்காக உன் வீட்டில் பார்த்துக் கிட்டிருக்கிற பெண்களின் ஸ்டேட்டஸே வேறடா."

"இப்ப எதுக்காக இதைச் சொல்கிற..?"

"மனசு கேட்கலை.. ஸ்கூலில இருந்து கூடப் ப பிரண்டாச்சேன்னு சொன்னேன்.."

"தாமு.. நான் பார்த்த பெண்ணைப் பத்தின என் இனம் பு யாத ஃபீலிங்ஸைப் பத்தி உன்கிட்ட ஷேர் பண்ணிக் கிட்டேன்.. தட்ஸ் ஆல்.. அதுக்காக நீ மேரேஜ் வரைக்கும் இமாஜின் பண்ணிக்கிட்டு அலற வேண்டாம்.. ஷி இஸ் எ இன்ட்ரெஸ்டிங் கேரக்டர்.. யு நோ.."

"அவ்வளவுதானா..?"

'அப்பாடி..' என்றிருந்தது தாமோதரனுக்கு..

அவன் நிலைமை சிக்கலானது.. சித்தார்த்தன் செய்து வைக்கும் கிறுக்குத்தனமான வேலைகளுக்கு அவனைப் பெற்றவர்களிடம் தாமோதரன்தான் பதில் சொல்லியாக வேண்டும்.. அவன் வாங்கிவந்த வரம் அப்படி.. சித்தார்த்தனை விட்டு விட்டு தாமோதரனை கேள்வி கேட்டே ஓர்வழி பண்ணி விடுவார்கள்..

இது எப்போது நடந்தது..? ஏன் நடந்தது..? தாமோதரன் கூடப் போனானா..? போனானென்றால் சித்தார்த்தன் இது போன்ற பித்துக்குளியை பார்த்துப் பேசும்

பாது எங்கே போயிருந்தான்..? வேடிக்கை பார்த்துக் ெ காண்டு இருந்தானா..? கூடப் போகவில்லையென்றால் ஏன் கூடப் போகவில்லை..? அதைவிட அவனுக்கு வெட்டி முறிக்கும் வேலை வேறு என்ன இருந்தது..?

இத்தனைக்கும் பதில் சொல்லி ஓய்ந்து போவதைத் தவிர்க்கத்தான் தாமோதரன் சித்தார்த்தனிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான்..

"ஓகே.. பிரண்ட்..

"பிரண்டுதான்.. நான் உனக்கு பிரண்டுதான்.. இல்லேன்னா நான் சொன்னேன்..? அதுக்கு இப்ப என்னதான் பண்ணனும்கிற..?"

சித்தார்த்தனைப் பெற்றவர்களின் நினைவில் தாமோதரன் புலம்பி வைக்க.. சித்தார்த்தன் அவனை விசித்திரமாக பார்த்து வைத்தான்..

"என்னைச் சொல்லிட்டு உனக்கென்னடா ஆச்சு..?"

"இதுவரைக்கும் எதுவும் ஆகாம தப்பிச்சுக்கிட்டே வந்திருக்கேன்.. இனியும் இது கண்டினியூ ஆகணும்.."

"எல்லாம் கண்டினியூ ஆகும்.. நீ முதல்ல இந்த ஃபைல்களைப் பாரு.. இண்டர்வியூ முடிந்ததும் நெக்ஸ்ட் என்ன புரோக்ராம்..?"

"நீயும் நானும் சேர்ந்து இன்னைக்குத்தான் ரிலிஷான புதுபிலிமை.. முதல் ஷோவில.. முதல் ஆளா பார்க்கப் போறோம்.. போகலாமா..?"

கடுப்புடன் கேட்ட தாமோதரனை இமைக்காமல் பார்த்த சித்தார்த்தன்.

"ஏண்டா..?" என்றான்..

"பின்னே என்னடா.. இண்டர்வியூ முடிஞ்சவுடன் பிஸினெஸ்லன்ச் இருக்குது.. அதில் பாரின்காரர்கூட புது அக்ரிமெண்டைப் பத்திப் பேசி முடிவு பண்ணப் போகிற.. ஈவினிங் அக்ரிமெண்ட் சைன் ஆகப் போகுது.. இம்பார்ட்டன்டான இத்தனை வேலைகளை முன்னாலே வைச்சுக் ட்டு.. நீ லேப்டாப்பைக் கொஞ்சிக்கிட்டு இருக்கிற.."

"பார்த்தியா.. இண்டர்வியூ ஞாபகத்தில லேப்டாப்பை மறந்துட்டேன்.. அதில முக்கியமான ஒன்னை செர்ச் பண்ணிப் பார்த்துக்கிட்டு இருந்தேன்.. கரெ`டா நீயும் வந்திட்ட.. ஒன் மினிட் வெயிட் பண்ணு.."

"என்ன கழுதைக்கு..?"

தாமோதரன் லேப் டாப்பை இழுத்து சித்தார்த்தனின் கைக்கு எட்டாத தூரத்தில் வைத்தான்.. சித்தார்த்தனின் கைக்கு எட்டும் தூரத்தில் இன்டர்வியூக்கு வந்திருப் பவர்களின் ஃபைல்களை வைத்தான்..

"இப்போதைக்கு இதைத்தவிர வேற எதுவும் உனக்கு நினைவுக்கு வரக் கூடாது.. ஒரு நிமிசம் உன் கம்பெனியோட இண்டர்வியூ லெட்டரை நம்பிக் கிளம்பி வந்திருக்கிற கேண்டிடேட்டை நினைச்சுப் பாருடா.. அவங்க பாவமில்ல..?"

நல்லவேளையாக இல்லை என்ற பதிலைச் சொல்லாமல் எதிரே இருந்த ஃபைல்களை ஆராய ஆரம்பித்தான் சித்தார்த்தன்..

தன் முயற்சியில் வெற்றி பெற்றவனாக ஒரு பாட்டில் ணீரை தொண்டையில் சரித்து ஆசுவாசப் படுத்திக் ாண்டான் தாமோதரன்..

"பாதி ஃபைல்களை நானும் பார்க்கிறேன்.."

தாமோதரன் தன் பக்கமாக பாதி ஃபைல்களை முத்துக் கொண்டான்.. ஒரு பக்கத்தில் சிரிப்புமில்லாத.. ாகமுமில்லாத மலர்ச்சியான பெண்ணின் புகைப்படம் ருந்தது.. அதில் தெரிந்த வசீகரத்தை கூர்ந்து பார்த்துக் ாண்டிருந்தவனுக்குள் ஏதோ ஒரு மின்னல் வெட்டியது.

'என்னடா இது.. இவன் சொன்ன கதையைக் கேட்டு நானும் ஜெர்க் ஆகறேன்.. தலையை ஆட்டி அந்த ன்னலை வழியனுப்பி வைத்துவிட்டு வேலையில் ழ்கினான்..

"மிஸ் வயலெட்.. கேண்டிடேட்ஸை அனுப்ப ஆரம்பிங்க.."

சித்தார்த்தன் இன்டர்க்காமில் கட்டளையிட்டபோது.

'லேப் டாப்பை விட்டு வெளியில் வந்துட்டாரு போல..' என்று அவள் நினைத்துக் கொண்டாள்...

இண்டர்வியூ ஆரம்பமானது.. சித்தார்த்தன் பார்த்த ஃபைல்களை தாமோதரன் பக்கம் நகர்த்தி விட்டு.. அவன் பக்கமிருந்த ஃபைல்களை தன்பக்கமாக இழுத்துக் கொண்டான்..

வரிசையாக வந்தவர்களின் பதில்களும்.. தகுதிகளும் ப்பாகவே இருந்தன..

"இப்பல்லாம் முன்னைப் போல இல்லேடா.. செம நாலெட்ஜ் மச்சி.." என்றான் சித்தார்த்தன்..

"ஐ அக்ரி.." என்றான் தாமோதரன்..

"சிக்ஸ்த் படிக்கிறப்பவே கம்யூட்டரில் கரை கண்டவங்களா ஆகிடறாங்க.. படிக்கிற பாடத்துக்கு டியூசன் போறாங்களோ இல்லையோ.. எக்ஸ்ட்ரா குவாலிபிகேசனுக்கு கோச்சிங் சென்டர் போயிடறா ' இந்தியா சீக்கிரமாவே வல்லரசா ஆகிரும் மச்சான்.."

"அதே.."

சித்தார்த்தன் அடுத்த கேண்டிடேட்டை அனுப்பச் சொல்லும் பஸ்ஸரை அழுத்தியபடி தாமோதரன் சொன்னதை ஆமோதித்தான்..

"மே ஐ கமின் சார்.." அறைவாசலில் குரல் கேட்டது.

'குயிலினும் இனிய குரல்.. தாமோதரன் டையை சரிசெய்து கொண்டான்..

சித்தார்த்தனுக்குள் மின்சாரம் பாய்வதைப் போல இருந்தது.. அந்தக் குரல் எழுப்பிய அலைவரிசை அவனைத் தாக்கியது. அவனுக்கு வெகு பரிச்சயமான குரல் அவனை அழைப்பதைப் போன்ற பிரமையில் அவன் திணறிப் போனான்..

"யெஸ்.. கமின்.." தாமோதரன்தான் குர கொடுத்தான்..

உள்ளே வந்த பெண்ணைக் கண்டதும் சித்தார்த்தனின் உடலில் அதிர்வு ஏற்பட்டது.. அவன் சுழல் நாற்காலியை விட்டு எழுந்தே விட்டான்..

"நீ.. நீ.. நீ..."

அவனுடைய அதிர்ச்சிக்க குறையாத அதிர்ச்சியை தனது விழிகளில் பிரதிபலித்தபடி அங்கே யாமினி நின்று கொண்டிருந்தாள்..

"நீ எப்படி இங்கே..?" வியப்புடன் கேட்டான் சித்தார்த்தன்..

"இண்டர்வியூக்கு வந்தேன் சார்.. நீங்க இங்கே..?"

இண்டர்வியூக்கு வந்தவள் கேட்ட கேள்வியில் தாமோதரனுக்கு எரிச்சல் கிளம்பியது..

'இங்கே என்னதான் நடக்குது..? இவன் இவளை இண்டர்வியூ எடுக்கிறானா..? இல்லை.. இவ இவனை இண்டர்வியூ எடுக்கிறாளா..?'

"சார்தான் இந்தக் கம்பெனியோட எம்.டி. மிஸ் யாமினி.. யாமினிதானே உங்கள் பெயர்..?"

தாமோதரனின் கண்டிப்பான குரல் யாமினியை அதட்டியது.. அவனது கண்டிப்பான பார்வை சித்தார்த்தனை சுழல் நாற்காலியில் உட்கார வைத்தது..

"இந்தக் கம்பெனியோட எம்.டி இங்கேதான் இருப்பார்.. ஸோ.. அதில் நீங்க ஆச்சரியப்பட ஏதுமில்லைன்னு நினைக்கிறேன்.. டேக் யுவர் சீட்.."

கறாராக பேசினான் தாமோதரன்.. முகம் மாறிப் போனவளாக சீட்டின் நுனியில் அமர்ந்தாள் யாமினி.. அவளுடைய ஃபைலப் பார்த்தது தாமோதரன்தான்.. சித்தார்த்தனில்லை என்பதில் சித்தார்த்தன் அவளுடைய ஃபைலை புரட்டிப் பார்த்தான்.



# 9

## கால்சலங்கை ஒலியினிலே.. கலந்திருக்கும் சோகமென்ன..?

தம் புதல்வனின் அகத்தை தாமறிவோம் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியாக உறுதிபடுத்தி விட்டார் மன்னர் மகேந்திர வர்மன்..

அகம் திறந்து எதையும் உரைத்திட இயலாமல் மௌனமென்னும் இரும்புத்திரைச்சீலையின் பின்னால் உறைந்து நின்றான் நரசிம்மவர்மன்..

மன்னரின் மொழிக்கு என்ன மறுமொழியை அவனா உரைக்க முடியும்..?

புதல்வனின் வதனத்தில் காணப்பட்ட ஓராயிரம் உணர்வலைகளில் மகேந்திரவர்மனின் மனம் சஞ்சலம் கொண்டது.

நாடாளும் வேந்தனுக்கு வரக்கூடாத உணர்வல்லவா காதல்..?

அவனது திருமணம் அரசியலைச் சார்ந்தது.. அவ்வாறிருக்க.. நாடாளும் வேந்தன் ஒரு நடன மங்கையின் மீது காதல் கொள்வதா..?

"சிகை முழுவதும் மழைத்துளிகள் சொட்டிக் கொண்டிருக்கின்றன மகனே..! கனமான பருத்தித் துணியினால் சிகை துடைத்து. ஆடை மாற்றிவிட்டு

துயிலப் போ.. அர்த்த ஜாமத்தை கடந்த பொழுதாகி விட்டது.. விடியலில் தமக்கான பொறுப்புக்கள் ஏராளமாக காத்திருக்கின்றன.."

மகேந்திரவர்மனின் வாத்சல்யமான வார்த்தைகள் அவனுக்கு வழி விட்ட அனுமதியை உணர்த்தின.. பொங்கும் கடலாக கொந்தளித்த மனதோடு.. தந்தைக்கு சிரம் தாழ்த்தி வணக்கம் உரைத்துவிட்டு மேலே நடந்தான் நரசிம்மன்.. அரண்மனையில் அவனுக்கான பகுதி வந்ததும் உள்ளே விரைந்தவனின் ஆணையை நிறைவேற்ற சேவகர்கள் வந்து நின்றார்கள்..

"சுடுநீர் வேண்டும்.."

இளவரசனின் ஆக்ஞை உடனடியாக நிறைவேற்றப் பட்டது. நீராடி.. உலர்ந்த ஆடைக்கு மாறியவன் பஞ்சணையில் விழுந்தபோது அகமும், தேகமும் ஒருங்கே அயர்வாக இருப்பதை உணர்ந்தான்.. இமைகளை மூடியவனை தழுவிக்கொள்ள நித்திராதேவி ஓடி வரவில்லை.. மாறாக மூடிய இமைகளுக்குள்..

*"வீரநடைபோடும் திருமேனி..*
*தரும் போதையில்..*
*ஆடாத மனமும் உண்டோ..?"*

என்று பாதச் சலங்கைகள் ஒலிக்க சதிராடியப சிவகாமி வந்து நின்றாள்..

"எம் திருமேனி.. உனக்கு அத்தகைய போதையைத் தருகிறதா சிவகாமி..?" நரசிம்மனின் தேகம் சூடானது.

"எமைக் கண்டு உன் அகம் ஆடுகிறதோ கண்ணே..?"

பஞ்சணையின் திண்டை தழுவிக் கொண்டவனுக்கு சிவகாமியைத் தழுவிக் கொள்வதைப் போலவே இருந்தது.

"என்னவளே..!" அவன் இதழ்கள் முணுமுணுத்தன.

கடலோர மல்லையில்.. கரையோர மரத்தடியில்.. அவளைக் கட்டித் தழுவி முத்தமிட்ட பொழுதை நினைத்தபடி அதில் சுகித்திருந்தவனை மெல்ல.. மெல்ல.. நித்திராதேவி தன் வயமாக்கிக் கொண்டாள்..

பொழுது புலர்ந்ததை சேவகர்கள் உணர்த்தியதில் நரசிம்மன் துயில் கலைந்து எழுந்து.. சயன அறையை விட்டு... நீராடும் மண்டபத்திற்குப் போனான்... நீராடி வந்தவனுக்கான புத்தாடைகள் சித்தமாக இருந்தன.. உடுத்திக் கொண்டவன்.. இளவரசனுக்கான ஆபரணங்களை அணிந்து கொண்டு.. உணவருந் கூடத்தை நோக்கிச் சென்றான்..

காத்திருந்த மகேந்திரபல்லவர் புதல்வனை நிமிர்ந் பார்த்தார்..

"இதுவே இளவரசனுக்குரிய அங்க அடை

முன்தினத்தின் இரவில்.. பட்டாடை, ஆபரணங்கள் இன்றி.. சாதாரண உடையுடுத்தி அவன் மல்லைக்கு போய் வந்ததை அவர் குறிப்பிடுவதை புரிந் கொண்டான் நரசிம்மன்.

"இருக்கையில் அமர்ந்து கொள்ளலாமே.

மகேந்திரவர்மனின் வார்த்தைகள் ஆக்ஞைபோல இல்லாமல் ஆக்ஞையாக வெளிவந்தன. நரசிம்மன்

அமர்ந்தான்.. உணவருந்தும் வேளையிலும் ஆழ்ந்த சிந்தனையுடனே இருந்தார் மகேந்திரவர்மன்..

"அரசவைக்கு வருகை தருவாயல்லவா..?"

திடிரென்று அவர் விடுத்த வினாவில் திணறிப் போனான் நரசிம்மன்.. அவனுக்கும் மன்னருக்கும் இடையே அகலமான அகழி உருவாகி விட்டதைப் போல இருந்தது அவனுக்கு..

"அவசியம் வருவேன் தந்தையே.." என்றான்..

"உறுதிபடுத்திக் கொள்கிறேன் மகனே.. ஏனெனில்.. எந்த நொடியில் நீ எதைச் செய்வாயென்று உன்னைப் பெற்றவனான என்னாலேயே கணிக்க இயலவில்லையே.." ஊசி முனையின் கூர்மையோடு பேசினார் மகேந்திர பல்லவர்.

நரசிம்மனின் வதனம் இறுகியது. உணருந்தும் கூடத்தைவிட்டு வெளியேறியவன் விரைந்த நடந்தான்.. சினம் கொண்ட அவனது மனதில்.. அவன் என்ன தவறு இழைத்து விட்டானென்று மன்னவர் இவ்விதம் ஊசி முனை வினாக்களினால் ஊடுருவுகிறார் என்ற ஆதங்கம் இருந்தது.

இளவரசனின் வேக நடையை படைத்தலைவனின் குரல் தடுத்து நிறுத்தியது.. நரசிம்மன் நின்றான்.. தனது தோழனை நட்புடன் பார்த்தான்..

"வந்தனம் தோழா.."

"இளவரசரின் நடையில் சினம் மிகுதியாக இருப்பதைப் போலத் தெரிகிறதே.. யாது விவரம் என்பதை யாம் அறிந்து கொள்ளலாமா.?"

"நின்னையன்றி யாரிடம் இதை உரைப்பேன் தோழனே..! மன்னர் எம்மீது மனத்தாங்கல் கொண்டிருக்கிறார்.."

"எதற்காக என்பதை தாம் அறிவீர்கள் அல்லவா..?"

தளபதியின் கூரிய விழிகளில் பணிவும்.. புத்தி கூர்மையும் சேர்ந்து சுடர் விட்டன.. தோழனின் வினாவில் நரசிம்மன் நகைத்தான்.

"தாம் எமது தோழன் என்பதையும் மீறி.. மன்னரின் படைத் தளபதி என்பதை அடிக்கடி நினைவுறுத்துகிறாய் அப்பனே.."

"அல்ல இளவரசே..! எந்தவொரு நியாயத்திற்கும் இரு பக்கங்கள் உண்டு. தமது பக்கம் இதுவானால்.. மன்னரின் பக்கம் எதுவாக இருக்கக்கூடும் என்பதை யாம் யோசித்தோம்.. அவ்வளவே.. என்றும் யாம் தங்களின் பணியாளனே.."

"அல்ல தோழனே..! தாம் எமது நண்பர்..

தளபதியை இறுக கட்டித் தழுவிக் கொண்டான் நரசிம்மன். அரசவையை நோக்கி அவர்கள் இணைந்து நடந்தார்கள்.

பல்லவர்களின் தலைநகரமான காஞ்சியின் அன்றைய அழகு சொல்லில் அடங்காததாக இருந்தது.

மதுரை எவ்வாறு பாண்டியர்களால் புகழ்பெற்று தலைநகரமாக ஆனதோ.. தஞ்சை எவ்வாறு சோழர்களால் புகழ்பெற்று தலை நகரமாக ஆனதோ.. அவற்றைப் போல காஞ்சிபுரம் பல்லவர்களின் காலத்தில் கொடிகட்டிப் பறந்த

தலைநகரமாக இருந்தது. இறை நம்பிக்கை கொடிகட்டிப் பறந்த தலைநகரமாகவும் அது இருந்தது. இறை நம்பிக்கை மிகுந்திருந்த அந்தக் காலத்தில் மன்னர்கள் அனைவரும் தங்களின் காலத்தில் பழைய ஆலயங்களை புதுப்பித்தும்.. புதிய ஆலயங்களைக் கட்டியும் இறைவழிபாட்டில் தமக்கிருந்த ஈடுபாட்டை உணர்த்தினார்கள்.

பொழுதுபோக்கு கலைக்கூடங்களும்.. நவீன சாதனங்களும் இல்லாத வரலாற்று காலகட்டத்தில் மக்களின் புத்துணர்வுக்கும் ஒன்றுகூடலுக்குமான ஒரே தலமாக கோவில்களே அப்போது இருந்தன என்பதை இச்சமயத்தில் நாம் நினைவு கூறவேண்டும்.

மதுரையை ஆண்டது இறைவனும்.. இறைவியும் என்பது புராணம்.. அதற்கடுத்ததாக.. கோவில் நகரமாக திகழ்ந்தது.. திகழ்வது காஞ்சிநகரம்தான்.

காஞ்சிபுரத்தின் புனைபெயர் ஆயிரம் கோவில்களின் நகரம் என்றால் அதன் பெருமையை என்னவென்று உரைப்பது..?

இந்து சமயத்தாரின் ஏழு புனித ஸ்தலங்களில் ஒன்றாக காஞ்சி ஸ்தலம் விளங்குகிறது.

பஞ்சபூதங்களில் நில வடிவில் சிவபெருமான் ஏகாம்பரேஸ்வரராக காட்சியளிப்பது காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரர் கோவிலில்தான்.. வீர சைவரான மகேந்திரவர்ம மன்னர் வணங்குவதும் காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரரைத்தான்.

பல்லவ மன்னரால் கட்டப்பட்ட இரவட்டனேசுவர கோவிலில் அமைந்துள்ள வட்டக் கருவறை அவர்களின் கட்டிடக் கலைக்கு கட்டியம் கூறுவது.

அப்பேற்பட்ட அழகு மிகு காஞ்சியின் அரசவையில் நரசிம்மன் பிரவேசித்த போது.. அவையில் இருந்த சலசலப்பு அடங்கியது. வணங்கிய பொதுமக்களுக்கும்.. வந்தனம் உரைத்த அவையோருக்கும் தலையசைத்தபடி நரசிம்மன் நடந்து இளவரசனுக்குரிய ஆசனத்தில் அமர்ந்தான்.

சற்றுப் பொழுதில் மகேந்திரவர்மரும் வந்து விட்டார்.

"மன்னாதி மன்னர் மகேந்திரச் சக்கரவர்த்தி வருகிறார்.."

கட்டியகாரனின் உரத்த குரலோசையைத் தொடர்ந்து அவைக்குள் பிரவேசித்த மகேந்திரவர்மன் அரியணையில் ஏறி அமர்ந்தார். சபையினரை நோக்கினார்.

அரசவையில் கூடியிருந்த முக்கிய பதவிகளை வகிப்பவர்களின் முகங்கள் இருண்டிருந்தன.. அதி முக்கியமான உரையை மகேந்திரபல்லவர் உரையாற்றப் போகிறார் என்று நரசிம்மனின் ஆழ்மனது அறிவுறுத்தியது. அதுவே நிகழ்ந்தது.

"அவையோரே..! நாட்டை போர் மேகங்கள் சூழா வண்ணமிருக்க.. எம்மால் இயன்ற முயற்சியை யாம் செய்து விட்டோம்.. போருக்கு அஞ்சும் கோழைகளல்ல நாம்.. இருப்பினும் குடி மக்களின் நலனும், அமைதியும் போர்

று வந்து விட்டால் அற்றுப் போய் விடும். அதன் ருட்டே அமைதியை நாடினோ ஆயினும் அது க்கனியாக எட்டிப் போய் கொண்டே இருக்கிறது... காலத்தில் யாம் போர் புரிய காஞ்சியை விட்டு ளியேற நேரிடலாம்.. ஆதலால் காஞ்சியைக் காக்கும் றுப்பை.. இன்றைய தினம் முதல்.. பட்டத்து இளவரசன் ம்ம வர்மனின் தோள்களின் மீது சுமத்துகிறேன்.."

மகேந்திரவர்ம மன்னர் சொல்லச் சொல்ல... .அவ்வாறே ஆகட்டும்.." என்று சபையிலிருந்த மக்கள் முழக்கமிட்டார்கள்.

நரசிம்மன் ஸ்தம்பித்தான்.. மன்னரின் அகத்தில் ன்ன இருக்கிறது என்பதை அவன் அகம் உணர்ந்து டது.

காஞ்சியைக் காவல் செய்யும் பொறுப்பிலிருப் னால்.. மண்டபப்பட்டிலிருக்கும் சிவகாமியைச் சந்திக்க டிச் செல்ல முடியும்..?

முதலில் சமண மதத்தில் இருந்து.. பின்னர் சைவ தத்திற்கு மாறி விட்ட மன்னர் மகேந்திரவர்மா 'நிகரற்ற தியூகி' என்று நாமம் பெற்றிருப்பவர்.

அவரது மதி கூர்மை மகனை கடமையில் பிணைத்துக் காதலியைக் காணச் செல்ல முடியாமல் தடுத்து நிறுத்திவிட்டது.

அவை முடிந்து வெளியே வந்த நரசிம்மன்.. உக்கிர நரசிம்மனாக இருந்ததில் அவனது நண்பன் தயங்கினான்.

"இத்துணை சினம் தேவையற்றது இளவரசே..!"

"அல்ல நண்பனே..! ஆயனர் குமாரியைக் காணச் செல்ல முடியாமல் கடமையில் எம்மை தந்தை பிணைத்து விட்டார்..

"தாங்கள் மறுத்திருக்கலாமே..?"

"எவ்வாறு இயலும்..? உரைப்பது எமது தந்தை மட்டுமல்ல.. இந்நாட்டின் மன்னரும் அவர்தான்.. அரசாணையை மீறுவது என்பது.. பட்டத்து இளவரசனாலும் இயலாத ஒன்றல்லவா..?"

படைத்தலைவன் பேசவில்லை.. அவன் நரசிம்மனை அறியும் முன்பே.. ஆயனரையும், சிவகாமியையும் அறிவான்.. சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவரான திருநாவுக்கரசரின் தாள் பணிந்து சைவ சமயத்திற்கு தொண்டாற்ற நினைத்து அவன் காஞ்சியில் பிரவேசித்த அத்தினத்தில்தான் ஆயனரும், சிவகாமியும் அவனுக்கு அறிமுகமானார்கள்.. அவர்கள் அறிமுகமான விதத்தையும், அதன் பின்னால் ஏற்பட்ட நிகழ்வுகளையும் நினைத்துப் பார்த்தால் அவனுக்கு மலைப்பாக இருக்கும்.

மதம் கொண்ட யானையொன்றின் பிடியில் ஆயனரும், சிவகாமியும் அகப்பட்டுக் கொண்டார்கள்.. அவன்தான் அவர்கள் இருவரையும் விடுவித்தான்.. அதனால் நேர்ந்த கலவரத்தில் அரசின் படை வீரர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான். அங்குதான் நாகநந்தியை முதன் முதலாக சந்தித்தான்.

உண்மையில் மன்னர் மகேந்திரவர்மர் அந்த இளைஞனின் தீரத்தைப் பாராட்டி பரிசு கொடுப்பதற்

னாகவே கைது செய்யச் சொன்னார் என்பதை அறிந்தபோது அவன் நாகநந்தியுடன் சிறையிலிருந்து தப்பித்திருந்தான்..

ஆயனரின் இல்லத்துக்கு நாகநந்தியை அழைத்துப் போகும் மிகச் சிறந்த பணியை அவன்தான் செய்து வைத்தான்.. சிவகாமியின் அழகில் சமணத்துறவியான நாகநந்தி மயங்கி விடுவானென்று அவன் என்ன சொப்பனமா கண்டான்.?

துறவியென்ற மரியாதையுடன்தான் ஆயனரும், சிவகாமியும் நாகநந்தியுடன் பேசிப் பழகினார்கள்.. அன்றிலிருந்து நாகநந்தி.. சிவகாமியின் ஆடலை மறைந்திருந்து கண்டு ரசிக்க ஆரம்பித்தான்.. மண்டபப் பட்டின் மல்லை கடற்கரையோரக் குன்றின் மீது சிவகாமி ஆட வரும் போதெல்லாம் நாகநந்தி உன்மத்தம் பிடித்தவனைப் போல ஆகிவிடுவான்.. அவன் உள்ளத்தில் சிவகாமியின் மீதான கரை கடந்த இச்சை தோன்றி விட்டது. கலைகளின் மீதான ஆயனரின் ஆர்வத்தை தூண்டி விடும் விதமாக நாகநந்தி பேசலானான்.. அஜந்தா குகைகளில் இருக்கும் வண்ண ஓவியங்களைப் பற்றிக் கற்றுவர விரும்பிய ஆயனரை நாகநந்தி தடுத்து நிறுத்தி அவர் சார்பாக அந்த இளைஞனை அனுப்பி வைத்தான்.

நாகநந்தியின் ஓலையுடன் சென்றவனுக்கு ஏற்பட்ட இன்னல்தான் எத்தகையது..!

"யாது நண்பனே..? தமது மேனி எ சிலிர்க்கிறது..?" நரசிம்மன் வினவினான்..

"விந்திய மலைச்சாரலுக்கு நான் சென்றதை நினைவு கூர்ந்தேன் இளவரசே.." படைத்தலைவன் பதில் மொழிந்தான்..

இருவரின் பார்வைகளும் அந்த நினைவுகளை பகிர்ந்து கொண்டன.

---

***ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'***



# 9

## உன் சுட்டும் விழிப் பார்வையிலே சொல்லி வரும் கதைகள் என்ன..?

'இவளை இங்கே வேலை பார்க்க விட்டு விட கூடாது..'

தாமோதரன் தீர்மானித்து விட்டான்.. யாமினியின் புகைப்படம் அவனை வசீகரித்ததைப் போல.. அவளின் தோற்றமும் அவனுக்குள் இனம் புரியாத ஒட்டுணர்வை ஏற்படுத்தித் தொலைத்ததில்..

'இவள் மாயக்காரி. என்ற அவனது எண்ணம் வலுத்துவிட்டது.

தாமோதரன் யதார்த்தவாதி.. அவ்வளவு எளிதாக உணர்ச்சிவசப்பட்டு விடமாட்டான்.. அவனையே அவள் 'ஜெர்க்' அடிக்க வைக்கிறாள் என்றால்.. அவளிடம் படு உஷாராக இருக்க வேண்டும் என்று அவன் தீர்மானித்துத் தானே ஆக வேண்டும்..?

"ஹௌ நைஸ்..! நீங்க கோல்டு மெடலிஸ்டா..?"

சித்தார்த்தன் யாமினியின் பிளஸ் பாயிண்டுகளைக் கவனிக்க.. தாமோதரன் மைனஸ் பாயிண்டுகளை மட்டும்.. கண்களில் விளக்கெண்ணையை ஊற்றிக் கொண்டு தேடினான்..

"என்னத்த கோல்டு மெடலிஸ்ட்..? எல்லாம் உருப் போட்டு எக்ஸாம் பேப்பரில் கொட்டி விட்டு வருகிற கேட்டகிரி.. எக்ஸ்பீரியன்ஸ் இல்லை எம்.டி சார்.. நோட் திஸ் பாயிண்ட்.."

"வெயிட் தாமு.. எக்ஸ்ட்ரா குவாலிபிகேசன் இவங்க ட்டே நிறைய இருக்கு.."

செக்கரட்டரி கோர்ஸ் படிக்கலையே.. அதை மறந்துட்டிங்களா சார்.."

முக்கியமான பாயிண்டை பிடித்து விட்டோமென்று தாமோதரன் தன்னைத்தானே..

'எங்கேயோ போயிட்டேடா தாமு..' என்று பாராட்டிக் கொண்டிருந்தபோது.. அதை உடைக்கவென்று அமைதியாக வெளிப்பட்டது யாமினியின் குரல்..

"நோ சார்.. நான் செகரட்டரி கோர்ஸையும் முடிச்சிருக்கேன்.. ரிசல்ட் வந்திருச்சு.. சொர்டிபிகேட்டை இன்னும் வாங்கலை.. பட்.. அதைப்பத்தி என் அப்ளிகேசனில மென்சன் பண்ணியிருக்கேனே சார்.."

வினயமாக அவள் எடுத்துரைத்ததும்.. தாமோதரன். ஃபைலை அவன் பக்கமாக இழுத்துக் கொள்ளப்

பார்த்தான்.. சித்தார்த்தன் கொடாக்கண்டனாக அதை இறுக கைப்பற்றி. ஒவ்வொரு பக்கமாக ஆராய்ச்சி செய்வதைப் போல உற்றுப் பார்க்க ஆரம்பித்தான்..

'இவன் சும்மாவே ஆடுவான்.. இதில் ஃபைலில இருக்கிற பர்ட்டிகுலர்ஸை பார்த்து வைச்சிட்டான்னா அவ்வளவுதான்.. பிடிக்க முடியாதே.. தாமோதரன் தலைமேல் கை வைத்தபடி கவலையுடன் யாமினியை பார்த்து வைத்தான்..

அவன் கவலையில் அவளது புருவங்கள் ஏறின..

'இதுவேறயா..?' அவனுக்கு எரிச்சலாக இருந்தது.

வருமுன் காக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பவனின் கவலையைப்பற்றி.. அவளுக்கு என்ன தெரியும்..?

'ஒருநாள் பார்த்து விட்டு வந்த க்கே.. ஃபாரின் அக்ரிமெண்டையும், முக்கியமான எங்கேஜ்மெண்டு களையும் மறந்து லேப்டாப்பில் பேய் உருவத்தை பார்த்துக்கிட்டிருக்கான்.. இந்த லட்சணத்தில இவளை இவனுக்கே பெர்சனல் செக்கரட்டரியா அப்பாயிண்ட் பண்ணினா அவ்வளவுதான்.. சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனியை இழுத்து மூடி சீல் வைச்சிர வேண்டியது தான்..

என்ன ஆனாலும் சரி.. யாமினியை கம்பெனிக்குள் நுழைய விடவே கூடாது என்ற தீவிரம் தாமோதரனிட வந்து சேர்ந்தது..

"யெஸ் தாமு.. இவங்க அப்ளிகேசனில கிளியரா மென்சன் பண்ணியிருக்காங்களே.. நீ கவனிக்கலையா..?"

நண்பனிடம் வினவிய சித்தார்த்தன் யாமினியைப் நட்புடன் சிரித்து வைத்தான்..

"ஐ ஆம் சாரி யாமினி.. உங்க ஃபைலை நான் பார்க்கலை.. இவன்தான் பார்த்தான்.." என்று விளக்கம் வேறு சொல்லி வைத்தான்..

'இப்ப இது ரொம்ப முக்கியம்.. அவ உன்கிட்ட வந்து கேட்டாளா..? கம்பெனிக்கு நீ எம்.டியா.. இல்லை அவ எம்.டியா..? இண்டர்வியூ எடுக்கிறது நீயா இல்லை அவளா..?'

தாமோதரனுக்கு தலைவேதனையாக இருந்தது..

"இண்டர்வியூவை ஆரம்பிக்கவே இல்லை எம்.டி. " குரல் கொடுத்தான்..

"இவங்க பிரில்லியண்ட் தாமு.. ஈல்டு மெடலிஸ்ட்.."

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.."

"எதுக்குடா புரியாத பழமொழியை எல்லா சொல்கிற..?"

"தியரிகல் வேறு.. பிராக்டிகல் வேறு.."

"இப்ப என்னதான் சொல்ல வர்ற..?"

"இவங்களுக்கு எக்ஸ்பீரியன்ஸ் இல்லை.. செக்கரட்டரி கோர்ஸ் முடிச்ச செர்டிபிகேட் இல்லை.. அப்புறம்.."

தாமோதரன் லொட்டு இல்லை.. லொசுக்கு இல்லை என்று நூதனமாக எதையெதையோ கண்டு பிடித்து அடுக்கினான்..

"உனக்கு என்னதாண்டா ஆச்சு..?" ஆச்சரியத்துடன் கேட்டான் சித்தார்த்தன்..

கூடவே யாமினியைப் பார்த்து..

"இவன் எப்பவும் இப்படி பேசி வைக்க மாட்டான்.. இன்னைக்கு என்னவோ மூட்-அவுட்டில் இருக்கான்.. என்று வேறு சொல்லி வைத்து தாமோதரனிடம் கடுப்பைக் கிளறி விட்டான்..

"பிரண்ட்ஷிப் வேற.. அ்பிஷியல் வேற.." என்றான் தாமோதரன்..

யாமினியை நிஷ்டூரமாக அவன் பார்த்து வைத்ததில் ார்த்தனுக்கு உடன்பாடில்லை.. யாமினி சங்கடம் ாண்டதை அவளின் முக மாற்றம் அறிவித்தது.

"இன்னைக்குன்னு எதையெதையோ சொல்லிக் கிட்டு வர்ற.. வாட்'ஸ் தி மேட்டர்..?" சித்தார்த்தனுக்கு கோபம் வந்தது..

"நான் உங்களுக்கு பிரண்டுதான் எம்.டி. சார்.. பால்ய காலத்திலிருந்தே.. அதாவது ஃபீடிங் பாட்டிலை மறந் ஸ்கூல் படியை மிதிச்ச காலத்தில இருந்தே நாம பிரண்ட்ஸ்.."

"அதுக் கன்ன இப்ப..?"

"பட்.. கம்பெனியில் நீங்க எம்.டி. நான் உங்க ஜி.எம். அப்படித்தான் நான் இருக்கிறேன்.."

"இல்லைன்னு யார்டா சொன்னது..?"

"இவங்களிடமும் அதையே நீங்க ஃபாலோ பண்ணினா பெட்டரா இருக்கும்ங்கிறது என்னோட ஒப்பினியன்.. எம்.டி சார் இருக்க மாட்டாம மகாபலிபுரக் கடற்கரைக்குப் போயிருக்கலாம்.. அங்கே.. 'ஓ.. ஓ..'ங்கிற தெய்வீக ராகத்தைக் கேட்டிருக்கலாம்.. பாடினது யார்ன்னு தேடிப் போயி மாட்டிக்கிட்டு.. கூடவே அவங்க பயமுறுத்தின அமானுஷ்யக் கதைகளுக்கும் தலையைத் தலையை ஆட்டியிருக்கலாம்.. அதெல்லாம் தனி.. அதையும்.. இந்த இண்டர்வியூவையும் மிக்ஸ் பண்ணக் கூடாது.."

அவன் எங்கே வருகிறான் என்று புரிந்து போனதில் யாமினியின் முகம் சிவந்து விட்டது.. அவள் கோபத்துடன் சித்தார்த்தனைப் பார்த்து படபடத்தாள்.

"எக்ஸ்யூஸ்மி சார்.. நீங்க யாருன்னே எனக்குத் தெரியாது. இந்தக் கம்பெனிக்கு நீங்கதான் எம்.டிங்கற விவரமே இந்த இண்டர்வியூ டயத்திலேதான் எனக்குத் தெரியும்.. மகாபலிபுரத்தில நீங்க இருக்கிற இடமா பாத்து நான் 'ஓ..ஓ.. ன்னு தெய்வீகராகம் பாடி உங்களைக் கூப்பிடலை.. தனியா நின்னு பாட்டுப்பாடிக்கிட்டு இருந்தவளை நீங்கதான் தேடிவந்து டிஸ்டர்ப் பண்ணினீங்க.. நான் ஃபீல் பண்ற அமானுஷ்யத்தைப் பத்தி உங்ககிட்ட ஷேர் பண்ணிக்கிட்டது என்னோட முட்டாள் தனம் சார்.. நீங்க அதை ஊர் முழுவதும் தண்டோரா போடுவீங்களா..?"

நொடிப் பொழுதில் அவள் தாமோதரனை அன்னியனாக்கி அவளுக்கும்.. சித்தார்த்தனுக்குமிடையே புதுவிதமான பந்தத்தை உருவாக்கி விட்டதில்..

"சபாஷ்.. என்றான் தாமோதரன்..

எதற்காக அவன் சபாஷ் போடுகிறான் என்று புரியாமல் யாமினியும், சித்தார்த்தனும் அவனைப் பார்த்தார்கள்..

"உங்களை அப்ரிசியேட் பண்றேன்ம்மா.. நான் நினைத்ததைவிட நீங்க கெட்டிக்காரங்களா இருக்கீங்க.. இவன்கூட எல்.கே.ஜியில இருந்து ஒன்னாப் படிச்ச நான் ஊரான்.. ஒருநாள் சாயங்காலம்.. ஒருமணி நேரம் இவன்கிட்ட கதையளந்த நீங்க.. இவனோட பெஸ்ட் பிரண்ட்.. உங்களை அடிச்சுக்க ஆளே வரமுடியாதுன்னு புரூவ் பண்ணிட்டிங்கம்மா.."

"தாமு.."

"போதும் எம்.டி.சார்.. உங்ககூட நிழல் போ ஃபாலோ பண்ணிக்கிட்டு வந்ததுக்கு... நேத் பழகினவங்கள வைச்சு நல்லாப் பாடம் க கொடுத்துட்டிங்க.."

"நான் கிளம்பறேன் சார்.."

யாமினி புறப்பட எழுந்தாள்.. சித்தார்த்தன் தாமோதரனை மறந்து விட்டு யாமினியை தடுத்து நிறுதத முனைந்தான்..

"இன்னும் இண்டர்வியூவே ஆரம்பிக்கலையே யாமினி.."

"முடிவு என்னவா இருக்கும்ன்னு இப்பவே எனக்குத் தெரிஞ்சு போச்சே சார்.."

"நீங்களா எதையும் நினைச்சுக்கக் கூடாது யாமினி.."

"ஈஸிட்..? அப்படி நீங்களும் நினைக்கறிங்களா..? உங்க மனச்சாட்சியைக் கேளுங்க சார்.. அது சொல்லும்.. வேலைக்கான ஆஃபைட்டைப் பார்த்தேன்... அப்ளை பண்ணினேன்.. இண்டர்வியூக்கு கால் பண்ணி லெட்டர் வந்தது.. அட்டெண்ட் பண்ண வந்தேன்.. மத்தபடி உடனே இங்கே வேலை கிடைச்சிரும்.. ஜாயின் பண்ணிரலாம்ன்னு நினைச்செல்லாம் வரலை.. ஸோ.. எனக்கு எந்தவிதமான ஏமாற்றமும் இல்லை.. நீங்க என்னைக் கவனிக்கிறதை விட்டுட்டு காலம், காலமாய் பழகின உங்க பிரண்டைக் கவனிங்க.. சார் அப்படியே பொஸஸிவிலே துடிச்சுக்கிட்டு இருக்கார்.. பெஸ்ட் பிரண்ட்ஸை பிரிச்சு வைச்ச பாவம் எனக்கெதுக்கு..? இந்த மடம் இல்லேன்னா ச மட பை சார்.."

யாமினி போய் விட்டாள்.. அவள் பரப்பி விட்ட மாய அலைகளின் தாக்கத்திலிருந்து வெளிவந்த தாமோதரன் நிம்மதியாக மூச்சு விட்டான்.. சித்தார்த்தனோ அவனை முறைத்தான்..



# 10

## அமைதியை மொழிவது வீரமல்ல என எவர் உரைத்தது..?

"அன்றைய தினத்தில்தான் யாம் சாளுக்கிய புலிகேசியின் குரூர வதனத்தை முதன் முதலாக கண்டு தொலைத்தோம் இளவரசே..! என்ன ஒரு வதனம்..! குரூரத்தின் ஒட்டு மொத்த உறைவிடமாக அவன் வதனம் இருந்தது இளவரசே.."

"இதையே யாமும் உரைக்கிறோம் தோழனே..! குரூரத்தில் அவனுக்கு நிகர் அவன்தானாம்.. காருண்ய மற்றவனாம்.. இந்த அவனி முழுவதும் அவனது புகழ் இந்த விதத்தில்தான் உரைக்கப்படுகிறது."

"மெய்தான் இளவரசே..! அவன் என்னை சிறைபிடித்தான்.. அத்தருணத்தில் அமைதித்தூதர்.. 'வஜ்ரபாகு.. என்ற நாமத்தில் மாறு வேடமிட்டு நம்மன்னவர் அவன் முன்பு வந்தார்.. அமைதித் தூதிற்கு அவன் இசையவில்லை.. அன்றைய இரவில் மன்னவர் வந்து என்னை தப்புவித்தார்.. அதன் பின்னர் இந்தக் காஞ்சியின் படைத்தளபதியாகும் மாபெரும் பணியையும் எமக்களித்தார்.. தமது நண்பனாகும் பெரும் பேரும் எமக்குக் ட்டியது..."

"எமது தந்தை அச்சமற்றவர் என்பதையும் இந்த அவனி உரைக்குமே.."

பெருமையுடன் உரைத்தாலும்.. நரசிம்மன் சிவகாமியின் நினைவிலேயே இருந்தான்.. கடமை அவன் கால்களை விலங்காகப் பிணைத்திருந்தது.. மற்ற அனைத்திலும் சமதர்மம் போதிக்கும் மன்னர் மகேந்திர வர்மர்.. சிவகாமியுடனான அவனது காதலுக்கு தடை விதிப்பதில் அவனுக்குள் கோபாக்னி எழுந்தது.

சிவகாமியைப் பற்றிய நினைவுகள் எழும் போதெல்லாம் அவற்றைப்பற்றிப் படைத்தலைவனிடம் பகிர்ந்து கொண்டான் நரசிம்மன்.. தோழமையில் அவனது பிரிவாற்றாமை சிறிதளவு குறைந்தது..

என்றும் போல அன்றும்.. காஞ்சியின் கோட்டை சுவர் மாடத்தில் சிவகாமியைப் பற்றிய நினைவுகளை நரசிம்மன் படைத்தலைவனிடம் உரைத்துக் கொண்டிருந்த போது தூரத்தில் புழுதிப்படலம் தெரிந்தது.. பேச்சை நிறுத்திய தோழர்கள் இருவரும் உன்னிப்பாக பார்த்தார்கள்..

"இளவரசே..! புரவியில் வருவது சத்ருக்கனன்தான்." என்றான் படைத்தலைவன்..

சத்ருக்கனன் பல்லவ நாட்டின் ஒற்றர்படைத் தலைவன்.. தலைமை ஒற்றன் என்ற நாமம் பெற்றவன். அவன் புரவியிலிருந்து விரைந்து இறங்கி வந்து இளவரசனுக்கு வணக்கம் சொன்னான்.. பதிலுக்கு சிரத்தை அசைத்த நரசிம்மன்.

"செய்தி யாது சத்ருக்கனா..?" என்று வினவினான்..

"மன்னர் அரசானை அனுப்பியுள்ளார் இளவரசே.."

சத்ருக்கனன் ஓலையை எடுத்து நீட்டினான்.. அதை வாங்கி படித்துப் பார்த்த இளவரனின் வதனம் மாறியது.

ஓலையில் காஞ்சியின் மீது படையெடுக்க யத்தனித்த 'துர்நீதன்' என்னும் சிற்றரசனின் மீது படையெடுக்க மன்னன் மகேந்திரவர்மன் ஆணை பிறப்பித்திருந்தான்..

"போர் புரிய செல்ல வேண்டும்.."

இளவரசனின் வதனத்தில் சிவகாமியிடம் சொல்லிக் ாள்ள முடியாத சோகமும் வெளிப்பட்டது.

நரசிம்மன் போருக்கு போய் விட்டான்.. சிவகாமி தவித்துப் போனாள்.. அன்றைய இரவில் அவன் அவளைத் தொட்டு அணைத்த மரத்தடியில் நின்று விழிநீர் உகுத்தாள்..

'எப்படி என்னை மறந்தான்..? இதுதான் அரசர்குல வழக்கமோ..?'

அவளுக்குத் துன்பமாக இருந்தது.. ஓர்முறையாவது நரசிம்மனின் வதனத்தைப் பார்த்துவிடவேண்டும் என்று அவள் ஏங்கினாள்.. அது கூடாத வரமாக இருந்து வைத்தது.

"நாட்டில் போர்மேகம் சூழ ஆரம்பித்திருக்கிறது.."

ஆயனரின் இல்லத்துக்கு வந்த நாகநந்தி உரைத்தான்.. அவன் வாயிலாகத்தான் ஆயனரும், சிவகாமியும் நாட்டு நடப்பைப் பற்றிய நிலவரத்தை அறிந்து வந்தார்கள்.

"இத்தகைய தருணத்தில் சிவகாமியினால் பல்லவ நாட்டில் நடன நிகழ்ச்சிகளை நடத்த இயலாது.. போர் முடிந்து அமைதி திரும்பும்வரை காத்திருந்தால்.. இந்த நடன அரசியின் கலை என்ன ஆவது..?"

நாகநந்தியின் அச்சுறுத்தலில் ஆயனரும், சிவகாமியும் திகைத்துப் போனார்கள்.

அவளறிந்த நடனக்கலை மறைந் போவதா..?

"யாம் யாது செய்வது சுவாமி..?"

சிவகாமி நாகநந்தியிடமே வழி கேட்டு விட்டாள்.. அதற்காகத்தானே அவன் காத்திருந்தான்..?

சிவகாமியை பல்லவ நாட்டிலிருந்து அகற்றினா லொழிய சிவகாமி அவனுக்கு கிட்ட மாட்டாள் என்பது திண்ணம் என்றான பின்பு கால தாமதம் செய்ய அவன் என்ன அறிவிலியா..?

சிவகாமி பல்லவ நாட்டில் இருந்தால்தானே அவள் மனம் பல்லவ இளவரசனான நரசிம்மனை நாடும்..?

அவ்வாறன்றி அவளை பல்லவநாட்டிலிருந்து வெளியேறச் செய்து விட்டால்.. அவள் மனம் காலப் போக்கில் காதலை மறந்து விடாதா..? அருகேயே வலம் வரும் நாகநந்தியின் மீது மையல் கொள்ளாதா..?

நாகநந்தியின் மனம் கணக்கீடை வகுத்தது.. அதன்படி அவனும் உரையாற்ற ஆரம்பித்தான்.

"ஆயனரே..! சோழ, பாண்டிய நாடுகளில் அமைதி நிலவுகிறது.. அந்நாடுகளில் யாமறிந்த பலர்

இருக்கின்றனர்.. அவர்களின் மூலமாக சிவகாமியின் நடன நிகழ்ச்சிகளுக்கு யாம் வடிவமைத்துத் தருகிறோம்.. எம்மை நம்பி உடன் வாருங்கள்.. சிவகாமியின் நடனக்கலை நசிந்து போகாமல் திக்கெட்டும் பரவ யாம் துணையாய் நிற்போம்."

நாகநந்தியின் வார்த்தைகளில் ஆயனர் மகளை நோக்கினார்..

'யாது செய்யலாம் மகளே..?' அவர் விழிகள் வினவின..

சிவகாமி தவித்தா ம்மனின் வதனம் பார்த்து.. அவனது அனுமதியைக் ா ல் பல்லவ நாட்டின் எல்லையைத் தாண்டுவதா..?

"சிந்தித்துப் பதிலளிக்க சிறிதளவு கால அவகாசம் தேவை தந்தையே.."

கலக்கத்துடன் அவள் மொழிந்ததில் நாகநந்தி வதனம் கருத்தான்.

'எதற்காக இந்த கால அவகாசம்..?' அவனது அகம் உறுமியது..

'அந்தப் பல்லவனின் நினைவுச் சுவடுகள் நிறைந் கிடக்கும் இந்த நாட்டின் எல்லையைத் தாண்டுவதற்கா கா அவகாசம் கேட்கிறாய்..?'

ஆயினும் அவன் சினத்தை வெளிப்படுத்திக் கொள்ள முடியாதே.. நயவஞ்சக நாகநந்தி அமைதி காத்தான்.. ஆயனரை கரைப்பாய் கரைத்ததான்..

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்..

ஆயனர் கல்லல்ல.. கல்லில் சிலை வடிக்கும் சிற்பி..! உணர்வு மயமானவர்.. கலைகளின் உறைவிடம்.. மகளின் நடனக்கலையை மேலோங்கச் செய்ய அவர் நாகநந்தியுடன் ஏம்பிச் செல்ல முடிவு செய்து விட்டார்.

"எமக்கென்னவோ... அகத்தில் தடுமாற்றம் ஏற்படுகிறது தந்தையே.. இன்னும் ஒரிரு தினங்கள் பொறுத்துக் கிளம்பலாமே.."

சிவகாமி அப்போதும் தேங்கி நின்றாள்.. ஆயனரின் வற்புறுத்தலின் பொருட்டு அரைமனதுடன் கிளம்பிப் போனாள்..

பல்லவ நாட்டின் எல்லையைக் கடக்கும் போது மழை குறுக்கிட்டது. நாட்டை விட்டு அகலாதே என்று மழை தடுப்பதைப் போல உணர்ந்தாள் சிவகாமி.. அவளது கண்கள் குளமாகின..

"மழை வலுக்கிறது துறவியாரே..!"

ஆயனர் மகளைக் கவலையுடன் நோக்கினார்.. சிவகாமி நனைந்து விடக்கூடாது என்ற தந்தையின் பதட்ட அவரிடம் தென்பட்டது.

"கவலை வேண்டாம் ஆயனரே..! அதோ.. சற்றுத் தொலைவில் புத்த விஹாரம் தென்படுகிறது.. கண்டீர்களா..? அங்கே சென்று இன்றைய பொழுதைக் கழிப்போம்.. மழை குறைந்ததும் பயணத்தைத் தொடரலாம்.."

ஆறுதலாக மொழிந்தான் நாகநந்தி.. அவனுக்கு மட்டும் சிவகாமி மழையில் நனைவது உசிதமாயிருக்குமா..?

புத்தவிஹாரத்தில் தங்கிய ஆயனரும்.. சிவகாமியும் பாதுகாப்பாய் இருப்பதைப் போல உணரவில்லை.. அவர்களின் அகத்தில் பயமென்னும் ராட்சசன் ஒளிந்திருந்தான்..

'ஏதோ நிகழப் போகிறது..

சிவகாமி கலவரத்துடன் துயில் கொள்ளாமல் விழித்திருந்தாள்.. ஆயனர் இமைமூடி துயில் கொள்ள ஆரம்பித்தார்.. நாகநந்தி அவர்களுக்காக உணவு சேகரிக்க சென்றிருந்தான்..

'ப்ளக்.. ப்ளக்..

மழைநீர் கொட்டும் சப்தத்தை சிவகாமிதான் செவி மடுத்தாள்.. பீதியுடன் சுற்று முற்றும் பார்த்தாள்.. புத்த விஹாரத்திற்குள் வெள்ளம் புகுந்து கொண்டிருந்த

"தந்தையே.."

அலறலுடன் ஆயனரை எழுப்பி விட்டாள்.. அவர்கள் வெளியேற முனைந்தார்கள்.. வெளியே பார்த்த போ எங்கும் வெள்ளக் காடாக இருந்தது.. சிவகாமி அஞ்சி நடுங்கினாள்..

"எவ்விதம் தப்பிப்போம் தந்தையே..?"

வழியேதும் புலப்படாமல் அவர்கள் மருண்டு நின்ற போது வெள்ளம் அவர்களைச் சூழ்ந்து கொண்டது.. சிவகாமியும்.. ஆயனரும் வெள்ளத்தில் மாட்டிக் கொண்டார்கள்.. மெல்ல.. மெல்ல நீர் மட்டம் உயர்ந் அவர்களை மூழ்கடித்த போது.. சிவகாமியின் மனம் கடல்மல்லைக்குப் போனது..

## ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



# 10

## பூப்பறிக்கத்தானே வந்தாய்..? என்மனதை ஏன் பறித்தாய்..?

"இப்ப உனக்குத் திருப்திதானேடா..?"

சித்தார்த்தனின் கோபத்தில்.. 'ஆமாம், அப்படித்தான்' என்ற உண்மையை உரக்கச் சொல்லவிருந்த தாமோதரன் வாய் மூடிக் கொண்டான்.. எதற்கு வம்பு..? அவனுக்குத்தான் நினைத்தது நடந்து விட்டதே.. அதை வெளியில் சொல்லி சித்தார்த்தனின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ள வேண்டுமா..?

"பரதேசி..!"

சித்தார்த்தன் யாரை இவ்வளவு அன்புடன் அழைக்கிறான் என்று தாமோதரன் கிஞ்சித்தும் சந்தேகிக்கவில்லை..

சாட்சாத் அவனைத்தான் சித்தார்த்தன் அன்போடு அழைத்து வைப்பான் என்று அவனுக்குத் தெரியாதா என்ன..?

"ஏண்டா அவளை விரட்டி விட்ட.?"

"பாரு சித்தார்த்.. அபாண்டமா என்மேல பழிபோடக் கூடாது. இண்டர்வியூவே ஆரம்பிக்கலைங்கறேன்.. அவ

என்னடான்னா இந்த மடம் இல்லைன்னா சந்தமடம்ன்னு விட்டு விளாசிட்டுப் போறா.. இதுக்கு நானாடா பொறுப்பு.."

"அவளை நீ சொல்ல வைச்சே..?"

"எப்படி..? அவளுக்கு 'அ'னா, 'ஆ'வன்னா சொல்லிக் கொடுத்துச் சொல்ல வைச்சேனா..? போடா டேய்.."

"நீ பண்ற பம்மாத்து வேலையைப் பத்தி எனக்குத் தெரியாதுன்னு நினைக்காதே.."

சித்தார்த்தனின் கோபத்தில் இமைக்காமல் அவனையே பார்த்தான் தாமோதரன்..

"அப்படி என்ன பம்மாத்து வேலையைப் பண்ணிட்டேன்டா..?" நிதானமாகக் கேட்டான்..

"தாமு...

"செக்கில் சைன் பண்ற பவரை நீ எனக்குக் கொடுத்திருக்க.. அதை மிஸ் யூஸ் பண்ணி கோடிக் கணக்கில் உன் பணத்தைச் சுட்டுட்டேனா..?"

"சேச்சே.."

"கம்பெனியோட எல்லாச் சீக்ரெட்ஸும் உனக்கடுத்து எனக்கு மட்டும்தான் தெரியும்.. அதை எதிரிக் கம்பெனிக் காரன்கிட்டக் கொடுத்து காசு பார்த்திட்டேனா..?"

"அடிதாண்டா வா ப் போற.. நான் அப்படிச் சொன்னேனா..?"

"நீ எப்படிச் சொன்னேன்னு எனக்கெப்புடிடா தெரியும்..? காத்திருந்தவனோட பிரண்டை நேத்துப் பார்த்தவ தள்ளிக்கிட்டுப்போகப் பார்க்கிற கதையாயில்ல உன் கதை இருக்கு.."

"அவ என்னை தள்ளிக்கிட்டுப் போனாலும்.."

சித்தார்த்தன் ரசித்துச் சிரித்தான்.. தாமோ ரன் சிரிக்கவில்லை.. இது சிரிக்கக்கூடிய விசயமல்ல.. தாமோதரன் அதை நன்கு அறிவான்.. அதனால்..

"அடுத்த கேண்டிடேட்டை வரச் சொல்லலா என்று பேச்சை மாற்றி விட்டான்..

அடுத்து வந்தவர்களிடம் சித்தார்த்தன் எந்தவொரு கேள்வியையும் கேட்கவில்லை.. தாமோதரன்தான் ஃபைல்களை உணக்கையாகப் படித்துவிட்டு.. மாய்ந்து, மாய்ந்து கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தான்.. சித்தார்த்தனோ டேபிள் வெயிட்டை உருட்டியபடி யார் கம்பெனியின் இண்டர்வியூவோ என்பதைப் போல ஒட்டுறவுமில்லாமல் உட்கார்ந்திருந்தான்..

'இவனை என்ன செய்தால் தேவலாம்..

தாமோதரன் பல்லைக் கடித்தாலும்.. அவனை எதுவும் செய்ய முடியாது என்பதினால் அந்த எண்ணத்தை விட்டு விட்டான்..

"ஃபைனலா இவங்க ரெண்டுபேரில ஒருத்தரை சூஸ் பண்ணலாம்..

தாமோதரன் நீட்டிய பேப்பரை சித்தார்த்தன் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை.. அதற்கும் அவனுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்ற தினுசில் அதை வெறிக்க வெறிக்கப் பார்த்து வட்டு..

"என்ன கழுதைக்கு இதை என்கிட்ட நீட்ட என்றான்..

'என்னடா வேலை இது..? ச்சை.. மனுசன் இவன் கிட்ட ஜி.எம்மா மாட்டிக்கிட்டு முழிப்பானா..?' தாமோதர வெறுத்துப் போய்விட்டான்..

"கழுதையை லாயத்தில் கட்டிட்டு ஆகிற வேலையைப் பாரு சித்தார்த்.. இது விளையாட்டுத்தன மில்லை..

"என்னை பிளே பாய்ன்னு சொல்றீயா..?"

"ஏழு கழுதைவயசாகுது... உன்னைப் போ 'பாய்'ன்னு யாராவது சொல்லுவாங்களா..?"

"இப்ப நீதான் கழுதையை லாயத்தில் கட்டா கையில பிடிச்சுக்கிட்டு அலையற.."

"உனக்குப் பிரண்டாகித் தொலைச்சுட்டேனில்ல..? க்க தோசம்.. கழுதையை விட மாட்டேங்குது.."

"இந்தப் பேப்பரைத் தூக்கிப் போடு.."

சித்தார்த்தன் சுவாதீனமாய் சொல்லி வைக்க..

"என்னது..?... என்று தாமோதரனுக்கு கோபம் வந்துவிட்டது.

இதற்காகவா.. நாள் முழுவதும் தொண்டை தண்ணீர் காயும்வரை கேள்வி கேட்டு ஓய்ந்தான்..?

"பி சீரியஸ் சித்தார்த்.. நடந்து முடிந்திருக்கிறது உனது பெர்னல் செகரட்டரிக்கான இண்டர்வியூ.."

"அதை நீ எனக்குச் சொல்றியா..?"

"நேரம்டா.. காலையில இருந்தே நான்தான் உனக்குச் சொல்லிக்கிட்டு இருக்கேன்.. நீ யாருக்கு

ந்த விருந்தோன்னு பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருக்க.. ன்னோட பெர்சனல் செக்கரட்டரிங்கிறது இம்பார்டண்ட் ாஸ்டுடா.."

"இல்லேன்னு யார் சான்னது..?"

"அதையும் சொல்லிருவியா..? டேய்.. மத்த லைகளைப் பிரிச்சு தர்றதைப் போல இந்த வேலையைப் பிரிச்சுத் தரமுடியா டா.. பார்த்தியில்ல.. சும்மா இந்த பைல்களை ரெடி பண்ணிக் கொடுக்கிறதுக்கே வயலெட் ந்த அளவுக்கு அலுத்துக்கிட்டான்னு.."

"நீ ஸ்ட்ரிக்ட்டா வார்ன் பண்ணியிருக்கனும்.."

"என்னன்னு..?"

"ஆர்டர் போட்டா ஓபே பண்ணித்தான் ஆகனும்ன்னு.."

"அவ ஓபே பண்ண மாட் டன்னா சொன்னா..? ான்ன வேலையை செய்துட்டா.. பட் சித்தார்த்.. இந்த பைல்களை ரிசப்சனில் வைச்சுப் பார்த்துக்கிட்டு இருக்கா.."

"ஸ்டுப்பிட்.. ான்பிடென்ஸ் ஃபைல்களை ரிசப்சனில் வைச்சுப் பார்க்கக் கூடாதுன்னு அவளுக்குத் தெரியாதா..?"

"அவ பார்க்கிறது ரிசப்சனிஸ்ட் போஸ்ட்.. அது உனக்குத் தெரியாதா..? அடிசனல் வொர்க் கொடுத்தா அவ சீட்டில வைச்சுத்தானே அவளாலே பார்க்க முடியும்..?"

"ஐ.. ஸீ.."

"உனக்குப் புண்ணியமாப் போகும் சித்தார்த்.. இந்தப் போஸ்டுக்கு இம்மீடியட்டா ஆளைப் போடு.. உன்னோட எல்லா புரோக்ராமையும் டீல் பண்ண வேண்டியது உன் செக்கரட்டரிதான்.. டூ யு நோ இட்..?"

"சரி.. சரி.. அதுக்கு எதுக்காக இந்தப் பேப்பரை நீட்டற..?"

"இவங்கதான் எலிஜிபிள் கேண்டிடேட்ஸ்.."

தாமோதரன் தீர்க்கமாக சொன்னான்.. சித்தார்த்தன் அது பற்றி அலட்டிக் கொள்ளாமல் செல்போனை கையில் எடுத்தான்.. தாமோதரன் முறைப்பில்..

"ஆல்ரெடி.. நான் ஆளை செலக்ட் பண்ணியாச்சு.." என்றான்..

"நினைச்சேன்.." பல்லைக் கடித்தான் தாமோ ரன்..

"யாரு..? அந்த மகாபுலிபுர அமானுஷ்யமா..?"

"அவ பெயர் யாமினி.. மறந்துட்டுப் பேசக் கூடாது.."

"மறக்கலைப்பா.. மறக்கலை.. மறக்கக்கூடிய பேரா அது..?"

"ஏண்டா..? அந்தப் பேருக்கு என்ன..? தாமோ ரன்ங்கற பேரைவிட அந்தப்பேர் எந்த விதத்தில் குறைஞ்சு போச்சு..?"

சித்தார்த்தனின் கேள்வியில் தாமோதரனுக்கு 'சுளீர்' என்று மனதில் வலித்தது.. ஆண்டாண்டு காலமா அவனுக்கும், சித்தார்த்தனுக்கும் இடையில் வந்து நிற்கும்

அந்த மாய மோகினியை மனமார அவன் வெறுத்தான்.. இதுபோல தாமோதரனைக் குறைத்து.. மற்றொருவரை உயர்த்திப் பேசுபவனல்ல சித்தார்த்தன்.. அவனுக்கும், தாமோதரனுக்கும் இடையில் இருக்கும் நட்பின் ஆழம் அத்தகையது.. தாமோதரனே தனது பெயரைத் தாழ்த்தி.. வேறொரு அழகான பெண்ணின் அழகான பெயரை உயர்த்திச் சொல்லியிருந்தாலும்.. அப்படியெல்லாம் இல்லவே இல்லை என்று அடித்துப் பேசக்கூடிய உயிர் நண்பன் அவன்.. அப்பேற்பட்டவனை ஒரு மாலைப் பொழுதின் மயக்கத்தில் மாற்றியமைத்து அனுப்பி விட்டாள் என்றால் அந்த யாமினியின் மாய சக்தியை குறைத்து மதிப்பிட முடியுமா..?

"அவள் வேண்டாம் உறுதியுடன் சொன்னான் தாமோதரன்..

"ஏன்..? அதுக்கான ஒரு கான்ங்ரீட் காரணத்தைச் சொல்லு.. நான் கேட்டுக்கறேன்.. உனக்குப் பிடிக்கலைங் கிறதுக்காக அவ திறமையை குறைச்சு மதிப்பிடக் கூடாது.. அதோட.. எனக்குப் பெர்சனல் செக்கரட்டரியா வரப் போகிறவளை நான்தான் செலக்ட் பண்ணனும்.."

என்னவோ வருங்கால மனைவியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பற்றிப் பேசுகிறவனைப் போல.. சித்தார்த்தன் உரிமைக்குரல் எழுப்பியதில் தாமோதரனுக்கு கோபமான கோபம் வந்தது..

"என் பக்கத்திலேயே இருக்கப் போகிறா.." சித்தார்த்தன் தொடர்ந்து சொன்னதில்..

'அதுக்காகத்தானேடா அவ வேண்டாம்ன்னு அடிச்சுக்கறேன்..' என்று நினைத்துக் கொண்டான் தாமோதரன்..

ஒருமாலைப் பொழுதின் மயக்கமான சந்திப்பிலேயே அவள் சித்தார்த்தனை மாற்றி அனுப்பி வைத்திருக்கிறாள் எனும் போது.. ஒரு நாளின் எட்டு மணி நேரத்தை சித்தார்த்தனின் கண்பார்வையில் அவள் செலவிட்டால்.. சித்தார்த்தன் என்ன கதியாவானோ என்ற பயம் பிடித்துக் கொண்டது தாமோதரனுக்கு.

'என்ன ஆனாலும் சரி.. அந்த யாமினியை இவன் பக்கத்தில் சேர்க்க விடக் கூடாது..'

தாமோதரன் என்னவோ சங்கல்பம் தான் செய் பார்த்தான்.. ஆனால் அதை நிறைவேற்றுவது என்ப ஒன்றும் அத்தனை எளிதான காரியமாக அவனுக்கு இருந் விடவில்லை..




*கரையுடைத்த வெள்ளத்தில்*
*கரைசேர்க்க வந்தவனே..!*
*காலமென்னும் வெள்ளத்திலும் கரை*
*சேர்க்க வருவாயா..*

'இளவரசே..!'

சிவகாமியின் மனம் டித் ஏங்கியது.

'தங்களின் திருமுகத்தைப் பார்ப்பதற்கு உயிர்தரித்து வருவேனா..?'

அவள் விழி சுரந்த கண்ணீர் வெள்ளம்.. ஆற்று வெள்ளத்தில் சேர்ந்து கலந்தது.. ஆயனரும் அவளும் மீள முடியாத நீர்ச் சுழலில் மாட்டிக் கொண்டு தத்தளித்த போதுதான் அது நிகழ்ந்தது..

"சிவகாமி.."

புலன்கள் சோர்ந்த நிலையில் ஆழ்மயக்கத்திற்கு பயணித்துக் கொண்டிருந்த சிவகாமியின் செவிகளில் அந்த அழைப்பு விழுந்ததும்.. அவள் பரபரப்புடன் அக்குரல் வந்த திக்கில் நோக்கினாள்.

நரசிம்மன் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்..

'என்ன இது..?' இமை கொட்டி விழித்தாள் சிவகாமி.

'யாம் காண்பது கனவா..? இல்லை நனவா..?'

"கனவல்ல சிவகாமி.."

வெள்ளப் பெருக்கிலிருந்து ஆயனரையும் அவருடைய புதல்வியையும் சேதாரமின்றி மீட்டுக் கரை சேர்த்த நரசிம்மபல்லவன் திருவாய்மொழியை உதிர்த்தான்.

"தம் முன் நிற்பது யாமே.. இதில் யாதொரு சந்தேகமும் தமக்கு வேண்டாம் சிற்பகுமாரி.."

ஆதுரம் மேலிட்டால் அவன் அவளை அவ்விதமாய் அழைப்பதை வழக்கமாய் வைத்திருந்தான்.. அத்தருணங்களி லெல்லாம் சிவகாமியின் அகம் சிணுங்கும்..

'யாம் என்ன சிற்பக்கலை பயின்றவளா..?'

"அல்ல.." என்றான் அரசிளங்குமரன்..

"தமது மேனியின் எழில் அழகுமிகு சிற்பங்களைப் போன்ற வடிவமைப்புடன் உள்ளது பெண்ணே.. அத்துடன்.. சிற்பக் கலைஞரின் புதல்வியை சிற்பக்குமாரி என்று அழைப்பது பொருந்துமல்லவா..?"

அன்றைய தருணத்தில் அவன் மொழிந்ததை.. நினைவு கூர்ந்தவளின் நெஞ்சகம் தித்தித்தது.. அதை அவளின் வதனம் மொழிந்து விட்டதில் நரசிம்மவர்மனின் விழிகளில் மின்னல் வந்து போனது.

அவனுக்கும்.. அவளுக்குமான பிரத்யேக பாஷையை அவர்களின் நயனங்கள் பேசிக் கொண்டன..

'எத்துனை தினங்களாயிற்று.. இதுபோன்ற நயன பாஷையை இளவரசருடன் பேசி..'

சிவகாமி நெடு மூச்செரிந்தாள்.. நரசிம்மவர்மன் நொடிக்கொரு முறை அவளை பார்த்தபடியே பயணித்தான்.. வழியில் இளைப்பாறிய போது அவர்கள் வெள்ளத்தில் மாட்டிக் கொண்ட விவரத்தை ஆயனரிடம் விசாரித்தான்..

சிவகாமி அஞ்சினாள்.. சமணத்துறவியின் சொல்லை செவிமடுத்து பல்லவ நாட்டை நீங்கத் துணிந்தீர்களா என இளவரசன் கேட்டு வைத்தால் அவள் யாது செய்வா ..? யாதென்று அவள் நிலையை அவனிடம் உரைப்பாள்..?

"நாகநந்தி மொழிந்தபடி பாண்டிய, சோழ நாடுகளில் நடன நிகழ்ச்சிகளை நடத்த ஆசை கொண்டு.. ஆர்வ மேலிட்டால் புறப்பட்டு விட்டோம் இளவரசே..!"

ஆயனர் உரைத்ததைக் கேட்டதும் சிவகா அஞ்சியதைப் போலவே நரசிம்மவர்மனின் வதனம்

இறுகியது.. இளைப்பாறியவர்கள் கிளம்ப மனமில்லாமல் மரத்தடியில் படுத்து கண்துயில ஆரம்பித்தனர்.. அருகாமையிலிருந்த மண்டபத்தில் தனிமையை நாடிச்சென்று அமர்ந்தாள் சிவகாமி.. அவள் அகம் அலைகடலென ஆடியது..

'எம்மீது சினம் கொண்டிருப்பானோ..

அத்துனை தினங்களாக காண முடியாமல் தவித்த காதலனின் வதனம் கண்டும்.. அவனுடன் காதலுரை பேச முடியாமல் அவனது சினத்திற்கு ஆளாகி விட்ட தனது துர்பாக்கிய நிலையை நினைத்துக் கண்ணீர் வடித்தாள் சிவகாமி..

எத்தனை பொழுதுக்கு அசையாமல் அவள் அமர்ந்திருந்தாளோ அவளே அறியாள்..

"ஆக.. தமக்கு.. எமது நினைவைவிட தமது நடன ஆற்றலை உலகறியச் செய்வதுதான் அதி முக்கியமென தோன்றிவிட்டது அல்லவா..?"

நரசிம்மனின் கடுமையான குரலை செவி மடுத்ததும் பதட்டத்துடன் திரும்பினாள் சிவகாமி. அவள் அமர்ந்திருந்த மண்டபத்தின் அருகே மேடையைப் பற்றியபடி அவன் நின்றிருந்தான்.. சிவகாமி துடித்துப் போனாள்..

"கொடிதான மொழிகளை உரைக்க வேண்டா இளவரசே..! மண்டகப்பட்டின் மல்லைக் கடற்கரையைக் வினவிப் பாருங்கள்.. தமக்காக யாம் காத்திருந்து கண்ணீர் விட்ட பொழுதுகளை அது கதை கதையாக தம்மிட

உரைக்கும்.. நாம் நடனப் போட்டி நடத்திய குன்றிடம் வினவிப்பாருங்கள்.. தங்களை எதிர்பார்த்த தனிமையில் எமது பாதச் சதங்கை கதறி அழுத கதையை உரைக்கும்.."

சிவகாமியின் துயரத்தில் நரசிம்ம பல்லவனின் வேகம் சிறிதளவு தணிந்தது.. இருப்பினும் முழுதாக தணியாத சினத்தோடு அவன் சிவகாமியை சினந் முறைத்தான்..

"தங்களை எதிர்பார்த்துக் காத்துக்காத்து ஓய்ந்த பொழுதில்தான் இந்த சமணத்துறவி இத்தகைய ஆலோசனையை தந்தையிடம் உரைத்தார்.. தந்தையும் அதற்கு செவிமடுத்தார்.."

"யாரிந்த துறவி..? அவனைப் பற்றி யா ˙ கள்விப் பட்ட எதுவுமே உகந்ததாக இல்லையே.."

"அவரை எமது தந்தைக்கு அறிமுகம் செய்வித்ததே தங்களின் நண்பர்தானே இளவரசே..!"

ார்..? எமது படைத்தலைவனையா குறிப்பிடு "

"ஆம் மன்னவா..! அவரே இத்துறவியை எமது இல்லத்திற்கு அழைத்து வந்தார்.. எம்மையும், தந்தையையும் யானையின் பிடியிலிருந்து காப்பாற்றிய மனிதரல்லவா தங்களின் தோழர்..? அதன் பொருட்டு அவர் அழைத்து வந்த துறவிக்கு அமுது படைத்து தோழமை பூண்டு பேசிப் பழகினோம்.. அவரோ துறவி..! அவருடன் பேசிப் பழகுவதில் யாதொரு தவறும் நேர வாய்ப்பில்லையே இளவரசே..!"

சிவகாமியின் வார்த்தைகளில் மெய் இருந்தாலும் நரசிம்மனின் மனம் எதனாலோ சஞ்சலம் கொண்டது.. அந்த மணத் துறவியின் நயவஞ்சகம் சொட்டும் விழிகளில் சூது கலந்திருப்பதை அவனது சூட்சும புத்திகண்டு உணர்ந்து விட்டது. அதை எவ்விதம் சிவகாமியிடம் உரைப்பது என்ற மார்க்கம் அறியாமல் அவன் திகைத்தான்.

ஏதோ ஒருவகையில் அந்தத்துறவியினால் சிவகாமிக்கும் நரசிம்மனுக்கும் இடையில் உருவாகி யிருக்கும் காதல் சிதிலமடையக் கூடும் என்று நரசிம்மன் சங்கடம் கொண்டான்..

"மற்றவர்க்கு பங்கம் விளைவிக்காத மகா மனிதரல்லவா அந்தத்துறவி..!" சிவகாமி மேலும் உரைத்தாள்..

துறவியைப்பற்றிய பேச்சு வார்த்தை வளர்ந் தோங்குவதை நரசிம்மன் விரும்பவில்லை..

"தாம் உரைக்கும் காரணம் யாதாக இருப்பினும்.. யாம் நாட்டில் இல்லாத வேளையில்.. அன்னியரை நம்பி தாமும் தமது தந்தையும் புறப்பட்டது உசிதமான செயலல்ல சிற்பக்குமாரி.."

நரசிம்மனின் குரலில் உணர்ந்த இறுக்கத்தில் இதழ் கடித்து சிரம் கவிழ்ந்தாள் சிவகாமி..

"யாம் அரசிளங்குமரன்..! மறந்து விட்டால் நினைவு படுத்திக் கொள்வது உகந்தது.." நரசிம்மன் கடுமையுடன் சாடினான்..

"அல்லவென்று எவர் இயம்பியது மன்னவரே..? தாம் யார் என்பதை அறியாமல்தான் இந்தப் பேதை மனம்

பித்தானது. அரசாளும் பரம்பரையில் வந்தவர்களின் அகத்தில் காதலுக்கென்று யாதொரு இருப்பிடமும் இருக்காது என்பதை யாமும் அறிவோம் அரசே..! மன்னவரைக் காதலிக்காமல் ஒரு சாமானியரை யாம் காதலித்திருந்தால்.. இத்துணை காலத்தில் எமக்கு திருமணம் என்ற மங்கலச் சடங்கு நிகழ்ந்திருக்கக் கூடும். அவ்வாறு நிகழாமல் போனதற்கு யார் பிணை..? மன்னவனின் மீது மனதை செழுத்தி விட்ட யாமே பிணை என்பதை அறிவேன் அரசே..!"

சிவகாமியின் விழிகளிலிருந்து கண்ணீர்துளிகள் உதிர்த்தன.. அவை மண்டபத்தின் கற்தரையில் சிதறி விழுந்தன.. நரசிம்மன் இரக்கம் கொண்டான்.. மெல்ல அவளை அணுகி அவளின் விழி நீரைத் துடைக்க முற்பட்டான்..

"வேண்டாம் இளவரசே.." அவன் கரங்களைத் தட் விட்டாள் சிவகாமி..

"காதலுக்கு உயர்வு தாழ்வு தெரியுமா..? அது மன்னவர் என்பதால் மண்ணோடு மண்ணாக மறைந்து விடுமா..? தம்மீது அகத்தை வைத்த எமது காதலில் யா பிச்சியாகி தனித்துப் புலம்பும் நிலையை தாம் அறிவீரா..? ஒருமுறை தங்களின் திருமுகத்தைக் கண்டு விட வேண்டுமென காஞ்சியை நோக்கி வரவும் நான் துணிந்தேன்.. எமது நேரம்.. புலிகேசி யுத்தம் புரிய வந்து விட்டான்.."

"அறிவாய் அல்லவா..? யுத்த மேகங்கள் நாட்டைச் சூழந்திருக்கும் போது காஞ்சியின் காவலனான யாம் எப்படி நகரை நீங்கி தம்மைச் சந்திக்க வருவது..?"

"அப்படியானால்.. எமது காதலின் நிலைதான் என்ன..?"

சிவகாமி விம்மினாள்.. நரசிம்மன் திரும்பிப் பார்த்தான்.. இளைப்பாறியவர்களிடமிருந்து வெகு தொலைவில் தள்ளி அமைந்திருந்தது அந்த மண்டபம்.. ஆளரவமற்ற தனிமையை நாடி வெகு தொலைவிற்கு விலகி வந்திருந்தாள் சிவகாமி..

அந்தத் தனிமை கொடுத்த உற்சாகத் டன் சிவகாமியை நெருங்கித் தழுவினான் நரசிம்மன்.. சிவகாமியின் தேகம் சிலிர்த்தது.. நீண்ட தினங்களாக அவனது ஸ்பரிசத்தை நீங்கியிருந்தவளின் இதயம் துடித்தது.

"மன்னவா.."

அவன் மார்பில் சாய்ந்தாள் அவள்.. காதலியின் மேனியை நரசிம்மனின் வலிமை மிகுந்த கரங்கள் சுற்றி வளைத்தன.. யாரும் பார்க்காத தனிமையில் பிரிந்திருந்த காதலர்கள் ஆரத்தழுவி சல்லாபித்தார்கள்..

சிவகாமியின் கன்னம் தொட்டு.. கண்ணீர் துடைத் தேறுதல் மொழிகளை உரைத்தான் நரசிம்மன்.

"காலம் இவ்வாறே கடந்து விடாது சிவகாமி.. நம் காதலுக்கும் ஓர் காலம் வரும்.. காத்திரு கண்மணி.. இந்த நரசிம்மன் உனக்கானவன்.. உமது வதனத்தை இதயத்தில் பதித்திருப்பவன்.. தமைவிட்டு எமது உடல் பிரிந்து யுத்த களம் போகலாம்.. உயிரில் எத்தருணமும் உமது முகமே நிறைந்திருக்கும் சிவகாமி.."

"என்னவரே..!"

காலம் வகுத்திருக்கும் கணக் ட்டை அறியாமல் அந்தக் காதலர்கள் களித்திருந்தார்கள். அந்த தினம் மட்டுமே அவர்களுக்கான தினம் என்பதை அறிந்திருந்த காலம் மனம் கனக்க நகர்ந்தது..

## *ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



# 11

**உன் காதலைத் தடுக்க எண்ணவில்லை..**
**மாயச்சூழலை தடுக்கவே எண்ணினேன்..**

எக்கேடோ கெட்டுப் போடா.. எனக்கென்ன போச்சு என்று ஓர் நொடியில் சித்தார்த்தனை அவன் போக்கில் செயல்பட விட்டு விட்டு ஜெனரல் மேனேஜர் வேலையை மட்டும் பார்த்துக் கொண்டுப் போய்விட தாமோதரனுக்குத் தெரியாமல் இல்லை..

சற்றுமுன் வந்த 'மாய மோகினி யாமினி' சொன்னதைப் போல.. 'இந்த மடம் இல்லைன்னா சந்த மடம்..' என்று அவனும் எளிதாகச் சொல்லிவிட்டுப் போய் கொண்டே இருக்கலாம்தான்..

அவனுடைய வெளிநாட்டு எம். .ஏ படிப்புக்கும்.. திறமைக்கும்.. சித்தார்த் குரூப் ஆஃப் கம்பெனியில் ஜி.எம்மாக குப்பை கொட்டியவன் என்ற கூடுதல் தகுதிக்கும்.. பெரிய பெரிய கம்பெனிகள் எல்லாம்

தாமோதரனைக் வலிந்துக் கூப்பிட்டு வேலை போட்டுக் கொடுப்பார்கள்தான்..

ஏற்கனெவே அதற்கான முயற்சிகளை சித்தார்த்தனின் போட்டிக் கம்பெனியின் எம்.டியான அகர்வால் பலமுறை செய்து விட்டான்.. அவன் சார்பாக அவனது ஜி.எம்மான முகேஷும் பெர்சனல் மேனேஜரான பரத்தும் பலமுறை தாமோதரனைச் சந்தித்து பேரம் பேச முயன்றிருக்கிறார்கள்..

"இந்த விலை பேசற வேலையையெல்லாம் வேற எங்காவது போய் வைச்சுக்க.. உன் பணத்துக்கும், பகட்டுக்கும்.. நீ தூக்கிப் போடற எழும்புக்கும் வாலாட்டுகிற கூட்டம் நீ சொன்னபடி ஆடும்.. நான் ஆட மாட்டேன்.. எல்லாத்துக்கும் ஒருவிலை இருக்குன்னு நீ நினைக்கிற.. இறுதித் தீர்ப்பு கடவுளின் கையிலதான் இருக்குன்னு நான் நினைக்கிறேன்.. ஸோ.. இந்த ஆடுபுலி ஆட்டத்தை உனக்குக் காவடி தூக்கற ஆளுககிட்ட மட்டும் வைச்சுக்க.. என் பாதையில் கிராஸ் பண்ணாதே.."

தாமோதரன் பலமாக எச்சரித்தபோது தோள்களைக் குலுக்கிவிட்டுப் போய் விட்டார்கள்..

'தட்டி விட்டுப் போகிற ஜென்மங்கள்..

தாமோதரனுக்குத்தான் தலையை வலித்தது.. இதையெல்லாம் சித்தார்த்தனின் காதுகளில் அவன் போட்டதே இல்லை.. அவனால் சித்தார்த்தனை விட்டுக் கொடுக்க முடியாது.. அவர்களுக்குள் நிலவிய நட்பு அப்படிப்பட்டது.

சித்தார்த்தன் அகர்வாலைப் பற்றிப் பேசினாலே டென்சன் ஆவான்..

"ஏண்டா அவனுக்கா தோண வேணா மத்தவங்களுக்குத் தோணினதைத்தான் தூண்டித் துருவி அவன் கம்பெனியின் புரடக்டாக்கிப் பணம் பார்ப்பானா..? கொஞ்சமாவது இது மத்தவங்களோட புத்தியில உதிச்சதுன்னு மனச்சாட்சி உறுத்தாதா..?"

"அவன் என்ன வைச்சுக்கிட்டா வஞ்சனை பண்றான்..? மனசுன்னு இருந்தாத்தானே மனச்சாட்சி அங்கே வரும்..? அவன் பணத்திமிரில் ஆடறான் சித்தார்த்.. விட்டு விடு.."

சித்தார்த்தன் விட்டு விட்டான்.. எதைப்பற்றியும் யோசிக்காமல் தனது புத்திக் கூர்மையை மட்டுமே முதலீடாக வைத்து சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனியை ஸ்தாபித்தான்.. இரவு பகல் பாராமல் அவன் உழைத்த உழைப்பில் கம்பெனி வேர்விட்டு வளர்ந்து விருட்சமானது.

அப்படிப்பட்ட கம்பெனியில் சித்தார்த்தனின் தோளோடு தோள் நின்று.. கம்பெனியின் வேருக்கு நீர் பாய்ச்சுபவன் தாமோதரன்.

சித்தார்த்தனை விட்டு அவன் பிரிந்து செல்வதா..?

"லிஸன் சித்தார்த்.. இதுவரைக்கும் இந்தக் கம்பெனியின் ஜி.எம்ங்கிற முறையில நான் என் பவரை மிஸ்யூஸ் பண்ணினதில்லங்கிறது உனக்கே தெரியும்.."

"இப்ப என்ன அலுவலுக்கு மூச்சு விடாம இவ்வளவு லென்த்தியான ஸ்டேட்மெண்டை பேசி வைக்கிற..?"

"என் பேச்சுக்கு உன்கிட்ட மதிப்பிருக்கும்ங்கிற க்கையில நான் வாக்குக் கொடுத்திட்டேன்.."

"இதைப் பாருடா.. இந்தப் பூனையும் மில்க்கை டேஸ்ட் பண்ணுமான்னு இருந்துட்டு.. இப்பக் காதல். கத்தரிக்காய்ன்னு கதை சொல்ற.. யாருடா அந்தப் பெண்..? எத்தனை நாளா காதலிக்கிற..? நீரஜாவுக்கு இதுபத்தித் தெரியுமா..?"

சித்தார்த்தன் உற்சாகமாய் தோளில் தட்டியதில் தாமோதரனின் தோள்பட்டை இறங்கி வைத்தது..

"இது ஒன்னுதான்டா குறைச்சல்.." அவன் வலித்த தோள் பட்டையைத் தடவிக் கொண்டான்..

"நீதானேடா வாக்குக் கொடுத்துட்டேன்னு சொன்ன..?"

"காதலிக்கு வாக்குக் கொடுத்தேன்னா சொன்னேன்..?"

"பின்னே..?"

"என் நண்பனுக்கு வாக்குக் கொடுத்தேன்னு சொன்னேன்.."

"எனக்கென்னடா வாக்குக் கொடுத்த..?"

"ஏண்டா இப்படிப் படுத்தற..? உனக்கு வாக்குக் கொடுத்தேன்னு எங்கேடா நான் சொன்னேன்..?"

"இப்பத்தானேடா சொன்ன..?"

"என்னத்தைச் சொன்னேன்..?"

"உன் நண்பனுக்கு வாக்குக் கொடுத்திருக்கன்னு சொல்லலை..?"

"அதுக்கு..?"

"உன் நண்பன் யாருடா..? நான்தானே.."

"ஓ.. நீ அப்படி வர்றியா..?"

தாமோதரனுக்கு தலையை வலித்தது.. சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது.. சித்தார்த்தன் படுத் பாட்டிற்கு சுவரில் முட்டிக் கொள்வதாக இருந்தால்.. தலையின் ஒரு பாகம்கூட மிஞ்சாது என்று தெரிந்து வைத்திருந்ததினால் அந்த யோசனையை 'ஓடு.. ஓடு.' என்று ஓட்டி விட்டான்..

'ஊருக்குள்ளே பத்துப் பதினைஞ்சு பிரண்டைஸை வைச்சிருக்கிறவனுகெல்லாம் நிம்மதியா இருக்கானுக.. இவன் ஒருத்தன மட்டும் பிரண் வைச்சுக்கிட்டு நான் படற லோலும்.. இவன் படுத்தற லொள்ளும் இருக்கே.. அப்பப்பா.. முடியலைடா சாமி..'

தலையைப் பிடித்தபடி ப
நண்பனிடம்..

"நண்பேன்டா.." என்று சொல்லி மேலும் சோதித் வைத்தான் சித்தார்த்தன்..

"கொஞ்நேரம் சும்மாதான் இருக்கியா..?" தாமோதரன் எரிந்து விழுந்தான்..

"அதுவும் சரிதான்.. நீ ரெஸ்ட் எடு.. நான் வயலெட்டைக் கூப்பிட்டு இந்த அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை யாமினிக்கு அனுப்பச் சொல்லிடறேன்.."

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருந்தான் சித்தார்த்தன்.. தாமோதரனுக்கு வெறி வெறியாக வந்த

"ஏண்டா.. நான் என்ன சொல்லிக்கிட்டு இருக்கேன்.. நீ என்ன பண்ணிக்கிட்டு இருக்க..? என் பிரண்டுக்கு வாக்குக் கொடுத்திருக்கேண்டா.." சித்தார்த்தனிடம் சீறினான்..

"நான்தான் உன்கிட்ட எந்த வாக்கையும் கேட்கலையேடா மச்சான்.."

"எனக்கு வர்ற கோபத்துக்கு என்ன செய்வேன்னே தெரியாது சித்தார்த்.. பிரண்டுன்னா நீ ஒருத்தன் மட்டும் தானா..? இந்த உலகத்தில வேற பிரண்ட்ஸே இருக்க மாட்டாங்களா..?"

"நேத்து வரைக்கும் அப்படித்தானடா இருந் ச்சு..?"

"நேத்து வரைக்கும் நீ கூடத்தான் காத் கருப்பு அடிக்காம ஒழுங்கா இருந்த.. இன்னைக்கு அப்படியா..? மகாபலிபுரம் போறேன்னு யோயிட்டு மந்திரிச்சு விட்டவனப் போலயில்ல திரும்பி வந்திருக்கிற..?"

"அதெல்லாம் ஒரு மண்ணுமில்ல.. உன் கண்ணில தான் ஏதோ கோளாறு.."

"இருக்கட்டும்.. நல்ல கண்டா டரை பார்த்து சரிபண்ணிக்கறேன்.. நீ முதல்ல இந்தப் பெண்ணுக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை அனுப்பு.."

தாமோதரன் நீட்டிய ஃபைலில் இருந்த பெண்ணைப் பற்றிய விவரங்கள் யாமினிக்கு இணையாகத்தான் இருந்தன.. இண்டர்வியூவிலும் அந்தப் பெண் சிறப்பாகத்தான் பதில் சொல்லியிருந்தாள்..

'ஆனாலும்.. சித்தார்த்தனின் மனம் முரண்டியது.

"ஏன்..? யாமினிக்கு என்ன குறை..?"

"அவளைச் சுற்றிக்கிட்டு இருக்கிற மாய வலைதான் குறை.. அதைப்பத்தி எனக்கென்ன..? என்பிரண்டோட தங்கை இந்தப் பொண்ணு.. இவளுக்கு வேலை கொடுக் கிறேன்னு நான் அவனுக்கு வாக்குக் கொடுத்திட்டேன்.. என் வார்த்தையை நீதான் காப்பாற்றியாகனும்.."

சித்தார்த்தனைச் சுற்றி நூல்வேலியை போட்டு விட்டான் தாமோதரன்.. அதை அறுக்கும் மனத்திண்மை சித்தார்த்தனுக்கு இருந்ததில்லை.. எதிரிகளின் இரும்புத்திரையை உடைத்து நொறுக்குகிறவன்தான் அவன்.. ஆனால் நண்பனின் நூல்வேலிக்குக் கட்டுப் பட்டவன்.. அதைத் தொட்டுக்கூடப் பார்க்க மாட்டான்..

"ம்ம்ம்..?"

உதட்டைக் கடித்தபடி தாமோதரன் சொன்ன பெண்ணைப் பற்றிய விவரங்களை ஆராய்ந்தான்.. அறிவுக்களை கொட்டும் அழகான முகம்.. நிதானமான தன்மையுடனும் அதே சமயம் அதிவேகத்துடனும் இண்டர்வியூவில் அவள் பதில் சொன்ன லாவகத்தை நினைத்துப் பார்த்தான்..

தகுதியில்லாதவர்களுக்கு தாமோ ரன் சிபாரிசு செய்ய மாட்டான்.. அவனுடைய தேர்வு என்றுமே சோடை போனதில்லை.. அதிலும் சித்தார்த்தனின் பெர்சனல் செக்கரட்டரி எனும்போது தாமோதரன் கண்களில் விளக்கெண்ணையை விட்டுக் கொண்டு கூர்மையாக ஆராய்ந்துதான் தேர்வு செய்திருப்பான்..

அந்தப் பெண்ணிற்கு வேலை கொடுப்பதை மறுக்க எந்தவொரு காரணமும் சித்தார்த்தனுக்குச் சிக்கவில்லை..

"இதுவரை எனக்காகன்னு உன்னிடம் எதையும் கேட்டதில்லை சித்தார்த்.. முதல் முறையாக் கேட்கிறேன்.. என்வாக்கைக் காப்பாத்து.."

இப்படிச் சொல்பவனிடம் எப்படி சித்தார்த்தன் மறுத்துப் பேசுவான்..? தாமோதரன் கொடுத்த வாக்கு சித்தார்த்தனையும் சேர்த்துப் பிணைக்காதா..?

'இந்தப் பெண்ணை அப்பாயிண்ட் பண்ணியாகனும்..

பெருமூச்சுடன் அந்தப் பெண்ணின் ஃபைலை மீண்டும் பார்த்த சித்தார்த்தனின் புருவங்கள் முடிச்சிட்டன. பார்வை கூர்மையானது..

'எதை இப்படி உத்து.. உத்துப் பார்க்கிறான்..?'

தாமோதரனுக்கு ஒரு மண்ணும் விளங்கவில்லை.



# 12

## சொன்னமொழி தவற மன்னவன் நினைக்கவில்லை..

வருங்காலத்தில் அக்காதலர்கள் அனுபவிக்கப் போகும் இன்னல்களை அறிந்து வைத்திருந்த காலம் மௌனமாக தனது மணித்துளிகளைக் கொட் கொண்டிருந்தது.

நரசிம்மன் வார்த்தை தவறுபவனா..? அல்ல.. அவன் வார்த்தை தவறாதவன்.. சொன்ன மொழி தவற என்றுமே அவன் நினைத்ததில்லை.. மனமார.. உளமாற.. அவன் சிவகாமியை மெய்த்தன்மையோடு காதலித்தான்.. பட்டத்து இளவரசனாக இருந்தும்.. மன்னவர் தடுத்தும்.. எவரும் அறியாவண்ணம் ரகசியமாக சிவகாமியைச் சந்திக்கச் சென்றான்..

இவ்வாறு காதலுக்கு உண்மையாக இருந்தவனின் காதல் சிதிலமடையக் காரணமானது யார்..? சிவகாமியின் வளையோசை அவளது காதலனின் வரவிற்காக மட்டுமே காத்திருப்பது என்பதை அறிந்தும் விதி அவளின் வாழ்வோடு ஏன் விளையாடியது..?

இதுதான் வாழ்வென்று இறைவன் அவளுக்கு விதித்து வைத்திருக்கும் சாபத்தின் கடுமையைப் பற்றி அறியாதவளாக காதலனுடன் சுகித்திருக்கும் அந்த நொடிகளின் மணித்துளிகளில் வாழ்ந்து விட விரும்பிய அந்த ஆரணங்கு தம் காதலனோடு அளவளாவி மகிழ்ந் கொண்டிருந்தாள்..

அவள் பேசிய இனிமையான மொழிகளில் மனம் மயங்கிய நரசிம்மன் அவளது வதனத்தின் நாடியில் ஒற்றை விரலைப் பதித்து வதனத்தை உயர்த்தி.. அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்து..

*"கனியக் கனிய..*
*மழலை பேசும் கண்மணி..!*
*உயர் காதல் பொங்கும்..*
*கீதம் பாடும் பொன்மணி..!"*

என்று பாடினான்.. சிவகாமியின் அகத்தில் உல்லாசம் புகுந்தது.. அவள் விலகிஓடி மண்டபத்தின் மையத்தில் நின்று அபிநயம் பிடித்து ஆடியபடி..

*“கனிந்த மழலை*
*தந்தவர் யார் சொல்லவா..?*
*எந்தன் காதல் பொங்கும்..*
*கீதம் நீங்கள் அல்லவா..?”*

என்று பாடினாள்.. நரசிம்மன் யுத்தத்தை மறந்தான்.. மகேந்திரவர்ம பல்லவரை மறந்தான்.. நாடு நகரம்.. கூட கோபுரம்.. மாட மாளிகை.. அனைத்தும் மறந்தான்.. அவன் மனதில் இருந்தது.. அவனும், அவளும் மட்டுமே..

சிவகாமியின் மேனியெழில் அதிகரித்துள்ளதைப் போல அவனுக்குத் தோன்றியது.. நண்பகல் வேளையின் ஆதவனின் கதிர்கள் அவள் மேனிமீது படிந்ததில் அவள் பொற்சிலையைப் போல இருந்தாள்..

நரசிம்மனின் வாலிப தேகம் சூடானது.. அவன் முன்பு அபிநயித்து ஆடும் அந்த ஆடலரசியின் அத்துணை அழகும் அவனுக்கானது என்பதில் அவன் மனம் பெருமிதம் கொண்டது. இதழ் குவித்து அவள் பாடும் போது குவிந்த இதழ்களில் அவன் முத்தமிடயத்தனித்தான்.. சிவகாமி இணங்கி இசைந்ததில் அவன் மனதுக்குள் கள்வெறி மூண்டது, அந்த மோகத்தீயுடன் அவன் அவளிட வினவினான்..

*“சித்திரத் தோகை.. செவ்விதழ் கோவை..*
*சேதி சொல்லாதோ..?*

*இந்தப் பத்தரை மாற்றுப் பாவையின் மேனி*
*பந்தயம் ஆகாதோ..?"*

அவளைத் தழுவிக் கொண்டவனைத் தழுவிக் கொண்டவள்.. அவன் செவிகளில் வாக்குக் கொடுத்தாள்..

*"இந்த அழகு வெள்ளமே..*
*என்றும் உங்கள் சொந்தமே..*
*புதுப் பண்பாடும் தமிழமுதம்*
*கலந்து கொஞ்சவே..*
*கனிந்த மழலை தந்தவர்..*
*யார் சொல்லவா..?*
*எந்தன் காதல் பொங்கும்*
*கீதம் நீங்கள் அல்லவா..?"*

நரசிம்மனின் கரங்கள் அவளின் இடையில் படிந்து அழுந்தி அவளைத் தூக்கிக் கொண்டன.. பூமாலையாய் அவன் கரங்களில் வீழ்ந்தவளின் கரங்கள் பூமாலையாக அவன் கழுத்தை வளைத்துக் கொண்டன.

அருகிலிருந்த காட்டுக் கொடிகளால் பிணைக்கப் பட்ட ஊஞ்சலில் அவளை அமர வைத்து.. அருகில் அமர்ந்தான் நரசிம்மன்.. அவன் தோள் சாய்ந்து கொண்ட சிவகாமியின் தோளைத் தடவிக் கொடுத்து படிந்தது அவனது கரம்.

*"காவலென்னும் கடலினிலே..*
*கன்னிஉந்தன் அருகினிலே..*
*கலந்தே வருவேன் இனி*
*தென்றலெனும் தேரினிலே.."*

அன்று போல என்றும் அவனது அருகாமையில் இருந்துவிட முடியும் என்ற சொப்பனம் விழிகளில் ஆட.. மனமுருகிப் பாடினாள் அந்தப் பேதை..

அவள்தான் நடனக்கலையை மட்டும் பயின்றவள்.. நாட்டின் சூழலைப் பற்றி ஏதுமறியாதவள்.. நரசிம்மன் அப்படியல்லவே.. காத்திருக்கும் போரைப்பற்றி அவன் அறிவானே.. அந்தத் தருணத்தை நழுவ விட்டால்.. அடுத்த ஒரு தருணத்தில் சிவகாமியை சந்திக்கும் சாத்தியம் ஏற்படாமலே போய்விடக் கூடுமோ என்ற மனதின் சஞ்சலத்தினால் அவன் அனைத்தையும் புறக்கணித்து விட்டு.. அரிதாகக் கிடைத்திருக்கும் அந்த மணித் துளிகளில் நிலைத்திருக்க விரும்பியவனாய் சிவகாமியின் சொப்பனத்தை கலைக்க விரும்பாமல் தொடர விட்டான்.

சிவகாமியின் வழவழப்பான மேனியின் மென்மையில் முகம் புதைத்தவன்.

*"அருகினில் நீ இருந்தால்..*
*ஆசையும் குறைவதேது..?*
*அமுதே..! என் வாழ்வினில்*
*வளரும் இன்பமே...'"*

என்று மோனநிலைக்குள் பயணித்தவனாக விழிகள் செருக பாடினான்.. சிவகாமி விழிகளைச் சுழற்றியதில்..

*"அற்புத ஓவியம் கண்கள்*
*கற்றது எப்படியோ..?"*

என்று புருவங்களை உயர்த்தினான்..

*"உயர் செந்தமிழ் ஓவியர்..*
*நெஞ்சில் கொஞ்சிடும் கற்பனையோ..!"*

அவள் மிக அழகாக பதில் உரைத்தாள்.. அவனது விழிகள் மேய்ச்சல் நிலத்தைக் கண்டு விட்ட காளை போல அவளது மேனி எழிலை மேய்ந்தன.. அதில் அவளது அழகுவதனம் சிவந்தது..

*"மாந்தளிர் போல எழில் மேனி..*
*மின்னுவது எப்படியோ..?"*

சாக்கிப்போன அந்த சொக்கத்தங்கக் காதலனின் தோள் சாய்ந்த சிவகாமி..

*"நல் அமுதே..! என் வாழ்வில்*
*வளரும் இன்பமே..!"*

என்று விழிகளை மூடிக் கொண்டாள்.. நரசிம்மனின் மனம் நிறைந்து நெகிழ்ந்து பொங்கித் ததும்பியது. அது போன்ற ஒர்தினத்தை அடுத்து வரும் தினங்களில் அவன் சந்திப்பானா என அவனது அகத்துக்குள் வினவிக் கொண்டான்..

எது எப்படியாயினும்.. அப்பொழுதில் அவனது ஆருயிர் காதலி அவனது அருகாமையில் இருக்கிறாள்.. அதுபோதும் என்ற எண்ணத்துடன் அவளது இடையை அவன்கரம் வளைத்தது..

*"நீலவானும், நிலவும் போலக்*
*கூடுவோம் - நல்*
*இன்பமென்னும் படகில் ஏறி*
*ஆடுவோம்.."*

இருவரும் இணைந்து பாடிய பாடலில் அவர்களுக்குள் ஆண்டாண்டு காலம் வாழ்ந்து முடித்த திருப்தி ஏற்பட்டது.. சூரியனின் கதிர்கள் மேற்குத் திசையில் சாயத் தொடங்கியதை கண்ணுற்ற சிவகாமி நரசிம்மனிட மிருந்து விலகி எழுந்தாள்..

"ஏன்..?" அவள் கரம் பற்றித் தடுத்தான் நரசிம்மன்.

"அந்திவேளை வந்து கொண்டிருக்கிறது இளவரசே..! நாம் புறப்பட்டாக வேண்டும்.." சிவகாமி அறிவுறுத்தினாள்.

"பிரிந்தாக வேண்டும்.." இளவரசன் பெருமூச்சு விட்டான்..

சிவகாமியின் நெஞ்சை துக்கம் சூழ்ந்து கொண்டது. தாயற்ற அந்தப் பேதையின் மனதில் காதலின் பிரிவு நெருஞ்சி முள்ளாய் சுற்றி வளைத்தது.

"இது போன்ற ஓர் தினத்தை இனி என்று சந்திப்போ ..?" ஏக்கத்துடன் வினவினாள்.

"காஞ்சிக்கு தாம் வந்தால் எமைக் காணலாம் சிவகாமி.. துயர் கொள்ளாதே.." நர ம்மன் அவளைத் தேற்ற முற்பட்டான்..

"இன்று நாம் பாடிய சிந்து என்றென்றும் எம் மனதில் நிலைத்திருக்கும் இளவரசே.. இறுதிவரை இதை யாம் மறவோ .."

"யாம் மட்டுமென்ன.. இதை மறந்தா உயிர் வாழ்வோம்..? நினைவில் நிற்கும் இக்கானம் என்றென்றும் எம் நினைவில் நிற்கும் சிவகாமி.. முதன் முதலாக தம்மை

மல்லைக் கடற்கரையோரம் யாம் சந்தித்தபோது தமது பாதச்சலங்கையின் 'ஜல்..ஜல்..' எனும் சந்தத்தைத்தான் செவி மடுத்தோம்.. அந்த சந்தம் தந்த சொந்தம் இது சிவகாமி.. கால காலத்திற்கும் அழியாமல் நிலைத்து நிற்கும்.. கவலை கொள்ளாதே.."

ஆருடம் அறிந்தவனைப் போல நரசிம்மன் வாக்குக் கொடுத்தான்.. சிவகாமியும் அவ்வார்த்தைகளை அவ்விதமே நம்பினாள்..

அவளறிந்த நரசிம்ம பல்லவன் சொப்பனத்திலும் அவளுக்கு துரோகம் நினைக்காதவன்.. அவனா காதலியை கை விடுவான்..?

காலம் வகுத்திருக்கும் கட்டளையின்படி யாருடனே யார் வாழ்வார் என்பதை அறியாதவளாக விதி போட்ட முடிச்சின் படி தனது வாழ்க்கைப் பயணத்தை தொடர் சிவகாமி..

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 12

*பொய் சொன்னாலும்..*
*பொருந்தச் சொல்லித் தொலைக்க வேண்டும்.*

சித்தார்த்தன் என்னவோ ஆய்வுக் கட்டுரையை சப்மிட் பண்ண வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறவனைப் போல தாமோதரன் கொடுத்த ஃபைலை விழுந்து விழுந்து

படித்தான்.. புரட்டிப் புரட்டி அதன் பக்கங்களை மனப்பாடம் செய்தான்..

'என்ன அலுவலுக்கு எக்ஸாமுக்கு படிக்கிறதைப் போல படிச்சு வைக்கிறான்..?' தாமோதரன் எரிச்சலடைந்தான்..

ஒருவழியாக படிக்க வேண்டியவற்றை படித்து முடித்துவிட்டு நிமிர்ந்த சித்தார்த்தன் தாமோதரனையே இமைக்காமல் பார்த்து வைத்தான்..

'என்னடா இது.. காதலிக்கிறவளைப் பார்க்கிறதைப் போல என்னைப் பார்த்து வைக்கிறான்..? இத்தனை நேரமும் படிப்பு.. இப்பப் பார்வையா..?'

தாமோதரன் பொறுமையை இழுத்துப் பிடித்து ஓடி விடாதே என்று உபதேசித்த வண்ணம் சித்தார்த்தனின் இமைக்காத பார்வையை சகித்துக் கொண்டிருந்தான்.. சித்தார்த்தனோ இமைக்க மறந்த விழிகளின் பார்வையைத் திருப்பிக் கொள்ளவேயில்லை..

*'பார்வை ஒன்றே போதுமா..?*
*பல்லாயிரம் சொல் வேண்டுமா..?'*

என்ற கண்ணதாசனின் வார்த்தைகளுக்கு உயிர் கொடுப்பதைப் போல நண்பனையே உற்றுப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்.

இப்படிப் பொறுமையை சோதித்தால் தாமோதரன் தான் என்ன செய்வான்..? அவன் பொறுத்தது போதுமென்று பொங்கி எழுந்து..

"அடச்சீ..!" என்று வெடித்தான்..

"இப்ப என்னத்துக்குடா என்னை இந்தப் பார்வை பார்த்து வைக்கிற..?"

"இவ.. உன் பிரண்டோட சிஸ்டர்..?"

சித்தார்த்தன் கையிலிருந்த ஃபைலைத் தூக்கிக் ாண்பித்தான்..

.." புரியாமல் தலையாட்டினான் தாமோதரன்..

"அண்டப் புளுகன்.. ஆகாசப் புளுகனையெல்லாம் பார்த்திருக்கேன்.. உன்னைப்போல ஒரு புளுகனை எங்கேயும் பார்த்ததில்லைடா.. நீ அத்தனை பேரையும் தூக்கிச் சாப்பிட்டு ஏப்பம் விட்டுட்டியே.."

சித்தார்த்தனின் குற்றச்சாட்டில் தாமோதரனுக்கு கோபம் வந்துவிட்டது.

"எதுக்கும் ஒரு லிமிட் இருக்கு சித்தார்த்.. நான் உன் ரண்டா இருக்கலாம்.. உன்கிட்ட கைகட்டி வேலை பார்க்கிற ஜி.எம்மா இருக்கலாம்.."

"எதைச் சொன்னா நீ எதைச் சொல்லிக்கிட்டு வர்ற..? நீ கை கட்டி வேலை பார்க்கிறேன்னு நான் சொன்னேனா..?"

"பிராங்காச் சொன்னாத்தானா..? அப்படித்தானே உன் மனசில நினைப்பிருக்கு.. எதைப் பேசினாலும் நான் கேட்டுக்குவேன்னுதான இப்படி நீ பேச ஆரம்பிக்கிற..? எதை நான் புளுகினேன்னு இப்படி ஒரு பழியை என் மேல போடற..?"

"இதைப் பார்த்துட்டுப் பேசுடா.."

சித்தார்த்தன் தூக்கிப் போட்ட ஃபைல் விரிந்து தாமோதரனின் முன்னால் விழுந்தது..

'எதைப் பார்க்கச் சொல்றான்..? ஒருவேளை இந்தப் பெண்ணோட போட்டோவைப் பார்க்கச் சொல்றானோ..

தாமோதரன் அந்தப் போட்டோவை அப்போதுதான் நன்றாகப் பார்த்து வைத்தான்.. மூக்கும், முழியுமாக அந்தப் பெண் பார்க்க நன்றாகத்தான் இருந்தாள்..

"அழகாத்தான் இருக்கா.." சித்தார்த்தனிட சொன்னான்..

"அப்படிங்களா சார்..? உங்களுக்காக நான் வேணும்னா இவளைப் பெண் கேட்டுப் போகவா சார்..?" இடக்காக கேட்டான் சித்தார்த்தன்..

"ஆமாண்டா.. கண்ணுக்கு அழகா இருந்தா உடனே கல்யாணம் பண்ணிக்கிறதைப் பத்தித்தான் யோசிக்கனும்.. உன்புத்தி போகிற போக்கு இருக்கே.. அப்பப்பா.. அப்படிப் பார்த்தா ஒரு நாளைக்கு நான் முப்பது கல்யாணத்தைப் பண்ணித் தொலைச்சாகனும்.. ஏன்னு கேட்கறியா..? இப்பல்லாம் பொண்ணுக அழகா இருக்கிறாளுகடா.. எப்படித்தான் இப்படி அம்சமா இருந்து தொலைக் கிறாளுகளோ.. முப்பதுங்கிறதெல்லாம் குறைச்சல் மச்சி.. மூக்கும் முழியுமா இவளை விட பேரழகா ஒருநாள் ஒன்னுக்கு நூறுபேருக்குக் குறையாம மீட் பண்றேன்னா பார்த்துக்கயேன்.."

"இதுவரைக்கும் இதைப் பார்க்கலை.. எம்.டி வேலையை மட்டும்தான் பார்த்துக்கிட்டு இருந்தேன்..

இப்ப நீ சொல்லிட்டேல்ல.. எம்.டி வேலையை பேக்-அப் பண்ணிட்டு.. முழுநேர வொர்க்கா இதை மட்டும் பார்த்திட்டாப் போகுது.."

சித்தார்த்தன் சொல்லிய விதத்தில் இப்போது இமைக்காமல் அவனை முறைப்பது தாமோதரனின் முறையாகி விட்டது..

"என்ன..?"

அவன் பார்வையைப் பற்றி அலட்டிக் கொள்ளா பதிலுக்கு முறைத்து வைத்தான் சித்தார்த்தன்..

"என்ன..?" பதிலுக்கு கேட்டு வைத்த தாமோதரன்.

"பிரண்டோட தங்கச்சிக்கு வேலை போட்டுக் கொடுடான்னு கேட்டுட்டேன்.. அதுக்காக அவளை உத்துப் பார்க்கச் சொல்லி அவ படத்தை என் முன்னாலே விட்டெறிஞ்சுட்டு நான் என்னவோ குற்றம் செய்துட்டதைப் போல முறைச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கிற..? என்னடா விசயம்..?" என்று எகிறினான்..

"உன்னை உத்துப் பார்க்கச் சொன்னது அந்தப் பெண்ணோட போட்டோவையில்ல..?"

"பின்னே..?"

"பயோடேட்டாவை.."

"இதில என்ன கழுதை இருக்கு..?"

"படிச்சுப் பாரு தெரியும்.."

"வேணாம் சித்தார்த்... நானே ஓய்ஞ்சு பாயிருக்கேன்.. படிக்கிற வேலையையெல்லாம் என்

தலையில் கட்டாதே.. நான் படிக்கலைன்னா என்ன..? நீதான் எக்ஸாமில கோல்டுமெடல் வாங்கப் போகிறவனைப் போல அந்த ஃபைலை கரைச்சுக் குடிச்சியே.. நீயே சொல்லு.."

"இந்தப் பெண்.. வீட்டுக்கு ஒரே பெண்.."

"என்னடா இது..? இம்மாம் பெரிய சென்னையில இந்தப் பொண்ணு தனியாவா இருக்கு..? துணைக்கு யாரையாச்சும் வைச்சுக்கலாமே.."

"என்னது..?"

"கூப்பிட்டு வைச்சுக்கலாமேன்னு சொன்னேன்.. எல்லாத்திலேயும் டபுள்மீனிங் எடுக்காதே.."

"வீட்டுக்கு ஒரே பெண்.. வீட்டிலே தனியா.. ஒற்றையா இருக்கிற பெண்ணுன்னு அர்த்தமில்லேடா மடையா.."

"அதுசரி.. உன்கிட்ட ஜி.எம்மா குப்பை கொட்டறேன் பாரு.. மடையன் பட்டம் எனக்குத் தேவைதான்.. இப்ப என்ன கழுதைக்கு இந்தப் பெருமைமிகு பட்டத்தை எனக்குக் கொடுத்திருக்கேன்னு தெரிஞ்சுக்கலாமா..?"

"இம்சை அரசன் இருபத்தி நாலாம் புலிகேசி நீதாண்டா.."

"அடுத்த பட்ட ா..?"

"அறிவு கெட்டவனே..! அந்தப் பெண்ணுக்கு அண்ணன், தம்பி, அக்காள், தங்கைன்னு யாருமில்லைடா.. பேரண்ட்ஸீக்கு ஒரே பெண்ணுடா.."

"ஈஸிட்..?"

"என்னத்த நோஸிட்..? தனியாப் பிறந்த பெண்ணுக்கு அண்ணன்னு உன் பிரண்டு எங்கேயிருந்துடா பிறந்து வந்தான்..?"

சித்தார்த்தனின் இமைக்காத முறைப்பிற்கான அர்த்தம் அப்போதுதான் தாமோதரனுக்கு விளங்கியது..

'இவளுக்கு அண்ணன், தம்பி இல்லையா..?'

அவசரமாக அந்தப் பெண்ணின் பயோடேட்டாவை படித்துப் பார்த்தான்.. அந்தப் பெண் ஒற்றைக் காட்டு பெண்சிங்கம் என்பதை அந்த பயோடேட்டா உறுதி படுத்தியது..

'இதைப் பார்க்காம கோட்டைவிட்டுட்டேனே.. தாமோதரன் சமாளிக்க முடிவு செய்தான்..

"டங் ஸ்லிப்பாகிருச்சுன்னா.. நீ எதை வேணும்னாலும் பேசுவியா..?"

"டங்..? உனக்கு..? ஸ்லிப்பாகிருச்சு..?"

"ஆமாண்டா.. ஆமாம்.."

"ஓகே.. அதையும் கேட்டுரலாம்.. நீ அடுத்த புளுகு மூட்டையை அவிழ்த்துக் கொட்டு.."

"நானும்.. இவ அண்ணனும் பிரண்டில்ல.."

"இவளுக்கு அண்ணனே இல்லேடா.."

"அது என் குத்தமில்ல.."

"கொலைவெறியைக் கிளப்பாதே.. நானே செம கடுப்பில் இருக்கேன்.."

"எப்படியோ இருந்துட்டுப் போ.. எனக்கென்ன போச்சு.. இந்தப் பெண்ணோட அப்பாவும்.. என் அப்பாவும் தான் பிரண்ட்ஸ்.."

தாமோதரன் மாற்றி யோசித்தான்.. சித்தார்த்தன் தாமோதரனை முறைத்தான்.. வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாத ஒன்றும் அறியாக் குழந்தைப் பிள்ளையைப் போல தாமோதரன் முகத்தை வைத்துக் கொண்டதில் இது வேலைக்கு ஆகாது என்று செல்போனை கையில் எடுத்தான்..

"யாருக்குடா போன் போடற..?"

சீட்டில் சாய்ந்து கால்களை ஆட்டியபடி கேட்டான் தாமோதரன்..

"ம்ம்ம்.. உங்க அப்பனுக்கு.." சித்தார்த்தன் எரிந்து விழுந்ததில் என்னவோ மிகப்பெரிய ஜோக்கைக் கேட்டு விட்டவனைப் போல..

"எங்க அப்பனுக்கா..? ஹா.. ஹா.." என்று விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்..

'சிரிடா மகனே..! இப்ப இருக்கு உனக்கு..

பற்களை நரநரத்தபடி.. போனில் நம்பர்களை அழுத்திய சித்தார்த்தன்.. மறுமுனையில் பதில் வந்ததும்..

"ஹலோ அங்கிள்.. சித்தார்த்தன் ஸ்பீக்கிங்.. என்றான்..

'எந்த அங்கிளைக் கூப் ான்..?'

தாமோதரன் மேஜையில் சாய்ந்து விரல்களால் தாளம் போட்டான்..



# 13

## பகைகொண்ட வேந்தனின்முன்.. சமாதானம் சதிராடுவதா..?

**ப**ல்லவப் பேரரசின் தலைநகரமான காஞ்சி மாநகரத்தில் புதியதோர் விருந்தினரை வரவேற்கும் ஆயத்தங்கள் தென்பட்டன.. கோட்டைச் சுவர்களில் கொம்பூதக் காத்திருந்த வீரர்கள்.. அம்பெய்தவும் ஆயத்த நிலையில் இருந்தது அரசியல் மதியூகம்..! காஞ்சியை முற்றுகையிட்டிருந்த புலிகேலியின் அமைதித் தூதை எள்ளவும் நம்பவில்லை மன்னர் மகேந்திரவர்மன்..

வரப்போவது சாளுக்கிய மன்னன்..! பல்லவர்களின் பரம எதிரி..! காஞ்சியையு முற்றுகையிட்டு பணிய வைக்க நினைத்து தோல்வியுற்றவன்.. கொடுங்கோலன் என்ற நாமத்திற்கு பொருள் கொடுக்க உயிர்தரித்தவன்..! காஞ்சியில் உணவுத் தட்டுப்பாடு நிலவாமல் அவன் படைக்கு உணவுத்தட்டுப்பாடு வந்து விட்டதில் கோபம் கொண்டு வேறு வழியில்லாமல் அமைதி தூதை விடுத்திருப்பவன்..! இரக்கமென்றால் என்ன விலையென்று வினவும் யுத்தவெறியன்..

அவன் விருந்தினனாக வரப்போகிறான்.. எங்கு..? பல்லவர்களின் தலைநகரமா காஞ்சி மாநகரில் கூடியிருக்கும்.. மகேந்திரவர்மப் பல்லவ மன்னனின்

அரசவைக்கு.. இதை அவன்தான் வேண்டுகோளாக விடுத்தான்.. அவனுடைய அமைதிதூதை மன்னன் அனுமதித்தான்..

இல்லங்கள் தோறும் பூ அலங்காரங்கள் செய்திருக்க வேண்டும்.. வாசல்களில் மஞ்சள் நீர் தெளித்து மங்களக் கோலமிட்டிருக்க வேண்டும்.. என நகரமக்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.. அரசகட்டளையை ஏற்று அவர்களும் செவ்வனே தமது அலங்காரங்களை செய்து முடித்தாலும்.. அவற்றில் துளிக்கூட உற்சாகமில்லாம அவற்றை செய்து வைத்தார்கள்.. நகரத்தை முற்றுகை யிட்டிருக்கும் பகைவனுக்கு எந்தக் குடிமகன்தான் உற்சாக வரவேற்பை அளிப்பான்..?

"வருகிறவன் சாளுக்கிய அரசனாம்.."

"ஆம்.. மன்னர் அவரை விருந்தினராக நமது நகரத்துக்குள் அனுமதிக்க உத்தேசித்துள்ளாராம்.. அவன் தான் இதை விரும்பினானாம்... விருந்து வேண்டு கிறவனுக்கு அதைத்தர இயலாது என்று சொல்ல மன்னவரால் இயலாதே.."

"விருந்தினராக வருபவன் விருந்து உண்டு விட்டு சென்று விடுவானா..? முற்றுகையிட்டவன் நம் நகருக்குள் நுழைந்துவிட்டு நண்பனாகத் திரும்பி விடுவானா..?"

"அவ்வாறுதான் மன்னர் நம்புகிறார்.. என்று கேள்வி.. மன்னரின் இதயத்தில் யாது உள்ளதென்று எவரா அனுமானிக்க இயலும்..?"

"நமது மன்னர் ஏகாம்ப ரஸ்வரரின் பக்தர்.. வீர சைவர்.. சமனராக இருந்தவர் சைவராக மாறிய பின்பு

இறைவழியை நாடுகிறார்.. அமைதியை விரும்பும் நல் ஆத்மா.. சமாதானம் பேச சாளுக்கிய மன்னன் விரும்புவதாகச் சொல்லும் போது மறுக்கக்கூடாது என்று மன்னர் எண்ணுகிறாராம்.. ஆயினும் யாம் கேள்விப் பட்டது என்னவெனில்.. சாளுக்கிய அரசன் யுத்தவெறி கொண்டவனாம்.. சமாதானத் தூது என்பது வெறும் விழி துடைப்புத்தானாம்.. அமைதிக்கும் அவனுக்கும் பலகோடி காத தூரமாம்.."

"இதை மன்னருக்கு யார் சொல்வது..?"

ஈம் சொல்லாமே..?"

"நன்றாக உரைத்தாய்.. எம்மை உரைக்கும் தாம் அதைச் செய்யலாமே.. எமக்குமட்டும்தான் வாயிருக்கிறது.. தமக்கில்லையா..?"

"யாமோ ஒரு சாதாரண குடிமகன்.."

"யாம் மட்டும் அரசரின் தத்து மகனா..? உம்மைப் போல யாமும் ஒரு குடிமகன்தானே ஐயா..?"

"இப்பினும் புத்தி கூர்மையில் எம்மைவிடத் தாம் சிறந்தவராயிற்றே.."

"அப்படியொரு பொய்யை உம்மிட உரைத்தது..? புத்தி கூர்மையா..?"

"எம்மிடம் உரைக்கவில்லை அப்பனே.."

"பின்பு..?"

"யாம் மணக்க நினைத்த கனகவள்ளியிடம் தாம்தான் உரைத்தீர்.. மறந்து போனதோ..?"

"ஹி.. ஹி.."

"தாம் எம்மைவிட நல்லவர்..! வல்லவர்..! நாற்திசையும் அறிந்தவர்..! அறிவுக்கூர்மை மிக்கவர்..! வாள்வீச்சில் சூரப்புலி..! புரவியேற்றத்தில் புயல்..! இவ்வாறெல்லாம் உரைத்து.. அவள் மனதைக் கவர்ந்து மணநாளை நிச்சயம் பண்ணி விட்ட மாவீரனல்லவா தாங்கள்..?"

"கடந்து போன நிகழ்வைப் பற்றிய பேச்சு எதற்கு நண்பனே..? நடக்கப் போவதைக் காணலாமே.."

"தமது திருமணத்தை உரைக்கிறிரா..?"

"அதை அந்நாளில் காணலாம்.. தற்போது வரப் போகும் புலிகேசி மன்னனைக் காணலாம்.."

"ஆக.. தம்மைத் திருமண கோலத்தில் காண்பதும்.. குரூர வதனமும், வெறி கொண்ட செவ்விழிகளும் கொண்ட புலிகேசியைக் காண்பதும் ஒன்றென்று உரைக்கிறீர்கள்.. ஆஹா..! மெய்யை சப்தமாக உரைத்த தாங்களல்லவோ மெய் விளம்பி..!"

காதலில் தோல்வியுற்றவனின் கடுப்பிற்கு ஆளாவதும்.. புலிகேசியின் பகைக்கு ஆளாவதும் ஒன்று என்பதை உணர்ந்து வைத்திருந்த அந்த வீரன்.. அங்கிருந்து அகன்று தப்பித்தான்..

அங்காடிகளிலிருந்து.. மகளிர் நீர் சுமக்கும் நீர் நிலைவரை சாளுக்கிய மன்னனின் வரலைப் பற்றிய பேச்சே இருந்தது..

எவரும் அவன் வரவில் மகிழ்ந்து போகவில்லை.. மாறாக.. இப்படியொரு குரூர வதனம் கொண்ட கொடூர மன்னனின் திருமுகத்தைக் காண வேண்டுமே என்ற வெறுப்புத்தான் மக்களின் மனதில் நிலவியது.. அவர்களின் நாட்டின் மீது படையெடுத்து வந்த புலிகேசியின் பாதங்கள் காஞ்சி மாநகரில் படிவதை எவரும் விரும்பவில்லை.. அதை உணர்ந்ததும் உயராதவனைப் போல புலிகேசி காஞ்சிக்குள் செல்ல ஆயத்தமாகி விட்டான்..

"புலிகேசி மன்னர் நகர வாசலை நெருங்கி விட்டார்.."

செய்திகிடைத்ததும்.. உரிய மாலை மரியாதை களோடு சாளுக்கிய மன்னனை எதிர் கொண்டு வரவேற்றார் மகேந்திரவர்மன்..

புலிகேசிக்கான உபசரணைகளை குறைவின்றி செய்து.. அவனை வரவேற்று நகருக்குள் அழைத்துச் சென்றார்.. வழி நெடுகிலும் தென்பட்ட காஞ்சி மாநகரத்தின் எழிலை குரோதத்துடன் பார்த்தபடி குதிரையின் மீது அமர்ந்து சென்றான் புலிகேசி..

நகரை முற்றுகையிட்டிருந்த பகைவன் என்ற துவேசம் அனைவரின் மனதிலும் குடி கொண்டிருந்தாலும்.. அரச கட்டளையை ஏற்று அனைவரும் அத்துவேசத்தை வதனங்களில் பிரதிபலிக்காமல் உணர்வுகள் துடைக்கப் பட்ட வதனங்களோடு.. புலிகேசியை வரவேற்றார்கள்..

புலிகேசிக்கான மாலை மரியாதைகளை அவன் செருக்குடன் ஏற்றுக்கொண்டதை மகேந்திரவர்மர் அவதானித்தபடிதான் இருந்தார்.. எதிரியாக இருந்தாலும்

விருந்தினனாக வருகை தந்து விட்டான் என்பதில் மன்னர் மகேந்திரவர்மர் விருந்தோம்பலில் கவனம் காட்டினார்.. அறுசுவை உணவுடன் கூடிய விருந்து ஆயத்த நிலையில் இருந்தது. விருந்தினர் மண்டபத்தில் தங்க வைக்கப்பட்ட புலிகேசியை சகல மரியாதைகளுடன் உணவு அருந்தும் மண்டபத்திற்கு அழைத்து வந்தனர்.. மாதக் கணக்கில் முற்றுகையிட்டு உணவுப் பற்றாக்குறையினால் அமைதித்தூது எனும் நாமத்தில் போர் நிறுத்தம் செய்து காஞ்சி மாநகரில் நுழைந்திருந்த புலிகேசி.. அறுசுவை உணவைக் கண்டதும் ஒருகரம் பார்த்தான்..

பரிமாறிய அனைத்து வகைகளையும் துளியளவுகூட மீதம் வைக்காமல் அவனும்.. அவனுடைய பரிவாரங்களும் காலி செய்த வேகத்தில் பரிமாறிய சேவர்கள் கை சோர்ந்தனர்..

"யாது அப்பனே..! இந்த புலிகேசியும்.. இவனுடை பரிவாரங்களும்.. மனித உருவில் இருக்கும் கடோத்கஜன்களா..? சமைத்த உணவு வகைகளை காணாமல் போகச் செய்துவிட வேண்டுமென்ற தீவிர நோக்கத்துடன் அள்ளிக் கட்டுகிறார்களே.. மீண்டும் இத்துனை வகை உணவுகளையும் சமைக்க வேண்டு மெனில் யாது செய்வது..?"

"பார் அப்பனே... இலையைக் கூட விட்டு வைப்பார்களோ என்னவோ..? இலைக்குப் பிறந்திருக்கும் நாதாரிகளோ..?"

"அவ்வாறா உரை

"அவ்வாறுதான் எமக்குத் தோன்றுகிறது.."

"அதுவும் நன்மைக்கே.. இலையெடுக்கும் பணி மீதமாகும் அல்லவா..? எம கரங்கள் இற்று விழுவதைப் போல் உள்ளன.."

"அதனைக் கூறுங்கள்.. இந்த மலை விழுங் மகாதேவன்களுக்குப் பரிமாறி.. எமது இரண்டு கரங்களும் இற்று விழுந்து விடுவதைப் போலத்தான் வேதனை கொண்டிருக்கின்றன.."

"உமக்கு மட்டும்தான் இந்த வேதனையா..? எமக்கும் இந்த வேதனைதான்.. ஏன்..? நம்முடன் பரிமாறும் அனைத்து சேவகர்களுக்கும் இதே வேதனைதான்.. பொறுத்துக் கொண்டுதானே தீரவேண்டும்..?"

"காருண்யம் கொண்டவனுக்கு உணவு பரிமாறுவதில் இவ்வேதனை வந்தால் பொறுத்துக் கொள்ளலாம்.. இவனைப் போன்ற காட்டுமிராண்டிக்கு உணவு பரிமாறுவதில் கரம் சளைத்து வேதனை கொள்வதைத்தான் எமது மனம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.."

"மன்னவர் தீர்ப்பே அந்த மகேசனின் தீர்ப்பு.. வேட்டையாட வந்தவனை நமது மன்னரே விருந்துக்கு அழைத்திருக்கும் போது.. நீயும், நானும் புலம்பி யாதொரு பயனும் இல்லை.. அனைத்தும் காஞ்சியைக் காத்து நிற்கும் ஏகாம்பரேஸ்வரரின் முடிவு என்று... ஆண்டவனின் தாள்களில் நமது அனைத்துக் கவலைகளையும் கிடத்தி விட்டு பணிபுரிய வேண்டியதைத் தவிர நமக்கு வேறு மார்க்கமில்லை தோழனே..!"

சேவகர்கள் சன்னக்குரலில் சப்தம் சிறிதளவுகூட எழுப்பாமல் தங்களுக்குள் முணுமுணுத்தபடி மன்னர் இட்ட கட்டளையை செவ்வனே செய்து முடித்தார்கள்..

அறுசுவை உண்டியை.. ரசித்து உண்டு முடித்து ஏப்பம் விட்ட புலிகேசியும் அவனுடைய பரிவாரங்களும் அவர்களுக்கென கொடுக்கப்பட்டிருந்த விருந்தினர் மாளிகையில் ஓய்வெடுத்த பின்னர் அரசவைக்கு வருகை தந்தார்கள்..

இங்கும் புலிகேசிக்கான அடைமொழிகளை கட்டியங் கூறி வரவேற்பு நிகழ்ந்தது.. கிட்டிய அத்தனை மரியாதைகளையும் மமதையுடன் ஏற்றுக்கொண்ட புலிகேசியிட அமைதித்தூதுடன் வந்து விட்ட மனக்கிலேசம் சிறிதளவும் இல்லை.. மாறாக.. இவையெல்லாம் எமக்குரிய மரியாதைகளே என்ற ஆணவமும், செருக்கும்தான் தென்பட்டன.

புலிகேசிக்காக காத்திருந்த விலையுயர்ந்த ஆசனத்தில் அமர்ந்தான் அவன்.. உடன் அமர்ந்த பரிவாரத்தை அர்த்த புஷ்டியுடன் பார்த்துக் கொண்டான்.. அவர்களின் பார்வைப் பரிமாற்றத்திற்கான பொருள் யாதாக இருக்கக்கூடும் என்று மகேந்திரவர்மர் சிந்தனை செய்தார்..

"இளவரசர் இருந்திருக்க வேண்டும்.."

அரசவையிலிருந்தோர் தமக்குள் தாழ்ந்த குரலில் உரையாடிக் கொண்டனர்.

"மன்னரின் மன்னிக்கும் மனமும், பெருந் தன்மையான குணமும் இளவரசரிட குறைவற

நிறைந்திருந்தாலும், புலிகேசியைப் போன்ற பசுத்தோல் போர்த்திய புலியிடம் அவர் காருண்யம் காட்டியிருக்க மாட்டார். இவன் நயவஞ்சகன்.. அமைதித் தூதெனும் பெயரில் காஞ்சியை பார்வையிட வருகை தந்திருக்கும் கொடூரன்.."

அவையோரின் மனங்களில் அலைகடலின் கொந்தளிப்பு இருந்தது..

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 13

## உன்னோடு பழகியவனுக்கு.. உன் மனதைத் தெரியாதா..?

தாமோதரன்தான் சாம, தான, பேத.. தண்டங்களை அறிந்தவன்.. அவனுடைய அப்பாவான ஈஸ்வரன் அதைப்பற்றியெல்லாம் அறியாதவர்.. பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடைக்காது என்பதில் அளவற்ற நம்பிக்கையை உடையவர்..

"என்னத்தன்னு சொல்லுவேன்..? தலைகீழா நின்னு தண்ணியைக் குடிச்சாலும்.. அவர் வாயில இருந்து ஒற்றைப் பொய் வந்து தொலைக்காதுடா.."

அது என்னவோ மாபெரும் குற்றத்தைப் போல புலம்பித் தொலைப்பான் தாமோதரன்.. கலப்படமில்லாத

உண்மையை வைத்துக் கொண்டு எப்படி இந்த உலகத்தில் வாழ்வது என்ற கோபம் அவனுக்கு..

"மனுசன் காஞ்சிபுரத்தை விட்டு இந்தப்பக்கம்.. அந்தப்பக்கம் நகர்கிறது இல்லைடா.. வெளியில வந்து பார்த்தாத்தானே தெரியும்.. உண்மையை வைச்சுக்கிட்டு ஒரு மண்ணும் பண்ண முடியாதுன்னு.. குண்டுச் சட்டியிலேயே குதிரையை ஓட்டுகிறவரு.. பொய்யை ஓட்டாம என்ன செய்வாரு..? இந்த சென்னை மாநகரத்திலே இருந்து பார்த்தாத்தானே பொய்யோட மதிப்பைப் பத்தித் தெரியும்..?" பொங்குவான் தாமோதரன்..

அப்படி உண்மையை ஊன்றிப் பிடித்திருக்கும் ஈஸ்வரனுக்குத்தான் போனைப் போட்டிருந்தான் சித்தார்த்தன்..

"என்னப்பா.. சித்தார்த்து.. எப்படியிருக்கிறேப்பா..? என்புள்ள உன் கம்பெனியில நேர்மையா வேலை செய்கிறானாப்பா..?" ஈஸ்வரன் கேட்டார்..

'இதை மட்டும் உங்க மகன் காது கொடுத்துக் கேட்டிருக்கணும்.. சித்தார்த்தனுக்கு சிரிப்பு வந்தது..

"இந்த நீதி நேர்மையையெல்லாம் உங்களோட சொத்துப்பா... பெற்ற தகப்பனா இருந்தாலும்.. பிறத்தியார் சொத்தில கை வைக்க மாட்டான் இந்த தாமோதரன்.."

இப்படியாகப்பட்ட சுயமரியாதை டயலாக்கை ஈஸ்வரனிடம் தாமோதரன் சொல்லிக் கொண்டிருந்ததை சித்தார்த்தன் ஓர்முறை கேட்டிருக்கிறான்..

அன்று காஞ்சியில் சிரிக்க ஆரம்பித்தவன்.. சென்னைக்கு வந்து சேர்கிறவரைக்கும் சிரிப்பை நிறுத்த வேயில்லை..

"உன்னை.. என்னதாண்டா செய்கிறது..?"

இதை திரும்பித் திரும்பிப் பார்த்துக் கேட்டபடி அவன் காரோட்டியதில் டென்சனாகிப் போன தாமோதரன்..

"எதுவும் செய்ய வேணாம்.. முதல்ல ரோட்டைப் பார்த்துக் காரை ஓட்டு.." என்று கடுகடுத்தான்..

அப்படியாகப்பட்ட உண்மை விளம்பி ஈஸ்வரனிட

"உங்களோட பிரண்டு முரளிதரன் எப்படியிருக்கார் அங்கிள்..?" என்று விசாரித்தான் சித்தார்த்தன்..

'முரளிதரனா..? யார் அது..?'

தாமோதரனின் விரல் தாளம் பலமானது.. யாரோ ஒரு அங்கிளிடம்.. யாரோ ஒரு முரளிதரனைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் சித்தார்த்தனைப் பற்றிக் கவலை கொள்ளாமல் தன் போக்கில் மெர்சல் ஆகிட்டேனே என்று மனதுக்குள் பாடிக் கொண்டிருந்தான் அவன்..

"முரளிதரனா..? யாருப்பா அது..?"

ஈஸ்வரன் இப்படித்தான் கேட்டு வைப்பார் என்று சித்தார்த்தனுக்குத் தெரியும்.. இதை எதிர்பார்த்துத்தான் அவன் அவருக்குப் போன் பண்ணினான்.. எதைச் சொல்லியாவது அந்தப் பெண்ணுக்கு தாமோதரன் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை அனுப்பி வைத்துவிடத் துடித்ததின் பின்னணியைப் பற்றி அவன் அறிந்து கொள்ள வேண்டியிருந்தது..

"என்ன அங்கிள் இது..? அவர் உங்களோட பெஸ்ட் பிரண்டுன்னு நம்ம தாமு சொல்றான்.. நீங்க என்னடான்னா அவர் யாருன்னு கேட்கறிங்களே.."

தாமோதரனைப் பார்த்தபடியே செல்போனில் கேட்டான் சித்தார்த்தன்.. தாமோதரனின் தாளம் நின்றது.. அவன் பார்வை கூர்மையாக சித்தார்த்தனின் மீது படிந்தது.. சித்தார்த்தனின் பேச்சை உன்னிப்புடன் அவன் கவனிக்க ஆரம்பித்தான்..

"அவனுக்கென்ன..? ஏதாச்சும் மறதியிலே பேசியிருப் பான்.. என் பிரண்டைப் பத்தி அவனுக்கென்ன தெரியும்..? முரளிதரன்னு எனக்கு யாரையுமே தெரியாதுப்பா.. தெரிஞ்சாத்தானே பிரண்டா பழக முடியும்..?"

"தட்'ஸ் ரைட்.. தட்'ஸ் ரைட்..

"தெரியாத ஆளுகூட எப்ப ப் பழக முடியும்..?"

"முடியவே முடியாதுதான்.."

"முடியாத ஓர் விசயத்தைப் பத்தி எதுக்கா பேசனும்..?"

"ஷ்யூர்.. ஷ்யூர்.."

"காலம் பொன் போன்றது சித்தார்த்.."

அடுத்து அவர் கடமை கண் போன்றது என்றுதான் சொல்லப் போகிறார் என்பதை சித்தார்த்தன் யூகித்து முடிப்பதற்குள்.. அவர்

" டமை கண் போன்றது.. என்றார்..

'முடியலையே..

தானாக மாட்டிக் கொண்ட பொறியிலிருந்து விடுபட முடியாத சித்தார்த்தன் தாமோதரனைப் பார்த்துப் பல்லைக் கடித்தான்..

'இவனால்தான் எல்லாமும்..

"நீ புத்திசாலி சித்தார்த்.. கர்மவீரன்..! உனக்குச் சொல்லனும்னு இல்லை.. வினாடி நேரத்தைக்கூட வீனடிக்காதவன்தான் வாழ்க்கையில் ஜெயிக்க முடியும்.. அலெக்ஸாண்டர் என்ன சொல்லியிருக்கார் தெரியுமா..?"

ஈஸ்வரன் நீண்ட சொற்பொழிவுக்கு தயாரா விட்டதைத் தெரிந்து கொண்ட சித்தார்த்தன்..

'இன்னைக்கு இவருக்கான பலி ஆடு நான்தானா..?' என்று தலையில் கை வைத்தான்..

வெட்டிப் பேச்சு பேசுவதால் மட்டும் நேரம் வீணாகாது.. இதுபோல பொன் பொழிகளை ஊம் கொடுத்துக் கேட்டாலும் வீணாகும் என்று ஈஸ்வரனைப் போன்ற சொற்பொழிவாளர்களிடம் யார் சொல்வது..?

உரலுக்குள் தலையைக் கொடுத்துவிட்டு எடுக்க மாட்டாமல் விழித்த நண்பனைப் பார்த்த தாமோதரன்.. நான் சொல்கிறேன் என்ற ரீதியில்..

"போனை இங்கே கொடுடா.." என்று வாங்கிக் காதில் வைத்தான்..

மறுமுனையின் சொற்பொழிவில் இமை மூடித் திறந்தவன்..

"ஏன்ப்பா.. என் வேலைக்கு வேட்டு வைக்கனும்னு எத்தனை நாளா பிளான் போட்டிருந்தீங்க.." என்று கேட்டுவைத்தான்..

மறுமுனையில் ஈஸ்வரன் சித்தார்த்தனைப் பற்றி வினவியிருக்க வேண்டும்..

"அவன் என்ன உங்களைப் போல காஞ்சி புரத்திலேயே உட்கார்ந்துக்கிட்டு இருக்கானா..? சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டிப்பா அவன்.. உங்க பேச்சுக்கு ஊம் போட்டுக்கிட்டு இருந்தா அவன் கம்பெனி வேலையை யார் பார்க்கிறது.." என்று எரிந்து விழுந்தான்..

தாமோதரன் போட்ட போட்டில் அரண்டு போனவராக மறுமுனையில் போனை அணைத்துவிட்டார் ஈஸ்வரன்.. சித்தார்த்தனிடம் செல்போனை நீட்டியவனின் விழிகள் பார்வையிலேயே அவனைச் சுட்டன..

"தேவையாடா உனக்கு..?"

"இந்தத் தேவை உன்னால் வந்ததுடா தாமு..

"இப்ப எதுக்காக இந்த ஷெர்லெக் ஹோம் வேலையையெல்லாம் செய்கிற..?"

"உன்னைக் கண்டுபிடிக்கத்தான்.."

"கண்டுபிடிச்சு என்ன செய்யப் போகிற..?"

"நீ எதுக்காக முரளிதரனை உன் அப்பாவோட பெஸ்ட் பிரண்டுன்னு பொய் சொன்ன..?"

"யாருடா அந்த முரளிதரன்..? நான் எப்ப அந்தாளை ப்பாவோட பெஸ்ட் பிரண்டுன்னு சொன்னேன்..?"

"அதுவும் மறந்திருச்சா..? வெரிகுட்.. இதுக்கான பதிலும் இந்தப் பெண்ணோட பயோடேட்டாவிலதான் இருக்குது.."

"எதுக்கெடுத்தாலும் இதை ஒன்னைக் காட்டிருவேன்.."

சித்தார்த்தனைத் திட்டித் தீர்த்தபடியே அந்தப் பெண்ணின் பயோடேட்டாவை வேண்டா வெறுப்பாக பார்த்து வைத்தவனின் புத்திக்கு அப்போதுதான் அது உறைத்தது..

'ஆஹா..! மச்சான் சாக்சுப்புட்டானே.. இந்தப் பெண்ணோட அப்பன் பேரு முரளிதரன்னு போட்டிருக்கே..

ஆக.. அந்தப் பெண்ணின் அப்பா உண்மையாகவே தாமோதரனின் அப்பாவின் நண்பர்தானா என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளத்தான் சித்தார்த்தன் ஈஸ்வரனுக்கு போன் போட்டிருக்கிறான்..

'எப்படி பந்தைப் பாட்டாலும் ர் அடிச்சுத் தொலைக்கிறானே.. '

தாமோதரனுக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை.. அவன் முகத்தையே கூர்ந்து பார்த்த சித்தார்த்தனிடம்..

"ஏண்டா இப்படிப் பார்த்துத் தொலைக்கிற..? என் முகத்தில என்ன இருக்கு..?" என்று சண்டைக்குப் போனான்..

"பொய்யும்.. புனை சுருட்டும் இருக்கு.."

நிதானமாக சொன்ன சித்தார்த்தனை விட்டு விளாசி விட்டான் தாமோதரன்..

யாமினி என்ற மாயமோகினியால் நண்பர்களுக்குள் வாக்குவாதம் வந்தது..



# 14

## குருதிப் புனலில் குளிப்பவனிடம் கருணை உள்ளம் இருந்திடுமா..?

ஆம்..! நரசிம்மவர்மன் காஞ்சிமாநகரில் இருந்திருந்தால்.. புலிகேசியின் அமைதித்தூதை மன்னர் ஏற்றுக் கொள்வதை விரும்பியிருக்க மாட்டான்.. அதைக் குறித்த வினாக்களை எழுப்பியிருப்பான்.. புலிகேசி விருந்தினனாக காஞ்சிமாநகரில் பாதம் பதிப்பதில் தமக்குள்ள ஆட்சேபனையை அரசரின் முன்பு சமர்ப்பித் திருப்பான்..

அது போல நிகழ்ந்து விடக்கூடாது என்பதற்காகவே மன்னர் மகேந்திரவர்மர் பாண்டியருடன் போர் புரிவதற்காக நரசிம்மவர்மரை தென்திசைக்கு அனுப்பி வைத்து விட்டு.. புலிகேசியின் அமைதித்தூதை ஏற்றுக்கொண்டு அவனை விருந்தினனாக.. காஞ்சி மாநகரின் அரண்மனைக்கு அழைத்தார்.. வரவேற்பையும் அளித்து ராஜ மரியாதை களுடன் உபசரனைகளை செய்தார்..

சிறிதளவும் தயக்கமின்றி மாலை மரியாதை களையும்.. உபசரணைகளையும் ஏற்றுக்கொண்ட புலிகேசியின் வதனத்தில் இவை எமக்குரியவை எனும் ாசகம் வரைந்து பதிக்கப்பட்டிருந்தது.. விருந்தினன் பால அல்லாமல் அவன் வெகு தோரணையாக.. அந்த

நகரத்துக்கு உரியவன் அவனே என்பதைப் போன்று அமர்ந்திருந்ததில்.. சபையோரும், மக்களும் சினம் கொண்டார்கள்..

தமது வழக்கப்படி மன்னன் மகேந்திரவர்மன் அமைதியின் வடிவமாகவே இருந்தார்.. புலிகேசியின் ஆணவத்தையும், செருக்கையும் அறிந்து கொண்டதாகவே புலப்படுத்திக் கொள்ளவில்லை..

"எமது பல்லவநாடு.. கலைகளின் பொக்கிசம் என்பதை தாம் அறிவீரோ சாளுக்கிய அரசரே..?" என்று புலிகேசியைப் பார்த்து வினவினார்..

"அறிவேன் பல்லவ மன்னரே..! ஓர் அரசன்.. படை பலத்திலும்.. வாள் கூர்மையிலுமே பெருமிதம் கொள்வான். யாம் அப்படித்தான்.. எமது சாளுக்கிய நாடு போர் பாசறை..!" புலிசேகி மீசையை முறுக்கினான்..

அவையில் இருந்தவர்களின் வெகுண்ட பார்வையை மகேந்திரவர்மனின் சாந்தமயமான பார்வை அமைதிப் படுத்தியது..

"கலைகளின் சுரங்கமாக இருக்கும் நாட்டில் வீரத்துக்கு பஞ்சம் ஏற்படும் என்று எவர் இயம்பியது.. சாளுக்கிய மன்னரே..? எமது வீரத்தை எட்டுத் திக்கிலும் யாம் உணர்த்தியிருக்கிறோம்.. இதை தாங்களும் அறிவீர்களே.."

மகேந்திரவர்மனின் பொருள்பொதிந்த உரையில் சாளுக்கிய புலிகேசியின் வதனம் கருமை கொண்டது..

அவன் முற்றுகைப் போரில் தோல்வியுற்று அமைதித் தூதனாக அங்கே வருகை தந்திருப்பதை மகேந்திரவர்மன் இயம்பிக்காட்டுகிறார் என்று தன் மனதில் வெஞ்சினம் கொண்டான் புலிகேசி..

இதுதான் அவன்..! பகைவனுக்கும் காருண்யம் காண்பித்து.. சகலமரியாதைகளுடன் வரவேற்று.. அறுசுவை உணவுடன் கூடிய விருந்தை அளித்து.. இளைப்பாற விருந்தினர் மாளிகையையும் ஈந்து... அரசவைக்கு அழைத்து வந்து விருந்தினர்க்குரிய ஆசனத்தில் அமர வைத்திருக்கும் மகேந்திரவர்மரிடம் நட்புடன் கூடிய நன்றிஉணர்வு மேலோங்குவதற்குப் பதிலாக.. பழி வாங்கும் வெறியே அவனுக்குள் கிளர்ந்தது..

அரசவை வாசலில் சலசலப்பு ஒலித்தது..

"மன்னர் பெருமானே..! நமது நாட்டின் நாட்டியத் தாரகை சிவகாமிச் செல்வி.. அரசவையில் நடனமாட தமது தந்தையாருடன் வருகை புரிந்திருக்கிறார்.."

வாயிற்காவலன் வந்து சிரம் தாழ்த்திச் செய்தி சொன்னான்..

"வரச் சொல்.." மகேந்திரவர்மர் உத்தரவிட்டு விட்டு புலிகேசியின் புறம் திரும்பினான்..

"வருகை தந்திருக்கும் நாட்டிய தாரகை சிவகாமி.. எங்களது பல்லவ நாட்டின் மற்றுமொரு கலைப் பொக்கிசம்..! அவளுடைய தந்தையான ஆயனர் செதுக்கும் சிற்பங்களுக்கு இவ்வுலகில் நிகரில்லை.. அவர்கள் இருவரும் எமது நாட்டின் கலைச் செல்வங்கள்..!"

இந்த வார்த்தைகளை மட்டும் மகேந்திரவர்மனின் திருவாய்மொழி உதிர்க்காமல் இருந்திருந்தால்.. சிவகாமியின் வாழ்வில் சதிர் மட்டுமே ஆடியிருக்கும்.. புயலடித்திருக்காது.. சூறாவளி சுழல் காற்றில் அவள் சிக்கியிருக்க மாட்டாள்.. புயலில் சிக்கிய பூங்கொடியாய் அவளது எதிர் ாலம் சிதிலமடைந்திருக்காது.. மனமார அவள் காதலித்த நரசிம்மவர்மன் வாழும் காஞ்சியை விட்டு அவள் நீங்கியிருக்க மாட்டாள்..

துயர் தரும் நிகழ்வுகளை அவள் வாழ்வில் கொண்டு வந்து சேர்க்கவிருக்கும் வார்த்தைகளை இயம்பிவிட்டார் பல்லவ மன்னர் மகேந்திரவர்மர்..!

இந்த நிகழ்வில் அவர் குற்றமற்றவர்..! அவர் இயம்பும் வார்த்தைகள் சிவகாமிக்கு எதிராகத் திரும்பி விடக் கூடும் என்று அவர் சொப்பனமா கண்டார்..?

சிவகாமியின்மீது அவருக்கு சினம் உண்டுதான்.. அவருடைய திருக்குமரனின் மனையாட்டியாக அவள் வருவதை ஒருபோதும் அவர் விரும்ப மாட்டார்தான்.. அதற்கான ஒப்புதலை அளிக்க மாட்டார்தான்.. நரசிம்மனின் வாழ்விலிருந்து அவளைப் பிரித்து வைக்கும் அனைத் த் திட்டங்களையும் வகுத்து செயல் படுத்துவார்தான்.. அரண்மனைக்குள் அவளது பாதங்கள் படிவதை அவர் தடுத்து நிறுத்துவார்தான்.. பட்டத்து இளவரசனின் பட்டத்து ராணியாக.. ஓர் அரசிளங்குமரியையே அவர் தேர்வு செய்வார்தான்..

இத்தனையும் இருந்தாலும்.. சிவகாமிக்கு இவைகளைத் தவிர்த்த வேறெந்த தீங்கும் இழைக்க

வேண்டுமென்ற சித்தம் மன்னர் மகேந்திரவர்மருக்கு இருந்ததே இல்லை..

சிவகாமி அரசவைக்குள் வந்து விட்டாள்.. நடன உடையில் இருந்தாள்.. கரம் குவித்து, சிரம் தாழ்த்தி மன்னர் மகேந்திரவர்மருக்கு தனது வணக்கத்தை தெரிவித்தவள்.. புலிகேசியின் புறம் திரும்பிக்கூட நோக்கவில்லை..

அதில் மனம் புழுங்கினான் புலிகேசி..! அவன் அமர்த்திருப்பது பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் அரசவை... அங்கு வருகை தந்திருக்கும் சிவகாமி அந்நாட்டின் குடிமகள்... தமது மன்னருக்கு உரிய வணக்கத்தையே அவள் செழுத்தினாள் என்ப அவன் சித்தத்திற்கு புலப்படவே இல்லை.. மாறாக மன்னன் மகேந்திரவர்மனுக்கு மட்டும் வணக்கம் தெரிவித்ததின் மூலமாக சிவகாமி புலிகேசியை அவமதித் விட்டாளென்று அவன் மனம் கொதித்தது..

“ஆடல் தொடங்கட்டும்..” மன்னர் உத்தரவிட்டார்..

நடனத்தை கண்டு களிக்க அவையோரும்.. அவையில் கூடியிருந்த நாட்டு மக்களும் ஆர்வமா இருந்தார்கள்.. ஆயனர் அவருக்கு அளிக்கப்பட்ட ஆசனத்தில் ஒதுங்கி அமர்ந்தார்.. சிவகாமி அரசவையின் மையப் பகுதியில் நடனமாட வந்து நின்றாள்.. அவள் விழிகள் அமர்ந்திருந்த அவையினரின் நடுவே நரசிம்மவர்மன் எங்கு வீற்றிருக்கிறான் என்று தேடி அலைந்தன.. எங்கும் அவன் தென்படாததில் அவள் இதயத்தில் ஏமாற்றம்.. குடி கொண்டது.. அதைக்

கண்காணித்துக் கொண்டிருந்த மகேந்திரவர்மரின் புருவங்கள் முடிச்சிட்டன.. அவர் சிவகாமியின் தேடுதலை விரும்பவில்லை..

நரசிம்மவர்மன் பாண்டியருடன் போரிட தென்திசைக்கு சென்று விட்ட விவரத்தை சிவகாமி அறிய மாட்டாள்.. காஞ்சியின் அரசவையில் நடனமாட அழைப்பு வந்த போதே.. அங்கே தமது காதலனைக் கண்டு விடலாம் என்ற உவகைதான் அவள் மனதில் முதலில் வந்தது.. அதன் பொருட்டே அவள் சிறப்பாக தம்மை அலங்கரித்துக் கொண்டு அங்கு விரைந்து வந்தாள்.. வந்த இடத்தில் நரசிம்மன் இல்லாததில் பெருத்த ஏமாற்றம் கொண்டாள்..

'நீ காஞ்சிக்கு வந்தால் எமைக் காணலாம் என்று வாக்களித்த இளவரசர் ஏன் இங்கு இல்லை..? யாம் வருவதை அறிந்தும் அவர் எங்கு சென்றார்..?'

சிவகாமியின் இமையோரம் துளிர்த்த கண்ணீர் துளிகள் உதிரவா என்று அவளிடம் அனுமதி கேட்டன.. நிற்குமிடம் அரசவை என்பதில் அவள் இமைசிமிட்டி அவற்றைத் தடுத்து நிறுத்தினாள்.. சுற்றியிருந்த மக்கள் வெள்ளத்தை நோக்கினாள்..

'இனியும் காலதாமதம் செய்தல் இயலாது.. நடனமாட வந்தவள்.. நடனமாடித்தான் ஆகவேண்டும்..

கடமை கண்முன் நின்றதில் சிவகாமி பா நடனமாட ஆரம்பித்தாள்..

*"மயிலே..! எமைக்காண..*
*மயில்வாகனம் தனில் அமர்ந்து..*
*விரைந்தேகி வருவேனென்று சொன்ன*
*மன்னவரை எங்கே மறைத்து வைத்தாய்..?"*

சிவகாமியின் சுழன்றாடிய பாதங்களுடன் சுழன்றாடிய அவள் விழிகள் சங்கேதமாய் மகேந்திரவர்மரை நோக்கியதில் அவள் எழுப்பும் வினா அவருக்கானது என்பதை புரிந்து கொண்டார் பல்லவ மன்னர்..

'என்ன ஒரு திண்ணக்கம்..!' அவரது விழிகள் சிவந்தன..

*"என்னவரின் பேரெழிலில்..*
*நீன் அகமே மயங்கிவிட...*
*போதையிலே பாதை மாறி..*
*போனதிசை யாது மயிலே..?"*

மயிலின் போதையை எடுத்துரைத்து விழிகள் செறுக சிவகாமி அபிநயித்த விதத்தில் மக்கள் கூட்டம் உற்சாகத்துடன் ஆர்ப்பரித்தது..

*"தோகை விரித்து நீ ஆடினாலும்..*
*தோகை இவளின் துணை மயங்கார்..*
*வீண் உனது ஆசை இதை*
*விடுத்து அவரை விடுவிப்பாய்.."*

கூட்டத்தில் உற்சாக வெள்ளம் கரை புரண்டோடியது.. வாக்குத் தந்த காதலனை மயில் மறைத்து வைத்து விட்டதாக சிவகாமி அபிநயித்துப் பாடிய விதத்தில் கூட்டம் ஆர்ப்பரித்தது. அவனது அழகில் மயில் மயங்கி

போதை கொண்ட விட்டதாக சிவகாமி இடித்துரைத்ததில் கரம் தட்டி நகைத்தது.. எத்துணைதான் மயில் தோகை விரித்து ஆடி தமது அழகில் அக்காதலனை மயக்க முயன்றாலும் அக்காதலன் மயங்க மாட்டான் என்ற காதலியின் தன்னம்பிக்கையை சிவகாமி புலப்படுத்திய விதத்தில்..

"ஆஹா..! அற்புதம்..!" என்று பாராட்டியது..

புலிகேசி அந்த சந்தோசக் கூச்சலை விரும்ப வில்லை.. தோற்றுப்போன மனநிலையுடன் அவன் அங்கு வீற்றிருக்கும்போது.. நடனம் கண்டு காஞ்சியின் குடிமக்கள் மனம் மகிழ்வதா..? அதை அவன் நயனங்கள் காண்பதா..?

புலிகேசிக்கு சிவகாமியின் நடனம் உவப்பாக இல்லாததைப் போலவே.. மன்னர் மகேந்திரவர்மருக்கும் அவளது ஆடலில் உவப்பில்லாமல் போனது..

மயிலேறி வருவதாக அவளிடம் வாக்குரைத்த காதலன் யார் என்பதை மன்னர் மகேந்திரவர்மர் அறிவாரே..

காதலின் சுவையை விடுத்து.. வேறொரு திக்கில் நடனத்தைத் திருப்பி விடும் கட்ட.ளையை அவர் இட்டார்.

"சிவகாமி..! நமது காஞ்சியின் ஏகாம்ப ரஸ்வரரைக் குறித்த பாடலை நீ பாடி ஆடுவாயாக.."

ஸ்வரம் நடுவே தடை ஏற்பட்டதைப் போல உணர்ந்தாள் சிவகாமி.. நரசிம்மன்தான் அங்கு இல்லை..

அவனைப்பற்றிய நினைவுகளுமா அங்கு இல்லாமல் போக வேண்டும்..? அவள் யாது செய்தாள்..? மனம் நாடி வந்த காதலனின் திருமுகத்தைக் காண இயலாமல் போன சோகத்தை இசையிலும், நடனத்திலும் புலப்படுத்தி தனது மனதை ஆற்றிக் கொள்ள விழைந்தாள்.. அது ஒரு தவறா..? அதைத் தடுக்கும் அரசாணையை மன்னர் பிறப்பிக்க வேண்டுமா..?

தளர்ந்த மனதோடு.. மனதை திசை திருப்பி.. பக்தி ரர்க்கத்தில் இறங்கினாள் சிவகாமி..

*"முக்கண் முதல்வன் அவன்..*
*மூவுலகும் காப்பவன்..*
*எத்திக்கும் குடியிருக்கும்..*
*ஏகாம்பரேஸ்வரன் அவன்.."*

ரம் குவித்து மனதில் ஏகாம்பரேஸ்வரை நிறுத்தி அவள் நடனமாட ஆரம்பித்ததில் கூட்டம் அமைதியானது. அதில் புலிகேசிக்கு மகிழ்ச்சியோ.. ம ழ்ச்சி..!

*"சடைமுடியில் கங்கை தரித்து..*
*சதிராடும் தில்லையம்பதி..!*
*உமையொரு பாகனாக..*
*சதிக்கு சரிபாதி உடல்தந்த பூபதி..!"*

மகேந்திரவர்மர் பக்திப் பெருக்குடன் புலிகேசியை நோக்கினார்.. அவனோ கற்பாறை வதனத்துடன் பதிலுக்கு நோக்கி வைத்து பக்திக்கும் அவனுக்கும் பலகாததூரம் என்பதை மெய்ப்பித்தான்.. இது பணிக்கு ஆகாது என்று

பல்லவர் நயனம் திருப்பிக் கொண்டார்.. புலிகேசி தம் பரிவாரத்தை 'அஃது..' என்று நோக்கிவைத்தான்..

*"பிறை சூடிய பெருமானின்..*
*வரம் வேண்டித் தாள் பணிகின்றோம்..*
*காஞ்சியிலே உரைபவனே..!*
*ஏகாம்பரேஸ்வரனே..! எமைக் காப்பாய்.."*

சிவகாமி நடனத்தில் லயித்திருக்க.. மாறிவிட்ட நடனத்தின் போக்கில் அசுவராஸ்யம் கொண்ட மக்கள் கூட்டத்தில் ஒருவன்.. அருகில் நின்றிருந்தவனின் வதனம் பார்க்காமல்..

"என்ன அப்பனே.. இவ்வாறு நிகழ்ந்து விட்டது..?" என்று சூள்கொட்டினான்..

"எவ்வாறு நிகழ்ந்தது..?" ஏதும் அறியாத மழலை பால அவன் வினவினான்..

"காதலைப் பாடி அபிநயித்த சிவகாமிச் செல்வி.. பக்தியின் பக்கமாக பார்வையைத் திருப்பி விட்டாரே.. நான் நினைக்கிறேன்.."

"யாது நினைக் றாய் அப்பனே..?"

"இந்தக் குரூரவதனம் கொண்ட புலிகேசியைக் கண்ணுற்ற ம் காதல் நடனம்கூட கதிகலங் ப் போ டி விட்டதோ..?"

"அவ்வாறா இயம்பு

"ஆம் அப்பனே..! அவனது முகரையைப் பார்த்தாயா..?"

"பார்த்தேன்.. பார்த்தேன்.."

"கோட்டான் போலவே உள்ளதல்லவா..? குரங்கின் வதனம் போலவும் உள்ளது.."

"உமக்கு அவ்வாறா தோன்றுகிறது..?"

"ஆம்..! எமக்கு அவ்வாறுதான் தோன்றுகிறது.. இந்த அழகுத் திருமுகத்தின் முன்னால் ஆடலரசி ஆட வந்தால் அவளுக்கு காதல் நடனம் கூட மறந்துதான் போகும்.. வதனமா இது..?"

"உமக்கு இதில் இத்துனை சம்சயம் எனில் உம் சார்பாக நான் சென்று வினவி.. விடைபெற்று வரவா அப்பனே..?"

"எவரிடம்..?"

"வேறு எவரைச் சொல்வேன் அப்பனே..? எல்லாம் தாம் கோட்டான் என்றும் குரங்கின் வதனம் என்றும் வர்ணனை செய்து கொண்டிருக்கும் புலிகேசியைத்தான் இயம்புகிறேன்.."

"யாது உரைத்தாய்..?"

அரண்டுபோன அவன் அப் பாதுதான் அருகிலிருந்தவனின் திருமுகத்தைப் பார்த்தான்..

## *ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*

## 14

### சொன்னது நீதானா..? - இல்லை உனைப்போல் வேறொருவனா..?

"ஓ...

உதட்டைக் குவித்த தாமோதரன் கசப்புடன் சிரித்தான்.. சித்தார்த்தனுக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. இது போன்ற கசந்த சிரிப்பை.. அதற்கு முன்னால் தாமோதரன் சிரித்து அவன் பார்த்ததில்லை..

"தாமு.."

"ஜி.எம்ன்னு கூப்பிடுங்க எம்.டி. ட்'ஸ் பட்டர்.."

"டேய்.."

"வேண்டா மக்குள்ளே அபிஷியலா பேசிக்கலா "

"அபத்தமாக உளராதேடா ான்.."

"மச்சானா..? யாருக்கு யார் மச்சான்..?"

"வில்லங்கமா பேசித் தொலைக்காதே.. நீரஜாவுக்குத் தெரிஞ்சா நீ 'கைம்மா' தான்.. மனசில வைச்சுக்க.."

நீரஜாவின் பெயரைக் கேட்டதும் கொஞ்சம் தனிந்தான் தாமோதரன்.. மௌனமாக சித்தார்தனை

முறைத்தான்.. சித்தார்த்தனுக்குள் குற்றஉணர்வு வந்தது.. உயிர் நண்பனின் மனதை புண்படுத்தி விட்டதை உணர்ந்தான்..

'எப்படி சரி பண்ண..?'

துணி கிழிந்தால் தைக்கலாம்.. மனம் கிழிந்தால் தைப்பதற்கு எந்தக் கடையில் ஊசி கிடைக்கும்..? கிழிந்த மனத்தை தைத் சரி செய்யும் ஊசியினை கடவுள் கொடுத்திருக்கிறாரா..?

"நீ செய்தது தப்புடா.. அதை முதல்ல புரிஞ்சுக்க.." சமாதானமாக பேச ஆரம்பித்தான்..

"எந்த வகையில் தப்பு.. அதையும் சால்லிரு.. பொய்யும் புனைசுருட்டும் பண்ணி உன் கம்பெனி *சீக்ரெட்ஸை* யாருக்கு விலை பேசி வித்தேன் சித்தார்த்..?" ஊசி முனையைப் போல கேட்டு வைத்தான் தாமோதரன்..

"*சீச்சீ*.. என்ன பேச்சுன்னு பேசற..?"

"அட..! இதைத்தானடா நீ சொன்ன..?"

"நான் சொன்னதுக்கான மீனிங்கே வேற.."

"ரெண்டும் ஒன்னுதான்.. உன்கிட்ட பொய் சொல்லி.. புனை சுருட்டு பண்ணி நானொன்னும் பணம் சேர்த்துக்க போறதில்ல சித்தார்த்.. உன் கம்பெனிக்கு உண்மையா உழைக்கிறவன்.."

"இல்லேன்னு நான் சொன்னேனா..?"

"நீ பேசின வார்த்தை பெரிசு சித்தார்த்.."

"ஐ ஆம் ஸாரி.. போதுமா..?"

கொஞ்சம்கூட யோசிக்காமல்.. தயங்காமல்.. தான் அந்தக் கம்பெனியின் எம்.டி என்பதையும் தனது உயரத்தையும் மறந்து இறங்கி வந்து சித்தார்த்தன் மன்னிப்புக் கேட்டதில் தாமோதரனின் மனம் இளகி விட்டது..

"உன்கிட்ட இது ஒன்னு இருக்குடா.. பூ வேலியைப் போட்டு சிறை பிடிச்சு வைப்ப.." அலுத்துக் கொண்டான்..

"இது பூவேலிகூட இல்லை... நூல்வேலிதான்.. அதுக்காக நீ அறுத் க்கிட்டுப் போயிருவியா தாமு..?" தீர்க்கமான பார்வையுடன் கேட்டான் சித்தார்த்தன்..

"இதுக்கொன்னும் குறைச்சலில்ல.. என்னமோ கட்டின பெண்டாட்டிகிட்ட கேட்டு வைக்கிறதப் போல கேட்டு வைப்பான்.." தலையில் அடித்துக் கொண்டான் தாமோதரன்..

"மூழ்காத ஷிப்பே ஃரண்ட்ஷிப்தாண்டா.. சித்தார்த்தன் வியாக்கினம் சொன்னான்..

"மூழ்காத ஷிப்பைப் பத்தியெல்லாம் நீ பேசக்கூடாது.. ஆளைப்பாரு.. ஒரு செகரட்டரி வேலைக்கு நான் ரெகமெண்ட் பண்ற ஆளைப் போட முடியலை.. நானெல்லாம் ஒரு ஜி.எம்.. எந்தப் பக்கம் போனாலும் அந்தப் பக்கம் வந்து கதவை அடைச்சு வைக்கிற.. தலையால தண்ணி குடிச்சுப் பாத்தாலும் அசைஞ்சு கொடுக்க மாட்டேங்கிற.."

"நீயேண்டா எந்தப் பக்கமும் போற..? ஒரே இடத்தில நின்னு தொலைக்க வேண்டியதுதானே..? தலையாலே தண்ணி குடின்னு உன்கிட்ட நான் வந்து சொன்னேனா..?"

"இந்தப் பொண்ணுக்கு வேலை கொடுடான்னு கேட்டா நீ இந்தப்பாடு படுத்துவியா..?"

"எதுக்காக இந்தப் பொண்ணுமேல இந்த அளவுக்கு அக்கறைப்படற..? அதுக்கு ஒரு கான்க்ரீட் ரீசன் சொல்லு.."

"இதையே எத்தனை தடவைதான் கேப்படா..? எனக்கு அந்தப் பெண்ணை ரொ ்பப் பிடிச்சிருக்கு.. போதுமா..?"

தாமோதரன் 'சுள்' ளென்று எரிந்து விழுந்ததற்கு..

"ஈஸிட்..?" என்ற கேள்வி அறை வாசலில் இருந்து வந்தது..

'எங்கேயோ கேட்ட குரல்..!'

தாமோதரன் உட்கார்ந்த வாக்கில் ஒருக்களித்து சாய்ந்து கழுத்தை அறுபது டிகிரி கோணத்தில் திரும்பிப் பார்த்தான்.. அங்கே நூறு டிகிரி வெப்பத்துடன் நின்றிருந்தாள் நீரஜா..! சித்தார்த்தனின் அருமைத்தங்கை..

'இவ எப்ப வந்தா..?'

அவசரமாக எழுந்து நின்று அவளை வரவேற்க முனைந்தான்.. தாமோதரன்..

"வாங்க.. வாங்க.. இப்பத்தான் வர்றீங்களா..?"

"ஊஹூம். நீங்க இந்தப் பெண்ணை வேலைக்குச் சேர்த்துத்தான் ஆகனும்னு உங்க பிரண்டுகிட்ட ரவுண்டு கட்டி பைட் பண்ணிக்கிட்டு இருந்தப்பவே வந்துட்டேன்."

ஒரு மார்க்கமாக அவனை முறைத்தபடி உள்ளே வந்தாள் நீரஜா.. பகைவனைப் பார்ப்பதைப் போல பந்த பாசத்துடன் தாமோதரனைப் பார் ப பக்கவாட்டிலிருந்த விருந்தினர் சோபாவில் 'தொபுக்கட்டீர்' என விழுந்தாள்.. அதுவரை யாரோ ஒருவரின் அறைக்கு வந்திருக்கும் யாரோ ஒருவரின் தங்கையைப் பார்ப்பதைப் போல சொந்தத் தங்கையை அன்னியமா பார்த்தபடி உட்கார்ந்திருந்த சித்தார்த்தன்..

"மெதுவா.. சோபாவுக்கு வாயிருந்தா அழுதிருக்கும்.. என்று சொன்னான்..

"அழுதா நீ வந்து கண்ணீரை துடைச்சு விடு.. உன் கம்பெனி சோபாதானே.. எரிச்சல் பட்டாள் நீரஜா..

எக்குத்தப்பாக மாட் கொண்டு விட்ட துயரத்துடன்..

"எதுக்குங்க கோபப் படறிங்க..?" என்று தழைந் கேட்டான் தாமோதரன்..

"கோபமா..? நானா..? உங்களிடமா..? யாரு நீங்க..?" அடுக்கினாள் நீரஜா..

"நான் யாருடா..?" தாமோதரனே குழம்பிப் பாய்விட்டான்..

"என்கிட்டக் கேட்டா..? நானா 'யார் நீ'ன்னு ட்டேன்..? அவதான கேட்டா..? ஸோ.. நீ கொஸ்டின் பண்றதா இருந்தா அவளைத்தான் கொஸ்டின் பண்ணனும்.." நைஸாக கழன்று கொண்டான் சித்தார்த்தன்..

"அடப்பாவி..!" தாமோதரன் அங்கலாய்த்தான்..

"எதுக்கு அவனை பாவிங்கறிங்க..? உங்களுக்கு பிடிச்சவங்களுக்கு அவன் வேலை போட்டுத் தரலேங்கிறதுக்காகவா..?" குத்தலாக கேட்டாள் நீரஜா..

'இது வேறயா..?'

விரிந்து கிடந்த ஃபைலில் ஒட்டப்பட்டிருந்த அந்தப் பெண்ணின் படத்தை உற்றுப் பார்த்தான் தாமோதரன்..

'மூக்கும் முழியுமா நல்லாத்தான் இருக்கா..

மனதில் ஓடிய எண்ணங்களை நீரஜா அறிந் ாண்டால் அவன் நிலைமை என்னவாகும்..?

தர்மசங்கடத்துடன் அவன் நீரஜாவைப் பார்த்தான்.. அவளோ புகைப்படத்தில் இருந்த பெண்ணையே பார் கொண்டிருந்தாள்.

'என்னத்தக் கேக்கப் போறாளோ.. அவனது அடிவயிறு கலங்கியது..

"என்ன பேரு..?"

திடிரென்று அவள் கேட்டு வைத்ததில்..

'இவளுக்கு என் பேர் மறந்து போனதா..?' என்று குழம்பிப் போனான் தாமோதரன்.. அந்தக் குழப்பத்தோடு..

"தாமோதரன்ங்க.." என்றான்..

சித்தார்த்தன் உரக்கச் சிரித்து வைத்தான்..

'உன்னாலதாண்டா எல்லாக் கருமாந்திர புலன் விசாரணையும் வந்து தொலைச்சிருக்கு.. தாமோதரன் அவனை பார்வையிலேயே எரித்தான்..

"ஊஹீம்..! என்னை முறைக்கக் கூடாது... அங்கே முறைக்கனும்.. இதுக்கும் எனக்கும் எந்தக் கனெக்சனுமில்ல... சொல்லிட்டேன்.." இரக்கமற்ற நண்பனாக கறார் குரலில் சொல்லி விட்டான் சித்தார்த்தன்.

'ஏண்டா சொல்ல மாட்ட..? மாமல்லபுரத்துக்குப் போனவன் சிலைகளை ரசிச்சுட்டு திரும்பி வராம.. சிலை போல இருக்கிற பொண்ணைப் பார்த்து கவுந்து தொலைச்சிட்டு என்னையா மாட்டி விடற..? மகனே இருக்குடா உனக்கு.. உன்னை அந்த மாய மோகினிகிட்ட இருந்து காப்பாத்தனும்னு நான் கிடந்து தவிக்கிறேன்.. நீ என்னடான்னா என்னை உன் தங்கச்சிக்கிட்ட கோர்த்து விட்டுட்டு எனக்கென்னன்னு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கிற..

தாமோதரனின் அக்கினிப் பார்வைக்கு மட்டும் சக்தி இருந்திருந்தால் அந்த இடத்திலேயே சித்தார்த்தன் பஸ்பம்தான்..

அப்படியில்லாமல் மானிடனாக அவன் பிறந்து தொலைத்து விட்டதினால் சித்தார்த்தனும் தப்பிப் பிழைத்து வைத்தான்..

"அங்கே என்ன முறைப்பு வேண்டிக்கிடக்கு..?" நீரஜா சீறினாள்..

"இதை நீதான் கேட்கனும்.. நான் கேட்டா துரோகிம்பான்.. அதுவே என் சிஸ்டர் கேட்டா உடம்பை எட்டு கோணலா மடக்கி வளைஞ்சுக்கிட்டு 'ஹி..ஹி'ன்னு சப்பைக் கட்டு கட்டுவான்..." சித்தார்த்தன் தூண்டி விட்டான்..

'ஆமடா மச்சான்.. உன் தங்கைக்கு பேசவே தெரியாது.. நீ எடுத்துக் கொடு.. தாமோதரன் பல்லைக் கடித்தான்..

அது ஒரு வியூகம்..! இன்னதென்று பெயர் சொல்ல முடியாத அந்த வியூகத்தில் வெளிவர விரும்பாமல் சிக்கிக் கிடந்தான் தாமோதரன்.. எட்டாக்கனிதான்.. அவனால் எட்டிவிட முடியாத உயரம்தான்.. இருந்தும் பொருள் கூற முடியாத புதிரான பார்வைகளின் பின்னால் ஏதேனும் ஒளிந்திருக்கக்கூடுமோ என்று அவனது அடிமனம் ஆசை கொள்கிறதே..



15

சதிராட வந்தவளின் - மனம்
சதிராடி சிதறியது..

**வி**தி வலியது..!

எந்தக் கனகவள்ளியை மணக்க இருந்தவனிடமிருந்து பிரித்து தாம் மணக்க நாளை நிர்ணயம் செய்து கொண்டிருக்கிறானோ.. அந்தக் கனக வள்ளியை மணக்க இருந்து பறி கொடுத்தவன் கொந்தளிக்கும் சினத்தோடு.. புலிகேசியின் திருவதனத்தை அங்குலம்.. அங்குலமாக விமரிசனம் செய்தனின் அருகே நின்றிருந்தான்..

'ஏகாம்பரேஸ்வரா..! இத்துனை நாழிகையும் இவனிடமா எமது உள்ளத்திலிருந்ததைக் கொட்டிக் கவிழ்த்தேன்..?'

அவன் திகிலடைந்து போனான்.. கனக வள்ளியை அவனிடம் இழந்து நிற்பவனோ.. கிடைத்த வாய்ப்பை இறுக்கிப் பற்றிக் கொள்கிறவனாக.. குடம், குடமாக புளியைக் கரைத்து.. கனகவள்ளியை மணக்க இருந்தவனின் வயிற்றில் நிரப்பிக் கொண்டிருந்தான்..

"யாம் உரைத்ததை நின் செவிகள் கேட்கவில்லையா அப்பனே..? போகட்டும்.. இப்போது தெளிவுபட திரும்பவும் உரைக்கிறேன் கேட்டுக்கொள்.. அதோ அமர்ந்திருக்கும்

புலிகேசியிடம் சென்று.. அவன் வதனம் கோட்டானின் வதனம் போல உள்ளதா..? அல்லது குரங்கின் வதனம் போல உள்ளதா..? என்ற தமது சம்சயத்தை உரைத்து.. புலிகேசியின் வதனத்தைக் கண்ணுற்றதால்தான்.. சிவகாமி செல்வியின் காதல் நடனம் காத தூரத்திற்கு விழுந்தடித் க் கொண்டு விரைந்தோடி விட்டதாக தாம் உரைத்ததையும் சேர்த்துரைத்து.. அவ்வாறா என்று வினவி விடை கேட்டு வருகிறேன் தோழனே..!"

"தோழனா..? யாமா..?"

"ஆம்.."

"எவருக்கு..?"

"எமக்குத்தான்.."

கனகவள்ளியை கோட்டை விட்டவன் பற்களை நெறித்து முகம் சுளித்ததில் புலிகேசியின் வதனத்தை கொடூரமில்லாத அழகு வதனமாக ஆக்கி விட்டான்.. அவனது சிவந்த நயனங்களையும்.. சீற்றம் கொண்ட வதனத்தையும்.. படு பயங்கரமாக மாறி விட்ட தோற்றத்தையும் கண்ணுற்ற கனகவள்ளியின் வருங்காலக் கணவன்.. பின்னங்கால்கள் பிடறியில்பட சடுதியில் அவ்விடத்தை விட்டு அகன்று அரண்மனையின் வாயிலுக்கு ஓடி விட்டான்..

"கோட்டானின் வதனமா..? உமது வதனத்தைவிட இவன் வதனம் எத்துனையோ உயர்ந்தது.. இதைக் கனகவள்ளியிடம் எவர் சொல்வது..?"

உறுமியபடி சிவகாமியின் நடனத்தின் பக்கம் நயனங்களைத் திருப்ப யத்தனித்தவன் அசைவற்று நின்று விட்டான்..

அங்கே அவனை மெச்சுதலா பார்த்தபடி நின்றிருந்தாள் கனகவள்ளி..

"தாம் இவ்வளவு வல்லவரா..?"

"எதை உரைக்கிறாய் கனகவள்ளி..?"

"இடக்குப் பேச்சில் வென்று.. எமை மணக்க இருந்தவரை நடனத்தையும் மறந்து அரண்மனை வாயிலுக்கு விரட்டி விட்ட வீரத்தைத்தான் உரைக்கிறேன் நரதா..!"

ா..? இதைக் கேட்பது எம் காதா..?"

"ஆம் அன்பரே..! ஒரு சிறு பேச்சுக்குக்கூட பதில் உரைக்க முடியாமல் ஓடிப் போகும் மதியிழிக்கு வாழ்க்கைப்பட்டு யாம் என்ன சுகத்தைக் கண்டுவிட முடியும்..? அதுவே தமக்கு மாலை சூடினால்.. தமது வித்தாரப் பேச்சை வாழ்க்கை முழுவதும் செவிமடுத்து களிப்புடன் வாழலாம் அல்லவா..?"

"தாம்பூலம் மாற்றி... மணநாள் குறித்தாகி விட்டதே..?"

"காந்தர்வ விவாஹத்திற்கு தாம்பூலமும்.. நிர்ணயித்த மணநாளும் தடையாக வந்து நிற்குமா பிரியமானவரே..?"

"கனகவள்ளி.."

"நாதா.."

தோற்றுவிட்ட காதலியைத் திரும்பப் பெற்றுவிட்ட மகிழ்வுடன் அவன் கனகவள்ளியுடன் காதல் சல்லாப மொழி பேச ஆயத்தமாகி விட்டான்.. இதையறியாமல்.. இடக்குப் பேச்சிற்கு அஞ்சி அரண்மனை வாயிலுக்கு ஓடியவன்.. நின்று விட்டத் திருமணத்தைக் குறித்த சொப்பனத்தில் ஆழ்ந்தான்..

சிவகாமியின் நடனம் முடிந்தது.. ஆயனருடன் அவள் அவையை விட்டு வெளியேறிவிட்டாள்.. பரஸ்பரம் நலம் விசாரித்துக் கொண்ட மன்னர்கள் இருவரும் பொதுவான நிலவரங்களைக் குறித்து உரையாட யத்தனித்தனர்.. அப்போது மகேந்திரவர்மர்..

"தமது நாட்டில் ஒற்றர்களின் ஊடுருவல் எந்த அளவில் உள்ளது சாளுக்கிய அரசரே..?" என்று வினவி வைத்தார்..

"ஒற்றனா..? எமது நாட்டிலா..? ஒருவன்கூடக் கால் பதிக்க முடியாது பல்லவ மன்னரே..! இந்தப் புலிகேசி காணும் முதல் பார்வையிலேயே ஒற்றனைக் கண்டு பிடித்து விடும் திறனுள்ளவன் என்பதை இந்த அவனியே அறியுமே.." இடிமுழக்கம் போல நகைத்து வைத்தான் புலிகேசி..

"அவ்வாறா சாளுக்கிய அரசே..?" மகேந்திரவர்மரின் கூரியபார்வை புலிகேசியை துளைத்தது..

"அவ்வாறுதான் மகேந்திரவர்மரே..! அதில் தமக்கு யாதொரு சம்சயமும் தேவையில்லை.." புலிகேசி

மகேந்திரப் பல்லவரின் கூரிய பார்வையை அலட்சியம் செய்தான்..

"மாறுவேட ட்டு வரும் ஒற்றனை தாம் கண்டு பிடிப்பது சாத்தியமல்ல சாளுக்கிய மன்னரே..! எவராலும் பாதம் பதிக்க இயலாத இடத்தில்கூட தேர்ந்த ஒற்றனானவன் பாதம் பதிப்பான்.. எதிரியின் நிழலில் நின்று திரும்புவான்.. எனவே.. தம் நாட்டில் ஒற்றர் படையின் ஊடுறுவல் இல்லை என்ற தமது வாதத்தை யாம் ஏற்க இயலாது புலிகேசி மன்னரே..!" மகேந்திரவர்மரின் உரையில் ஏதோவொரு மறைபொருள் பொதிந்திருப்பதைப் போல புலிகேசி உணர்ந்தான்..

அவனது சுளித்த புருவங்கள் மேலும் சுளித்ததில்.. அகோரமான அவனது வதனம் இன்னும் அதி பயங்கரமாக மாறி காஞ்சி மக்களை அச்சுறுத்தியது..

"தாம் ஏற்றாலும்.. மறுத்தாலும்.. யாம் உரை உரைத்ததுதான்.. யாம் அறியாமல் எமது நிழலில் எந்தப் பகைவனும் வந்து இளைப்பாறி விட இயலாது. யா புலிகேசி..! எதிரியின் நிழலையும் யாம் அறிவோ புலிகேசி முழக்கமிட்டான்..

"அவ்வாறா..?" மகேந்திரவர்மரின் தொனியில் நகைப்பிருந்தது..

"தமது உரையில் ஏதோ மறைபொருள் மறைந்திருப்பதைப் போல உணர்கிறேன் பல்லவ மன்னரே..! எவற்றையும் வெளிப்படையாக இயம்புவதே

இந்தப் புலிகேசியின் வழக்கம்... பல்லவமன்னரின் வழக்கம் ஒளித்து உரைப்பதுவோ..?" புலிகேசி சினத்துடன் பேசியதில் அவையில் இருந்தவர்களின் வதனங்கள் மாறின..

"அமைதி புலிகேசி மன்னரே..! ஒளித்து உரைக்க வேண்டிய தேவை பல்லவர்க்கு இல்லை.. யாம் ஏதும் மறைத்தும் உரைக்கவில்லை.. தங்கள் முன் 'வஜ்ரபாகு' எனும் நாமத்துடன் யாம் வந்து திரும்பியிருக்கிறோம்.. தம்மிடம் அமைதியின் தேவையை எடுத்து உரைத்திருக் கிறோம்.. எமைச் சந்தித்த நினைவு தமக்கிருக்கிறதா சாளுக்கிய அரசரே..?"

மகேந்திரர்வமர் உண்மையை உடைத்துத் துகள் துகளாக புலிகேசியின் முன்னிலையில் குவிய வைத்தார்.. புலிகேசியின் சிவந்தவிழிகள் மேலும் சிவந்தன.. அவனுடைய அகோர வதனம் காண்பவரைக் கதி கலங்க வைத்தது.. அவனது இதயம் கொதிகலனாக ஆனது..

"யாது உரைத்தீர் பல்லவ மன்னரே..? 'வஜ்ரபாகு' எனும் நாமத்துடன் எம்முன் வந்து திரும்பியது தாமா..?"

"ஆம் சாளுக்கிய மன்னரே..! அமைதியை நாடியே யாம் அமைதித் தூதராக தம்முன் 'வஜ்ரபாகு' எனும் வேடம் தரித்து வந்து நின்றோம்.. யாமும் எம்முடன் உரையாடினீர்.. அந்தத் தருணத்தில் யாம் பல்லவ மன்னன் மகேந்திரர்மன் என்று தம்மால் கண்டுனர இயன்றதா..? இதை எதன் பொருட்டு மொழிகிறேனென்றால்.. நமது நிழலைக் கூட

எவரும் ஸ்பரிசிக்க இயலாது என நாம் இறுமாந்திருப்போம்.. அந்த நிழலையும் ஊடுறுவித் திரும்பும் ஒற்றரும் இவ்வுலகில் இருப்பர்.. அதையே எடுத்துரைத்தோம்.. தமது நிழலில் எதிரியால்தான் இளைப்பாற இயலாது.. இந்த மகேந்திர பல்லவனால் இளைப்பாறித் திரும்ப முடியும் என்பதை நிரூபணம் செய்திருக்கிறோம்.. இதற்கு தமது விடையென்ன..?" கம்பீரமான குரலில் வினவினார் மகேந்திர பல்லவர்..

அவையில் சலசலப்பு எழுந்தது.. அனைவரின் முன்னிலையிலும் மகேந்திரவர்மர் மெய்யை உரைத்ததில் வதனம் கருத்துப் போனான் புலிகேசி.. அவமானமாக உணர்ந்தான்.. அவனை மகேந்திரவர்மர் இழிவுபடுத்தி விட்டதாக எண்ணினான்.. அவனது மனப்போராட்டத்தில் அவையோரின் இயல்பான பார்வைகூட அவனைப் பார்த்து எள்ளி நகையாடுவதைப் போலவே இருந் வைத்தது..

விருந்தினனாக வந்தவனை வேண்டுமென்றே மட்டம் தட்டி விட்டார் மகேந்திர பல்லவர் என்று மனம் கொதித்தான் புலிகேசி.. தோல்வியை ஒப்புக் கொள்ளாத அவனது மூர்க்க குணம் தளைகளை அறுத்து எறிந்து விடத் துடித்தது.. வாழ்த்தி வரவேற்ற காஞ்சி மாநகரை தவிடு பொடியாக்க அவனது குரோதம் அவனைத் தூண்டியது.. உணவிட்ட பல்லவரை ஓர்வழி ஆக்கிவிட வேண்டுமென்று நன்றிமறந்த கயமை அவனைக் கிளப் விட்டது..

அதற்கு மேலும் அங்கே வீற்றிருக்க முடியாமல் எழுந்து விட்டான் புலிகேசி..

"விடைபெறுகிறோம் பல்லவ மன்னரே..!"

"அதற்குள்ளாகவா..? இன்னும் சிறிது தினங்கள் இங்கு தங்கியிருந்து இளைப்பாறியபின் செல்லலாமே.."

விருந்தோம்பலின் பொருட்டு மகேந்திர வர்மர் சொன்னதை செவி மடுத்த சேவகர்களுக்குத் திகில் பிடித்துத் கொண்டது..

"இது என்ன அப்பனே வன்கொடுமையாக உள்ளது..! இந்தக் கொடூரனே விடை கொடுக்கச் சொல்கிறான்.. நமது மன்னவரோ நன்மையில் முடிந்தது என்று நினையாமல் இம்சையை இன்னும் சில தினங்கள் இருந்து இளைப்பாறச் சொல்கிறாரே.."

"யாது செய்வது சகோதரனே..? மன்னவர்க்கு அவர் கவலை.. எதிரியாக இருப்பினும் இந்தக் கொடூரன் விருந்தினனாக வருகை தந்து தொலைத்திருக்கிறானே.. நமது மன்னர் விருந்தோம்பலில் குறைவு வந்துவிடக் கூடாது என்று கவலை கொள்கிறார்.. நமக்கோ நம் கவலை.. இந்த கடோத்கஜன்களுக்கு விருந்து சமைக்க அடுப்பை மூட்டினால் அணைக்க முடியாதே என்று தாம் கவலை கொள்கிறீர்.."

"புரிந்ததல்லவா..? இந்த தடிமாட்டு தாண்டவராயன் களுக்கு பரிமாறி கரம் சோர்ந்து நிற்கிறேனப்பா.."

"தாம் மட்டுமா வேதனை கொண்டீர்..? தம்மோடு பரிமாறிய அனைவரின் கரங்களும்தானே வேதனை கொண்டிருக்கின்றன..?"

"இல்லையென்று எவர் சொன்னது..? நிலைமை இவ்வாறிருக்க.. விடைபெறும் பகைவனை நம் மன்னவர் நிறுத்தி வைக்க முனைகிறாரே.."

"அரச கட்டளையை மீற இயலாது தோழனே..! அரசரின் திருவுளம் அதுவாக இருந்தால் நமது கைகள் சோர்ந்துதான் தீர வேண்டும்.."

"அதை இயம்பு.. நம்மால் ஆனது என்ன..?"

"புரிகிறதல்லவா..? ஆதலால் தமது திருவாயை அடைத்துக் கொண்டு நிகழ்கின்ற நிகழ்வுகளை மட்டும் வேடிக்கை பார்க்க கற்றுக்கொள்.."

"அப்படியே நண்பா.."

சேவகர்களின் அச்சத்தை தமது மறுப்பின் மூலம் போக்கினான் புலிகேசி..

"இந்தப் புலிகேசி எங்கும் தங்கி இளைப்பாறு கிறவனல்ல.. தினவெடுத்த எமது தோள்கள் ஓய்வை நாடுவதில்லை.. பகையை வேரறுக்க புறப்பட்டவன் யாம்..! பல்லவ நாட்டில் விருந்துண்டு சுகித்திருக்க புறப்பட்டு வரவில்லை.."

மகேந்திரவர்மரின் வதனம் இறுகியது.. புலிகேசியின் மமதையில் அவர் உபசார மொழிகளை குறைத் கொண்டார்..

"தங்களின் நினைவு இதுபோல இருந்தால்.. தாங்கள் புறப்படுவதே உசிதமானது சாளுக்கிய அரசரே..! தாமதம் வேண்டாம்.. பல்லவ நாட்டின் விருந்தினராக தாம் வருகை புரிந்ததற்கு வந்தனம்.."

"இயம்பிக் காட்டுகிறீரா மகேந்திரவர்மரே..?"

"யாது என்று தெளிவு படுத்தினால் தேவலை புலிகேசி மன்னரே.."

"தங்களிடம் விருந்துண்ண யாம் வந்தோம் என்பதை உரைத்துக் காட்டுகிறீரா..?"

"அல்ல சாளுக்கிய மன்னரே.. எமது உபசார வார்த்தைகளில் குறை காணல் தகாது.."

"ஆக.. யாம் தகாத செயல் புரிபவன்.. எமை விருந்தினராக அழைத்து உபசரித்த தாம்.. தக்க செயல் புரிபவர்.. அவ்வாறுதானே..?"

'யாதடா இது.. என்றாகி விட்ட பல்லவ மன்னருக்கு..

வேலியோடு சென்ற ஓணானுக்கு விடை தராமல் செவிக்குள் விட்டுவிட்டு.. குடைகின்றதே என்ற அவதி கொண்டோமே என்று தம்மைத்தாமே அவர் நொந்து கொண்டார்..

'அல்லவென்று நான் மொழிந்தால் அம்மொழி இவனது கிழிந்த செவிகளில் நுழையவா போகிறது..? முற்றுகையிட்டவன் தன் நாட்டைப் பார்த்துச் சென்று தொலைக்காமல் அமைதித் தூது விடுத்து விருந்தினனாக

வருகை தந்து.. உணக்கையாக உண்டு களித்து விட்டு புறப்படும் தருவாயில் புண்ணாக்கைப் போல இயம்பி வைக்கிறானே.. இந்த ஆணவக்காரனை யாது செய்வது..?'

மகேந்திரவர்மர் மனதுக்குள் அர்ச்சனை செய்வதை அறிந்தும் அறியாதவனைப் போல தமது மமதை உரையை நிறுத்தாமல் தொடர்ந்து மொழிந்தான் புலிகேசி..

"எமது சாளுக்கிய தேசம் செல்வ வளம் கொண்டது.. காஞ்சியின் அழகுக்கு.. எங்களின் தலைநகரமான வாதாபி சற்றேனும் குறைந்தது அல்ல.."

"அவ்வாறு யாம் இயம்பவில்லையே சாளுக்கிய அரசே..?"

"வெளிப்படையாக உரைத்தால் தானா..? அப்பொருள் படும்படி உரைத்தீர் மகேந்திரவர்மரே..! வாதாபியில் தங்கி இளைப்பாற தாம் வருகை புரிந்து பாருங்கள்.. அப்போது அறிவீர். இப்புலிகேசி எவர் என்பதை.."

புலிகேசியின் அகக்கண்ணில் விருந்தினனா வருகை புரியும் மகேந்திரவர்மரை சிறை பிடித்துக் காராக்கிருகத்தில் தள்ளும் காட்சி தோன்றியது.. அதை அவனது நயனங்களில் கண்ட மகேந்திரவர்மர்..

'உமது புத்தி இப்படித்தான் சிந்திக்கும்..?' என்று எண்ணிக்கொண்டார்..

"அதற்கென்ன சாளுக்கிய மன்னரே..! அப்படியொரு தருணம் வரும்போது தாம் எவர் என யாம் அறிந்து

கொள்கிறோம்.. அத்துடன் யாம் ஏற்கனெவே 'வஜ்ரபாகு' எனும் நாமத்துடன் தங்களின் விருந்தினனாக வருகை புரிந்து திரும்பியவன்தானே..? எவர் கண்டது..? இனி வரும் தினங்களில் வேறேதும் வேடம் பூண்டு.. மற்றுமொரு நாமத்துடன் யாம் தங்களின் விருந்தினனாக வந்து திரும்பினாலும் திரும்பலாம்.."

மகேந்திரவர்மர் பேசப்பேச.. அவர் தம்மைப் பார்த்து பரிகாசம் செய்வதாக பொருள் கொண்டான் புலிகேசி.. அவனது மீசை துடித்தது..

'இந்த அவமானத்தை துடைக்காமல் யாம் வாதாபிக்கு திரும்பினால் எமது நாமம் புலிகேசியல்ல.. யாம் சாளுக்கிய மன்னனுமல்ல..

அவனது இதயம் வன்மம் கொண்டு சூளுரைத்தது.

---

## *ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 15

## இது விரும்பி நானே தொலைந்து போன கண்ணாமூச்சி ஆட்டம்..!

காதல்..!

அனைத்தையும் கடந்தது.. அடைய முடியாததையும் அடையத் துடிப்பது.. புதிரானது.. பொருள் விளங்காதது.. தொட்டு விட முடியாத தொடுவானத்தையும் எட்டிப் பிடிக்க கனவு காண்பது..

தாமோதரன் பாவம்.. விரும்பியா அந்த மோக வலையில் வீழ்ந்தான்..? விடுபட முடியாத மாயவலைக்குள் சிக்கிக் கொள்ள அவனென்ன ஒன்றும் தெரியாத கைப்பிள்ளையா..?

இருந்தும் அவன் நீரஜாவின் கண்பார்வைக்கு அடிமையானான்.. சித்தார்த்தனின் அப்பாவான விவேகானந்தன் மிகப்பெரும் கோடிஸ்வரர்.. காஞ்சியின் முதன்மையான பணக்காரக் குடும்பத்தின் ஒரே மகன்.. அவர் காலத்தில் தொழில்களை சென்னைக்கு இடம் மாற்றி கொடி கட்டிப் பறக்கும் பிஸினெஸ் மேக்னெட்..

சித்தார்த்தனின் அம்மா நிருபமாவோ.. கப் பெரிய அரசியல் தலைவரின் மகள்.. அணுக முடியாத பிரபல்யத்துடன் பிறந்து வளர்ந்தவள்.. அவளுக்கு சமதையில்லாத ஸ்டேட்டஸில் இருப்பவர்களிடம் நின்று கூடப் பேச மாட்டாள்.. அவ்வளவு ஏன்..? ர் பார்வை கூடப் பார்க்க மாட்டாள்..

இப்படிப்பட்ட பெற்றவர்களுக்கு இளைய மகளாகவும்.. குடும்பத்தின் செல்லப் பெண்ணாகவும் பிறந்த நீரஜா எப்படி இருப்பாள்..?

அவள் பெற்றவர்களையே தாண்டி விடும் வேகத்துடன் இருந்தாள்.. கர்வம் அவளின் உடன்பிறந்த சொத்து என்று காஞ்சியில் பலர் சொல்வதை காதார தாமோதரன் கேட்டிருக்கிறான்..

அப்படியிருந்தும் எந்த தைரியத்தில் அவளைக் கண்டதும் ஜெர்க் ஆகி.. வாயோரம் ஜொள் விட்டு.

ஒரு செகண்டைக்கூட வீணடிக்காமல் சைட் அடிக்க முற்படுகிறான் என்று அவனுக்கே பாவம் தெரிந்து தொலைக்கவில்லை..

"ஆனாலும் உனக்குச் செம தில்லுடா ான்.."

காஞ்சிபுரத்தில் இருந்த வேறொரு நண்பன் ஒருவன் சொன்னான்.. அவன் தாமோதரனைப் போல மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவன்..

"அந்தப் பொண்ணு பார்க்கிற பார்வையே செம தெனாவெட்டா இருக்கும்.. நீயெல்லாம் எனக்கு ஈக்குவலாடான்னு கேக்காமல் கேக்கும்.. அப்படிப் பட்ட பொண்ணுகிட்டப் போயி எப்படித்தான் சொ நிற்கிறயோ..?"

"அப்படின்னு நான் உன்கிட்டச் சான்னேனா..?"

"சொன்னாத்தானா..? அதான்.. அந்தப் பொண்ணைக் கண்டதும் என்னவோ மிலிடிரிக்காரனப் போல விறைச்சு நின்னு சல்யூட் வைக்கிற உன் கோலமே சொல்லித் தொலைக்குதேடா.. உனக்கு ஊருல.. உலகத்தில.. சைட் அடிக்க வேற பெண்ணரசிகளே கிடைக்கலியா..? அதான் உன்னோட வாய்ச் சவடாலை ரசிச்சு உனக்கு ரசிகையர் மன்றம் வைக்கிற அளவுக்கு ஊரு பூரா பொண்ணுகளை கிளப்பி விட்டிருக்கியேடா..? லைன் கட்டி நிற்கிற அவள்களில ஒருத்தியை சூஸ் பண்ணி சைட் அடிச்சுத் தொலைச்சா உன் வாழ்க்கை வாழ்க்கையா இருக்கும்டா மச்சான்.."

அப்படியா..? நீரஜாவின் பின்னால் போனால் வாழ்க்கை வாழ்க்கையாக இருக்காதா..?

தாமோதரனின் மனம் அதை ஏற்றுக் கொள்ள மறுத் சண்டித்தனம் செய்தது..

"இங்கே பாருடா.. ஆயிரம்தான் இருந்தாலும் நாம ஆம்பளைங்க.."

"ஆயிரத்தொன்னா இருந்தாலும் நாம ஆம்பளைங்க தான்.."

"இதையெல்லாம் விம் போட்டுத் தேய்ச்சு விளக்கமாச் சொல்லு.. மத்தவங்க சொல்றதை மட்டும் காதில ஏத்திக்காதே.."

"அன்நெஸசரியா பேசாதே.."

"எல்லாம் நெஸசரியாத்தான் பேசறேன்.. காதலிக் ற பொண்ணு முன்னால கம்பீரமா நிமிர்ந்து நிக்கனும்.. அத விட்டுட்டு இங்கிலீஷ் எழுத்து 'S' போல வளைஞ்சு நின்னா உருப்படுமாடா..?"

"எது..?"

"காதல்..!"

'போடா உருப்படாமப் போகிறவனே..!'

அந்த நண்பனைத் திட்டித்தீர்த்தான் தாமோதரன்.. மனதுக்குள்தான் வெளியே..

"உன் அட்வைஸீக்கு தேங்ஸ்டா மச்சான்.." என்று ட்டியணைத்து முத்தம் கொடுத்தான்..

அந்த அளவுக்கு அவனது நலம் விரும்பிய நண்பனையும் போடா போக்கத்தவனே என்று திட்ட வைத்தது நீரஜாவின் கண்பார்வை..

விவேகானந்தனின் மகனாகத் தப்பிப் பிறந்து விட்ட சித்தார்த்தனுடன் அவன் கொண்ட தோழமையால்.. அவனது காஞ்சி மாளிகைக்கு அடிக்கடி சென்றிருக்கிறான் தாமோதரன்.. அவர்களது சிறுவயதில் எல்லாம் விவேகானந்தனின் குடும்பம் காஞ்சியில்தான் இருந்தது..

சித்தார்த்தனின் கல்லூரிப் பருவத்தில்தான் சென்னைக்கு இடம் பெயர்ந்தது..

'நிருபமா குரூப் ஆஃப் கம்பெனி' யைக் கவனிக்க விவேகானந்தன் மட்டும் காஞ்சியிலிருந்து காரில் சென்னைக்கு போய் வருவார்..

காஞ்சியை விட்டு அவர்கள் அகலாமல் இருந்ததிற்குப் பல காரணங்கள் இருந்தன..

காஞ்சியிலே விவேகானந்தன் முதன்மையான கோடிஸ்வரர்.. ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்.. அவருடைய வீட்டை அரண்மனை என்றே காஞ்சிபுரத்து மக்கள் அடையாளம் சொல்வார்கள்.. பல ஏக்கர் பரப்பளவில்.. மெயின் கேட்டிலிருந்து.. போர்டிகோவை அடையவே சில கிலோ மீட்டர்கள் தூரம் கொண்ட விவேகானந்தனின் பரம்பரை வீடு அரண்மனை போலதான் இருந்தது..

மெயின் கேட்டிலிருந்து வீடு வரை போகும் ரோட்டில் பதிக்கப்பட்டிருந்த சலவைக் கற்களும்.. பாதையின் இரு

புறமும் கரை கட்டியிருந்த சலவைக்கல் விளிம்பின் அழகும்.. அதையொட்டிய தோட்டத்தில் அமைக்கப் பட்டிருந்த கொடி வீடுகளும்... மலர்க் கொடிகளை வளைத்து ஆர்ச் போல அலங்கரித்திருக்கும் நுழைவாயில்களும்.. பச்சைப் புல்வெளியில் ஓடித்திரியும் முயல்களும்.. தோட்டத்தின் மையத்தில்.. பூஞ்செடிகளின் மத்தியில் நட்டு வைக்கப்பட்டிருந்த பறவைகளுக்கான மரக்கூடுகளும்.. அதில் குடியிருக்கும் பறவைகளும்.. அகன்ற அழகான ஏரியைப் போன்ற நீச்சல் குளமும். அதன் கரையோரமாக வரிசை கட்டியிருந்த அலங்கார டூம் விளக்குகளும்.. அதையொட்டி அமைக்கப்பட்டிருந்த சாய்வான மர பெஞ்சுகளின் வேலைப்பாடும்.. விவே கானந்தனின் செல்வச் செழுமையையும், பாரம்பர்யப் பெருமையையும் கட்டியம் கூறின..

மிடுக்காக பார்க்கும் விவேகானந்தனும்.. மகாராணிக்கே உரிய கம்பீரத்துடன் பார்க்கும் நிருபமா தாமோதரனை அந்த மாளிகைக்குள் சேர் கொண்டதற்கு.. அவன் சித்தார்த்தனின் உயிர் நண்ப என்ற ஒன்று மட்டுமே காரணமாக இருந்தது..

மற்றபடி அவர்களாவது.. தாமோதரனைப் போன்ற வர்களிடம் நின்று பேசுவதாவது..?

தாமோதரனும் அதை உணர்ந்துதான் இருந்தான் ஸ்டேட்டஸ் வித்தியாசம் பார்க்காமல் ஒரு மிடில் கிளா பையனிடம் பிரண்ட்ஷிப் பூண்டதற்கு சித்தார்த்தன அவனைப் பெற்றவர்களிடம் வகையாக வாங்கிக

கட்டியிருப்பான் என்பது அவன் அறிந்ததே.. ஆரம்பத்தில் அவன் விலக்கம்தான் காட்டினான்.. சித்தார்த்தன்தான் அவனை விலக விடாமல் இறுக்கிப் பிடித்து வீட்டிற்குள் இழுத்து விட்டான்..

சித்தார்த்தனின் வீட்டிற்கு தட்ட முடியாமல் தாமோதரன் போய்வந்ததிற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது.. உண்மையில் சொல்லப்போனால் அதுதான் பலத்த காரணம்..

அந்தக் காரணம் நீரஜா..!

முதன் முதலாக அவன் அவளை சந்தித்த இனிய தருணத்தை இப்போதும் தன் நெஞ்சுக்குள் பொக்கிசம் போல போற்றிப் பாதுகாத்துப் பூஜை, புனஸ்காராமெல்லாம் பண்ணிக்கொண்டிருக்கிறான் தாமோதரன்..

"பால்.. பா "

அவன் சித்தார்த்தனைப் பார்ப்பதற்காக.. பத்தாம் வகுப்புப் படிக்கும் தறுவாயில் ஓர்முறை சென்ற போது தோட்டத்துக்குள் இருந்து இந்தக் குரல் கேட்டது..

தாமோ ரன் விழுந்தடித்துக் கொண்டு ஓடினான்.. அங்கே நீச்சல்குளத்தின் கரையோரமாக பலசிறுமிகள் நின்றிருந்தார்கள்.. அவர்களில் எந்தப் பெண் கூப்பாடு போட்டாள் என்று அவனுக்குத் தெரியவில்லை.. யார் கூப்பாடு போட்டால் என்ன.. வந்த கொடுமைக்கு பாலைக் காப்பாற்றிக் கொடுத்து விட்டுப் போவோம் என்று அவன் பந்தைத் தேடினான்.. கரையோரம் பூச்செடிகளும்..

மரபெஞ்சுகளும்.. டூம் விளக்குத் தூண்களும்தான் இருந்தன.. பந்தை மட்டும் காணவே காணோம்..

"இல்லாத பந்துக்கா இப்படிச் சத்தம் போட்டீங்க..?"

அவன் சிறுமிகளிடம் அதட்டியபடி நீச்சல் குளத்தைப் பார்த்தான்... அங்கே தண்ணீரில் சிகப்பு வண்ணத்துடன் கூடிய பந்து ஒன்று மிதந் கொண்டிருந்தது.. பந்தின் அளவையும்.. வடிவத்தையும் கணக்கீடு பண்ணாமல் தாமோதரன் வீராதி வீரனைப் போலத் தண்ணீருக்குள் தொபுக்கடீர் என்று குதித்து விட்டான்..

குதித்த பின்புதான் அவனுக்கு அதி முக்கியமா அந்த விவரம் நினைவுக்கு வந்து தொலைத்தது..

அது.. அவனுக்கு நீச்சல் தெரியாது என்பது..

" ஈப்பாத்துங்க..? காப்பாத்துங்க.."

கரையில் இருப்பது சிறுமிகள் என்பதையும் மறந் அவன் குய்யோ.. முறையோ என்று கத்தியபோதுதா பேசுவதற்கு சம்பளம் கேட்பதைப் போல வாயைத் திறக்காமல் அவன் செய்து கொண்டிருந்த கிறுக்குத் தனமான வேலைகளை அளவிட்டுக் கொண்டிருந்த அந்தச் சிறுமி.. தண்ணீருக்குள் குதித்தாள்.. அவனருகில் வந்து.. அவன் பந்து என்று நினைத்த சிகப்பு வண்ண ரப்பர் டியுபை இழுத்து அவன் கையில் கொடுத்து பிடிக்க வைத்து விட்டு கரைக்குத் திரும்பி நீந்தி விட்டாள்..



# 16

## வஞ்சகனின் வெஞ்சினம்.. வஞ்சியினை அணுகுவதோ..?

மாவீரன் புரியும் வேலை அல்ல அது..! ஒரு வீரனாகப்பட்டவன்.. அப்பாவி பொது மக்களையும்.. பெண்களையும்.. குழந்தைகளையும் துன்புறுத்த மாட்டான்... அதுவும் விருந்தினனாகப் போய் விருந்துண்ட நகரத்தையே அழிக்க யத்தனிக்க மாட்டான்.. மற்றவர்களை துன்புறுத்துவது வீரத்தில் சேர்த்தியே அல்ல.. அதைத்தான் வீரமென்று பொருள் கொண்டிருக்கும் புலிகேசியிடம் இதை எவர் உரைப்பது..? உரைக்க எவரேனும் ஒருவர் முன் வந்தாலும்.. அவ்வுரையை அவன் செவி மடுத்து விட்டுத்தான் வேறு பணியைப் புரிவானா..? உரைப்பவனின் சிரத்தைக் கொய்து அவ்விடத்தில் குருதிப் புனலைப் பெருக்கெடுத்து ஓடச் செய்துவிட மாட்டானா..?

"அழியுங்கள்.. நிர்மூலம் செய்யுங்கள்.. விழிகளில் புலப்படும் அனைத்தும் தரைமட்டமாகப்படல் வேண்டும்.. இந்தப் புலிகேசியின் கோபம் எத்தகையது என்பதனை அந்தப் பல்லவன் உணர வேண்டும்.. யாரிடம் தனது வீரப்பிரதாபத்தை அள்ளி விடுகிறான்..? வஜ்ரபாகு என்ற புனைநாமத்தில் ஒளிந்து மறைந்து வந்த மன்னன் அவன்..

அதைக் குறித்து நாணாமல் அவனை யாம் அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்பதை அவனது அவை நடுவினில் உரைப்பானா..? உடைத்து சிதிலமாக்குங்கள்.. நாம் செல்லும் வழிதனில் எதுவும் மிஞ்சக் கூடாது.. அவனது பெருமையை தகர்த்து எறியுங்கள்.."

புலிகேசியின் ஆவேசத் தாக்குதலைப் பற்றிய செய்தி அரண்மனையை எட்டியது.. கோட்டையின் கதவுகள் அடைக்கப்பட்டன.. போருக்கு ஆயத்தமானார் மன்னர் மகேந்திரவர்மர்.. படைகள் புறப்பட ஏதுவாக நகரத்தின் வீதிகளில் இருந்த தடைகள் அப்பு ப்படுத்தப் பட்டன.. மக்கள் புலம்பினர்..

"பாபாவி..! இப்படித்தான் என்பதை விருந்தினனா வருவதற்கு முன்பே வெளிப்படுத்தித் தொலைப் பதற்கென்ன..? அந்த நாசகாரனை வரவேற்க... வாசல் தெளித்து.. வீதியை அடைத்து மாக்கோலம் இட்டேன்.. இல்லத்தின் மாடங்களை அகல்விளக்குகளால் அலங்கரித்தேனே..."

"உமக்காவது அத்துடன் பணி நிறைவடைந்தது.. அரண்மனையின் சேவகனான எமது நிலைமையை எண்ணிப் பார்த்தாயா..? அந்த கொடுக்குமீசை புலிகேசிக்கும்.. அவனுடைய பரிவாரத்துக்கும் இறைவன் வயிற்றுக்குப் பதிலாக ஊரணியைப் படைத்து விட்டானோ என்று யாம் சம்சயம் கொண்டோம்.. அந்த அளவிற்கு அரண்மனையின் உணவு முழுமையையும் அவர்களே

தின்று தீர்த்தனர்.. சமைத்து வைத்த உணவு வகைகளை மீண்டும் சமைக்க நேர்ந்ததில் சங்கடம் ஒருபுறம்.. பரிமாறி.. பரிமாறி.. பரிமாறி.. கரங்கள் இற்று விழுந்ததைப் போலக் கொண்ட வேதனை மறுபுறம் என சேவகர் அனைவரும் அல்லாடிக் போனோம்.. விருந்தினருக்கு உபசரிப்பதில் சங்கடங்களை எண்ணக் கூடாது.. இவ்வாறு உண்ட நாட்டுக்கு இரண்டகம் விளைவிக்கும் நாசகாரனுக்கு உணவிட்டதை சங்கடம் என்றுதான் உரைக்க வேண்டும்.. அவன் நாமத்தை புலிகேசி என்று உரைக்கக்கூடாது.. பரதேசி என்றே உரைக்க வேண்டும்.."

"அதைக் கூறுங்கள்.. அந்த புலிகேசியே முற்றுகை போரில் தோல்வியுற்று.. உணவுப் பற்றாக்குறையினால்.. வெண்ணிறக் கொடியை பறக்க விட்டு விருந்தினனாக வருகை தந்தானென்றால்.. நமது மன்னர் அவனை வரவேற்று.. உபசரித்து.. சோர்வுபோக்க சுடுநீரில் நீராட வைத்து.. புத்தாடை கொடுத்து.. பசித்துக்கிடந்த வயிற்றுக்கு அறுசுவை விருந்தும் ஈந்து. களைத்தவன் இளைப்பாறி தெம்பை மீட்டுக் கொள்ள விருந்தினர் மாளிகையின் ஹம்சதுளிகா மஞ்சத்தையும் அளித்து.. கண்டு மகிழ நடனத்தையும் ஏற்பாடு செய்து.. புதுக் குருதியை அவன் உடலில் பாய விட வேண்டுமா..? சோர்ந்து கிடந்தவனை நிமிர வைத்தால்.. அவனுக்கான அவனது பணியை அவன் காட்டத்தானே செய்வான்..? மாறாக வாலை ஆட்டவா செய்வான்..?"

"அவ்வாறா உரைக்கிறாய்..?"

"ஆம்.. நெல்லுக்கு நீரிறைத்தால்.. நெற்கதிர் கிட்டும்.. புல்லுக்கு நீரிறைத்ததால் யாது கிட்டும்..? இதுதான் கிட்டும்.. முற்றகை போரில் தோல்வியுற்றவனை அவனது நாட்டைப் பார்த்து வழியனுப்பி வைத்திருந்தால்.. பசி வேகத்தில் அவன் பறந்தோடி இருப்பான்.. அரண்மனையின் மஞ்சத்தில் ஒய்வெடுத்து களைப்பைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்ற உடல் அயர்வு அவனை வாதாபியை நோக்கி விரட்டியிருக்கும்.. அவ்வாறு அவனை புறமுதுகு காட்டி ஓடவைக்காமல்.. விருந்தினனாக அழைத்து விருந்து வைத்தால்.. அவன் உண்டு விட்ட தெம்பில் பல்லவ நாட்டை அழிக்கத்தானே முனைவான்..?"

"அமைதித் தூதுடன் வருபவனை எதிர்கொண்டு அழைத்து விருந்து வைக்காமல் யாது செய்வது..? நம் மன்னர் அமைதியை விரும்புவர்.. போரற்ற அவனியை காண விழைபவர்.."

"அவரால் அது இயன்றதா..? தற்போதுதான் துர்நீதனுடன் போர் புரிந்து அவனை அடக்கிவிட்டு நம் இளவரசர் நாடுதிரும்பினார்.. உடனடியாக தென்திசையில் பாண்டியருடனான போர் அவரை 'வா..வா..' வென வருந்தி அழைக்கவில்லையா..? மன்னவர் மட்டும் அமைதியை விரும்பினால் போதாது.. மற்றவரும் விரும்ப வேண்டும்.. இவ்வாறு விருந்து உண்டு தெம்பை மீட்டுக்கொண்டு. விருந்தளித்தவரின் நகரத்தையே சிதிலமாக்க முனையும் பாதகர்களிடம் வாளேந்தி போர் புரியாமல் அமைதிப் பேச்சு பரிவர்த்தனையை நிகழ்த்த இயலுமா..? போர் மேகங்கள்

பல்லவ நாட்டை சூழ்ந்துதான் தீர வேண்டுமென்பது விதியானால் நம் மன்னவர் அமைதித் தூதை ஏற்றுக் கொண்டு விருந்தளித்ததில் யாதொரு பயனும் இல்லை.. கேடுதான் மீதமானது.."

காஞ்சி மக்களின் மனத்தாங்கலைப் பற்றிய செய்தி.. காற்றோடு பறந்து மன்னர் மகேந்திரவர்மரின் செவிகளில் நுழைந்தது.. அவர் பெருமூச்சு விட்டார்..

"தேவி..! யாம் நன்மை கருதியே புலிகேசியை நகருக்குள் அனுமதித்தோம்.. பகைவனாக இருந்தாலும் விருந்தினனாக வருகை தந்து விட்டானே என்று அவனுக்கு விருந்தளித்து.. இளைப்பாற வழிவகை செய்து உபசரித்தோம்.. இவ்விதம் அவன் நன்றி கொல்வானென யாம் சிறிதளவும் எண்ணவில்லை.."

தம் பட்ட மகிஷியிடம் வருந்தினார்.. கணவரின் செயல் சரியோ.. தவறோ.. அவர் வருந்தி நிற்கும் போது ஆறுதல் உரைப்பது மட்டும்தானே தமிழ்குலப் பெண்களின் மரபு..?

அம்மரபின் வழிவந்த அவரின் மனைவியும் அவரைத் தேற்றினாள்..

"பசியென்று வருபவனுக்கு உணவிடுவதுதான் மன்னவர்க்கு அழகு.. அவன் பகைவனாக இருந்தாலும் சரி.. தமக்கு உகந்ததையே தாங்கள் செய்தீர்கள்.. வரலாறு தங்களின் இந்தச் செயலை உயர்த்தியே உரைக்கும்.. முற்றுகைப் போரிட்டு தோற்ற சாளுக்கிய மன்னனின்

அமைதித்தூதை பல்லவமன்னர் ஏற்றுக்கொண்டு.. அவனை விருந்தினனாக காஞ்சி நகரத்துக்குள் அழைத்து.. விருந்திட்டு உபசரித்தார் என்று பாராட்டும்.. உண்ட நாட்டுக்கு இரண்டகம் விளைவித்த பாவி என்று சாளுக்கிய மன்னனைத் தூற்றும்.. தாங்கள் கவலை கொள்ள வேண்டாம்..."

மனைவியின் தேறுதல் மொழியை மகேந்திரவர் செவி மடுத்துக் கொண்டிருந்த அதே பொழுதில்... ஆயனர் சிவகாமியுடன் காஞ்சி நகரத்தை விட்டு வெளியேறுவதற்காக சுர ப் பாதையில் பிரவேசித்தார்..

"ராஜபாட்டையில் பயணம் செய்வதற்கென்ன தந்தையே..?"

"விருந்துண்டு போன சாளுக்கியன் எதிர்படும் பல்லவர்களை எல்லாம் துன்புறுத்துகிறானாம் குழந்தாய்.. வழியில் காணும் இல்லங்களையும்.. கிராமங்களையும் தீ வைத்துக் கொளுத்துகிறானாம்.. போர் நிகழப் போவதாக உரைக்கிறார்கள் சிவகாமி.. நாம் ராஜபாட்டையில் பயணிப்பது பாதுகாப்பானதல்ல மகளே... சுர பாதையிலேயே பயணித்து விடலாம்.."

சுரங்கத்தின் மறுமுனையில் காத்திருக்கும் ஆபத்தைப் பற்றி அறியாத அப்பாவி ஆயனர்.. மகளுடன் விரைவாக நடந்தார்.. சிவகாமியின் மனதை அச்சம் சூழ்ந்து கொண்டது.. நடனத்தை கலையாக மட்டுமன்றி.. இறைவனை உபாசிக்கும் மார்க்கமாகவும் பாவித்திருக்(

அந்நாட்டிய தாரகையின் மனதில் ஏதோ ஒரு தீமை நிகழப்போகிற என்று நாமம் தெரியாத பறவை ஒன்று கூவியது..

"எமக்கு அச்சமாக உள்ளது தந்தையே..! புலிகேசியின் கோபம் அத்தகைய வன்மத்தைக் கொண்டதாக இருந்தால் நாம் காஞ்சியை விட்டு வெளியேறுவது உகந்ததல்ல தந்தையே.. இந்நகரத்தில் தங்கி விடுவதுதானே நமக்கு பாதுகாவலாக இருக்கும்..?"

அவள் மனதில்.. அந்நகரத்தைக் காப்பவன் அவளின் காதலன் என்ற ஆசையும் ஒளிந்திருந்தது.. சிவகாமியின் காதலன் காஞ்சியின் காவலனாக இருக்கும் போது.. அவள் மட்டும் எதற்காக காஞ்சியை விட்டு நீங்கி.. மண்டபப் பட்டிற்குச் செல்ல வேண்டும்..? காஞ்சியிலேயே வசித் விடலாமே..

'இங்கானால் என்னவரும் இருக்கிறார்.. ாம் தினமும் மனதில் காணும் ஏகாம்பரேஸ்வரரும் இருக் றார்.. எதற்காக யாம் காஞ்சியை நீங்க வேண்டும்..?'

அவள் மனதின் அவாவை வெளிப்படுத்தியபோது ஆயனர் ஒப்புதலாக தலையை அசைத்திருந்தால் நடக்க விருந்த விபரீதத்தை தடுத்து நிறுத்தியிருக்கலாம்.. அவரது உயிருக்கு உயிரான மகளை பகைவரின் கரங்களில் பறி கொடுக்காமல் காத்திருக்கலா'

ஆயனர் அவ்விதம் செய்து தொலைக்கவில்லை..

அவரது சிரம் மறுப்பாக இடம்.. வலமாக அசைந் தொலைத்தது..

"அல்ல மகளே..! மண்டபப் பட்டில் எமக்கான பணிகள் காத்துக் கிடக்கின்றன.. சிற்பிக்கு நகரத்துக்குள் என்ன பணி உள்ளதம்மா..? எமது பணி மல்லையின் கடற்கரையில் அல்லவா உள்ளது..? போரும்.. வாளும்.. சிற்பியின் பணியை தடைசெய்ய இயலாது மகளே.. உளியெடுத்து சிலை வடிப்பவன் கரம்.. அதை மறந்து விருந்துண்டு கொண்டிருக்கக் கூடாது குழந்தாய்.. மன்னவர்க்கு அவரது பணி.. சிற்பிக்கோ அவனது பணி.."

ஆயனர் வியாக்கினம் செய்தார்.. பாவம்.. அவருக்கு கலைகளின் மீதான காதல் மிகுதியானது.. எதற்காகவும் அவர் தமது கலையை பின்னிருத்தவே மாட்டார்.. அவர் வளர்த்த சிவகாமியும் அவ்வழியே நடப்பவளே..

காதலனை மறந்து.. கலையின் மீதான காதலை மனதில் கொண்டு விரைந்து நடந்தாள் சிவகாமி.. சுரங்கத்தின் முடிவை நெருங்கி விட்டதை உணர்ந்த ஆயனர்..

"அம்மா சிவகாமி..! பாதை முடிவுற்று விட்டதைப் போல உள்ளதம்மா.. அங்கே வெளிச்சக் கோடுகள் தெரிகின்றன.." என்றார்..

"ஆம் தந்தையே.. சிவகாமியும் ஆதவனின் கதிர்களை அங்கே கண்டாள்..

விரைந்து நடந்ததில் அவர்கள் இருவருக்கும் தொண்டை வறண்டிருந்தது.. தாகம் தீர்க்கும் நீர்பந்தல் களுக்கும்.. போர் பந்தல்களுக்கும்.. அங்கே இடமேது..?

வழி நெடுகும் தாகம் தீர்க்கும் பந்தல்கள் அமைந்திருக்க அது என்ன காஞ்சி மாநகரின் ராஜபாட்டையா..? இருண்ட சுரங்கப் பாதைக்குள்.. நீருக்கும்.. மோருக்கும்.. அவர்கள் எங்கே செல்வார்கள்..?

"சுரங்கப் பாதையிலிருந்து நீங்கியதும் முதல் பணியாக தாகம் தீர்த்துக் கொள்ள வேண்டும் குழந்தாய்.."

ஆயனர் உலர்ந்திருந்த தனது இதழ்களை நாவினால் ஈரப்படுத்திக் கொண்டார்.. தந்தையாரின் நிலை கண்ட சிவகாமியின் மனம் துயர் கொண்டது.. வயோதிகரான அவளின் தந்தைக்கு அவளால் மிகுந்த இடர் என்று அவள் எண்ணினாள்..

'யாம் பெண்ணென்று பிறந்ததினால் அல்லவா.. எமது தந்தை எம்மை தனித்து அனுப்ப இயலாமல் துணைக்கு வருகை புரிகிறார்.. ஓய்வெடுக்கும் அகவையில் ஓரிடத்தில் அவரை வீற்றிருக்க விடாமல் யாம் அலைக் கழிக்கிறோமோ.. இதுவே எம் தந்தைக்கு ஆண் மகவு பிறந்திருந்தால்.. இந்த அகவையில் தந்தையை தோள் மீது சுமந்து காத்திருப்பானே.. அவ்வாறு இல்லாமல் பெண் மகவாக யாம் பிறந்து.. எம் தந்தையை காப்பதற்குப் பதிலாக.. எமை அவர் காக்க வைக்கிறோம்..

மனதுக்குள் பச்சாதப உணர்வு மேலிட்டதில் அவள் ஆயனரின் நடை குறித்து கவலை கொண்டாள்..

"கவனம் தந்தையே..! ஆதவனின் கதிர்கள் சிறிதளவு தான் உள்ளே வருகின்றன.. படியேறுவதில் சிரமம்

உள்ளது.. பார்த்து பாதம் பதியுங்கள்.. இதோ நுழைவாயிலை அணுகி விட்டோம்.."

வெளியில் தெரிந்த ஒளி வெள்ளத்தில் விழிகள் கூச.. இருவரும் சுரங்கப்பாதையை விட்டு நீங்கி.. இமைகளை கசக்கி விட்டுக் கொண்டார்கள்..

"ஒளிக்கு விழிகள் பழகட்டும் மகளே..! இதுகாறும் சுரங்கத்தின் இருள் பாதையில் நடந்து வந்ததில் விழிகள் கூசுகின்றன.."

"ஆகட்டும் தந்தையே.."

ஆயனரிடம் மொழிந்தபடி.. இமைகளைச் சிமிட்டி.. பார்வையை கூர்மையாக்கி எதிரே பார்த்த சிவகாமி ஸ்தம்பித்தாள்..

'ஏகா ˙பரேஸ்வரா..! யாது இது..?'

அவள் எதிரே புலிகேசியின் கொடூர வதனம் தெரிந்தது.. புரவியில் வீற்றிருந்தவன் விழிகள் சிவக்க..

"ஹா.. ஹா.." என இடிமுழக்கம் போல பயங்கரமா நகைத்து வைத்தான்..

"தந்தையே.." சிவகாமி அலறினாள்..

ஆயனர் அதிர்ந்தார்.. புலிகேசியும் அவனது படைகளும் அவர்களைச் சுற்றி வளைத்து நின்றிருந்த விதம்.. அவர்களை புலிகேசி சிறை பிடித்து விட்டதை அறிவித்தது..

"தாம் இருவரும் பல்லவ நாட்டின் செல்வங் களாமே..? இந்த சிவகாமி.. காஞ்சியின் கலைப்

பொக்கிசமாமே..? எவரும் பாதம் பதிக்காத இடத்தினிலே ஒரு தேர்ந்த ஒற்றனாகப்பட்டவன் பாதம் பதிப்பான் என்று அந்த ஆணவம் பிடித்த பல்லவன் மகேந்திரவர்மன் பெருமை பேசினான் அல்லவா..? அந்த கரம் தேர்ந்த ஒற்றன் மொழியும் செய்தியை அவன் செவி மடுக்கட்டும்.. காஞ்சியின் கலை பொக்கிசமான சிவகாமியை நான் சிறையெடுக்கிறேன்.. இயலுமானால் அவன் வந்து இந்த சாளுக்கியனிடமிருந்து அவன் நாட்டின் கலை பொக்கிசத்தை ஃமீட்டுச் செல்லட்டும்.. யாரங்கே..? இந்த நொடி முதல்.. இந்த சிற்பியும், சிவகாமியும் சாளுக்கியர்களின் கைதிகள்.. இவர்களை காவலில் இருத்துங்கள்.."

புலிகேசியின் ஆணையில் சாளுக்கிய வீரர்கள் சிவகாமியையும் ஆயனரையும் சிறை பிடித்தார்கள்.. சாளுக்கிய படையுடன் அவர்கள் கொண்டு செல்லப்படும் செய்தி மன்னர் மகேந்திரவர்மருக்குப் பறந்தது.. அவர் சீறி எழுந்தார்..

"இனி தாமதிப்பதிற்கில்லை.. சிவகாமியை சிறைமீட்பது பல்லவ மன்னனின் கடமை.. இது எனது தன்மானத்திற்கு விடுக்கப்படும் அறைகூவல்... பல்லவ நாட்டின் கலைப்பொக்கிசம் சாளுக்கிய நாட்டின் சிறையிலிருப்பது எமது குலத்திற்கே இழுக்கு.. சிவகாமியை யாம் சிறை மீட்டே ஆக வேண்டும்.."

அரசவையின் அந்தரங்க ஆலோசனை காலத்தின் போது மகேந்திரவர்மரின் இவ்வீர உரையை செவியுற்ற

அமைச்சர் ஏதோ உரைக்க விழைந்து தயங்கித் தேங்கினார்.

"தமது உள்ளத்தில் உள்ளதை ஒளிக்கா உரைக்கலாம் அமைச்சரே.. இது ஆலோசனைக் கூட்டம்.. அனைவரின் ஆலோசனையும் எமக்குத் தேவையானதே.."

"மன்னரே.."

"உரையுங்கள்.."

"சிவகாமிச் செல்வியும்.. நமது இளவரசரும்.."

அமைச்சர் உரையை முடிக்காமல் தயங் த் தேங்கியதில் மகேந்திரவர்மரின் முகம் மாறியது..

"இவ்வாலோசனைப் பொழுதில் அதை நினைவூட்ட வேண்டிய அவசியம் உள்ளதா அமைச்சரே..?" முகம் இறுக வினவினார் பல்லவ மன்னர்..

"யாம் எண்ணுவது யாதென்றால்.. இளவரசரின் பட்ட மகிஷியாக ஓர் நடன மாது அமர முடியாது.."

"அதற்கு..?"

"தாங்கள் அகற்ற எண்ணிய சிவகாமியை நம் இளவரசரின் வாழ்க்கையிலிருந்து புலிகேசி அகற்றியிருக் கிறான்.."

அமைச்சரின் வார்த்தைகளில் பொதிந்திருந்த மறைபொருளை மன்னரும். மற்றவர்களும் புரிந் கொண்டார்கள்..

"எமது புதல்வனைக் காதலித்த சிவகாமியை சாளுக்கியன் சிறை பிடித்து விட்டான்.. இதை கண்டு கொள்ளாமல் விட்டு விடுவது சாலச்சிறந்தது.. அது எமக்கு

நன்மையையே அளிக்கும் என்றுதானே தாம் உரைக்க விழைந்தீர் அமைச்சரே..?"

நெற்றியடியான நேரடி வினாவினை எழுப்பினார் மன்னர் மகேந்திரவர்மர்.. அவரது தீரம் அத்தகையது.. எந்தவொரு கருத்தையும் ஒப்புக்கொள்ளும் நேர்மை அவருடையது..

"ஆம் அரசே..!" அமைச்சர் தயக்கத்துடன் பகர்ந்தார்.

"எத்துணை சுயநலமாக சிந்திக்கிறீர்கள் அமைச்சரே..? தாம் இவ்வாறு சிந்திக்கலாமா..? சிவகாமியை எமது புதல்வன் காதலித்தால் அது எமது சொந்த விவகாரம்.. சிவகாமியை சாளுக்கியன் சிறை பிடித்திருப்பது பல்லவ நாட்டின விவகாரம்.. அதற்கும் இதற்கும் முடிச்சுப் போடல் ஆகாது.. சிவகாமியை சிறை மீட்பது பல்லவ நாட்டின் மன்னனான எமது கடமை..! சிறை மீட்ட சிவகாமியை நரசிம்மன் மணக்க விரும்பினால் அதைத் தடுத்து நிறுத்துவது மன்னவர் குலத்தின் வழமை..! கடமையிலிருந்து இந்த மகேந்திரவர்மன் ஒரு போதும் பின்வாங்க மாட்டான்.."

அவை மௌனமானது.. அரசக் குலத்தின் வழக்கப்படி பட்ட மகிஷியாக அரியணையில் ஏறுபவள் அரசர் குலத்தில் பிறந்தவளாக இருத்தல் வேண்டும்.. இது காலம்.. காலமாக.. அரசர் குலத்தில் கடைபிடிக்கப்படும் மரபு..

அந்த மரபின் வேரை அசைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான் பட்டத்து இளவரசன் நரசிம்மன்.. அவனுக்காக மணம் முடிக்க அனைத்து தேச இளவரசிகளின் ஓவியங்கள் வந்து குவிந்து கொண்டிருக்க..

அவன் மனமோ மல்லையின் கடற்கரைக் குன்றில்.. பாதச் சலங்கையொலிக்க..

"ஆடாத மனமும் உண்டோ..?"

என்று ஆடிய சிவகாமியின் எழிலிலேயே மையம் கொண்டிருந்தது... அவளின் அழகில் அவன் மனம் ஊஞ்சலாடியது... சிவகாமியை விடுத்து வேறொரு இளவரசியின் வளைக்கரத்தைப் பற்ற தன் வாழ்நாளில் நரசிம்மன் விழைய மாட்டான் எனும்போது.. சாளுக்கியனா சிவகாமி சிறைபிடிக்கப்பட்டதில் மன்னர் மகேந்திரவர்மர் மனதுக்குள் உவகை கொள்ள வேண்டாமா..?

அவர் உவகை கொள்ளவில்லை.. மாறாக... அவரின் குலகௌரவத்துக்கு பங்கம் விளைந்து விடுமோ என்ற துணுக்குறுதலை அவருக்குள் ஏற்படுத்திய சிவகாமி எனும் நடன மங்கையை சிறை மீட்க சாளுக்கிய நாட்டின்மீது படையெடுத்து போர் புரியச் சென்றாரென்றால்.. நமது தமிழ் மண்ணின் வீரத்தையும்.. நியாயத்தையும் கடமையுணர்வையும் என்னவென்று யாம் வியப்ப மாழிய வார்த்தைகளே இல்லை..

பல்லவ மன்னரான மகேந்திரவர்மருக்குத் தெரியும். சிவகாமியை சிறை மீட்பது ஒன்றும் அவ்வளவு எளிதான ஒன்றாக இருந்துவிடாது என்பது..

தொடர்யுத்தம் நிகழக்கூடும் என்பதை அவர் அறிவார்.. அந்த யுத்தத்தில் அவர் மீள்வாரா.. அல்லது மாள்வாரா.. என்பதை மட்டும் அவர் அறியார்.. இருந்தும் அவர் சாளுக்கிய நாட்டின் மீது போர் தொடுத்தார்..

## ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



# 16

## எனைக் கண்டதும் உன் விழிகளில் தோன்றும் நகைப்பு.. எதைக் குறித்தானது..?

"இப்படியாடா என் மானத்தை வாங்குவ..?" தலையில் அடித்துக் கொண்டான் சித்தார்த்தன்..

சொட்டச் சொட்ட நனைந்திருந்த தாமோதரன் திருதிருத்தான்.. அவனைக் காப்பாற்றி கரை சேர்த்த புண்ணியவதி.. தன் ஜோட்டுச் சிறுமிகளுடன் பேசியபடி இவனை ஓரக் கண்ணால் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள்..

'மனசுக்குள்ள சிரிப்பாளோ..?'

"சந்தேகம் வேண்டா ..' என்றான் சித்தார்த்தன்..

"இப்ப அவ மனசுக்குள்ள சிரிச்சுக்கிட்டுத்தான் இருப்பா.. உனக்கு என் தங்கையைப் பத்தித் தெரியாது.. அவ சரியான குட்டிப் பிசாசு..! வாயைத் திறந்து பேச மாட்டா.. அழுத்தக் காரி..! என்னைவிட ஆறுவயசு இளையவ.. இப்பத்தான் பிப்த் ஸ்டாண்டர்டுக்கு வந்திருக்கா.. இருந்தும் நூத்துக்கிழவி போல எனக்கே அட்வைஸ் பண்ணக் கிளம்பிருவா.."

"அவ்வளவு புத்திசாலியா..?"

"அவ்வளவு கர்வி..! ஹெட் வெயிட் பிடிச்சவ.."

சித்தார்த்தனின் வர்ணனையை கேட்ட பின்பு நீரஜாவைப் பார்த்த தாமோதரனுக்கு அவன் உண்மையைத் தான் சொல்லியிருக்கிறான் என்று புரிந்தது..

நீரஜா அப்படித்தான் இருந்தாள்.. உடன் நின்றிருந்த சிறுமிகளை பேச விட்டு அவள் கேட்டுக் கொண்டிருந்தாள்.. எளிதில் வாய் திறக்கவில்லை.. அவளது விழியசைவிற்கு மற்ற சிறுமிகள் பணிந்து பதில் சொன்னார்கள்.. அவள் கண்ணால் சொன்னதை உடனே செய்து முடித்தார்கள்.. இவள் என்னவோ மகாராணி போல தோரணையாக போஸ் கொடுத்து நின்றிருந்தாள்..

"பாரேன்.. என்னவோ.. இந்த காஞ்சிக்கே இளவரசியைப் போல பில்ட் அப் கொடுத்துக்கிட்டு நிக்கிறதை.. இந்த பத்து வயசுக்கு இது அதிகம்டா தாமு.. தேவையா இது..?"

சித்தார்த்தனின், அங்கலாய்ப்பில் நீரஜாவை மீண்டும் பார்த்த தாமோதரனுக்கு அவள் இளவரசியைப் போலவே தெரிந்து வைத்தாள்..

"நீங்க ராஜ வம்சம்தானேடா..?"

"அதுக்கு..?"

"அப்ப.. உன் தங்கை இளவரசிதானே..?"

எதனால் அவளைத் தாங்கிப் பேசினான் என்று இன்றுவரை தாமோதரனுக்குத் தெரியவில்லை.. அது என்னவோ.. கர்வம் பிடித்த அந்தச் சிறுமியின் மீது சொல்லில் வடிக்க இயலாத ஈர்ப்பு அவன் மனதில் தோன்றி விட்டது..

"நீ தேற மாட்டடா.." என்றான் சித்தார்த்தன்..

எதற்குத் தேற வேண்டும் என்றிருந்தது தாமோதரனுக்கு.. இதில் தேறி என்ன செய்யப் போகிறான்..? மெடலா கொடுக்கப் போகிறார்கள்...

'அப்படி கொடுத்தாலும் அந்த மெடல் எனக்கு வேண்டா'

கண்ணால் கண்ட அடுத்த நிமிடமே இப்ப ப்பட்ட முடிவை எடுக்க வைத்தவள்தான் நீரஜா..

"ஏண்டா ஃபூல்..! உன்னைப் பாத்து அவ கேலி பண்ணி சிரிச்சுக்கிட்டு இருக்கா.. நீ என்னடான்னா அவளுக்கு சப்போர்ட் பண்ணிப் பேசிக்கிட்டு இருக்க.." சித்தார்த்தன் கடிந்து கொண்டான்..

"என்னையேண்டா அவங்க கேலி பண்ணப் போறாங்க..? இருக்காதுடா.." தாமோதரன் அதை மறுத்துப் பேசி வைத்தான்..

"எவங்க..?"

சித்தார்த்தன் சுற்று முற்றும் பார்த்தான்.. தாமோதரன் குறிப்பிட்ட அந்த 'எவங்க.. எவங்க என்று அவனுக்குத் தெரியவில்லை..

ாரைடா சொல்கிற..?"

"அவங்களைத்தாண்டா.."

"அவங்களைன்னா..?"

"உன் தங்கையைத்தான் சொல்றேன்.."

"நீ திருந்தவே மாட்டேடா.. இத்தனூண்டு விடாசு..! அதுக்குப் போயி இவ்வளவு மரியாதையா..? கொஞ்சமாச்சும் என் பிரண்டு போல நடந்துக்கப் பாருடா.."

"உனக்குத்தாண்டா நான் பிரண்டு.. உன் தங்கைக்கில்ல.."

"எப்படியோ போய் தொலை.. உனக்கே நீச்சல் தெரியாதே.. என்ன அலுவலுக்கு தண்ணிக்குள்ள குதிச்ச..?"

"அவங்க பால்.. பால்..ன்னு அலறினா

"பால்.. பால்ன்னா பந்துன்னுதான் அர்த்தமாகுமா..?"

"பின்னே..?"

"எனக்குன்னு வந்து பிரண்டா வாய்ச்சிருக்க பாரு.. விதிடா.. எங்க வீட்டு இளவரசியும்.. அதோட சுண்டெலி பிரண்டுகளும் ஸ்விம்மிங் ஃபூல் பக்கத்தில நின்னுக்கிட்டு இருந்திருக்காங்க.."

"அங்கேதான் இருந்தாங்க.."

"பரவாயில்லடா.. இதிலயாவது இத்தனை தெளிவா இருக்கியே.. இதுகளுக்கு டிரிங்ஸ் சப்ளை பண்ண எங்க வீட்டு சர்வண்ட் சர்வே எடுக்க வந்திருக்கா

"டிரிங்ஸா..?"

தாமோதரனின் விழி பிதுங்கியது. நீரஜாவை அதிர்ச்சியுடன் பார்த்தான்..

'இந்தக் குட்டிப் பொண்ணு குடிக்குமா..? இது குடிக்கிறது பத்தாதுன்னு கூட இருக்கிறவங்களுக்கும் ஊத்திக் கொடுக்குமா..? நம்பவே முடியலையே..

' பனை குதிரையை பறக்க விடாதே.." என்றான் சித்தார்த்தன்..

"டிரிங்ஸ்ன்னா நீ நினைக்கிற டிரிங்ஸில்லை.. இந்த காபி.. டீ.. ஜூஸ்.. இப்படி இதையும் டிரிங்ஸ்ன்னுதான் சொல்லுவாங்க.."

'அப்பாடி.. நிம்மதிப் பெருமூச்சு வந்தது தாமோதரனுக்கு..

"வந்திருக்கிற விருட்டானில்ல ஒன்னு.. கா டீ.. ஜூஸெல்லாம் சாப்பிடாதாம் அதுக்குப் பால்தான் வேணும்ன்னு 'பறக்கா வெட்டி' அந்தக் கத்து கத்தியிருக்கு.. நீ அதான் சாக்குன்னு ஓடிப்போய் தண்ணியில குதிச்சிருக்க..

சித்தார்த்தன் சொல்லச் சொல்ல.. தாமோதரனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது..




## 17

துறவிக்கு காதல் வரக்கூடாதென்று விதியிருக்கிறதா என்ன..?

ஆயனர் தளர்ந்து சரிந்திருந்தார்.. சிவகாமிக்கு துயரமாக இருந்தது.. வயோதிகரான அவளுடைய

தந்தையார் அவள் பொருட்டு சிறைக் கைதியாக நேர்ந்ததில் அவளது இதயத்தில் குருதி வடிந்தது..

சிற்பங்களை வடிப்பதில் கை தேர்ந்தவரான.. கற்பனா சக்தியில் பூவுலகை கற்சிலைகளில் கொண்டுவந் விடுபவரான ஆயனர் இவ்விதம் தளர்ந்து கிடப்பதா..?

"நீர் வேண்டுமா தந்தையே..!" மனதின் துயரை மறைத்து வினவினாள் சிவகாமி..

அவளை ஏறெடுத்துப் பார்த்த ஆயனரின் நயனங்களில் துக்கம் ததும்பியது.. அவரது தவப்புதல்வி பகைவனிடம் சிறைபட்டிருக்க.. அவளை விடுவிக்க இயலாத தந்தையாக அவர் அருகிலிருக்கிறாரே..

'கடவுளே..!' அவர் துயரப் பெருமூச்சை விட்டார்..

"ஏதேனும் உணவுப் பண்டம் கிடைக்குமா என்று சேவகரிடம் வினவவா தந்தையே..? தாங்கள் பசியாறாமல் இருக்கிறீர்கள்.."

"நாம் என்ன உல்லாசப் பயணமா மேற்கொண்டுள் ளோம் மகளே..?" ஆயனர் கூர்மையுடன் வினவினார்.. சிவகாமி துக்கத்துடன் மௌனித்தாள்.. அவள் அதை அறியாதவளா..?

"புலிகேசியின் கைதிகள் நாம்.. இதை மறந்தாயோ மகளே..?"

"தந்தையே.."

சிவகாமி விம்மினாள்.. அவர்கள் அடை பட்டிருந்த மண்டபத்திற்கு வெளியே பேச்சரவம் கேட்ட

"மன்னர் வருகிறார்.."

சேவகர்களில் ஒருவன் திகிலுடன் உரைத்தான்.. மற்றவர்கள் எழுந்து சிரம் தாழ்த்தி வணங்கினார்கள்..

"புலிகேசி வருகை தருகிறான் தந்தையே.." சிவகாமி வெறுப்புடன் சொன்னாள்..

"இருக்கும் இம்சையில் இது வேறா..? அவனது கொடுங்கோல் வதனத்தைக் காட்டிலும் காராக்கிருகம் மேல் அம்மா.."

"அதையே யாமும் உரைக்க எண்ணினோ' தந்தையே.."

இருமனமும்.. ஒரு மனமாக.. பார்க்க விரும்பா அதிருப வதனத்தைக் கொண்ட புலிகேசி.. அவனுடைய நெருப்புத் துண்டங்களைப் போன்ற விழிகளை உருட்டியபடி உள்ளே வந்தான்..

"ஆயனரை விடுவியுங்கள்.."

அவனது உத்தரவில் ஆயனர் விடுவித்து வெளியே அனுப்பப்பட... சிவகாமி அலறினாள்..

"தந்தையே.."

அவளது குரல் தேய்ந்து ஒலித்தது.. புலிகேசியின் வலிமையான இரும்புக்கரம் ஆயனரை இரும்புப்பிடியாக பிடித்து இழுத்துச்சென்று விட்டது.. ஆயனர் திமிறினார்.. அவரால் புலிகேசியின் பிடியிலிருந்து விடுபட இயல வில்லை..

"எதன் பொருட்டு என்னையும்.. எமது புதல்வியையும் பிரித்தீர்கள் சாளுக்கிய அரசே..?"

ஆயனர் பதறினார்.. மண்டபத்திலிருந்து வெகு தொலைவிற்கு வந்து விட்ட புலிகேசி அவர் கரத்தை விடுவித்து விட்டு..

ாம் சாளுக்கிய அரசனல்ல.." என்று சொன்னான்..

"யாது உரைத்தீர்..?" ஆச்சரியத்துடன் அவனை உற்றுநோக்கினார் ஆயனர்..

புலிகேசியின் அகோர வதனத்துடன் இருந்த அம்மனிதன் மென்மையாக நகைக்க முயன்றான்.. அது இன்னமும் அதிகமான பயங்கர ரூபத்தையே அவனுக்கு அளித்தது..

ாம் யார்..?" ஆயனர் வினவினார்..

"எம்மைத் தெரியவில்லையா..?"

அரச உடையையும்.. சிரத்திலிருந்த மகுடத்தையும் அகற்றிய நாகநந்தி துறவியுடையுடன் வெளிப்பட்டான்..

"தாங்களா..?" வியந்து போனார் ஆயனர்..

"யாமேதான்.. தங்களைக் காக்கவே மாறுவேடம் பூண்டு புலிகேசியைப் போல அங்கு வந்தோம்.."

"ஆயினும் சுவாமி.. புலிகேசியின் வதனத்துட தங்கள் வதனம் எப்படிப் பொருந்தித் தோற்றமளிக்கிறது..? தற்போதுதான் இதை யாம் கண்டுணர்ந்தோம்.. சாளுக்கிய அரசரும்.. தாமும் ஒரே முகத்தோற்றத்துடன் உள்ளீர்களே.."

"அது அவ்வாறுதான் ஆயனரே..!"

நாகநந்தி நகைத்தான்.. உடன் நகைக்க ஆயனரால் இயலவில்லை.. அங்கே அவருடைய அருமைப் புதல்வி சிறைபட்டிருக்க.. அவர் மட்டும் நண்பருடன் உரையாடி மகிழ்வதா..?

"இரட்டை சகோதரர்கள் வேறு எவ்விதம் தோற்றமளிப்பார்கள் ஆயனரே..?"

நாகநந்தியின் வினாவில் அவனது பூர்விகம் வெளிவந்தது..

"யாமும் புலிகேசியும் ஒரு தாயின் வயிற்றில் உதித்த இரட்டைப் பிறவிகள்..! புலிகேசிக்கு மண்மீது ஆசை.. எமக்கோ துறவறத்தின் மீது ஆசை.. ஆதலால் அரியணையை எமது சகோதரனுக்கு விட்டுக் கொடுத்து விட்டு வெளியேறினோம்.. தற்போது.. உம்மைக் காப்பதற்காக.. அவன் போல வேடம் பூண்டு உமை விடுவித்தோம்.. அதோ.. உமக்கான ரதம் ஆயத்த நிலையில் உள்ளது.. விரைந்து இவ்விடத்தை விட்டு நீங்கி மண்டகப் பட்டிற்கு சென்று விடுங்கள்.."

"எமது புதல்வி சிவகாமி..?"

"சிவகாமி..!"

நாகநந்தியின் விகாரமான வதனம் மென்மை கொண்டது.. மயிலிறகினால் வருடுவதைப் போல மிக மென்மையாக அவளது நாமத்தை உச்சரித்தான் அவன்..

"தம் புதல்வியைப் பற்றிய கவலை தமக்கு வேண்டாம் ஆயனரே.."

"வேறு எவருக்கு வேண்டும் நாகநந்தியாரே..? அவள் எம் புதல்வி.."

"அல்லவென்று எவர் உரைத்தது..? சிவகாமி தமது புதல்விதான்.. அவளை யாம் பார்த்துக் கொள்கிறோம்.."

நயனங்கள் சொப்பனத்தில் மிதக்க.. உரையாடிய வனை திகிலுடன் நோக்கினார் ஆயனர்..

"யாது உரைத்தீர்..?"

அவரின் பதட்டத்தில் தந்நிலைக்குத் திரும்பிய நாகநந்தி..

"அமைதி ஆயனரே..! சிவகாமியை யாம் பாதுகாத்துக் கொள்கிறோம் என்றல்லவா உரைத்தோம்..? அதற்கா இத்துனை பதட்ட ..?"

"அந்தப் பணி தமக்கெதற்கு துறவியாரே..?"

ஆயனரின் 'துறவியாரே..' என்ற விளிப்பை நாகநந்தி விரும்பவில்லை.. ஒரு மருமானை.. மாமனார் அழைக்கும் விதமா இது..?

'என்றுமே இந்தச் சிற்பிக்கு யாம் துறவிதானா..?'

"எமது புதல்வியைப் பாதுகாக்க யாம் இருக்கிறோம்..

'அந்தத் துணிவைத்தான் சிறையினில் கண்டேனே..

நாகநந்தி அகம் மறைத்து ஆயனர் நம்பும் விதத்தில் புன்னகைத்தான்..

"உமது புதல்வியை பாதுகாக்க நீர் இருக்கிறீர்.. ஆயினும் சிறையெடுக்க புலிகேசி இருக்கிறானே.."

ஆயனர் திகைத்து மலைத்தார்.. நாகநந்தியின் உரையில் ஓர் உண்மை இருப்பதைப் போல அவருக்குத் தோன்றி வைத்தது..

"ஆயனரே..! நீரோ கரம் தேர்ந்த சிற்பி..! ஈடு இணையில்லாதவர்.. ஆயினும்.. தாமா... அல்லது... தமது புதல்வியா என்று வரும் போது புலிகேசி தமது புதல்வியைத்தான் சிறைபிடிப்பான்.."

"துறவியாரே..!"

இதை இந்தச் சிற்பி விடுத்துத் தொலைக்க மாட்டாரா என்று எரிச்சலுற்றான் நாகநந்தி.. அவன் மறந்தாலும்.. அவன் துறவி என்பதை ஆயனர் மறக்க மறுக்கிறாரே.. இப்படியே அவர் அழைத்துக் கொண்டிருந்தால் எப்படி அவன் அவரிடம் சிவகாமியை அவனுக்கு மணம் முடித்துத் தரும்படி பெண் கேட்பான்..?

"மெய் சில தருணங்களில் கசக்கத்தான் செய்யும் ஆயனரே.. ஆயினும் நாம் அதை எதிர்கொண்டுதானே ஆக வேண்டும்..? சிவகாமி ஓர் ஆடலரசி..! எழிலே வடிவான பெண்..!"

"இதைக் குறித்தே யாம் அச்சம் கொள்கிறோ சிவகாமியின் கௌரவத்துக்கு பங்கம் ஏற்பட்டு விட்டால்..?"

ஆயனரின் குரல் நடுங்கியது.. அவரது கரங்களை ஆதுரத்துடன் பிடித்துக் கொண்டான் நாகநந்தி..

"அஞ்ச வேண்டாம்.. புலிகேசி பெண்மயக்கம் கொண்டவனல்ல.. அவன் போர்வெறியன்.. சிவகாமியின் எழிலில் மயங்கி அவன் அவளை சிறைபிடிக்கவில்லை.. பல்லவ நாட்டின் கலைப் பொக்கிசத்தை சிறையெடுப்பதன் மூலம்.. பல்லவர்களின் கௌரவத்திற்கு அவன் பங்கம் விளைவிக்கிறான்.. அதன் பொருட்டே ஆடலரசியை அவன் கவர்ந்தது.."

"ஆயினும்.. எம் புதல்வி.."

ாம் இருக்கிறோம்.."

"தாம் இருப்பீர்.. எம் புதல்வி இருப்பாளா..?"

ஆயனரின் வினாவில்... இந்த சிற்பியை விடு விக்காமல் காராக்கிருத்திலேயே விட்டு வைத்திருத்தல் வேண்டும் என்று நாகநந்திக்கு சினம் வந்தது..

யாது செய்வது..? அவன் ஆயனரை விடுவித்துத்தான் தீர வேண்டும்.. சிவகாமியைத் தனிமைப் படுத்தி.. அவளின் பாதுகாவலனாக நாகநந்தி இருத்தல் வேண்டும்.. அவன் உரைக்கும் மெழிகள் மட்டும் அவள் செவியில் விழ வேண்டுமெனில் அவன் ஆயனரை அப்புறப்படுத்தித்தான் ஆக வேண்டும்..

"தமது புதல்வியும் இருப்பாள் சிற்பியாரே..! கவலை கொள்ள வேண்டாம்.. தம்மை விடுவித்து அனுப்பி விட்டு.. எமது சகோதரனிடம் விளக்கம் கூறி சமாதானப்படுத்த எம்மால் இயலும்.. தமது புதல்வியை விடுவித்து விட்டு இதே சமாதானத்தை இயம்ப எம்மால் இயலாது.. புலிகேசி

அதை அனுமதிக்க மாட்டான்.. சிவகாமியை தொடர்ந்து வந்து சிறை பிடிப்பான்.."

"சிவகாமி.. என் மகளே..!"

"கலங்க வேண்டாம்.. தாமாவது தப்பிச் செல்ல வேண்டும் என்றே யாம் இவ்வேடத்தைப் பூண்டோம்.. எவரும் நம்மைக் காணும் முன்பு தாம் இவ்விடத்தை விட்டு அதிவிரைவில் அகன்று விடுவதே நன்மை பயக்கும்.."

"எமது புதல்வி..?"

"எமது பாதுகாப்பில் இருப்பாள்.."

"தாமோ துறவி.."

"இதையே எத்துனைமுறை இயம்      காண்டிருப்பீர் ஆயனரே..?"

"அவ்வாறு அல்ல சுவாமி.. ஓரிடத்தில் நிலைத்து நிற்காமல் சஞ்சாரித்துக் கொண்டே இருக்கும் தாம் எவ்விதம் எம் புதல்விக்கு பாதுகாவலை அளிக்க இயலும்..?"

"இதைக் குறித்தா கவலை கொண்டீர்..? இந்நொடியிலிருந்து சிவகாமி எவ்விடத்தில் இருப்பாளோ.. அவ்விடமே யாமும் இருப்போம்... அவளை எமது கண்ணிமையின் அடியினில் வைத்துப் பாதுகாவல் செய்வோம்.. அனைத்துமாக அவளுக்கு இருப்போ ˙ "

விழிகள் செறுக.. சொப்பனத்தில் சஞ்சரிப்பவனைப் போல அவன் மொழிந்த விதத்தை அப்பாவி ஆயனர்

சந்தேகிக்கவில்லை.. அவன்தான் சம்சயம் கொள்ள வகையின்றி துறவுக் கோலம் பூண்டிருந்தானே..

"தங்களின் காருண்யப் பார்வை எம் புதல்வியின் மீது படிந்ததில் அமைதி கொண்டோம் சுவாமி.."

"அந்த அமைதியுடனே பு ப்பட ஆயத்தமாகுங்கள் சிற்பி.."

ஒருவழியாக ஆயனரை கரங்களில் ஏந்தாத குறையாக கிளப்பி ரதத்தில் அமர வைத்து மண்டபப் பட்டைப் பார்த்து வழியனுப்பி வைத்து விட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டான் நாகநந்தி..

'இனி சிவகாமிக்கு எம்துணை மட்டுமே..

ஆதரவின்றி தனித்து சாளுக்கியனிடம் சிறை பட்டிருக்கும் சிவகாமிக்கு சாய்ந்து கொள்ள தோள்கள் தேவைப்படாதா..?

அத்தருணத்தில் தோள் கொடுக்கும் நாகநந்தியின் மீது அவளின் விழியோரப் பார்வை விழுந்து வைக்காதா..?

அழகின் ரூபமான.. எழிலே வடிவமான சிவகாமியின் நினைவில் அவன் இதயம் சில்லென்ற பனியின் குளுமையை உணர்ந்தது.. மறுபுறம் அவள் நினைவு மூட்டிய மோகத்தனல் பற்றியெரிந்து அவனது தேகம் முழுதும் பரவித் தகித்தது..

பனியின் குளுமையையும்.. நெருப்பின் தகிப்பை ஒருசேர உணர வைப்பதுதான் காதலோ..?

நாகநந்தி துறவறத்தை காற்றினிலே பறக்க விட்டான்.. சிவகாமியை அடைந்து இல்லறத்தை சுகிக்க முடித்தான்.. அவனது தேகம் அடைந்த இருவேறுபட்ட உணர்வலைகளை தாங்க இயலாமல் அந்தப் போலித் துறவி இமைமூடி மரத்தில் சாய்ந்தான்..

"இங்கே யாது நிகழ்கிறது..?"

கர்ண கடூரமான குரலோசையில் மூடியிருந்த அவனது இமைகள் திறந்தன.. அவனருகே நின்றிருந்த புரவி கனைத்தது.. அதன் மேல் அமர்ந்திருந்த புலிகேசி நிலத்தில் குதித்தான்..

"எம்மைப் போல ஏன் வேடம் தரித்தாய்..?"

புலிகேசியின் சினத்தில்.. மற்றவர்களைப் போல நாகநந்தி அச்சம் கொண்டு விடவில்லை.. மாறாக.. அதை அலட்சியப் படுத்தினான்..

"வேடம் தரிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை.. உனக்கும் எனக்குமான உருவத் தோற்றம் பிறவியில் அமைந்தது.."

"காவியுடை தரித்தவன்.. அரச உடையை அணிந்ததைப் பற்றி யாது விளக்கம் சொல்வாய்..?"

"அரச உடையும் எனக்கானதே.. மறந்து விட்டாயா..? அரியணையை உனக்காக விட்டுக் கொடுத்தேன்.. ஆதலினா எனக்கான அரச உரிமை அல்லாது போ விடுமா..?"

"நாகநந்தி.."

"சப்தம் செய்யாதே.. நீ அரசாளும் நாட்டின் அரசனாக வேண்டியவன் நான்.. சொப்பனத்திலும் அதை மறவாதே..

"இத்தனை காலம் கழித்து உரிமைக்குரல் எழுப்ப வருகை தந்தாயோ..?"

"அல்ல.. நாடு உனக்குத்தான்.. சிவகாமி மட்டும் எனக்குத்தான்.. அவளை அடைய யாம் யாதும் செய்வோம்.."

"சிவகாமியா..?" புருவங்களை நெரித்தான் புலிகேசி..

துறவறம் பூண்டிருந்த நாகநந்தியை விசித்திரமா நோக்கினான்..

"இல்லறம் வேண்டாமென்று துறவறம் பூண்ட நீயா இதை உரைப்பது..? ஒரு நடன மாதின் மீது இச்சை கொண்டாயா..?"

"அது இச்சையல்ல.. அவ்வாறு உரைக்காதே.. நாகநந்தி உறுமினான்..

"பின்னே..? யாதென்று அதை உரைப்பது..?" புலிகேசி வதனம் சுளித்தான்..

"காதல்..! காதலென்று உரை.."

நாகநந்தியின் நயனங்களில் சொப்பனம் வந்து அமர்ந்தது.. தொலைதூர தொடுவானை இதழோர சிறு புன்னகையுடன் வெறித்து நோக்கிய நாகநந்தியின் செய்கையில் அவனது மூளையின் ஆரோ ` யம் குறித்த சம்சயத்திற்கு ஆளானான் புலிகேசி..

"உமக்கு யாது ஆனது நாகநந்தி..?"

சகோதரனின் தோள்களைத் தொட்டு உலுப்பி.. இவ்வுலகிற்கு அவனை இழுத்து வந்தான்.. புலிகேசியின் ஸ்பரிசத்தில்... மந்திரக்கயிறுகளால் கட்டுண்டவன் விடுபட்டதைப் போல தேகம் குலுக்கி அவன் வதனம் நோக்கினான் நாகநந்தி..

"இதுபோன்ற தோற்றத்தில் உனை யாம் கண்டதேயில்லையே.. எமக்கே அறிவுரை சொல்லும் அளவிற்கு தெளிவான அறிவினைக் கொண்டவன் நீ.. எதன் பொருட்டு இவ்விதமாக மாறித்தொலைத்தாய்.."

"தொலைத்தாய் என்று உரைத்தால் உமைத் தொலைத்து விடுவேன் புலிகேசி.. காதல் கொண்டவன் இவ்விதம்தான் இருப்பான்.. போர்வெறி கொண்ட உனக்கெங்கே காதலின் மகத்துவத்தைப் பற்றித் தெரியப் போகிறது.. நீ நாட்டின் எல்லைகளை விஸ்தறிப்பதிலேயே கவனம் கொள்பவன்.. உமக்கெல்லாம் இது புரியாது.."

"இந்தக் கருமத்தைப் பற்றி எமக்குப் பு ய வேண்டாம்.. இதை உம்முடனே மூட்டை கட்டி வைத்துக் கொள்.. என்ன பணிக்காக எமக்கிது புரிய வேண்டும்..? தெளிவாக இருந்தவன்.. பித்துப்பிடித்தவனைப் போல வெட்ட வெளியை வெறித்து நோக்கிக் கொண்டு நிற்கிறாய்.. அறிவுள்ளவன் இதுபோன்ற மடத்தனத்தில் வீழ்வானா..?"

"யா அறிவிழியாகவே இருந்து விட்டுப் போகிறோம்.."

"உமது விருப்பம் அதுவென்றால் எமக்கென்ன வந்தது..? எதற்காக அந்த ஆயனரை சிறை மீட்டா ..?"

"அவர் எமது மாமனார்.."

"யாது சொன்னாய்..?"

என்னதான் இதை உரைப்பது ஒட்டிப் பிறந்த இரட்டைப் பிறவியான சகோதரனே என்றாலும் புலிகேசிக்கே இதை செவி மடுக்கச் சகிக்கவில்லை.. அவன் மனதில் சிவகாமியின் எழிலுருவம் வருகை தந்தது..

'ம்ஹீம்.. அவள் மட்டும் இதை செவி மடுத்திருந்தால் அந்த இடத்திலேயே உயிர் துறந்திருப்பாள்..'

சிரவேதனையுடன் நெற்றியை பிடித்துக் கொண்டான் புலிகேசி.. நாகநந்தியை ஏற இறங்க பார்க்கவும் செய்தான்..

"எதன்பொருட்டு இவ்விதமாக நோக்குகிறா புலிகேசி..? வரும் காலத்தில் அவர் எமது மாமனாராகப் போகிறவர் என்று உரைக்க விழைந்தேன்.. வாய் தவறி வார்த்தைகள் இடம் மாறி விட்டன.. அதன் பொருட்டா இந்தப் பார்வை..?"

"இந்த உறவு முறையைப் பற்றி ஆயனர் அறிவாரா..?"

"இதுவரை யாம் உரைக்கவில்லை.."

"அதுதானே பார்த்தேன்.."

"எதைப் பார்த்தாய் அப்பனே..?"

"யாம் எதைப் பற்றியும் குறிப்பிட்டு உரைக்க வில்லை.. உமக்கு சிவகாமியின் மீது இச்சையென்றால் அவளையல்லவா நீ சிறை மீட்டிருக்க வேண்டும்..?"

"இச்சை அல்ல புலிகேசி.. காதல்.."

"அந்தக் கருமத்தையெல்லாம் எமது வா ால் ❚ ரைக்க இயலாது.."

"போகட்டும் விடு.. எதன் பொருட்டு நான் சிவகாமியை சிறை மீட்க வேண்டும் சகோதரனே..? அவள் ❚மை விடுத்து அந்த நரசிம்மவர்மனுக்கு மாலை ❚ட்டுவதை.. விரல் சுவைத்தபடியே நோக்கி.. அட்சதை போட்டு வாழ்த்துவதற்காகவா சிறை மீட்கச் சொல்கிறாய்..? ❚ந்த நாகநந்தியை அந்த அளவுக்கு ஏமாளி என எண்ணி ❚ிட்டாயா..?"

"யாது உரைத்தீர்..? சிவகாமி நரசிம்ம வர்மனின் ❚ாதலியா..?"

"அவள் எம் காதலி..!"

இடம், பொருள், ஏவல், காவல், சேவல்.. எதையும் ❚ாதல் கொண்டவனின் அறிவு அறிந்து தொலைக்காது.. ❚ாகநந்தியும் அவ்வாறே இடையினில் புகுந்து இம்சை செய்ததில் புலிகேசி வெறுத்துப் போய் விட்டான்..

'ச்சை..

நாகநந்தியை அவன் முறைத்த முறைப்பில் ❚ிச்சயமாக சகோதர பாசம் தளும்பவில்லை..

"அது உமக்கு... யாம் உண்மை நடப்பை ❚ினவினோ ' .."

"உண்மையான நடப்பு இதுவேதான் புலிகேசி.. யாம் சிவகாமியை காதலிக்கிறோம்.."

"சிவகாமி யாரை காதலிக்கிறாள்..?"

"அது உமக்குத் தேவையில்லாதது.."

ரசிம்மவர்மன் யாரைக் காதலிக்கிறான்..?"

"அவன் காதலித்து விட்டால் மட்டும் சிவகாமி அவனுக்குகிட்டி விடுவாளா..? யாம் விட மாட்டோம். சிவகாமி எமக்குத்தான்.. அதன் பொருட்டே அவளைத் தனிமைப் படுத்தி சிறையில் வைக்க ஆயனரை சிறை மீட்டு மண்டபப் பட்டிற்கு அனுப்பி வைத்தோம்.. சிவகாமியுடன் தோழனுக்குத் தோழனாக.. காதலனுக்குக் காதலனாக யாம் இருக்கப் போகிறோம்.."

நாகநந்தியின் சதிச் செயலை புரிந்து கொண்ட புலிகேசி சிலகணங்கள் சகோதரனை இமைக்காமல் நோக்கி வைத்தான்.. பின்பு..

"விதி வலியது..!" என்று பயங்கரமாக நகைத் வைத்தான்..

எதன் பொருட்டு அவ்வார்த்தைகளை அவன் உரைத்தான் என்ற விளக்கம் கேட்க நாகநந்தி விழைய வில்லை.. எழிலின் ரூபமான சிவகாமியை கோட்டானின் அவதாரமான நாகநந்தி மோகிப்பதை அவன் விதி வலியது என்று உரைத்தானா.. அல்லது.. நரசிம்மவர்மனின் காதலி.. அவனது எதிரி நாட்டு மன்னனிடம் சிறைபட்டு விட்டதை விதி வலியது என்று உரைத்தானா என்ற விவரம் புரியாமல் நாகநந்தி பற்களை நறநறத்தான்..

பின்னதை விட.. முன்னதையே புலிகேசி குறிப்பிட்டிருப்பான் என்பதில் நாகநந்திக்கு யாதொரு சம்சயமும் இருக்கவில்லை..

புலிகேசிதான் நாகநந்தியின் காதலைப் பற்றி செவியுற்றதும் எட்டிக்காயை தின்று விட்டது போல வதனத்தை அஷ்ட கோணலாக்கிக் கொண்டு ஓர் மார்க்கமாக நாகநந்தியை நோக்கி வைத்தானே..

'கழுதை அறியுமா கற்பூர வாசனை..?'

நாகநந்தி புலிகேசியை விட அஷ்ட கோணலாக வதனத்தை வைத்துக் கொண்டு காதலின் வாசனையை அறியாத புலிகேசியை பார்த்து வைத்ததில் சிவகாமி என்ன சாபம் வாங்கினாளோ இவன் கரங்களில் மாட்டுவதற்கு என்ற எண்ணம்தான் புலிகேசிக்கு வந்தது..

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 17

*நீயென்ன மாயம் செய்தாய்..?*
*நிழல் மீது கோலம் போட்டாய்..*

"அப்படின்னா அவங்க பந்து.. பந்துன்னு அலறலையா..?"

"இல்லை..

"அப்படித்தாண்டா என் காதில விழுந்தது.."

"பந்து.. பந்துன்னா காதில விழுந்தது..?"

'இல்லைதான்..'

தாமோதரன் திரும்பி நீரஜாவின் அருகேயிருந்த வாண்டுகளை எரித்து விடுவதைப் போல பார் வைத்தான்..

'இந்தப் பக்கிகள்ல எந்தப் பக்கி அப்படி சவுண்டு விட்டது..?'

"திரும்புடா.." அதட்டினான் சித்தார்த்தன்..

"பாரேண்டா.. விளையாட வந்தா விளையாடிட்டு போகாம இதுக டீ பார்ட்டிக்கு கிளம்பியிருக்குதுக.. அப்படியே செவிட்டில நாலு அப்பு அப்பினால்தான் என் மனசு ஆறும்டா.."

" ாரை..? நீரஜாவையா அப்பப் போற..?"

"ஆத்தி..!" தாமோதரன் அலறிவிட்டான்..

"ஏண்டா சித்தார்த்.. இப்படிப் பழிவாங்கற.. அவங்களை அப்பனும்னு மனசிலகூட நான் நினைப்பேனா..?"

"அதானே பார்த்தேன்.. நீதான் வந்தவுடனே அவளுக்கு சாம்பிராணி காட்ட ஆரம்பிச்சுட்டியே.."

"அவங்க அப்பேற்பட்டவங்கடா.."

"இன்னொருதடவ என் முன்னாலே அவளை அவங்க.. இவங்கன்ன.. எனக்கு கெட்ட கோபம் வந்துரும்.

"வந்தா வந்துட்டுப் போகுது.."

சித்தார்த்தனின் கோபத்திற்கும் அஞ்சாமல் அவளைப் பார்த்தவுடன் பூ போட்டு.. சாம்பிராணிப் புகையை காட்ட வைத்தவள் தான் நீரஜா..!

சூடம் ஏற்றி வணங்காத குறையாக அவளை நொடிக்கொருதரம் பார்த்துக் கொண்டிருந்தவனைப் பார்த்து மீண்டும் தலையில் அடித்துக் கொண்டான் சித்தார்த்தன்..

"அவளைப் பார்த்ததும் பூப்போட்டுக் கும்பிட்ட முத ஆள் நீதாண்டா.."

"உனக்கு ஏண்டா இத்தனை காண்டு..?"

"அவ எவ்வளவு பெரிய இம்சைன்னு உனக்குத் தெரியுமா..?"

"தெரிய வேணாம்.. அதுக்குப் பதிலா வேற ஒன்னு தான் தெரியனும்.."

"எதுடா..?"

"அவ கூட நிக்கிற விடாசுகள்ல எந்த விடா பால்.. பால்ன்னு பறந்தது..?"

"எதுக்கு..? நீ செவிட்டில நாலு அப்பு அப்பி பஞ்சாயத்தை கூட்டி வைக்கிறதுக்கா..? அதை த்ராட்டில விடு.. ஆமா.. தெரியாமத்தான் கேக்கறேன்.. அது எப்படிடா ரப்பர் டியுபை பந்துன்னு நினைச்சுக்கிட்டுத் தண்ணியில குதிச்ச..?"

"ஹி.. ஹி.. அது பந்தைப் போலதாண்டா தெரிஞ்சது..?"

"தெரியும்.. தெரியும்.. குதிச்சதுதான் குதிச்ச.. உனக்கு நீச்சல் தெரியாதுங்கிறதை மறந்துட்டு ஏன் குதிச்ச..?"

"ஹி.. ஹி.. அது ஒரு வேகத்தில குதிச்சிட்டேண்டா.."

"ஏன்டா..? உள்ளே விழுந்தது இந்தப் பக்கிகள்ல ஒன்னா இருந்தாக்கூட நீ குதிச்சதில அர்த்தமிருந் திருக்கும்.. வெறும் பந் க்காடா உன் உயிரை பணயம் வைச்ச..?"

"ஹி.. ஹி.. அப்ப அதைப்பத்தி யோசிக்கத் தோணலைடா.."

"குதிச்சதுதான் குதிச்ச.. உன் பக்கத்திலதான ரப்பர் டியுபு மிதக்குது..? அதைப் பிடிச்சிருக்க வேண்டிய ானே...? அதை விட்டுட்டு காப்பாத்துங்க... காப்பாத்துங்கன்னு கத்தி என் மானத்தை வாங்கிட்ட.. இனி பாரு.. இதை வைச்சே என்தங்கை காலம் பூராவும் ஓட்டப் போறா.."

"ஹி.. ஹி.. அதை பந்துன்னு நினைச்சேண்டா.."

"உன்னை...

சித்தார்த்தன் மூன்றாம் முறையாக தலையில் அடித்துக் கொண்டான்.. அதை நீரஜா பார்த்து விட கூடாதே என்ற கவலையுடன் அவள் இருந்த திசையில் பார்த்தான் தாமோதரன்.. அவள் அவர்களைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.. அதில் வேறு அவளுடன் நின்றிருந்த 'பக்கி' களில் ஒரு பக்கி..

"ஏன் நீரு.. உன் வீட்டில் ஹார்ஸ் இருக்கா..?" என்று கேட்டு வைத்தது..

"இந்த வயசில இவ ஏண்டா குதிரையைப் பத்திக் கேட்கிறா..?" தாமோதரன் சித்தார்த்தனிடம் கேட்டான்.

"என் தங்கைக்கு பிரண்ட்ஸா வந்து வாய்ச்சிருக்கு துகள்ல..? இதுக எதை வேண்டும்னாலும் கேக்குங்க.. இவ காத்து அடிச்சிருக்கும்.." சித்தார்த்தன் அதற்கும் நீரஜாவையே குற்றம் சொன்னான்..

கேள்வி கேட்ட சிறுமியை வினோதமா நீரஜா..

"எங்க வீட்டில் ஹார்ஸா..? நோ சான்ஸ்.." என்றாள்..

"இல்லடி.. எங்க வீட்டுக்குப் பக்கத்தில குதிரை வண்டி ஒன்னு நிக்கும்.. அந்தக் குதிரை எப்பப் பார்த்தாலும் 'ஹி.. ஹி.. ன்னு கனைச்சுக்கிட்டு இருக்கும்.. இங்கேயும் அதே போல 'ஹி.. ஹி.. ங்கிற சவுண்டு கேட்டுச்சுடி.." அந்தச் சிறுமி விளக்கம் சொன்னாள்..

"டேய்.. அவ உன்னோட 'ஹி.. ஹி.. யைத்தாண்டா சொல்றா.."

சித்தார்த்தனின் பார்வையே தாமோதரனை அடித் புரட்டி துவைத்து தோரணமாக்கி காய வைத்தது..

"நான் என்னடா பண்ணினேன்..?" தாமோதரன் நெளிந்தான்..

"எதைச் செஞ்சாலும் காமெடியன் மாதிரியே செஞ்சிட்டு இப்ப வந்து நானென்ன செஞ்சேன்னா கேட்கிற..? படவா..! இந்த நீரஜா இதையும் சேர்த்து ஓட்டுவாளே..."

இல்லை.. சித்தார்த்தன் கவலை கொண்டதைப் போல நீரஜா தாமோதரன் செய்து வைத்த கலாட்டாவைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை..



# 18

## சந்தம் தந்த சொந்தமின்று நாடு விட்டு நீங்குது..

கற்பூர வாசனையை அறியாத கழுதையும்.. காதலை அறியாத புலிகேசியும் ஒன்றுதான் என்ற திண்ணமான முடிவிற்கு நாகநந்தி வந்தான்..

அவனது கோணல் மாணலான வதனத்தில் காதல் என்ற நாமத்தில் வந்து போன உணர்வுகளையும்.. அத்தருணத்தில் விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல அஷ்ட கோணலாக ஆகிவிட்ட அவன் வதனத்தையும் கண்ணுற்ற புலிகேசி.. இப்பேற்பட்ட பேரழகனின் கடைக்கண் பார்வை படுவதற்கு சிவகா ஏதோ ஒரு விதத்தில் சாபம் வாங்கிப் பிறந்திருக்க வேண்டும் என நாகநந்தியை விட திண்ணமான முடிவிற்கு வந்தான்..

இவ்விதமாக ஒருவர் மீது ஒருவர் பெருமதிப்பை வைத்திருந்த அந்த இரட்டைச் சகோதரர்கள் இருவரும்.. சிவகாமியை சிறையெடுத்து சாளுக்கிய தேசத்திற்கு பயணப்பட்டனர்..

தென்திசையில் பாண்டியருடன் நடந்த போர் முடிவுக்கு வந்ததில் நரசிம்மவர்மன் நாடு திரும்பினான்..

திரும்பியவனை இடியெனத் தாக்கியது சிவகாமி சாளுக்கிய அரசனால் சிறை பிடிக்கப்பட்ட செய்தி..

"இது எவ்வாறு நிகழ்ந்தது..?" அவன் துடித்துப் போனான்..

"இளவரசர் இல்லாத தருணத்தில் புலிகேசியின் முற்றுகைப் போர் முடிவுக்கு வந்தது.. உணவுப் பற்றாக்குறையில் தோல்வியுற்றவன் அமைதித்தூதுடன் காஞ்சி மாநகரில் பிரவேசித்தான்.. அரசரும் அவனை எதிர் கொண்டழைத்து உபசரித்தார்.. விருந்தினரின் வருகைக்காக நடனமாட வந்தாள் சிவகாமி.." அமைச்சர் விளக்கமாக உரைத்தார்..

"அவள் ஆடலரசிதான்.. அதற்கா புலிகேசியின் முன் அவளை நடனமாட அழைப்பதா..? நம் நாட்டு விழாக்களில்.. கோவிலின் விசேச நாள்களில்.. திருவிழாத் தருணங்களில் அவள் ஆட வந்தால் அதில் அர்த்தம் உள்ளது.. இதுபோல மாற்றான் அதுவும் பகைவன் முன்னிலையில் அவளை ஆட அழைத்தல் தகுமா..?"

நரசிம்மவர்மனின் சினம் கொண்ட கேள்வி தமக்கானது என்பதை புரிந்து கொண்டார் மகேந்திர வர் ர்.. மன்னராக இருப்பினும் சில வினாக்களுக்கு விடையளித்துத் தானே தீர வேண்டியிருக்கிறது..

"இது போல ஆகுமென்று யாம் எண்ணவில்லை மகனே..! சிவகாமியை கவர்ந்து சென்றதன் மூலம் எனது கௌரவத்திற்கு பங்கம் விளைவித்திருக்கிறான் சாளுக்கிய புலிகேசி..! அவளை மீட்பது நமது கடமை.. நான்

போருக்குப் புறப்படுகிறேன்.. காஞ்சியை காவல் காக்கும் பொறுப்பை நீ ஏற்றுக் கொள்.." என்று வருத்தத்துடன் உரைத்தார்..

"யாமிருக்க தாம் போர் புரியச் சொல்வதா..? சாளுக்கியனை அடக்க யாம் செல்கிறோம்.. தாங்கள் காஞ்சியிலேயே இருத்தல் வேண்டும்.." நரசிம்மவர்மன் தடுத்தான்..

"அல்ல மகனே..! இது எமக்கும் சாளுக்கிய புலிகேசிக்குமான போர்.. அமைதித்தூது விடுத்தவனை யாம் எதிர் கொண்டழைத்தோம்.. அறுசுவை உணவீந்து இன்னிசை நடன நிகழ்ச்சியை கண்குளிரப் பார்க்கச் செய்தோம்.. செய்நன்றி மறந்த அந்த செருக்கன் எமது நாட்டை சேதப் படுத்தி.. எம் நாட்டின் கலை பொக்கிசத்தை சிறையெடுத்துச் சென்று விட்டான்.. அதை சிறை மீட்கும் போருக்கு யாம்தான் செல்ல வேண்டும்.. இதுவே நியதி...

மகேந்திரவர்மர் உறுதியுடன் போருக்குப் புறப்பட்டு விட்டார்.. காஞ்சிக் கோட்டையின் காவலனாக நரசிம்ம வர்மன் இருந்தான்.. அவன் மணக்கண்ணில் வாதாபியின் சிறைக் கூடத்தில் வாடும் சிவகாமி இருந்தாள்.. அவன் மனம் பதறியது..

'புலிகேசி அவளை சிறை பிடித்த போது யாது எண்ணினாளோ.. எனது கண்மணி என்னைத் தேடினாளோ.. பல்லவ நாட்டின் அரசிளங்குமரனைக் காதலித்தும் கதியற்றவளைப் போல பகைநாட்டு அரசனிடம் கைதியாக

அகப்பட்டோமே என்று துடித்தாளோ.. அவன் மனம் பலவிதமாக எண்ணித் தவித்தது..

சிவகாமியும் அவனைப் பற்றிய சிந்தையோடே இருந்தாள்.. நாகநந்தி அவளுக்காக உருகுவதைப் போல நடித்தான்..

"உன் நிலை கண்டு என்மனம் துடிக்கிறது சிவகா மீன் இந்தத் துறவறம் பூண்டேன் என்று என்னையே என் மனம் வெறுக்கிறது.."

"ஏன் சுவாமி..? எனக்கும் தமது துறவறத்துக்கும் யாது சம்பந்தம்..? தாமோ துறவி..! யாமோ நடன மங்கை..! இருவரது மார்க்கமும் வெவ்வேறு திசையில் பயணிப்பவை.. இதில் எதன் பொருட்டு தங்கள் மனம் தங்களையே வெறுக்க வேண்டும்..?"

சிவகாமி என்னவோ பு யாமல்தான் வினா எழுப்பினாள்.. துறவறம் பூண்டிருப்பவனின் மனதில் அவள் மீதான இச்சை இருக்கக் கூடும் என அவள் சொப்பனமா கண்டாள்..?

'இவளா ட்டும்.. இவளது தந்தையாகட்டும்... எமது துறவறத்தைச் சுட்டிக் காட்டுவதையே வாழ்வின் குறிக்கோளாக கொண்டிருக்கிறார்கள்.. வெகுண்டான் நாகநந்தி..

"ஒருவேளை எமது துயர் கண்டு இறை மார்க்கம் கொண்டுள்ள தமது மனம் வேதனை கொள்கிறதா அடிகளாரே..?" சிவகாமி நன்றியுணர்வுடன் வினவினாள்..

அதைச் செவி மடுக்க உவகையாகத்தான் இருந்தது நாகநந்திக்கு.. ஆயினும்.. உரையின் முடிவில் சிவகாமி அவனை 'அன்பே.. என்று அழைக்காமல் 'அடிகளாரே.. என்று அழைத்தைத்தான் அவனால் தாங்கிக் கொ இயலவில்லை..

"அடிகளாரே என்று ஏன் அழைக்கிறாய் சிவகாமி..?"

"அவ்வாறு அல்லாமல் வேறு எவ்வாறு அழைப்பது அடிகளே..? தாம் துறவி அல்லவா..?"

"இதை மறக்கவே மாட்டாயா..?"

"அத்துடன் தாங்கள் வயதில் பெரியவர்.."

நாகநந்தியின் சிரத்தில் இடி இறங்கியது.. இதற்கான பதிலாக அவன் எதை உரைப்பான்..? துறவறத்தை மாற்றி அமைத்து விடலா வயோதிகத்தை எப்படி மாற்றி அமைப்பது..?

"அவ்வாறு யாம் தொண்டுக் கிழவனாகி விடவில்லை சிவகாமி.. யௌவன்ம் இன்னமும் என் தேகத்தில் குடி கொண்டிருக்கிறது.. தாம் எம்மைத் தெளிவுற கவனித்தால் அதை கண்டுணர இயலும்.."

அவ்வாறாவது சிவகாமி அவனை ஏறெடுத்துப் பார்த்துவிட மாட்டாளா என்று ஏக்கம் கொண்டான் நாகநந்தி.. நீண்ட பெருமூச்சை வெளியேற்றிய சிவகாமி சாளரத்தின் வழியாக நகரும் மேகங்களைப் பார்த்தாள்.. கண் கலங்கினாள்..

'இந்த மேகம் பல்லவ நாட்டின் மீது பயணிக்காதா..? எம் இளவரசன் எப்படியிருக்கிறான்..? எப்போது எமை மீட் வருவான் என்று வினவி வந்து சொல்லாதா..?'

மேகம் விடு தூதில் அவளிருக்க.. மோகம் விடு தூதில் நாகநந்தி இருந்தான்.. சிவகாமி அவன் தேகத்தில் யௌவனம் குடி கொண்டுள்ளதா என பார்க்க முனையும் போது... அவளது பார்வையை எதிர் கொண்டு கவ்வி விட வேண்டும் என அவனது பார்வை காத்துக் கிடந்தது.. விழிகளில் அவள் மீதான மோகத்தை குடம்.. குடமாக நிரப்பி.. அவள் பார்க்கும் போது அவளுக்குள் இறக்குமதி செய்துவிட வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் அவன் காத்திருக்க.. அவளோ நெடு மூச்சுக்களுடன் மேகத்தை வெறித்துப் பார்த்தபடி இருந்தாள்..

'என்னிடம் இல்லாத எது அந்த மேகத்திட இருக்கிறது..?'

கடுப்புற்றான் நாகநந்தி.. கருமையான கார் மேகத்தை முறைத்தான்..

'ஒருவேளை. இம்மேகம் என்னைவிட வெண்மை நிறம் கொண்டது என இவள் எண்ணுகிறாளோ..

அவ்வாறுதான் இருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தான் நாகநந்தி..

"அழகில் யாது உள்ளது பெண்ணே..? அகத்தில் உள்ளது எது என்பதுதான் இங்கு முக்கியம்.." என்றான்..

திடிரென்று அவன் உரைத்ததில் சிவகாமி குழப்பம் கொண்டாள். அவன் உரைப்பது எதனை என்று அவளால் புரிந்து கொள்ள இயலவில்லை.. அப்பாவியாய் இமை கொட்டி அவனைப் பார்த்தாள்.. அந்த ஒயிலில் சிரம் கீழாக விழுந்து வைத்தான் நாகநந்தி..

"ஆஹா..! இப்போது உனைக் காணும் போது எவ்வாறு இருக்கிறது என்று அறிவாயா சிவகாமி..?"

பரவசத்துடன் அவன் உரைத்தை 'விதியே' என்று கவனித்தாள் சிவகாமி.. பகை நாட்டின் சிறையினில் மாட்டிக் கொண்டிருப்பவள் எப்படித் தோற்றமளிப்பா ..? அதை அறிவாயா என்று ஆர்ப்பரிப்பவனை வேற்றுக் ரக வாசியைப் போல விந்தையுடன் அவள் நோக்க மாட்டாளா..?

"அஜந்தாக் குகைகளின் வண்ண ஓவியம் போ உள்ளாய் பெண்ணே...!"

நாகநந்தியின் ரசனையில் சிவகாமியின் பெண்மனம் விழித்துக் கொண்டது.. ஒரு துறவியின் உரை இது போன்று இருத்தல் கூடாதே..

நாகநந்தியை அன்றுதான் புதிதாக பார்ப்பதைப் போல அவள் பார்த்து வைத்தாள்.. பார்க்கப் பார்க்க.. அதுவரை அவளுக்குப் புலப்படாத அத்தனையும் புலப்பட்டு விட்டது..

அவளிடம் நாகநந்தி பேசிய இருபொருள் படும்படியான உரைகள் அவள் மனதில் வலம் வந்தன..

'இத்துணை தினங்களாக இதை எவ்வாறு யாம் கணிக்காமல் தவற விட்டோம்..?'

அவள் விழிகளில் சிந்தை படர்ந்தது.. அதை உணராத நாகநந்தி அவனது மனதை மறையாமல் தொடர்ந்து உரையாடிக் கொண்டிருந்தான்..

“உன்னை முதன் முதலாக மண்டபப் பட்டில் பார்த்தபோது நீ அகல்விளக்கை ஏந்தி வெளியே வந்தாய் சிவகாமி..! ஆயனர் வடித்து வைத்த அழகுமிகு சிற்பங்களில் ஒன்றுதான் உயிர்பெற்று எதிரே நிற்கிறதோ என மலைத்து விட்டேன்.. அந்நொடியிலிருந்து இந்நொடி வரை.. உன் மீதான மையல் என் மனதை விட்டு அகலவில்லை.. நம்மீது யாம் உயிரையே வைத்திருக்கிறோம் எனச் சொன்னால் அது மிகையாகாது.. பெண்ணே..! ஓர்நொடி எனது விழிகளைப் பார்.. அவை எமது காதலை உம்மிடம் எடுத்து இயம்பும்..”

உணர்ச்சிப் பெருக்கோடு தமது காதலை உரைத்து விட்டான் நாகநந்தி.. துயர் கொண்ட சிவகாமி.. அவன் மீது வெறுப்புற்றாள்.

“*சீச்சீ*.. என்ன வார்த்தைகளை மொழிந்தீர்..? துறவியென்று எண்ணி பாகுபாடு இன்றிப் பழகினால்.. தம் மனதில் விசவித்து விழுந்து விட்டதா..? இவ்வாறு உரைக்க தாம் நாணம் கொள்ளவில்லையா.. துறவறம் மேற்கொண்டவர் உரைக்கின்ற மொழிகளா இவை..? போதும் அடிகளாரே..! தம் வதனத்தைக் காண்பதற்கும் யாம் விரும்பவில்லை.. சடுதியில் இவ்விடத்தை வ்டடு அகல்வீராக..”

சிவகாமியின் *சீ*ற்றத்தில் அவ்விடத்தை விட்டு அகன்று விட்டான் நாகநந்தி.. அவன் மனதில் புயல் மையம் கொண்டது..

‘எனை ஏன் அவள் ஏறெடுத்தும் பார்க்க மறுக்கிறாள்..? எழில் வதனம் தேவைப் படுவது

பெண்ணுக்குத்தான்.. ஆணுக்கல்லவே.. அவனது நிலை எது என்பதுதானே ஆணுக்கான எழிலைக் கூட்டுகிறது..

இவ்விதமாக எண்ணியபடி புலிகேசியின் அரண்மனைக்குள் பா ம் பதித்தவனின் அறிவில் மின்னல் வெட்டியது..

'ஓ..! இதுதான் விவரமா..? அந்த நரசிம்மன் பல்லவ நாட்டின் இளவரசன்..! யாமோ துறவி..! இதன் பெருட்டே சிவகாமி எமைத் தட்டிக் கழிக்கிறாளா..? யாம் மட்டும் அரியணையை புலிகேசிக்கு விட்டுக் கொடுக்காமல் சாளுக்கிய நாட்டின் அரசனாக இருந்திருந்தால் அவள் எ காதலை ஏற்றுக் கொண்டிருப்பாளோ..?'

அவ்வாறுதான் என்று நம்பியது அவன் மனம் பெண்ணுக்கு அழகு எழில்மிகு வதனம்..! ஆணுக்கு அழகு பொருளாதாரத்தில் உயர் நிலை..!

இதுவே உலக வழக்கு எனும் போது.. சிவகாமியின் மனமும் அவ்வாறுதானே எண்ணும்..?

இந்த சிந்தனையுடனே நடந்தவன் எதிரே வந்த புலிகேசியின் மீது மோதி விட்டான்..

மகேந்திரவர்மனுடனான போர் ஆண்டுக்கணக் நீண்டு கொண்டிருந்ததில் கோபம் கொண்டிருந் புலிகேசி.. எதிரில் வருகை தருவது எவரென்று கூட விழியுயர்த்திப் பார்க்காமல்..

*'சித்தமெல்லாம் எமக்கு..*
*சிவகாமி மயமே..'*

என்று நெடும்மரம் போல மோதிவைத்த நாகநந்தியை விலக்கி நிறுத்தி வெறுப்புடன் கனல் கக்கினான்..

"விழிகளை வதனத்தில் வைக்காமல் பிடறியில் ஏன் வைத்தாய் நாகநந்தி..? பெண்பித்துப் பிடித்தால் எதிரே வருகை தருவது எவரென்று கூட உம் விழிகளுக்குத் தெரியாமல் போகுமோ..?"

அரசுடையில் இருந்த புலிகேசியை பொறாமை பொங்க பார்த்த நாகநந்தி புலிகேசியை விட கனல் கக்கினான்..

"பெண் பித்தைப் பற்றி மண்பித்துப் பிடித்த நீ உரைக்கக் கூடாது புலிகேசி..! மன்னவனாக வீற்றிருக்கும் ஆணவத்தில் இயம்புகிறாயா..? இந்த ஆணவம் யாம் உமக்கிட்ட தானம் என்பதை உம் ஆயுள்வரை மறவாதே.."

"ஹ.." கர்ஜித்தான் புலிகேசி..

"நீ விட்டுக்கொடுத்ததால் அரியணை எமக்குச் சொந்தமானதா..? அல்ல நாகநந்தி..! அது எமக்குக் உரியது.. தகுதியுள்ளவனுக்கே என்றும் அரியணை சொந்தமாகும். அந்தத் தகுதி உன்னை விட அதிகமாக எனக்கிருந்தது.. அரியணையும் என்வசம் வந்தது.."

யாசகம் பெற்றவனைப் போல பணிந்து பேசாமல்.. நாகநந்தி அரியணை ஏற தகுதியற்றவன் என்ற பொருள் படும்படி.. சூசகமாக புலிகேசி பேசியதில்.. அரியணையை சகோதரனுக்காக விட்டுக் கொடுத்து தானமளித்த நாகநந்தியின் குருதி கொதித்தது..

"எம்மைவிட எத்தகுதியில் தாம் உயர்ந்தாய் என்பதை உரைக்க இயலுமா புலிகேசி..?"

"ஏன் இயலாது..? துறவறம் என்ற போர்வையில்.. நாட்டைக் காக்கும் பொறுப்புக்களை தட்டிக் கழித்து விட்டு காடு.. மலை.. குகைகள் என மனம் போன போக்கில் சஞ்சரித்தவன் நீ.. அவ்வாறு இல்லாமல் எம் வாழ்நாள் முழுவதும் யுத்த களத்திலேயே வசிப்பவன் நான்.. இப்போது உரைப்பாய் நாகநந்தி..! அரியணை எவருக்குரியது.. உமக்கா.. இல்லை.. எமக்கா..?"

உரத்த குரலில் நகைத்த புலிகேசியின் பயங்கரமா நகைப்பு அரண்மனையின் அனைத்து திக்குகளிலும் எதிரொலித்தில்.. அங்கும், இங்குமாக நடமாடிக் கொண்டிருந்த சேடிப்பெண்களும்.. அரண்மனையின் ஒவ்வொரு அங்குலத்தையும் காவல் காத்துக் கொண்டிருந்த சேகவர்களும் நடுநடுங்கிப் போனார்கள்..

"போயும்.. போயும்.. ஓர் நடன மாதின் மீது புத்தி போயிருக் றது உமக்கு... எமக்கு நீர் இணையாவீரா..?"

"புலிகேசி..! சிவகாமியை குறைவாக உரைக்காதே.. அதை யாம் பொறுத்துக் கொள்ள மாட்டோ ..."

"யாது உரைத்து விட்டேன்..? நடன மாதை 'நட மாது' என்று உரைக்காமல் எவ்விதமாக யாம் உரைப்பது..?"

புலிகேசி அத்துடன் நிறுத்தவில்லை.. சாளுக்கிய நாட்டின் அவைக்கு வருகை தந்திருந்த பாரசீகத் தூதரின் முன்பாக சிவகாமியை வரவழைத் நடனமாடும்படி

கட்டளையிட்டான்.. நாகநந்தியின் விழிகள் சிவந்ததை ஓரக்கண்ணால் கண்டு திருப்தி கொண்டான்..

'இவள் பொருட்டுத்தானே.. ஆண்டுகள் ஒன்பது நெருங்கியும் மகேந்திரவர்மன் தோல்வியை ஒப்புக் கொண்டு பின் வாங்க மறுக்கிறான்..' புலிகேசியின் வன்மம் அதிகமானது..

"யாம் உமது கைதி என்பதற்காக தாம் ஆடச் சொல்லும் போதெல்லாம் ஆட வேண்டுமென்பதில்லை சாளுக்கிய அரசரே..! எமது கலை பல்லவ நாட்டிற்கே சொந்தம்.. எம்மால் உமது அரசவையில் நடனமாட இயலாது.."

சிவகாமியின் கலைச் செருக்கில் புலிகேசியின் கொடுவாள் மீசை துடித்தது.. செந்தணல் துண்டங்கள் போல சிவந்த கண்களுடன்..

"இழுத்து வாருங்கள் அந்த பல்லவர்களை.." என்று அவன் கர்ஜித்தான்..

அவன் பிணைக்கைதிகளாக பிடித்து வைத்திருந்த பல்லவர்கள் அரசவைக்கு இழுத்து வரப்பட்டனர்..

"இவர்களுக்கு கசையடியை கொடுங்கள்..

புலிகேசியின் உத்தரவின் பேரில் பல்லவர்களின் மீது கசையடிகள் விழுந்தன.. தம் நாட்டு மக்களின் துன்பத்தில் சிவகாமி துடித்துப் போனாள்..

"நிறுத்துங்கள்.."

சிவகாமி கூக்குரலிட்டாள்.. கசையடி நிறுத்தப் பட்டது.. புலிகேசி வெற்றிப் பெருமிதத்துடன் பாரசீக தூதரை நோக்கினான்.. சிவகாமியின் மனம் பதறியது. காஞ்சியில் குடியிருக்கும் ஏகாம்பரேஸ்வரரை மனதிற்குள் அழைத்து முறையிட்டு நடனத்தைத் துவக்கினாள்..

'ஆடல் என்பது தில்லையம்பலனுக்கு அர்ப்பணமாவது.. அதன் மகத்துவத்தைப் பற்றி இந்த மூடர்கள் அறிவார்களா..?'

அவளது விழிகளிலிருந்து கண்ணீர் வழியத் துவங்கியது.. சிவனின் ருத்ர தாண்டவத்தை மனதில இருத்தி அவள் சுழன்றாடினாள்..

*"கயிலைநாதன் நடனம் ஆடும் சிவரூபம்*
*பௌர்ணமி நேரம் நிலவில் ஆகும் ஒளிதீபம்..*
*நவரச நடனம்.. தனி தனி தனிச..*
*ஜதி தரும் அமுதம்.. தனி தனி தனிச.."*

மல்லையின் கடற்கரையோரக் குன்று அவள் மனதில் எழுந்து நின்றது.. அவள் பாதச் சலங்கையின் சந்தம் சொன்ன ஜதியில் சொந்தம் கொண்டவன் எங்கே.. என அவள் மனம் தவித்துத் தேடியது..

*"நவரச நடனம் ஜதி தரும் அமுதம்..*
*அவன் விழியசைவில் எழுதுளி அசையும்..*
*பரத மென்னும் நடனம்.. ஆ ஆ அ..*
*பிறவி முழுதும் தொடரும்.. ஆ ஆ அ...*
*விழியொளி பொழியும்..*
*அதில் பகை அழியும்..*

*திமி திமி திமி திமி..*
*சிவனின் நடனம் உலகாளும்..”*

உக்கிரத்துடன் ஜதி சொன்ன சிவகாமியின் குரலோசையில் ஏழு கடலும் பொங்கி விடவா எனக் கேட்டன..

*“திரண திரனனன திரன திரனனன..*
*திரண திரனனனன நடனம்..!*
*திரன திரனனன.. திரன திரனனன..*
*திரண திரனனன நாட்டியம்..!*
*உலகம் சிவனின் தஞ்சம்..*
*அவன் பாதமே பங்கஜம்..!*
*நர்த்தனமே சிவ கவசம்..!*
*நடராஜ பாதம் நவரசம்..*
*திரனன திரனனன திரதிர திர திர..*
*நாத வினோதங்கள் நடன சந்தோசங்கள்*
*பரம சுகங்கள் தருமே..*
*அபிநயம் காண்பதும் அதில் மனம் தோய்வதும்*
*வீடு பேறு பெறுமே..”*

நடனம் என்பது இறைவனுக்கான சமர்ப்பணம்.. பாதச் சலங்கையின் ஜதியொலியில்.. இப்பூவலகையே நாம் காணலாம்... கைவிரல்களின் அபிநயத்தில் முக்திப் பேறையே நாம் அடையலாம்..

நடனத்தின் மகத்துவத்தை அறியாத பாரசீகனே உறைந்து போனபோது.. புலிகேசி மட்டும் அதில் மனம் தோயாமல் புஜங்களை அலட்சியமாக குலுக்கினான்..

## ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



# 18

## உன்னிரு கண்களும் என்னுரு கண்டதும் உரைப்பது என்னவோ..?

அன்று முதல் இன்றுவரை அதன் மர்மம் விளங்காமல் தலைமுடியை பிய்த்துக் கொண்டான சித்தார்த்தன்.. எவரையும் மதிக்காத நீரஜா தாமோதரனை மட்டும் எப்படி மதித்தாள் என்பது ஓர் விடுவிக்க முடியாத விடுகதையாக தேங்கி விட்டது..

சித்தார்த்தனும், தாமோதரனும் பத்தாம் வகுப்பைத தாண்டி ப்ளஸ் ஒன்னில் அமர்ந்தார்கள்..

"பாப்பா சிக்ஸ்த் ஸ்டாண்டர்டா

சித்தார்த்தன் நீட்டி முழக்கியதை தாமோதரன் கண்டு கொள்ளாததை அரைப் பார்வையில் நீரஜா கண்டு கொண்டாள்..

"பாருடா.." என்று வியந்து போனான் சித்தார்த்தன்.

"அவங்க மனசு தங்கம்டா... சிலாகித்தான தாமோதரன்..

"இதை அவ எதிர்க்க சொல்லிராதே.." எச்சரித்தான சித்தார்த்தன்..

"ஏண்டா.. உனக்கு இம்புட்டுப் பொறாமை..? அவங்க யாருடா.. உன் தங்கை.. அவங்க மேலே பாசம் வைடா.. பொறாமை வைக்காதே.. அவங்க பாவம்டா.. தேவதை..!"

தாமோதரன் ஒர் அரைமணி நேரத்திற்கு நீரஜாவின் அருமை பெருமைகளை சொல்லி முடித்தான்.. எருமையின் பொறுமையோடு அதைக் கேட்டுக் கொண்டிருந்த சித்தார்த்தன்.. அவன் தனது நீண்ட உரையை முடித்ததும் நீளமாக ஒரு கொட்டாவியை விட்டான்..

"விட்டா இன்னைக்குப் பூரா பேசித் தள்ளியிருப்ப போல.. மைக் இல்லாமலே.. இப்படிக் கடிச்சுத் துப்பறயே.. உன் கையில எல்லாம் மைக்கைக் கொடுத்தா என்ன கதியாகிறது..?" என்று சிலிர்த்தும் போனான்..

தாமோதரன் அவசரமாக சித்தார்த்தன் செய்யும் கிண்டலை நீரஜா கேட்டுக் கொண்டிருக்கிறாளா என்று திரும்பிப் பார்த்தான்..

"அவ அப்பவே பரிவாரத்தோட வெளியே கிளம்பியா" என்றான் சித்தார்த்தன்..

"நான் ஒன்னும் அவங்களைப் பார்க்கல.. வெட்கத்துடன் சொன்னான் தாமோதரன்..

"நம்பிட்டேன்.. அடேய் தாமு.. என் தங்கை இருக்காளே.. அவ பிளாட்டினம், வைரம் ரேன்ஜில இருக்கிறவ.. அவ கிட்டப் போயி தங்கம்ன்னு

சொன்னேன்னு வைய்யி.. திரும்பிக்கூட பார்க்க மாட்டா.. நம்ம நல்லதுக்குத்தான் சொல்றேன்.. அவ ரேன்ஜீக்குத் தக்கபடி பேசிப்பழகு.."

மற்றவற்றில் எப்படியோ.. சித்தார்த்தன் தங்கையின் விசயத்தில் மட்டும் சரியான மதிப்பீட்டையே சொன்னான்..

நீரஜா சித்தார்த்தனின் வார்த்தைப் படிதான் இருந்தாள்.. காது.. கை.. கழுத்தில் வைரங்களைத் தவிர வேறு நகைகளை அவள் அணிந்ததில்லை.. உடைகளும் விலையுயர்ந்தவை..

சித்தார்த்தன் அப்படியல்ல.. எளிமையின் ம வடிவமாக இருப்பான்.. தகப்பனாரின் ராஜவம்சப் பெருமையினை காதில் போட்டுக் கொள்ளவே மாட்டான்.. தாமோதரனின் தோள்மீது கை போட்டு சமதையாக பழகினான்..

ப்ளஸ் டூ முடித்தவர்கள் பி.பி.ஏ படிக்கப் போனார்கள்.. வெளிநாட்டுப் பல்கலைகழகத்தில் எம்.பி.ஏ பட்டத்தை தாமோதரன் வாங்கியதற்கு சித்தார்த்தன் மட்டுமே காரணமாக இருந்தான்..

"ஏம்ப்பா.. உங்க அப்பா ஒருத்தரோட சம்பளத்தில குடும்பத்த ஓட்டறதே பெரும்பாடா இருக்கு.. நீ எதுக்காக வெளிநாட்டுக்குப் படிக்கப் போகனும்..? அந்தப் படிப்பை இங்கேயே பக்கத்தில இருந்துக்கிட்டுப் படிச்சா ஆகாதா..?" தாமோதரனின் அம்மா அம்பிகா ஆனமட்டும் சொல்லிப் பார்த்தாள்..

"என்னால முடிஞ்சது இவ்வளவுதான்.." கைச் செலவுக்கு சில ஆயிரம் ரூபாய்களை கொடுத்ததோடு நிறுத்திக் கொண்டார் ஈஸ்வரன்..

சித்தார்த்தன்தான் ஒரே பிடியாக தாமோதரனை வெளிநாட்டுக்கு தள்ளிக்கொண்டு போய்.. தன்னுடன் படிக்க வைத்தான்.. அவனுக்கான அத்தனை தேவை களையும் தாமோதரன் கேட்காமலே சித்தார்த்தன் நிறைவேற்றி வைத்ததில் அவர்களுக்குள் பிரிக்க முடியாத பிணைப்பு உருவாகி விட்டது..

"அப்பாவோட நிழலில் இருக்கக் கூடாதுடா.."

சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனியை சித்தார்த்தன் ஆரம்பித்த போது அதன் ஆணி வேராய் மாறிப் போனான் தாமோதரன்.. அவனுக்கு அனைத்துமாக இருந்த நண்பனுக்குச் செழுத்த வேண்டிய நன்றிக்கடனை செழுத்தும் வாய்ப்பு கிடைத்ததில் படு உற்சாகமாக அதைப் பயன் படுத்திக் கொண்டு உயர்ந்தான்.. கம்பெனியை உயர்த்தினான்..

வெகு விரைவில் சித்தார்த்தனை தாமோதரனிட நன்றிக்கடன் பட வைத்துவிட்டான்..



# 19

## சிறைமீட்க வந்தவன் மனதை சிதிலமாக்கியது ஏனென்று சொல்லடி..

மரணப் படுக்கையில் கிடந்தார் மன்னர் மகேந்திர வர்மர்.. கால்மாட்டில் கண்களில் நீர் தளும்ப அமர்ந்திருந்த பட்டமகிஷியை பரிதாபத்துடன் பார்த்தார்..

'எமக்குப் பின்னால் இவள் உயிர் தரிப்பாளா..?'

அகத்தில் பொங்கிய வேதனையை மறைத்துக் கொண்டார்.. ஆண்டுக் கணக்கில் நீண்ட போரில் அவர் பட்ட மரணகாயம் அவர் மனதின் காயம் போல ஆற மறுத்து அவரது உயிர் குடிக்க ஆரம்பித்து விட்டது.. மருத்துவர்களின் இடைவிடாத சிகிச்சைக்கு யாதொரு பலனும் ஏற்படவில்லை.

அவரருகே நிழலாடியது.. வெகு சிரமத்துடன் சிரம் திருப்பிப் பார்த்தார்.. வேதனை தோய்ந்த வதனத்துடன் அங்கே நரசிம்மவர்மன் நின்று கொண்டிருந்தான்..

"வா மகனே..! எம் அருகில் அமர்வாயாக.."

மகேந்திரவர்மரின் குரல் மெலிந்து ஒலித்ததில் நரசிம்மவர்மன் துயர் கொண்டான்.. மஞ்சத்தில் மன்னரின் அருகே அமர்ந்து அவரது கரங்களைப் பிடித் கொண்டான்..

"அவசரம் கொண்டு விட்டேன் நரசிம்மா..! மன்னன் என்ற மமதையில் தன்னிச்சையாக முடிவெடுத்து விட்டேன்.. நாட்டின் இளவரசனான உனது கருத்து யாது என்று கேட்டறிய மறந்து விட்டேன்.. அதற்கான பரிசுதான் இந்த மரண காயங்கள்.."

"தாங்கள் வருந்தக் கூடாது தந்தையே.."

"அல்ல மகனே.. இதுவே எம் அகத்தில் இருப்பதை மறைக்காமல் உம்மிடம் உரைத்திட வேண்டிய தருணம்.. நரசிம்மா..! சாளுக்கியன் விடுத்த அமைதித்தூதை நான் ஏற்றுக்கொண்டிருக்கக் கூடாது.. அதை ஏற்றுக் கொண்டது யாம் புரிந்த முதல் தவறு.. அவனை விருந்தினனாக காஞ்சி மாநகருக்குள் அனுமதித்தது யாம் புரிந்த அடுத்த தவறு.. இந்த தவறுகளுக்கான தண்டனைதான் சிவகாமியை புலிகேசியிடம் பறிகொடுத்தது.."

ஆயனர் புதல்வியைப் பற்றிய பேச்சு வந்ததில் நரசிம்மவர்மனின் வதனம் மாறியது.. அவனது துயரம் தோய்ந்த முகத்தைக் காண இயலாமல் விழி மூடினார் மகேந்திரவர்மர்..

"அந்தப் பெண் யாது செய்தாள்..? அவளை யா ம தலைநகருக்கு வரவழைத்தோம்.. புலிகேசியின் முன்பு நடனமாடச் செய்தோம்.. அரச கட்டளைக்குப் பணிந்து ஆட வந்தவளை அரசனாகிய யாம் காக்கத்தவறிவிட்டோ எதிரி நாட்டு மன்னன் அவளை சிறை பிடிக்க யா காரணமாகி விட்டோ "

"புலிகேசியின் அடாத செயலுக்கு தாங்கள் எவ்விதம் பொறுப்பாக முடியும் தந்தையே..? அமைதி கொள்ளுங்கள்..

"அல்ல மகனே..! இவள்தான் எம் நாட்டின் கலையரசி..! பொக்கிசம்..! என புலிகேசியிடம் இயம்பியது யார்..? யாம்தானே..? யாமே அவனுக்கு அவளை அடையாளம் காட்டினோம்.. அவளை புலிகேசி சிறையெடுக்க யாமே காரணமாகி விட்டோ

"தந்தையே..! இதுபோல தாங்கள் அலட்டிக் கொள்ளல் ஆகாது.. தங்களின் தேகநிலையை கருத்தில் கொள்ளுங்கள்.."

"யாம் பாவி நரசிம்மா..! அரியணையில் ஏறப் போகிறவனின் பட்டத்து மகிஷியாக அரச குலத்தைச் சேர்ந்தவளே இருத்தல் வேண்டும் என எண்ணியவன். சிவகாமிக்கும் உனக்குமான காதலை என்றுமே யாம் ஏற்றுக் கொண்டதில்லை.."

"அதைப் பற்றிய உரை போது எ தந்தையே..?"

"இது உரைக்க வேண்டிய பொழுது மகனே. இப்போது உரைக்காவிடின்.. பின் எப்போதுமே இவற்றை எம்மால் உரைக்க இயலாமல் போய் விடலாம்.."

மகேந்திரவர்மரின் வார்த்தைகளில் அவர் மனைவி சப்தம் எழுப்பாமல் வாய் பொத்தி அழுதாள் நரசிம்மவர்மனின் விழிகளிலும் நீர் திரண்டது..

"துயரம் வேண்டாம் தந்தையே.." துயரத் அவன் சொன்னான்..

"வாதாபிக்குச் செல் மகனே..! சிவகாமியை எவரும் அறியா வண்ணம் வெகு ரகசியமாக மீட்டு வந்துவிடு.."

"தற்போதா..?"

"தற்போதுதான்.. எமக்குப் பின்னால் அரியணை ஏற வேண்டிய பட்டத்து இளவரசன்.. பட்டத்து ராணியாக வேண்டிய தேவியை உடனடியாக மணந்தாக வேண்டும் மகனே.."

"தந்தையே.."

"செல் மகனே..! சிவகாமியை அழைத்து வா.. அவளை மணந்து கொ எமது மனப்பூர்வமான ஆசியை உனக்களிக்கிறேன்.."

மகேந்திரவர்மன் அயர்வுடன் விழி மூடித் துயில ஆரம்பித்தான்.. அறையை விட்டு வெளியே வந்த நரசிம்மவர்மன்.. இருளில் இறங்கினான்.. அவனைக் கண்டதும் புரவியுடன் ஓடிவந்த சேவகனிடமிருந்து புரவியின் கயிறை வாங்கிக் கொண்டவன் லாவகமாக புரவியின் மீது ஏறி அமர்ந்தான்.. அதன் விலாவில் அவன் பட்டதில் புரவி விரைத்தோட ஆரம்பித்தது.

"மெய்தான் உரைக்கிறாயா..?"

நாகநந்தியின் இடுங்கிய விழிகள் எதிரே நின்றிருந்த ஒற்றனை துளைத்து விடுவதைப் போல பார்த்து வைத்தன.. அந்தப் பார்வையின் குரூரத்தில் ஒற்றனின் முதுகுத்தண்டு சில்லிட்டது..

அரச உடையும்.. மகுடமுமாக இருந்த நாகநந்தியை அவன் புலிகேசி மன்னன் என்று நம்பிவிட்டான்.. அத்துடன் நாகநந்தி புலிகேசியின் மந்திர ஆலோசனை மண்டபத்தில் நின்றிருந்தான்..

நாகநந்தி புலிகேசியைப் போல உடை உடுத்தி ஆபரணங்களை அணிந்து கொள்வதில் விருப்பம் காட்ட ஆரம்பித்திருந்தான்.. இடைவிடாத போரில் இருந்த புலிகேசி அதை கண்டுணரவில்லை.. அவன் இல்லாத தருணங்களில் நாகநந்தியைக் காண்பவர்கள் அவனே புலிகேசி என்று எண்ணி புலிகேசியிடம் உரைக்க வேண்டியதை நாகநந்தியிடம் உரைத்து விட்டுச் சென்று விடுவார்கள்.. அவற்றில் பல செய்திகள் புலிகேசியின் செவிகளை எட்டாது..

அரியணையில் அமர்ந்து விட்ட மமதையோடு சிவகாமியின் மீதான நாகநந்தியின் காதலை தருணம் கிட்டும் போதெல்லாம் ஏதோ நகைப்புக்குரிய விவரம் போல உரைத்துக் காட்டிக் கொண்டிருந்த புலிகேசியின் மீது நாகநந்தி துவேசம் கொண்டிருந்தான்.. அதன் காரணமாகவே பல செய்திகளை புலிகேசியின் செவிகளை எட்டாமல் தடுத்து வந்தான்..

"மெய்யே உரைக்கிறேன் மன்னவரே..! பல்லவ நாட்டின் மன்னர் மகேந்திரவர்மர் இறுதி நொடிகளில் இருக்கிறார்.. சிவகாமியை இளவரசர் நரசிம்மவர்மர் மணப்பதற்கு சம்மதம் அளித்து விட்டார்.. சிவகாமியை ரகசியமாக மீட்டுச் செல்ல பல்லவ இளவரசர் நரசிம்ம வர்மர் வந்து கொண்டிருக்கிறார்.."

'அப்படியா சேதி..?'

நாகநந்தியின் குரூர வதனத்தில் கொடூரம் குடிகொண்டது.. ஒற்றன் நடுங்கிப் போனான்..

"நீ செல்லலாம்.."

நாகநந்தி விடை கொடுத்ததில் தப்பித்தேன்.. பிழைத்தேன் என்று ஓட்டம் பிடித்து விட்டான்..

நாகநந்தி மந்திராலோசனை மண்டபத்தை விட்டு வெளியே வந்த போது.. எதிரே புலிகேசி வந்து கொண்டிருந்தான்.. நாகநந்தியின் ஆடை அலங்காரத்தில் வதனம் கருத்தவன்..

"இது என்ன வேட என்று பற்களை நறநறத்தான்..

"வேட இது எமக்குரிய அலங்காரம் சகோதரனே..!" நாகநந்தியும் விட்டுக் கொடுக்கவில்லை..

"இங்கே தமக்கான பணி யாது..?"

"பணியிருந்தால்தான் இவ்விடத்தில் யாம் உலாவ வேண்டுமோ..? இது யாம் பிறந்து வளர்ந்த அரண்மனை சகோதரனே..! தாம் மறந்திருந்தால் நினைவு படுத்திக் கொள்வது நன்மை பயக்கும்.."

"எவருக்கு..?"

"எவருக்கோ.."

"ஓர் உறையில் இருவாள்கள் இருத்தல் என்பது இயலாத ஒன்றாகும்.."

"இதன் மூலம் தாம் இயம்ப விரும்புவது யாதோ..?"

"எமது நாட்டின் விவகாரங்களில் தாம் சிரம் நுழைக்காமல் இருத்தல் நலம்.."

"யாம் ஓர் ஆணியைக்கூட பிடுங்க விழையவில்லை.. புலிகேசி.. அனைத்து ஆணிகளையும் உமக்கே உமக்கென்று விட்டுக் கொடுத்திருக்கிறோம்.. வேண்டு மட்டும் ஆணிகளை தாமே பிடுங்கிக் கொள்ளலா ..."

"எள்ளலா..?"

"அல்ல புலிகேசி.. துள்ளல்.."

"வரத்தான் செய்யும்.. நாட்டின் நாற்புறமும் போர் மேகங்கள் சூழ்ந்திருந்த போது எமக்கென்ன என்று அஜந்தா குகையின் வண்ண ஓவியங்களை ரசித்துக் கொண்டிருந்து விட்டு.. தற்போது வந்து தமக்கும் இந்த அரியணையில் உரிமையுள்ளது என்று சற்றேனும் நாணமின்றி உரைப்பவர்தானே தாம்..? காலம் கழிந்த கடைசித் துளிகளில் நடன மாதின் மீது தீராத மோகம் கொண்டு அலையும் தம்மிடம் துள்ளல் இருக்கத்தான் செய்யும்.."

"ஹ...

புலிகேசியை புறக்கணித்து விட்டு சிவகாமியை சிறைவைத்திருந்த அறையை நோக்கி விரைந்தான் நாகநந்தி..

அவனிடம் உரைக்க வேண்டிய செய்தியை நாகநந்தியிடம் ஒற்றன் உரைத்து விட்டதை அறியாத புலிகேசி சினத்துடன் அரண்மனைக்குள் சென்று விட்டான்..

சாளரத்தின் அருகே சாய்ந்து நின்ற சிவகாமி காலடியோசையில் திரும்பினாள்.. நாகநந்தியைக் கண்டதும் வதனம் திருப்பிக் கொண்டாள்..

'என் வதனத்தைக் காணக்கூட இவளுக்கு பிடித்தமில்லையா..?' நாகநந்தி கனன்றான்..

"வான்வெளியில் என்ன தேடுகிறாய் சிவகாமி..?"

"விரிந்து பறக்க சிறகைக் கொடுக்கும் பறவைகள் உள்ளனவா எனத் தேடுகிறேன்.." வெடுக்கென்று விடையளித்தாள் சிவகாமி..

'ஆக.. அந்த நரசிம்மவர்ம பல்லவன் வந்து அழைத்தால் உடன் பறந்துவிட இவள் சித்தமாகவே இருக்கிறாள்..

நாகநந்தியின் விழிகளில் குரூரம் படிந்தது.. சிவகாமியை அவன் இழப்பதா..? கூடாது..

"சிறகு கிடைத்தால் பல்லவ நாட்டிற்கு பறந்து விடுவாயோ..?"

நயவஞ்ச நாகநந்தி வலை விரித்தான்.. அதை அறியாத சிவகாமி அவளையறியாமல் அவ்வலையில் வீழ்ந்தாள்..

"அதில் தமக்கு துளியளவுகூட சம்சயம் வேண்டா' அடிகளாரே.." விசமத்துடன் உரைத்தாள்..

'அடிகளாரா..?'

நாகநந்தியின் கொடூர வதனம் கருத்தது.. சிவகாமியின் விசமத்தில் அவன் சினம் கொண்டான்..

'என்னை இவளது காதலனாக சிந்திக்கவே ாட்டாளா..?'

சிவகாமியின் இதழ்சுளிப்பு அது நடக்காத நிகழ்வு என்பதனை உரைத்தது..

"அவ்வாறா சிவகாமி..? மக்கு என்ன.. பறப்பதற்கு சிறகு கிடைத்து விடும்.. நீயும் பறந்து விடுவாய்.. இங்கு சிறையெடுக்கப்பட்டிருக்கும் பல்லவ குடிமக்கள்தான் பாவம்.. பறப்பதற்கு அவர்களுக்கு சிறகேது..? மன்னவன் வந்து மீட்பதற்கு அவர்கள் என்ன உன்னைப்போல பல்லவ நாட்டின் கலை பொக்கிசங்களா..? அல்லவே.. சாமானிய குடிமக்கள்தானே..? அவர்கள் புலிகேசியிடம் கசையடி பட்டால் உமக்கென்ன..? உயிரையே துறந்தால் தான் உமக்கென்ன..? நீ சுயநலவாதி சிவகாமி.. உம் நலனில் மட்டுமே அக்கறை கொண்டவள்.."

"அடிகளாரே..

"மெய்யைத்தானே உரைத்தேன்..? பாய்யுரைக்க வில்லையே.."

"எம்நாட்டு மக்களுக்காக நான் எந்த தியாகத்தையும் புரிவேன்.. தமக்கென்ன தெரியும்..? காடு, மலையென்று அலையும் சஞ்சாரியான உமக்கு நாட்டுப் பற்றைப் பற்றியும்.. நாட்டு மக்களின் நலனில் ஏற்படும் அக்கறையைப் பற்றியும் யாது தெரியும்..?"

"அவ்வாறா சிவகாமி..? எமக்கேதும் தெரியா ப்புக் கொள்கிறேன்.. உமக்கு அனைத்தும் தெரியுமா..?"

"தெரியும்.. என் நாட்டு மக்கள் எமது உயிராவார்

"அவ்வாறெனில்.. இவர்களை விடுவிக்காமல் உனை விடுவித்தால் நீ ஏற்றுக்கொள்ள மாட்டாய் என்று சபதம் செய்வாயா..?"

"நிச்சயம் செய்வேன்.."

'இது போதும் எனக்கு..

நயவஞ்சக நகைப்புடன் நாகநந்தி சிவகாமியைப் பாராட்டுவதைப் போல பாவனை செய்தான்..

"தமது நாட்டுப் பற்றை எண்ணி வியந்தோம்.. என்னே தமது நாட்டுப் பற்று..! எமது இதயம் சிலிர்த்தது.. உனது நாட்டுப் பற்றுக்கு வந்தனம் சிவகாமி.."

எண்ணியதை எண்ணிய வண்ணம் நிகழ்த்தி முடித்து விட்ட இறுமாப்புடன் அவ்விடம் விட்டு அகன்றான் நாகநந்தி..

இரவுப்பொழுதில் இமை மூடாமல் சாளரத்தின் வழி தெரிந்த நிலவையே பார்த்த வண்ணம் இருந்தாள் சிவகாமி.. அவள் மனம் மண்டபப் பட்டிலிருந்த ஆயனரிடம் சென்றது..

'என் தந்தை தனிமையில் வாழ்கிறாரே..

அவளது விழிகள் கண்ணீரை உகுத்தன.. புரண்டு படுத்தாள்.. அவளது அருகாமையில் நிழலுருவம் ஒன்று தென்பட்டது.. அச்சப்பட்ட சிவகாமி அலறப் போனாள்.. அவளது வாயை வலிமையான ரோமம் படர்ந்த கரங்கள் இறுக்கிப் பொத்தின..

'இந்த ஸ்பரிசம்..?'

சிவகாமி சிலிர்த்துப் போனாள்.. இது நரசிம்ம பல்லவன் அல்லவா..? மெய்யாகவே அவளைத் தேடி அவன் வந்து விட்டானா..?

"சப்தம் எழுப்பாதே சிவகாமி.."

அவளது செவியோரம் கிசுகிசுத்த அவனது குரல்.. வந்திருப்பது சிவகாமியின் காதலனேதான் என்பதை உறுதிப்படுத்தியது..

"என் அரசே..!"

சிவகாமி அவன் மார்பில் முகம் புதைத்து அவன் முதுகினைக் கரங்களால் வளைத்து இறுக்கிக் கொண்டாள்.. விம்மினாள்... அவளது கண்ணீரில் அவளது உடை நனைந்தது. தயங்கிய அவனது கரங்கள் பதிலுக்கு அவளை சுற்றி வளைத்து தன்னுடன் இறுக்கிக் கொண்டன. அவளது கழுத்தினில் அவனது அதரங்கள் பதிந்தன கண்ணீருடன் இமை மூடிக்கிறங்கினாள் சிவகாமி.. அந்த நொடியில் நிலைத்திருக்க இருவருமே விரும்பினாலும் அந்த இடம் அவர்களுக்கான இடம் அல்ல என்பதில நரசிம்மன் விலகி நின்றான்..

மாறு வேடத்தில் இருந்தான்.. பெரிய தலைப்பாகையும்.. அடர்ந்த இமைகளும்.. நீண்ட செயற்கை சிகைக் குடுமியும்.. தொளதொளவென்ற உடையுமாக வயோதிக விவசாயி போல தோற்ற மளித்தவனை இமைக்காமல் பார்த்தாள் சிவகாமி..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



# 19

## உன் கண்வீச்சு - அந்த கதிர்வீச்சை விட சக்தி வாய்ந்தது..

அந்த நீரஜா சித்தார்த்தனின் அறையில் இருந்த விருந்தினர் சோபாவில் சட்டமாக அமர்ந்து காலாட்டியபடி வெகு தோரணையாக தாமோ ரனைப் பார்த்தால் அவன் கலவரம் கொள்ள மாட்டானா..?

ஏஸி ரூமிலும் தாமோதரனுக்கு வியர்த்துக் கொட்டியது.. சித்தார்த்தன் அவனுடைய கைக்குட்டையை எடுத்து நீட்டினான்..

"எதுக்குடா..?" தாமோதரன் அதற்கும் குழம்பினான்..

"துடைச்சுக்க.. அசடையில்ல.. வியர்வையை.. சித்தார்த்தன் தெளிவு படுத்தினான்..

தாமோதரனால் அதை வாங்கவும் முடியவில்லை.. வேண்டாமென்று சொல்லவும் முடியவில்லை.. இரண்டு மில்லாமல் மென்று விழுங்கியபடி..

"என்கிட்ட இருக்குடா.." என்றான்..

"இருந்தா எடுத்து முகத்தைத் துடைச்சுக்க.. இல்லேன்னா உனக்குக் கொட்டற வியர்வையில படகு விடறதைப் போல ஆகிரும்.."

'இருந்தாலும் இவன் நீரஜாவின் முன்னால் இந்த ஒட்டு ஒட்டக் கூடாது..' சங்கடப்பட்டான் தாமோதரன்..

கைக்குட்டையால் வியர்வைத் துளிகளை ஒற்றி எடுக்க முயன்றால் அது தொப்பல் தொப்பலாக நனைந்து தொலைத்தது.. பிழிந்தால் ஒரு குடமே நிரம்பி வழிந்து விடும் போல இருந்ததில் தாமோதரன் பரிதாபமாக நீரஜாவை பார்த்து வைத்தான்..

அவளோ இரக்கமில்லாமல் அவனை லேசர் பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள்.. சல்லடை.. சல்லடையாக துளைத்த அந்தப் பார்வையில்..

'இவ பேசாம மிலிடிரியல சேர்ந்திருக்கலா ..' என்று நினைத்துக் கொண்டான் தாமோதரன்..

அவளுடைய மிடுக்கும் கம்பீரமும் அதுபோலதான் இருந்தன.

"பேர் என்னன்னு கேட்டேன்.." அழுத்தம் திருத்தமா அவள் நினைவு படுத்தினாள்..

'அத விட்டு நகர மாட்டேங்கிறாளே..

தாமோதரன் தலையைச் சொரியலா ா என யோசித்தான்.. ஏற்கனெவே ஒரு குடம் வியர்வையை கொட்டி விட்ட முகத்துடன்.. கலைந்து.. குலைந்து. பப்பரப்பா என்று படிந்து கிடக்கும் முடியை சொரிந்து வைத்தால் நீரஜா அவனை இந்த லேசர் பார்வையைக் கூட பார்க்காமல் விலகிச் சென்றுவிடும் அபாயம் இருந்ததில் விசப்பரிட்சை வேண்டாம் என விட்டு விட்டான்..

"தாமோதரன்னு சொன்னேனேங்க.."

"என்ன..? மனசுக்குள்ள பெரிசா ஜோக்கடிக்கிறதா நினைப்பா..?"

"யாருக்குங்க..?"

"உங்களுக்குத்தான்.. வேற யாருக்கு..?"

"ஏங்க..? உங்களுக்கே இது நியாயமா இருக்கா..? உங்க முன்னாலே எனக்கு வெறும் நினைப்பே வராது.. இந்த லட்சணத்தில ஜோக்கடிக்கற நினைப்பு மட்டும் வந்துட்டுத்தான் வேற வேலையைப் பார்க்குமா..?"

தாமோதரனின் அங்கலாய்ப்பை ரசித்து வாய்விட்டுச் சிரித்தபடி தலையில் அடித்துக் கொண்டான் சித்தார்த்தன்..

"என்டா இப்படி இருக்க..? இவ முன்னாலே நிமிர்ந் நிக்க வேணாமா..?"

"என்ன கழுதைக்கு..?"

தாமோதரன் சரணாகதியிலேயே குறியாய் இருந்தான்.. நீரஜா வாய்க்குள் அவனை முணுமுணுப்பாய் திட்டித் தீர்ப்பதை மகா சந்தோசத்துடன் தாமோதரன் பார்த்ததில்..

"முடியல.." என்று தலையைப் பிடித்தான் சித்தார்த்தன்..

"இந்த டைவர்ட் பண்ற வேலையெல்லாம் இங்கே வேணாம்.. நான் பேர் என்னன்னு கேட்டது உங்களையில்ல.. இவளை.." நீரஜா சீறினாள்..

"எவளை..?" தாமோதரன் சுற்றுமுற்றும் பார்த்தான்

"ஹா.. ஹா.." சித்தார்த்தன் பலமாக சிரித்து வைத்தான்..

நீரஜா தமையனை முறைத்த முறைப்பில் தாமோதரனுக்கு எழுந்து ஓடிவிடலாம் போல இருந்தது..

'அடுத்த பலிகடா நானா..?'

ஆமாம் என்றது அவளது அக்கினி பார்வை. தாமோதரனின் முன்னால் அவன் வேலை கொடுக்கும்படி சிபாரிசு செய்த பெண்ணின் பயோடேட்டா அடங்கிய ஃபைலைத் தூக்கி விட்டெறிந்தாள்.. அது அலேக்காக தாமோதரனின் மடியினில் விழுந்து விரித்து வைத்தது. அதில் அந்தப் பெண்ணின் புகைப்படம் சிரித்தது..

"ஃபைலுக்குக்கூட யார் மடியில விழுகனும்னு தெரியுது பாரு.. இங்கே நானும்தான் இருக்கேன்.. என் மடியில வந்து விழுந்துச்சா..? அதுக்கே தெரியுது உடந்தைப்பட்டவங்க யாரு.. வேத்து மனுசங்க யாருன்னு இல்லே.. நீரஜா..?"

ஒன்றும் அறியாத சின்னஞ்சிறுவனைப் போல சித்தார்த்தன் தங்கையைத் தூண்டி விட்டான்..

"டேய்ய்..! படுபாவி..!" அலறினான் தாமோ ரன்..

"யாரைடா பாவிங்கற..? நீரஜாவையா..? கேட்டுக்கிட்டியா நீரஜா..?"

"அவங்களையாடா 'டேய்'ன்னு சொல்லுவேன்..?"

"நீ சொன்னாலும் சொல்லுவடா.. உன் சீக்ரெட்டை நீரஜா கண்டு பிடிச்சுட்டாளேங்கிற காண்டு உனக்கு.."

"என்னது சிகரெட்டா..?"

பதட்டத்தில் தாமோ ரன் உளறிக் கொட்டியதில்..

"ஓ.. அந்தப் பழக்கம் வேற உனக்கு இருக்கா..? கேட்டுக்க நீரஜா.."

சித்தார்த்தன் போட்டுக் கொடுத்தான்.. யாமினிக்கு வேலை கொடுக்க விடாமல் தடுத்துக் கொண்டிருக்கும் நண்பனை ஒரு வழியாக்க வழி கிடைத்து விட்ட சந்தோசம் அவனுக்கு..




இமைக்கும் நொடியில் கூட அவன் பிம்பம் கண்களை விட்டு அகலக்கூடாது என்று இமைக்காமல் நரசிம்மவர்மனைப் பார்த்துக் கொண்டே இருந்தாள் சிவகாமி..

அவளது பார்வையில் நவரசங்களும் வந்து போயின.. விழிகள் மட்டும் இடைவிடாமல் கண்ணீர் துளிகளை உகுத்துக் கொண்டே இருந்தன.. அவளது துயரத்தில் மனம் கரைந்தான் நரசிம்மவர்மன்..

"புறப்பட ஆயத்தமாகு சிவகாமி..!" கரகரத்த குரலி மொழிந்தான்..

"எங்கே இளவரசே..?"

சிவகாமியின் வினாவில் திகைத்துப் போனா நரசிம்மன்.. அவளை உற்று நோக்கினான்..

"என்ன வினா இது சிவகாமி..? எங்கே புறப்பட சொல்வேன்..? காஞ்சிக்குத்தானே நாம் சென்றா வேண்டும்..?"

"யாம் மட்டும்தான் தங்களுடன் பயணிக்க இயலுமா இளவரசே..?"

அப்போதும் புறப்படாமல்.. அசையாமல் நின்றபடி தர்க்கம் செய்த சிவகாமி நரசிம்மனுக்கு புதியவளாகத் தெரிந்தாள்..

"என்ன வினவுகிறாய் என்பதை அறிந்தேதா வினவுகிறாயா..?"

"ஆம் அரசே..! அறிந்தே வினவுகிறேன்..

ாம் மட்டும் தனித்து வந்திருக்கிறோம்.."

"எதன் பொருட்டு இளவரசே..?"

மீண்டும் தம் வினாவில் இளவரசனை திணறடித்தாள் சிவகாமி..

"தாம் சிவகாமியேதானா..? எமது காதலியேதானா..?"

"'பிச்சி'யென்று எண்ணி விட்டீரா அரச குமாரரே..? அல்ல.. யாம் இன்னமும் முழுமையான 'பிச்சி'யாக மாறி விடவில்லை.."

"எதன் பொருட்டு மாறுவேடம் பூண்டு பகைவனின் தலைநகருக்குள் யாம் நுழைவோம் சிவகாமி..? தம்மை மீட்டுச் செல்லவே வந்தேன்..

"யாம் மட்டுமா..?"

"பின்னே..? உடன் வேறு எவரை அழைத்துச் செல்லலாம் என்று எண்ணுகிறாய் சிவகாமி..? வேண்டுமெனில் துயில் கொண்டிருக்கும் புலிகேசியை தட்டி எழுப்பி உடன் அழைத்துச் செல்லலாமா..?"

எரிச்சலுடன் வினவினான் நரசிம்மவர்மன்... காஞ்சியில் அவன் வரவுக்காக காத்திருக்கும் மகேந்திர பல்லவரின் வேதனை நிறைந்த வதனம் அவன் மனதில் வந்தது.. நாட்டைக் காக்க வேண்டிய மன்னன் படுத்த படுக்கையாய் கிடக்க.. இளவரசன் வாதாபியை நோக்கித் தனித்து புறப்பட்டு விட்டதில் கலவரம் கொண்டிருந்த அமைச்சரின் வதனமும் அவன் மனதில் எழுந்தது..

எப்பேற்பட்ட சூழலில் அவன் வருகை தந்திருக்கிறான் என்பதை அறியாமல் அவனுடன் தர்க்கம் செய்து கொண்டிருந்த சிவகாமியின் மீது முதன் முதலாக கோபம் கொண்டான் நரசிம்மவர்மன்..

"உன் பொருட்டே நான் உடல்நிலை சரியில்லாத மன்னவரை விட்டுவிட்டு.. காஞ்சியைக் காவல் காக்கும் பொறுப்பையும் விட்டுவிட்டு.. தன்னந்தனியனாக வாதாபிக்கு புறப்பட்டு வந்திருக்கிறேன்.. புரிந்து கொண்டு புறப்பட ஆயத்தமாகு.. சிவகாமி..! தற்போது மிக நெருக்கடியான சூழலில் நமது பல்லவநாடு உள்ளது.. அதை மறவாதே.."

"யாம் மறக்கவில்லை இளவரசே..! தாம்தான் டமையை மறந்தீர்.."

"யாமா..?"

"தாமேதான்.."

"காதலனுக்குரிய கடமையை ஆற்றத்தான் வருகை புரிந்து விட்டேனே.. உனை மீட்டுச் செல்ல வந்தவனிடம் உரைக்கும் மொழியா இது..? இத்தருண உரையாடலுக்கான தருணமல்ல.. புறப்படு.."

"சற்றுப் பொறுங்கள் இளவரசே..! காதலனுக்குரிய கடமையை உரைத்தீர்.. மன்னருக்கு உரிய கடமையை மறந்தீரா..?"

அம்பின் கூர்மையோடு நரசிம்மவர்மனின் நெஞ்சினில் பாய்ந்த அந்த வினாவில்..

"சிவகாமி..?.." என்று ஸ்தம்பித்தான் நரசிம்மன்..

"இங்கு சிறை பட்டிருப்பது யாம் மட்டும்தானா.. மற்ற பல்லவகுடிமக்களைப் பற்றி மறந்து போனீரா அவர்களையும் மீட்க வேண்டியது தம் கடமையல்லவா..? அவர்கள் என்ன குற்றம் புரிந்தார்கள்..? பல்லவ நாட்டில் பிறந்தார்கள்.. அதன் பொருட்டே சாளுக்ய புலிகேசி அவர்களை சிறைபிடித்து துன்புறுத்துகிறான் தினந்தோறும் அவர்கள் வாங்கும் கசையடிகளை தாம் அறிவீரா..? யாம் அறிவோம்.. எம் கண்முன்னே அவர்கள் சித்திரவதைகளை அனுபவிக்கிறார்கள்.. அவர்களை அவற்றிலிருந்து மீட்காமல் யாம் மட்டும் சுயநலமாக தம்முடன் வருவதா..?"

"சிவகாமி.. சிவகாமி.. உமக்கு எதை உரைத்து புரிய வைப்பேன்..? மன்னர் இறுதி நொடிகளில் இருக்கிறார்.."

சிவகாமி துயர் கொண்டாள்.. அவள் விட்ட கண்ணீரில் நரசிம்மனின் கோபம் குறைந்தது..

"இதை செவிமடுத்தும் நான் உயிர்தரித்திருக்கிறேனே.. இளவரசே..! இத்தருணத்தில் தங்களுடன் இருக்கவே என் மனம் விழைகிறது.. தமது துயரத்தை துடைக்க.. தாயாக மடி தாங்க என் மனம் ஏங்குகிறது.. ஆயினும் என்னால் தங்களோடு புறப்பட்டு வர இயலாது.."

சிவகாமியின் பிடிவாதத்தில் நரசிம்மன் மலையேறினான்..

"சுயநலத்தைப் பற்றி உரைத்தாயே.. எது சுயநலம்..? நெருக்கடியான சூழலில் காஞ்சியை காவல் கா வேண்டிய யாம் நகரை விட்டு நீங்கியிருக்கிறோம்.. மாறுவேடம் பூண்டு எதிரியின் தலைநகரில் நுழைந்திருக்கிறோம்.. எதன் பொருட்டு.? தம்மை சிறை மீட்கும் பொருட்டு.. இருந்தும் உடன் கிளம்பாமல் தர்க்கம் புரிகின்றாயே.. இது வல்லவோ சுயநலம்..! அங்கே உயிரைக் கரங்களில் பிடித்தபடி உன் வருகைக்காக காத்திருப்பது எமது தந்தை..! உமது தந்தையல்ல.."

"எமது தந்தை மட்டும் எமக்கென்ன என்று உள்ளாரா..? அவரால் யாது இயலும்..? உளியைப் பிடித்து சிற்பங்களை செதுக்க மட்டுமே இயலும்.. அதை உரைத்துக் காட்டத்தான் வருகை புரிந்தீரா.."

"அது உமது குணம்.. எமது குணமல்ல.. வாதாபியின் அழகில் மதிமயங்கி எம்முடன் புறப்படுவதை தவிர்க்க எண்ணுகிறாயா..? யாம் அழைத்தும் மறுக்கும் துணிவை எவர் உமக்கு அளித்தது..?"

"எவராக இருக்கக் கூடும்..? அதையும் தாமே உரைத்தல் நலம்.."

"முடிவாக உமது விடை யாது..?"

"மன்னவா..! வாதாபிக்கு பாரசீகத்தின் தூதன் வருகை தந்திருந்தான்.."

"அதற்கும்.. தாம் என்னுடன் பு ப்பட மறுப்பதற்கும் யாது சம்பந்தம்..?"

"உள்ளது இளவரசே..! அவன் முன்னிலையில் எம்மை நடனமாடக் கட்டளையிட்டான் புலிகேசி..!"

"என்ன..?"

நரசிம்மனின் புஜங்கள் துடித்தன.. சிவகாமி விட்ட கண்ணீரில் அவனது கோபம் கொழுந்து விட்டு எரிந்தது.. பகைவனின் அரண்மனையில் நடனமாட வைக்கப்பட்ட காதலி சிந்திய கண்ணீரில் அவன் வெஞ்சினம் கொண்டான்..

"யாம் மறுத்தோம்.. எமை பணிய வைக்க அவன் மேற்கொண்ட யுக்தி யாதென்று அறிவீரா..?"

"யாது சிவகாமி..?"

"நம் நாட்டு மக்களை இழுத்து வரச் செய்து என் கண்முன்னே கசையடிகளை அளிக்க வைத்தான்.

நம் மக்கள் துன்புறுவதைக் காணச் சகியாமல் யாம் நடனமாடினோம்.."

"சிவகாமி..!"

"அத்தருணத்தில் அவர்களை காப்பாற்றி விட்டேன்.. தற்போது உங்களின் அழைப்பிற்கு இணங்கி யாம் மட்டும் தங்களுடன் புறப்பட்டு விட்டால் அவர்களின் கதி யாதாகும் அரசே..?"

சிவகாமியின் இளகிய மனதில் நரசிம்மவர்மனின் மனமும் இளகியது.. பல்லவநாட்டு மக்களை சிறை பிடித்த புலிகேசியின் தலைநகரமான வாதாபியை தரைமட்ட மாக்க வேண்டுமெனும் பகை அவனுள் கிளர்ந்தது..

"யாம் படையெடுத்து வந்து அவர்களை மீட்டுச் செல்வோம் சிவகாமி..! தற்போது அவர்களை விடுவிக்க இயலாது.. தமை மட்டுமே எம்மால் மீட்டுச் செல்ல இயலும்.. வந்து விடு சிவகாமி.. சென்று விடலா ..."

"எங்கே இளவரசே..?"

"நம் பல்லவ திருநாட்டிற்கு.. காஞ்சியில் நமக்கு மணம் புரிய ஆயத்த நிலையில் உள்ளார்கள் அன்பே..! அரியணை ஏறவேண்டிய இளவரசனுக்கான திருமணம் கடுதியில் நடந்தேற வேண்டியது தற்போதைய சூழலில் அரசியல் அத்தியாவசியம் சிவகாமி..!"

சிவகாமியின் மனம் பொங்கியது.. எந்த வார்த்தைகளைச் செவி மடுக்க வேண்டுமென்று காலம் முழுதும் அவள் காத்திருந்தாளோ.. அந்த வார்த்தைகளை

செவி மடுத்து விட்டாள்.. அவள் போன்ற சாதாரணக் குடி மகளுக்கு அரியணை ஏறும் வாய்ப்புக் காத்திருக்கிறது. அவளது மனம் கவர்ந்த மன்னாதி மன்னன் அவளுக்கு மாலையிடக் காத்திருக்கிறான்.. இதைவிட வேறென்ன வேண்டும்..?

'ஆயினும்.. அவள் நெடுமூச்செறிந்தாள்..

சொப்பனத்திலும் கிட்டாத அரிய வாழ்வு.. அவள் முன் காத்து நிற்கும்போது அதை ஏற்க முடியாத வறியவளாக ஏன் அவளை அந்தக் காஞ்சியின் ஏகா பரேஸ்வரர் படைத்தார்..?

'இதைத்தான் கடல்நீர் நடுவே குடிநீர் தேடும் துயரம் என இயம்புவார்களோ..

வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் சிவகாமி.. மனதில் திடத்தை வரவழைத்துக் கொண்டாள். அவளை மீட்க அரச உடையைத் தவிர்த்து.. முரட்டுப் பருத்தி ஆடையில் மாறுவேடம் பூண்டு வந்திருக்கும் அவளுடைய ஆருயிர் காதலனை ஏறெடுத்துப் பார்த்தாள்

அவனுடன் புறப்பட மறுப்பதை புலப்படுத் மனோதைரியம் அவளுக்குள் இருத்தல் வேண்டுமே என்னதான் அவள் அதனை தளை போட்டு பிணைத்து இழுத்து நிறுத்தி வைத்தாலும் அது தளையை அறுத்துக் கொண்டு பறக்க யத்தனிக்கிறதே..

வளர்ந்த தேகமும்.. வஜ்ராயுதம் போன்ற தோள்களும்.. வரிய கரங்களும்.. பரந்த மார்புமாக இருந்த

நரசிம்ம பல்லவனை பருகுவதைப் போல அவள் பார்த்து வைத்தாள்..

நெடுங்காலமாக கிட்டாத அந்தப் பார்வையில் நரசிம்மன் அனைத்தையும் மறந்து அவளைத் தழுவிக் கொண்டான்.. தகித்த இரு தேகங்களும்.. ஒருவரை மற்றொருவர் எத்துணை அளவிற்கு வேண்டுகின்றனர் என்பதனை புரிய வைத்தன..

"அன்பே..!" நரசிம்மன் தழுதழுத்தான்..

"பிரியமானவரே.." சிவகாமி விம்மினாள்..

"எம்மீது உமக்கு காதலில்லையா..?"

"உலகளவு அது உள்ளதை யாம் அறிவீரே.."

"இருந் ம் எதற்காக இந்த தர்க்கம்..?"

"இது தர்க்கமல்ல இளவரசே..! சபதம்.."

சிவகாமியின் உறுதி மிக்க குரலில் நரசிம்மவர்மனின் புருவங்கள் முடிச்சிட்டன.. அவன் சிவகாமியை விலக்கி நிறுத்தினான்..

"சபதமா..?" புரியாமல் வினவினான்..

"ஆம் மன்னவா..! சபதம்தான்.. இந்த சிவகாமி உரைக்கும் சபதம்..! பல்லவ மண்ணில் பிறந்த இந்த சாமானிய குடிமகள் மொழியும் சபதம்..!"

"யாதென்று உரைப்பாய் சிவகாமி.."

"அய்யனே..! தாம் இந்த வாதாபின் மீது படையெடுத்து வந்து.. இந்நகரை தீக்கிரையாக்கி விட்டு..

எம்மையும்.. எம்முடன் சிறையிருக்கும் பல்லவ குடி மக்களையும் சிறை மீட்டால் மட்டுமே நான் இந்த வாதாபியை விட்டு அகல்வேன்.. அல்லாது போனால் இங்கேயே மடிவேன்.. இதுவே இந்த சிவகாமியின் சபதம்..!"

அசைவற்று நின்று விட்டான் நரசிம்ம வர்மன்.. சபதம் என்னும் இரும்புத்திரைக்கு அப்பால் நின்றிருந்த காதலியை துயரத்துடன் பார்த்தான். அவள் உரைத்த சபதத்தை அவன் நிறைவேற்றுவான்.. ஆயினும் அத்தருணத்தில் சிறை மீளும் சிவகாமிக்கு அவன் கிட்டுவானா...?

"அவசரம் கொண்டு விட்டாய் ஆயனர் மகளே..!" துக்கத்துடன் மொழிந்தான் அவன்..

"அறியேன் மன்னவா..! ஆயினும்.. எமது சப சபதம்தான்.. இதில் மாற்றமில்லை.."

நரசிம்மன் அவளையே பார்த்தபடி ஓர் கணம் அசையாமல் நின்றான்.. யாமத்தைத் தாண்டிக் கொண்டிருந்த பொழுதை கணிக்கும் படி அவனது அறிவு உரைத்தது..

'பு ப்பட்டாக வேண்டும்..

மாசு படிந்த ஓவியமாக பேரெழிலுடன் நின்ற சிவகாமியை அவன் பார்த்த பார்வையில் இருந்த தவிப்பு சொல்லில் அடங்காததாய்.. யுகங்கள் கடந்தும் நிலைத் நிற்பதாய் இருந்தது..

"விதியை மாற்ற எவரால் இயலும் சிவகாமி..? இப்பிறப்பில் உனை யாம் கரம் பிடிக்க இயலுமென்று தோன்றவில்லை.."

"அச்சுறுத்துகிறீரா..?"

"யாமா..? உம்மை அச்சுறுத்துகிறோமா..? தகுந்த நகைச்சுவை..!"

"பின் எதன்பொருட்டு இவ்வாறு இயம்புகிறீர்களா"

"தாம் அறிந்த நடனக்கலைஞனான நரசிம்மவர்மன் வேறு.. பல்லவ நாட்டின் பட்டத்து இளவரசனான நரசிம்மவர்ம பல்லவன் வேறு.. எம்மைச் சுற்றிப் பிணைந்திருக்கும் அரசியல் தளைகளைப் பற்றி நீ அறியாய்.. யாம் தமக்கு மட்டும் சொந்தமானவனல்ல.. பல்லவ நாட்டின் அரியணைக்கும் சொந்தமானவன்.."

"எமது பாதச் சலங்கையொலியின் சந்தம் தந்த சொந்தத்தில் நாம் பிணையுண்டவர்கள் என்பதை மறந்தீரா மன்னவரே..?"

"அல்ல சிவகாமி.. அதன் பொருட்டே தாம் உரைத்த சபதத்தை யாம் நிறைவேற்றி வைப்போ விடை பெறுகிறேன்.."

"எமை விட்டு நீங்கிச் செல்கிறீர்களா..?"

சிவகாமியின் தழுதழுத்த குரலில் இமை மூடி நின்று விட்டான் நரசிம்மவர்மன்.. அவளைப் பிரிந்து செல்லும் அவன் இனி வரப்போகும் எத்தினத்திலும் அவளுக்கு சொந்தமாக மாட்டான் என்பதனை அவள் அறிவாளா என்று அவன் மனம் வினவியது..

"யாது செய்வேன் சிவகாமி..? நீங்காமல் இங்கேயே நின்றுவிட இயலுமா..? யாமம் கடந்து கொண்டிருக்கிறது.."

நரசிம்மன் நகர முற்பட்டான்.. அவன் கரங்களைப் பிடித்துத் தடுத்து நிறுத்திய சிவகாமி அவன் வதனத்தை தவிப்புடன் பார்த்தாள்..

"ஏனென்று தெரியவில்லை.. எம்மை விட்டுத் தாம் நீங்குவது.. எம் உயிரே எமை விட்டு நீங்குவதைப் போல வேதனை தருகிறது இளவரசே..!"

மனம் பதைக்கச் சொன்னவளை இழுத்து இறுக்கிக் கொண்டான் நரசிம்மவர்மன்.. விம்மலில் குலுங்கிய சிவகாமியின் தேகத்தை ஆறுதல் படுத்த தட்டிக் கொடுத்தவனின் அகத்தில்.. மறுமுறை அவளைச் சந்திக்கும் போது இதுபோல ஸ்பரிசிக்க இயலுமா என்ற வினா எழுந்தது..

'இவளது விதியை இவளே வரைந்து விட்டாளே..

சபதத்தில் தன்னை சிறை படுத்திக் கொண்ட சிவகாமியின் கூந்தல் கோதி.. அவளின் பிறை வடிவ நெற்றியில் முத்தமிட்டுப் பிரிந்தான் நரசிம்மவர்மன்..

குதிரையின் குளம்படிச் சப்தத்தை செவியுற்ற சிவகாமி விரைந்தோடி சாளரத்தில் எட்டிப் பார்த்தா தொலைதூர இருளில் அவளது காதலன் தொலைந் மறைந்து போனான்..

இன்னதென்று வரையறுக்க முடியாத பதட்டம் அவள் மனதில் சூழ மனம் பதைத்தாள் அப்பேதை

அவளுக்காக நாட்டை மறந்து.. இறுதி நொடிகளில் இருக்கும் தந்தையையும் மறந்து.. போர் மேகம் சூழும் சூழலையும் மறந்து.. பட்டத்து இளவரசன் அவன் என்பதனையும் மறந்து.. தேடி வந்தவனின் முன்னிலையில் சபதத்தை நிறுத்தி திருப்பி அனுப்பி விட்டாளே..

தான் செய்த சபதம் சரியா.. தவறா.. என்று புரியாத மனநிலையில் சுவரில் சரிந்து தொய்ந்து அமர்ந்தாள் சிவகாமி.. அவள் விழிகளின் முன்பாக இருண்டிருந்த அவளின் எதிர்காலம் புலப்பட்டது.. அந்த இருள் நடுவே அவளது காதலனை அவள் தேடினாள்.. தேடினாள்.. தேடிக் கொண்டே இருந்தாள்..

விடியும் வரை அவன் வதனம் அவள் மனக்கண்ணுக்கு புலப்படவே இல்லை..

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 20

*உன் கடைக்கண் பார்வை எதற்கு..?*
*இதழ் சுழிப்பிலேயே இமயம் வென்று வருவேனே..*

நீரஜாவின் அனல் பார்வையில் தீயணைப்பு வண்டிக்கு போன் போட்டு விடலாமா என்று யோசித்தான் தாமோதரன்..

'பயர் சர்வீஸ் காப்பாத்தினாத்தான் உண்டு.. இந்தப் பயலை நம்பி ஒரு பிரயோசனமும் இருக்கப் போவதில்ல..

யூஸ்லெஸ் ஃபெல்லோ.. இவனுக்காக நான் மண்டையை உடைச்சுப் பிளான் போட்டு அந்த யாமினிக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் போடாம வேற ஒருத்திக்கு போடுடான்னா இவன் புரிஞ்சுக்காம இம்சை செய்யறது மில்லாம இவன் தங்கச்சிகிட்ட போட்டுக் கொடுக்கிறான்.. பழிவாங்க சான்ஸ் கிடைச்சிருச்சுன்னு சந்துக்குள்ள சான்கைப் போடறான்.. இவளும் அதைப் புரிஞ்சுக்காம கண்ணகி மதுரையைப் பார்க்கிறதைப் போல என்னையும் பார்த்து வைக்கிறா..

மனதுக்குள் புலம்பித் தள்ளினான் தாமோதரன்.. இதில் வேறு யதேச்சையாக விரிந்து கிடந்த ஃபைலில் அவன் விரல் பட்டுத் தொலைத்து விட்டது.. உக்கிரமான நீரஜா அவனை உறுத்துப் பார்த்ததில் புரியாமல் அவள் பார்வை போன திக்கில் போய் அவனுடைய விரலைப் பார்த்தவன்..

'ஆத்தீதீதீ... என்று மனதுக்குள் அலறியபடி தீப்பட்டதைப் போல விரலை எடுத்துவிட்டான்..

"ஏன்..? பிடிச்சுத்தானே டச் பண்ணினீங்க... பின்னே.. எதுக்காக விரலை நகர்த்தனும்..?" எரிமலையாக பொங்கினாள் நீரஜா..

"ஏங்க நீங்க வேற.." தாமோதரன் விளக்கம் சொல்லப் போக அதுவே அவனுக்கு வினையாக வந்து முடிந்தது..

"ஓ..! நான் 'வேற..'ங்கிறதை கன்ஃபர்மே பண்ணிட்டீங்களா..?" உதட்டைக் குவித்து கேட்டு வைத்தாள் நீரஜா..

அந்த உதட்டுக் குவிப்பிற்கு உலகையே அவள் பெயருக்கு எழுதிக் கொடுத்து விடலாம் போல மயங்கிப் போனான் தாமோதரன்.. அதை உணராமல் அவன் யாரோ.. அவள் யாரோ என்பதைப் போல அவள் பார்த்து வைத்தாள்..

"நான் சொன்ன 'வேற'யே வேறங்க.."

அழமாட்டாத குறையாக தாமோதரன் விளக்கம் சொன்ன விதத்தில் சித்தார்த்தன் உரக்கச் சிரித்து வைத்தான்..

"வேண்டாம்டா சித்தார்த்.. ஏற்கனெவே நான் கொலைவெறியில இருக்கேன்.. நீ வேற கிளப்பி விடாதே.." எச்சரித்தான் தாமோதரன்..

"வொய் திஸ் கொலைவெறி..?"

நீரஜா தாமோதரனை விட்டு விட்டு அவள் அண்ணனிடம் விளக்கம் கேட்டு வைத்து உண்மை யாகவே தாமோதரனுக்கு கொலைவெறியை வர வைத்தாள்..

'கொலைவெறியில இருக்கிறது நானா.. இல்ல.. இவ அண்ணனா..? என்கிட்ட கேட்க வேண்டிய கேள்விய அவன்கிட்ட கேட்டு வைக்கிறா.. அம்மணி என்கூட பேசவே மாட்டாளா..?'

தாமோதரனின் பிளட் ரசர் எகிறி உச்ச கட்டத்தை அடைந்தது..

"அதுவா நீரஜா.. என் செக்கரட்டரி வேலையை ரிசைன் பண்ணிட்டுப் போயிட்டா.." சித்தார்த்தன் தங்கைக்கு விளக்கம் சொல்ல ஆரம்பித்தான்..

'டேய் பழி..! இந்த லட்சணத்தில விளக்கம் சொல்லாதேடா.. இவ எனக்கும் அவளுக்கும் முடிச்சுப் போட்டு வைக்கப் போறா..

தாமோதரன் மனதுக்குள் அலறினான்.. அவன் எதை நினைத்தானோ.. அதுவே மிக நன்றாக நடந்தது..

"ஓ..!" மீண்டும் உதட்டைக் குவித்து 'ஓ' போட்டு வைத்தாள் நீரஜா..

'ஜெமினியில விக்ரம் கூட இத்தனை பாட்டிருக்க மாட்டாரு..

தாமோதரனுக்கு அவளது உதட்டுக் குவிப் மீது நேரம் கெட்ட அந்த நேரத்தில் மையல் வந் தொலைத்தது.. அவனது மையலையெல்லாம் அந்த மயில் லட்சியமே செய்யவில்லை.. அதை விட்டுவிட்டு..

"உன் செகரட்.டரி ரிசைன் பண்ணினா உன் பிரண்டுக்கு கொலை வெறி வருதா..? ஏனாம்.. அவ இவரைக் கழட்டி விட்டுட்டு வேற யாரையும் மேரேஜ் பண்ணிக்கிட்டு போயிட்டாளா..?" என்று அவளாகவே திரைக்கதை எழுதிக் கொண்டு விசாரித்து வைத்தாள்..

"என்னங்க நீங்க.. இப்படிக் கேட்டு வைக்கறிங்க..?"

ஊடே பாய்ந்த தாமோதரனை உதாசீனப்படுத்தி விட்டு..

"நீ சொல் அண்ணா..?" என்று சித்தார்த்தனின் பக்கமாக திரும்பி அமர்ந்து கொண்டாள் நீரஜா..

'இவன்தானே... வண்டை... வண்டை ாய் சொல்லுவான்... சொல்லுடா... உன் ஆருயிர் தங்கை கேட்கிறா.. புளுகு மூட்டையை அவிழ்த்து விடு.. இவ கேட்டுட்டு என்ன கொத்து புரோட்டா போடட்டும்.. அடுத்த சந்து கிடைச்சிருச்சுடா மச்சான்.. நீ சான்கைப் போட்டு பாட விடு.. உன் காட்டிலதான் இன்னைக்கு மழை கொட்டோ.. கொட்டுன்னு கொட்டித் தள்ளுதே.. தாமோதரனின் முகம் சிவந்தது அவன் கொண்ட நாணத்தினால் அல்ல..

"எப்படி நீரஜா இப்படிக் கரெக்டா பாயிண்டைக் கேட் பிடிச்ச..?" சித்தார்த்தன் தாமோதரனின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான்..

"நினைச்சேன்.." நீரஜாவின் முகமும் சிவந்தது.. இதுவும் நாணத்தினால் அல்ல..

'இதையெல்லா நினை.. என்னை மட்டும் நினைக்காதே.

பேசாமல் நீயுமாச்சு உன் வேலையுமாச்சு என்று எழுந்து போய் விடலாமா என்றிருந்தது தாமோதரனுக்கு..

ஆனால் நினைத்ததைச் செய்ய அவனால் முடியாது.. அவனுக்கும் சித்தார்த்தனுக்குமான பாசப் பிணைப்பும்.. அவனுக்கும் நீரஜாவுக்குமான மாயப் பிணைப்பும் அவனை அதைச் செய்யவிடாது..



## 21

## விழிகள் உரைக்கும் மொழிகள்தனை காதலனே..! நீ மறந்தாயோ..?

'இனி எப்போது அவரின் திரு முகத்தைப் பார்ப்பேன்..?'

சிவகாமியின் மனம் தேம்பியது.. அவள் விழிகளில் வழிந்த கண்ணீர்துளிகள் தரையில் விழுந்து சிதறின..

*"கண்கள் இரண்டும் என்று..*
*உம்மைக் கண்டு பேசுமோ..?*
*காலம் இனிமேல் நம்மை..*
*ஒன்றாய்க் கொண்டு சேர்க்குமோ..?"*

மனம் பரிதவிக்க.. சாளரத்தின் மீது சாய்ந்து நின்று நரசிம்மவர்மன் நுழைந்து மறைந்த இருள்வெளியை வெறித்துப் பார்த்தபடி துக்கத்துடன் பாடினாள் சிவகாமி..

அவளை சிறை மீட்க அவள் காதலன் வருகை தந்தான்.. அத்தருணத்தை கை நழுவ விட்டால்.. பின்பு எத்தருணத்திலும் அவனை அவள் அடைய முடியா என்பதனை வலியுறுத்தினான்.. ஏன் அவள் செல்ல மறுத்து.. சபதம் செய்தாள்..?

இருளுக்குள் துழாவிய அவள் விழிகள் அவனைக் காணாமல் சோர்ந்தன.. இனி அவனை எங்கே சென்று தேடுவா ..?

*"பச்சைக் கிளியானால்..*
*பறந்தேனும் தேடுவேன்..*
*பாடி வரும் தென்றல்..*
*தேரேறி ஓடுவேன்.."*

அருகிலிருந்த மரக்கிளைகளில் அமர்ந்திருந்த பறவைக் கூட்டத்திடம் சிறகை இரவல் கேட்கலாமா என சிந்தித்தாள் சிவகாமி.. பிச்சியாக மாறிவிட்ட அவளது உன்மத்த நிலையை நரசிம்மவர்மனிடம் சென்று உரைக்கும் தூதிற்காக அவள் ஏங்கினாள்..

*"சென்ற இடம் காணேன்..*
*சிந்தை வாடலானேன்..*
*சேதி சொல்ல யாரும்..*
*தூது சொல்லக் காணேன்..*
*கண்கள் இரண்டும் என்று*
*உம்மைக் கண்டு பேசுமோ..?*
*காலம் இனிமேல் நம்மை*
*ஒன்றாய்க் கொண்டு சேர்க்குமோ..?"*

பொங்கிக் கதறினாள் சிவகாமி.. 'போய் வா.. என்று சிறை மீட்க வந்த காதலனை அவள்தான் திருப்பி விட்டாள்.. அவன் சென்று விட்ட பின்பு மனம் தாங்காமல் அழுது புலம்பினாள்..

மல்லையின் கடற்கரைக் குன்றில் அவளுக்காக அவன் காத்து நின்ற பொழுதுகளை நினைவு கூர்ந்து அந்நினைவுகளை இறுக்கிப் பிடித்து.. துக்கக் கடலில் இருந்து மீள முடியுமா என்று தடுமாறினாள் அவள்.

அவனுடன் அவள் சென்ற இடங்கள் அவள் மனதில் நிழலாய் தோன்றியதில் அவள் மனது அலைகடலாக ஆடியது..

*"சென்ற இடம் யாவும்..*
*நிழல் போல தோன்றுதே..*
*அன்று சொன்ன வார்த்தை..*
*அலை போல மோதுதே.."*

உனைப் பிரியேன் என்று அவன் உரைத்ததை பாடலில் உரைத்து அழுது தீர்த்தாள் அந்த பரிதாபத்துக்குரிய நடன மங்கை..

அவளது விரல்மீது வீற்றிருந்த கணையாழியின் மீது அவளது கண் பார்வை படிந்தது..

அது அவளுக்கான காதல் பரிசாக அவளது அன்பு காதலன் நரசிம்மவர்மன் அணிவித்த கணையாழி..

அது அவள் விரலில் வீற்றிருக்கிறது.. அவன் மட்டும் அவளைப் பிரிந்து புரவியின் மீதேறி பறந்து போய் விட்டான்..

*"கணையாழி இங்கே..*
*மணவாளன் அங்கே..*
*காணாமல் நானும்..*
*உயிர் வாழ்வதெங்கே..?*
*கண்கள் இரண்டும் என்று*
*உம்மைக் கண்டு பேசுமோ..?*
*காலம் இனிமேல் நம்மை*
*ஒன்றாய்க் கொண்டு சேர்க்குமோ..?"*

சிவகாமி நினைவிழந்து தரையில் சரிந்தாள்..

காஞ்சி மாநகரம் விழாக் கோலம் பூண்டிருந்தது.. நீண்ட காலத்திற்குப் பின்னால் நாட்டு மக்களின் வதனங்களில் புத்துணர்வும்.. பொழிவும் தெரிந்தன.. தொடர் யுத்தத்தில் அல்லாடியிருந்தவர்களின் அகங்களில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கியது.. இல்லங்கள் தோறும் வர்ணம் பூசப்பட்டு.. வாசலில் நீர்தெளித்து கோலமிட்டு.. மாவிலைத் தோரணங்கள் கட்டப்பட்டன..

அவர்களது பட்டத்து இளவரசன் நரசிம்வர்மனுக்குத் திருமணம் நிகழப் போகிறது... பல்லவ குலத்தின் மருமகளாக காஞ்சி நகரில் காலடி வைக்கப் போகிறாள் பாண்டிய நாட்டு இளவரசி 'வானமா தேவி..

வாதாபியிலிருந்து திரும்பி வந்த நரசிம்மன் உரைத்த சிவகாமியின் சபதத்தை செவி மடுத்த மகேந்திரவர்மனின் உடல்நிலை அதிகமாக சீர்கேடடைந்தது..

"தாமதிக்காமல் தங்களின் மணநாளை முடிவு செய்தல் வேண்டும் இளவரசே..! மன்னவர் தங்களை மணக்கோலத்தில் காண வேண்டும்.."

அமைச்சர் மிகத் தெளிவாக உள்ளங்கரத்தின் நெல்லிக்கனியைப் போல விழி எதிரே இருந்த சூழலை உணர்த்திவிட்டார்..

நாட்டின் அரியணையில் மன்னவன் வீற்றிருந்தா தான் அந்நாடு பாதுகாப்புடன் இருந்திட இயலும்.. அவ்வாறன்றி மன்னவர் இல்லாத அரியணையைக் கொண்ட நாட்டின்மீது எத்தருணமும் பகைவர் போர்

தொடுப்பர்.. அதுபோன்ற தருணங்களில் அதி முக்கியமான முடிவுகளை எடுக்கவும் மன்னவன் இருந்திடல் வேண்டும்.

"மன்னவரின் உடல்நிலை தினத்துக்குத் தினம் கவலைக்கிடமாகிக் கொண்டிருக்கிறது.. இத்தகவல் எட்டுத் திக்கிலும் பறந்து போயிருக்கும் என்பதை தாங்கள் அறியாதவரா இளவரசே..?"

நரசிம்மவர்மனின் மனநிலை அறிந்து மிக நாசுக்கா அவனது திருமணத்தை வலியுறுத்தினார் அமைச்சர். நரசிம்மவர்மன் பெருமூச்சு விட்டான்.. இதுபோன்ற சூழலை எதிர்கொள்ள நேரிடும் என்பதனை அவன் அறிந்தவன்தானே..? ஆதலால்தானே சிவகாமியை சிறை மீட்க வாதாபிக்குச் சென்றான்..? அவள் அவனுடன் வருகை தந்தாளா..? அவள் மட்டும் அத்தீர சபதத்தை உரைக்காமல் அவனுடன் புறப்பட்டு வருகை தந்திருந்தால சிவகாமியுடன் தானே அவனது மணநாள் நிச்சயிக்கப் பட்டிருக்கும்..? மன்னவரே அதை அனுமதித்து விட்ட பின்பு சிவகாமிக்கு நரசிம்மன் மாலை சூடுவதை தடுப்பவர் எவர்..? இனி அவனால் யாது செய்ய இயலும்.?

"யாம் ஆற்ற வேண்டிய கடமையை மறவோ அமைச்சரே..! அதிலிருந்து பின் வாங்க மாட்டோ"

நரசிம்மவர்மன் உறுதியளித்து விட்டான்.. பல்லவ நாட்டிலிருந்து பாண்டியநாட்டிற்கு தூதன் விரைந்தான். காஞ்சியின் பட்ட மகிஷியாக மகளுக்கு கிடைத்

திருக்கும் வாய்ப்பை பாண்டிய மன்னர் இறுக்கிப் பற்றிக் கொண்டார்.. வானமாதேவியுடனான நரசிம்ம வர்மனின் திருமணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது..

"எமக்காகவா நரசிம்மா..?" மகேந்திரவர்மர் தழுதழுத்தார்..

அதுதான் மெய் எனினும்.. இறுதி நொடிகளில் இருக்கும் தந்தையின் மனதில் குற்றவுணர்வு ஏற்படுவதை நரசிம்மனால் எண்ணிப் பார்க்கவும் இயலவில்லை..

"அல்ல தந்தையே..! இந்தத் திருமணம் நாட்டை ாக்க நடப்பது.."

அதுவும் மெய் என்பதில் அந்த விடையை உரைத்தான் நரசிம்மன்.. மிகக் கோலாகலமாக பல்லவ நாட்டின் பட்டத்து இளவரசன் நரசிம்மவர்மனுக்கும்.. பாண்டிய நாட்டின் இளவரசி வானமாதேவிக்கும் திருமணம் நடந்து முடிந்தது..

புதுமணமகனாக மனைவியுடன் மகேந்திரவர்மரிடம் ஆசி பெற வந்தான் நரசிம்மவர்மன்.. மகேந்திரவர்மரின் விழிகள் பனித்தன.. காதலைப் பின்தள்ளி விட்டு கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கும் மகனை மெச்சுதலோடு நோக்கினார்.. அவர் விரும்பியபடியே அரச குலத்தில் பிறந்த இளவரசி வானமாதேவி நரசிம்மவர்மனின் மனைவியாக வந்து விட்டாள்.. எனினும் மன்னர் மகேந்திர வர்ம பல்லவரின் நெஞ்சில் ஓர் நெருஞ்சிமுள் நிரடிக் கொண்டே இருந்ததே.. அவர் யாது செய்வார்..?

அடுத்த சில தினங்களில் மன்னரின் உடல்நிலை கவலைக்கிடத்தையும் தாண்டி இன்னும் சில நொடிகளே என்பதில் போய் நின்றது.. இறுதி நொடியில் மகனை அருகில் அழைத்தார் மகேந்திரவர்ம பல்லவர்.. அவருடைய சயன அறையில் அவரையும் நரசிம்மவர்மரையும் தவிர வேறு எவரும் இருக்கக் கூடாது என்ற ஆணையைப் பிறப்பித்தார்..

"தந்தையே..!"

மஞ்சத்திலே அமர்ந்து மெலிந்திருந்த மகேந்திர வர்மரின் கரத்தை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான் நரசிம்மவர்மன்.. மன்னரது கரம் மகனின் கண்ணீரில் நனைந்தது..

"கலங்காதே மகனே..! தந்தைக்கு மகன் ஆற்றும் கடமையினை நீ செய்தாய்.. உன்னை வரலாறு வாழ்த்திப் பாடும்.. உமது தியாகம் மகத்தானது.. எமக்காகவும்.. நம் நாட்டுக்காகவும் உன் காதலை மறக்கவும் துணிந்தாய்.. குழந்தாய்...! யாமும் மனிதன்தான்... எமக்குள்ளும் நுண்ணிய உணர்வுகள் உறைந்துள்ளன.. உமது காதலை அழித்து விட்ட பாவியாக யாம் ஆகிப் போனோம்.."

"அல்ல தந்தையே..! சிவகாமியை சிறை மீட்க ாம் ான் கட்டளை இட்டீர்.. அவள் சிறை மீண்டு வராமல் சபதம் செய்ததிற்கு தாம் எவ்வகையில் பொறுப்பாளி ஆவீர்கள்..?"

"சிவகாமியை சிறைபட வைத்தது யார்..? யா அல்லவா..? மகனே..! எமக்கொரு வாக்கைக் கொடுப்பாயா..?"

"என்ன வினா இது தந்தையே..? தாம் தழைந்து வினவுவதா...? ஆணையிடுங்கள்... அடிபணிந்து நிறைவேற்றுகிறோம்.."

"இது ஆணையல்ல மகனே..! உனது தந்தையின் இறுதிக் கோரிக்கை.. சிவகாமியின் சபதத்தை நீ நிறைவேற்றுதல் வேண்டும்.. அவளை சிறை மீட்டு ஆயனரிடம் அவர் மகளை ஒப்படைத்தல் வேண்டும்.. இவை இரண்டையும் செயல்படுத்துவாயா மகனே..?"

"உறுதியுடன் வாக்களிக்கிறேன் தந்தையே..! தம் ஆணையை நிறைவேற்றுவேன்.. என் வாளின் மீது ஆணையிட்டு உரைக்கிறேன்.. சாளுக்கிய புலிகேசியின் மீது நான் போர் தொடுப்பேன்.. அவனை தோற்கடிப்பேன்.. போரில் வெல்வேன்.. சிவகாமியையும் அவளுடன் சிறை பட்டிருக்கும் நமது பல்லவ நாட்டின் குடிமக்களையும் சிறை மீட்பேன்.. இது சத்தியம்..!"

உணர்ச்சி பொங்கும் நரசிம்மனின் உரையை செவி மடுத்த மகேந்திரவர்மரின் வதனத்தில் அமைதி சுடர் விட்டு பிரகாசித்தது..

மன்னர் மகேந்திரவர்மப் பல்லவர் இறந்து விட்டார்.. நரசிம்மவர்மனின் இதயத்தில் குன்று போல சோகம் குடி அமர்ந்தது.. அரசியல் ஆசானாக.. தோள் தட்டும் தோழனாக.. பாசமிகு தந்தையாக.. பல்வேறு பரிணாமங்களில் பரிமளித்து அவனுக்கு சக்தியூட்டி வளர்த்து ஆளாக்கிய அவனைப் பெற்றெடுத்த தந்தை இறந்து விட்டார்..

பல்லவ நாடு ஒரு மகோன்னுதவமான மன்னனை இழந்து விட்டது...

நரசிம்மவர்மன் மனதளவில் தனியன் ஆனான்..

மன்னருக்குப் பின்பு.. பட்டத்து அரசனாக அவனுக்கு பட்டாபிஷேகம் நடந்தது.. பல்லவ நாட்டின் அரியணையில் மன்னனாக நரசிம்மவர்ம பல்லவன் அமர்ந்தான்.. அவனருகில் பட்டத்து மகிஷியாக அவன் மனைவி வானமாதேவி அமர்ந்தாள்..

தினங்கள் உருண்டோடின.. நரசிம்மவர்மன் பொழுது கிடைக்கும் போதெல்லாம் மல்லையின் கடற்கரைக்கு சென்று வந்தான்.. அவனும் சிவகாமியும் ஆடல் போட்டி நடத்திய குன்றில் குகைவரைக் கோவில்களை கட்ட ஆரம்பித்தான்.. அதற்கான சிற்பங்களை ஆயனர்தான் செதுக்கிக் கொண்டிருந்தார்..

மகளின் நினைவை மறக்க முடியாத அந்த வயோதிக சிற்பி தன்னை இரவும் பகலும் பணியில் ஆழ்த்திக் கொள்வதின் மூலமாக துரத்தும் அந்நினைவுகளிலிருந்து தற்காலிகமாக தப்பிக்க முயல்வதை நரசிம்மவர்மனால் புரிந்து கொள்ள முடிந்தது.. சில தருணங்களில் அவன் அவருடன் உரையாடுவதுண்டு.. அவ்வுரையாடல்களின் போது ஆயனர் ஆம்.. அல்ல.. என்ற சொற்றொடர்களுடன் உரையை முடித்துக் கொள்வதில் நரசிம்மவர்மனின் மனம் கனக்கும்..

“ரதக்கோவில்கள் அழகுற உருவாகிக் கொண்டிருக்கின்றனவே ஆயனரே..”

"ஆம் அரசே..!"

"தங்களுக்கு தேவை உண்டோ..?"

"அல்ல அரசே..!"

"வசிப்பிட வசதியுடன் அமைந்துள்ளதா ஆயனரே..?"

"ஆம் அரசே..!"

"பசியார உணவளிக்க சேவகர்களை அமர்த்தி விடவா..?"

"வேண்டாம் அரசே..!"

"இந்த தள்ளாத வயதில் தாம் எவ்விதம் தனித்து உணவு தயாரிப்பீர்கள் ஆயனரே..? கலைஞனுக்கு கலையில் மட்டுமே நாட்டமிருக்கும்.. உணவு தயாரிப்பதில் நாட்டம் செல்லாது.. ருசிமிகுந்த உணவை தயாரிக்க தம்மால் எவ்வாறு இயலும்..?"

"பசி ருசியறியாது அரசே.."

அதற்கு மேல் ஆயனர் பேச மாட்டார்.. மௌனமாக சிற்பங்களை வடித்த வண்ணம் இருப்பார்.. இந்த ஒதுக்கம் நரசிம்மவர்மனின் திருமணத்திற்குப் பின்னர்தான் உண்டானது என்பதில் பல்லவ மன்னனின் மனம் வலித்தது..

இறுதியில் காதலியை கைவிட்ட பாவியாக அவன் ஆகிவிட்டானா..?

'இதற்குத்தானே விருப்பம் ஈண்டாய் சிவகாமி..?'

மன்னரைக் கண்டதினால் உருவான மரியாதைத் தோற்றத்துடன் சிற்பங்களைச் செதுக்கிக் கொண்டே இருக்கும் ஆயனரை மனம் கசிய கண்டுவிட்டு காஞ்சிக்கு திரும்பி விடுவான் நரசிம்மவர்மன்..

குற்றமற்ற அவனை குற்றவாளி ஆக்கிவட்ட சிவகாமியின் மீது ததும்பும் சீற்றத்தை அவனால் எவரிட பகிர்ந்து கொள்ள இயலும்..?

வானமாதேவி தனக்கென்ற ஓர் வட்டத்தை அமைத் அதற்குள் நின்றிருந்தாள்.. அவளை அணுக முற்படாத நரசிம்மவர்மனை அவளும் அணுக முனையவில்லை.. சில இரவுகளின் தனிமையில் அரண்மனையின் நீண் உப்பரிகையில் அவன் நடை பயிலும் போது மட்டும் அங்கு வந்து நிற்பாள்..

"நாழிகையாகி விட்டது அரசே..! துயில் கொள்ளச் செல்லுங்கள்.. விடியலின் போது தங்களுக்காக காத்திருக்கும் பணிகள் ஏராளம்.. அதைக் காண்பதற்கு தங்களது தேக ஆரோக் யம் முதன்மையானதல்லவா..?" என்று வினவுவாள்..

சில தருணங்களில் நரசிம்மவர்மனின் மனம் உறுத்

"என்மீ தமக்கு மனத்தாங்கல் ஏற்படவில்லையா தேவி..?"

ஓர்தினத்தில் இவ்வினாவை வானமாதேவியிட எழுப்பியே விட்டான்.. அன்றுதான் அவள் அவனை

ஏறெடுத்து பொருள் பொதிந்த புதிரான பார்வையொன்றை பார்த்து வைத்தாள்..

"அரசகுலத்தில் பிறக்கும் பெண்கள் எதையும் தாங்கும் இதயத்தோடு வாழ்வதற்கான உபதேசம் பெற்று வளர்பவர்கள் அரசே..! யாமும் அவ்வாறுதான்.. தம்மீது மனத்தாங்கல் கொள்ள எமக்கு அதிகாரம் இல்லை.."

"எவ்வாறு இதை உரைக்கிறாய் வானமாதேவி..? உமது கணவன்.."

"அதற்கு முன்பாகவே சிவகாமியின் காதலன்..!"

கம்பீரமான குரலில் உரைத்தாள் வானமாதேவி.. நரசிம்மவர்மன் திகைத்துப் போனான்..

'இதை இவள் அறிவாளா..?'

முதன் முதலாக தனது மனைவியின் மீது அவனுக்குள் பரிதாபம் சுரந்தது..

'இதை அறிந்துமா என் கரம் பிடித்தாள்..?'

உப்பரிகையில் வீசிய தென்றல் காற்று அரண்மனையின் நந்தவனத்துப் பூக்களின் நறுமணத்தை சுமந்து வந்தது.. வானமாதேவி அவனைப் பார்த்தாள்..

## *ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



# 21

## உன்னைவிட இவ்வுலகில் உயர்வு எது..? நீ கூறு..

தாமோதரனின் பார்வையில் நீரஜாவின் கோப அதிகமானது.. அது என்னவோ தெரியவில்லை.. அவள் மீதான அதீதக் காதலை அவன் வெளிப்படுத்த முனையும் போதெல்லாம் இது போலதான் ஏதாவது ஒரு சிக்கல் அவனை சிறைபிடித்து கைகொட்டி சிரிக்கிறது..

"ஸோ.. உன் செகரட்டரி வேலையை ரிசைன் பண்ணிட்டுப் போனதில உன் பிரண்ட் கொலை வெறியில இருக்கார்.."

"ஏங்க.. அவன் என்ன சொல்றான்..? நீங்க எதைப் பிடிச்சுக்கிட்டுத் தொங்கறிங்க..?" எரிச்சலுடன் தாமோதர கேட்டதில்..

"ஓ.." என்று உதட்டைக் குவித்தாள் நீரஜா.

அந்த உதட்டுக்குவிப்பு தாமோதரனுக்கு பிடித்தமான ஒன்றாக இருந்து வைத்தாலும்.. அந்த உதட்டுக் குவிப்பிற்குப் பின்னால் வரப்போகும் வார்த்தைகள் அவனுக்கு பிடித்தமானவையாக இருக்கப்போவதில்லை என்பதில் அவன் மனதில் திகில் பற்றிக் கொண்டது.

"இந்த 'ஓ'வைக் கொஞ்சம் ட்டி விடுங்க.."

"அது மட்டும் ஓடினாப் போதுமா.. இல்லை.. நானும் சேர்ந்து ஓடனுமா..?" இறுக்கமான முகத்துடன் கேட்டு வைத்தாள் நீரஜா..

"நீங்க எதுக்காகங்க ஓடனும்..? வேணும்னா சொல்லுங்க.. நான் இந்த இடத்தை விட்டு ஓடிப் போயிடறேன்.." தாமோதரன் சீட்டை விட்டு எழுந்தான்..

"பயல் எஸ்ஸா ப் பார்க்கிறான் நீரு.. விட்டு விடாதே.." சித்தார்த்தன் முடுக்கி விட்டான்..

"அடப்பாவி..! நான் எஸ்ஸாகி என்னடா பண்ணப் போறேன்..?" பரிதாபமாக நியாயம் கேட்டான் தாமோதரன்.

"யாருக்குத் தெரியும்.. இந்த ஃபைலில் இருக்கிற போட்டோவில் இருக்கிற பொண்ணுக்கு போனைப் போடலாம்.. அவ உடனே வந்தா ஊர் சுத்தப் போகலா' அவ அதுக்கும் மேலே ஓகே சொன்னா அட்வான்ஸ் ஹனிமூனுக்கே போனாலும் போகலா'.." சித்தார்த்தன் அடுக்கினான்..

"இதையெல்லாம் யார்டா செய்வா..?" சுவராஸ்யமாக கேட்டு வைத்தான் தாமோதரன்..

"வேற யாரு செய்வா..? எல்லாம் நீதான்.." இரக்கமில்லாமல் சொல்லி வைத்தான் சித்தார்த்தன்..

"நானா..?" தாமோதரன் அலறினான்..

"நீதாண்டா.. பின்னே நானா இதையெல்லாம் செய்யப் போறேன்..? நானே இந்தப் பெண்ணுக்கு வேலை

கொடுக்கக் கூடாதுன்னு சொல்லிக்கிட்டு இருக்கேன் எரிச்சலுடன் சொன்னான் சித்தார்த்தன்..

"அந்தக் காண்டுதானேடா உனக்கு..?" தாமோதரன் உக்கிரமாக..

"ஹலோ.." என்றாள் நீரஜா..

"யார்கிட்டங்க போன் பேசறிங்க.." என்றான் தாமோதரன்..

"நிச்சயமா உங்க ட்ட இல்லை.."

"என்ன மேன்..? பிரண்ட்ஸ் ரெண்டு பேரும் சேர்ந்துக்கிட்டு ப்ளே பண்றீங்களா..?"

"இவன்கூட விளையாடிட்டாலும்..! கழுதையில! விளங்கிரும்.. இவனெல்லாம் பிரண்டுன்னு நீங்கதான் சொல்லிக்கணும்.."

"எதுக்காக நான் சொல்லனும்..? எனக்கு இவன் அண்ணன்..! உங்களுக்குத்தான் பிரண்டு.."

"அந்தக் கொடுமைக்குத்தான் பாயைப் பிராண்ட அளவுக்கு என்னை ஆக்கி வைச்சுக்கிட்டு இருக்கான்.."

"இந்தக் கதையெல்லாம் என்கிட்ட வேண்டாம்.."

"எந்தக் கதை..?"

"பேச்சை டைவர்ட் பண்றீங்களா..?"

"இல்லவே இல்லீங்க.."

"இவனோட செக்கரட்டரிக்கும் உங்களுக்கும் என்ன கனெக்சன்..?"

"என்னது..?"

தாமோதரனுக்கு ஹார்ட் அட்டாக்கே வந்து விட்டது..

"என்னங்க இப்படி அணு குண்டைத் தூக்கிப் போடறிங்க.. இவன் செக்கரட்டரிக்கும், இவனுக்கும் என்ன கனெக்சன்னு நீங்க கேட்டா அதில ஒரு மீனிங் இருக்கு.. எனக்கும் இவன் செக்கரட்டரிக்கும் என்ன கனெக்சன்னு கேட்டா அதில என்னங்க மீனிங் இருக்கு..?"

"அதைத்தான் நானும் கேட்கிறேன்.."

"என்னத்தைக் கேட்டிங்களோ.. எல்லாத்தையுமே ஏடா கூடமாவே கேட்டு வைக்கறிங்களே.. ஆனாலும் உங்களுக்கு என்மேல இந்த அளவுக்கு நம்பிக்கை இருக்கக் கூடாதுங்க.."

"ஹலோ.."

"இருக்கேன்.. கேட்குது.. சொல்லுங்க.."

"இவன் செக்கரட்டரி ரிசைன் பண்ணிட்டுப் போனா உங்களுக்கு எதுக்காக கொலைவெறி வரனும்..? டவுட் அங்கிருந்துதான் ஆரம்பிக்குது.."

"டவுட் மட்டுமில்லைங்க.. எல்லாமே அங்கிருந்து தான் ஆரம்பிக்குது.."

"அதுதான் அப்படின்னா.. இண்டர்வியூக்கு வந்த பெண்ணையும் கரெக்ட் பண்ண டிரை பண்றிங்க.."

"இன்னும் என்னைப்பற்றி என்னென்ன உயர்ந்த அபிப்ராயங்களை உங்க உள் மனசில ஒளிச்சு வைச்சிருக்கீங்க..?"

"கண்ணாலே பார்த்ததையும்... கேட்டதையும் தான் நான் சொல்றேன்.."

"என்னத்தைப் பார்த்து.. என்னத்தைக் கேட்டிங்களோ.. இதுக்குத்தான் பெரியவங்க சொல்லி வைச்சிருக்காங்களோ..?"

"இது ரெண்டும் பொய்ன்னா வேற எதுதான் உண்மை..?"

"தீர விசாரிக்கிறதுதான்.. வேற என்ன..?"

தாமோதரன் நீரஜாவிடம் மண்டிபோடாத குறையா மன்றாடினான்..




சுகந்தமான நறுமணத்தை சுமந்து வந்த தென்றல் காற்றில் நரசிம்மவர்மனின் மனமும்.. வானமாதேவியின் மனமும் குளிர்ந்து விடவில்லை.. எனினும்.. இருவரின் மனங்களிலும் இனம் புரியாத ஓர் தோழமை உணர்வு ஏற்படுவதை தெளிவுற உணர்ந்தனர்..

உப்பரிகையின் மையத்தில் போடப்பட்டிருந்த ஆசனங்களில் ஒன்றில் அமர்ந்தான் நரசிம்மவர்மன்.. தூரத்தில் தெரிந்த கோட்டை மதில் சுவரின் மீது வரிசையாக தீப்பந்தங்கள் ஒளிர்ந்து கொண்டிருப்பதை பார்த்ததாள் வானமாதேவி.. பந்தங்களின் வெளிச்சத்தில் காவலர்களின் நடமாட்டத்தை அவர்களால் காண முடிந்தது..

உப்பரிகையின் ஓரமாக.. அரண்மனையின் அலங்காரச் சுற்றுச் சுவரின் மீது சாய்ந்து பார்த்தாள்.. அரண்மனையை ஒட்டி.. இடைவெளி விட்டு.. வரிசைகட்டிக் காவல் காத்த வீரர்களை அவளால் காண முடிந்தது..

"இதுதான் அரச குலத்தவரின் வாழ்வு.."

நரசிம்மவர்மன் அமர்ந்திருந்த ஆசனத்தின் எதிரே இருந்த அன்னப்பறவையின் வடிவத்தில் நீண்டிருந்த மஞ்சத்தில் அமர்ந்தாள் வானமாதேவி..

"எதை உரைக்கிறாய்..?"

"கணவனும், மனைவியுமாக இருப்பினும் அவர்கள் அந்தரங்கமாக அளவளாவுவதைக் கூட காவலில்தான் அளவளாவியாக வேண்டும்.. தனித்த பொழுதுகளின் இனிமைகள் அவர்களுக்கு கரம் கூடி வராது.. ஏகாந்த தனிமை உரை அவர்களுக்கு கிட்டடவே கிட்டாது.."

'அவ்வாறா..?'

நரசிம்மனின் மனதில் மல்லையின் கடற்கரை வந்தது.. அங்கே அவனும் சிவகாமியும் தனித்துப் பேசிய

பொழுதுகள் நினைவில் நின்றாடின.. ஏகாந்தப் பொழுதுகள் அவனுக்கும் சிவகாமிக்கும் சாத்தியமானதே.. அது போன்ற ஏகாந்தம் அவனுக்கும்.. வானமாதேவிக்கும் ஏன் சாத்தியப் படவில்லை..?

"அரசகுல ஆண்களுக்கான சுதந்திரம் வானளாவியது.. அதற்கு எல்லைகளே இல்லை.. காதலியுடன் அவர்கள் சல்லாபிக்கும் தனிமையை மனைவியுடன் உரையாடும்போது அவர்கள் பெற்று விட இயலாது.. மனைவிக்கு தந்து விடவும் முடியாது.."

"எதன் பொருட்டு இவ்விதமானது..?"

"ஏனெனில் அரசரின் மனைவியானவள்.. ஓர் அடிமையைப் போன்றவள்... தனித்த உணர்வுகள் அவளுக்கு இருத்தல் கூடாது என்று எண்ணிடும் மனம் தான் அரசகுலத்தின் மனம்.."

ஓர் ஞானியைப் போல உரையாடினாள் வானமாதேவி.. அழகுமிகு அவளது வதனத்தில் நிலவிய தெளிவும்.. புத்திசாலித்தனமும் நரசிம்ம பல்லவனை ஈர்த்தன.. அவளிடம் தனித்ததொரு நேர்த்தி மிக்க எழிலை உணர்ந்தான் நரசிம்மன்..

"தமது கணிப்பு தவறானதாக இருக்கவும் கூடுமல்லவா..?"

"இது கணிப்பல்ல அரசே..! அரசர்குல வழக்கம்.. ஓர் அரசனின் புதல்வியாக ஜனனம் எடுத்து விட்டவளுக்கு தமது வாழ்வைத் தீர்மானிக்கும் உரிமை கிட்டாது. சுயம்வரமெல்லாம் வடநாடுகளில்தான்.. நம்நாட்டில்

சுயம்வரத்திற்கு இடமேது..? அரசியல் ரீதியான திருமணங்களே அரசர் குலத்தில் அதிகமாகி விட்டன.. ஒரு நாட்டின் நட்புறவை பெற வேண்டுமாயின் அந்நாட்டோடு மண உறவை பூண வேண்டும்.. அதற்கான சம்மதத்தை தம் புதல்விகளிடம் எந்த அரசனும் வினவியது கிடையாது.. பகை மன்னனுடன் சமரசம் பேண.. அங்கே பெண் கொடுக்க வேண்டும்.. பகை வராமல் தடுக்கவும் பெண் கொடுத்து அந்நாட்டு மன்னனை மருமானாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.. இதுபோன்ற அரசியல் ரீதியான அமைதி உடன்பாடுகள் தீர்மானிக்கும் திருமணங்கள்தான் அரசர்குலப் பெண்களுக்கு விதிக்கப்படுகின்றன.."

வானமாதேவியின் குரலில் தொனித்த விரக்தியில் தன்னை குற்றவாளியாக உணர்ந்தான் நரசிம்மவர்மன்..

'இதுவும் தம்மால்தான் சிவகாமி.. அவன் மனம் சிவகாமியை சாடியது.. அவள் செய்த சபதத்தின் பொருட்டால் அல்லவோ அவன் வானமாதேவியின் மனதில் இருப்பதை அறியாமல் அவளுக்கு மாலை சூடினான்..

"பிடிக்காத திருமணத்தை தாம் மறுத்திருக்கலாமே.."

"அவ்வுரிமை அரசகுலப் பெண்களுக்கு இல்லை அரசே.. எமது உலகம் வேறு.. எமது தந்தையாரின் சுட்டு விரல் சுட்டிக்காட்டும் மணமகனுக்கு மாலை சூட யாம் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.. அம்மணமகன் பகைவனாக இருப்பினும்.. தந்தை நிச்சயித்து விட்டால்

அவனை கணவனாக ஏற்று காலம் முழுவதும் அவனது நிழலில் வாழவேண்டும்.. இது எம்குலப் பெண்களின் கடமை.. தியாகம் செய்யவும்.. கடமையாற்றவும்.. குழந்தைப் பருவம் தொட்டே கற்பிக்கப்பட்டு வளர்ந்தவர்கள் யாம்.. எமது திருமணத்தை தீர்மானிக்க எம்மால் இயலாது.. அதை எம் தந்தைதான் தீர்மானிப்பார்.."

வானமாதேவி அமைதி ததும்பும் வதனத்துடன் வானத்தை பார்த்தாள்.. அங்கே நிலவு பவனி வந்து கொண்டிருந்தது..

*"இந்த நிலவை நான் பார்த்தால் - இது*
*எனக்கென வந்தது போலிருக்கும்..*
*உன் நினைவை எடுத்து வரும் - என்*
*நெஞ்சில் கொடுத்து விடும்..*
*இரவே வருக.. சுகமே தருக.."*

மெல்லிய குரலில் பாடினாள்.. அந்தப் பாடலில் கலாரசிகனான நரசிம்மவர்மனின் மனம் கனிந்தது.. அவன் எழுந்தான்.. வானமாதேவியின் மஞ்சத்தில் அமர்ந்தான்.. அவளது வதனம் நிமிர்த்தி அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்..

"எம் கடந்தகால காதலில் மனத்தாங்கல் கொண்டுள்ளாயா..?"

"அல்ல அரசே..! இந்நிகழ்கால தொடுகையில் இன்பம் கொண்டுள்ளேன்.."

தான் அரசி என்பதை நிரூபணம் செய்தா வானமாதேவி.. கணவனின் கடந்த காலத்தைக் கிளராமல்

அவனுடனான தனது வாழ்வை இறுக்கிக் கொண்டாள்.. இனி அவளது மணிவயிற்றில் மகன் பிறப்பான்... அவன் பல்லவ நாட்டின் பட்டத்து இளவரசனாக பட்டாபிஷேகம் செய்யப்படுவான்.. வரும் காலத்தில் பல்லவ அரியணையில் மன்னனாக வீற்றிருப்பான்..

எதன் பொருட்டு தனை வென்ற பல்லவனுக்கு தன் மகளை பாண்டிய மன்னன் மணம் முடித்துக் கொடுத்தானோ... அந்த உள்ளக்கிடக்கையை நிறைவேற்றி விட்டாள்.. பாண்டிய குல இளவரசி..!

"செல் மகளே.... எமை வென்ற பல்லவனின் அரியணையில் தமது மணிவயிற்றில் உதித்த மகன் அமர வேண்டும்.. இதன் பொருட்டு நீ மணமாலையை பல்லவனின் கழுத்தில் சூட்டு.."

பாண்டியரை வென்ற பல்லவ அரசனை பாண்டிய ாட்டின் இளவரசி வென்று விட்டாள்..

உறக்கத்திலிருந்த சிவகாமியின் சொப்பனத்தில் அவள் மலையுச்சியில் இருந்து வீழ்வதைப் போன்ற காட்சி வந்தது.. உடல் பதற எழுந்து அமர்ந்தாள்.. வியர்த்து விட்ட வதனத்தை சேலை முந்தானையில் துடைத்துக் கொண்டவள் எழுந்து சாளரத்தின் அருகே சென்றாள்..

அந்தச் சாளரம்தான் வெளியுலகிற்கும்.. அவளுக்கு மான பாலமாக அமைந்திருந்தது.. அதன் வழியே சிவகாமி வானத்தையும்.. நிலவையும்.. நட்சத்திரங்களையும் கண்டாள்.. அம்மாவாசை இரவில் கூட அச்சாளரத்தின் வழியாக மேகங்களை அவள் பார்த்திருப்பாள்..

அன்றும் அதுபோல நிலவைப் பார்த்தவளுக்கு மனதில் துயரம் ஏற்பட்டது.. எதனாலோ அந்த நிலவு அவள்மீது பரிதாபம் கொள்வதைப் போல அவளுக்கு தோன்றி வைத்தது..

'ஏன் இவ்வாறு தோன்றுகிறது..?'

சிவகாமி துயரத்துடன் சாளரத்தின் மீது சாய்ந்தாள்.. இதே நிலவுதானே பல்லவ நாட்டிலும் பவனி வரும் என அவள் மனதில் எண்ணம் எழுந்தது.. நரசிம்மவர்மன் இந்நிலவை கண்டிருப்பானா..? அவள் நினைவு அவன் மனதில் உண்டாகியிருக்குமா..?

நீண்ட இரவுப் பொழுது கொடுமையானது என சிவகாமிக்குத் தோன்றியது.. அலைக்கழிக்கும் நரசிம்மனைப் பற்றிய நினைவுகள் அவளை கொன்று தின்றன..

*"இந்நிலவை நான் பார்த்தால் - இது*
*எனக்கென வந்தது போலிருக்கும்..*
*உன் நினைவை எடுத்து வரும் - என்*
*நெஞ்சினில் கொடுத்து விடும்..*
*இரவே முடிக..! பொழுதே விடிக..!"*

சிவகாமியின் துயரம் தோய்ந்த பாடலை நிலவு உணர்ந்ததோ என்னவோ.. அது மௌனத்துடன் நகர்ந்தது. பல்லவ நாட்டின் அரண்மனையின் உப்பரிகை மஞ்சத்தில வானமாதேவியுடன் கூடியிருந்த நரசிம்மனின் செவிகளில சிவகாமியின் தீனமான பாடலை நிலவு கொண்டு சென்று

கொடுத்தது.. நரசிம்மன் மனம் அதிர விலக முனைந்தான்.. வானமாதேவியின் வளைக்கரம் அவன் கழுத்தில் பிணைந்ததில் அனைத்தும் மறந்து போக அவளுடன் ஐக்கியமானான்..

அரசவை கூடியிருந்தது.. மந்திராலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை அரசவையில் மொழிந்தான் நரசிம்மவர்மன்..

"யாம் வாதாபியின் மீது படையெடுத்துச் செல்ல உத்தேசித்துள்ளோம்.."

அவையில் மௌனம் குடி கொண்டது.. இடையறாத போருக்குப் பின் சிலகாலம்தான் பல்லவமக்கள் போரின் அச்சுறுத்தல் இன்றி நிம்மதியுடன் வாழ்வை நடத்திக் கொண்டிருந்தார்கள்.. மீண்டும் போர் என்றால்..?

அந்த வினாவை எழுப்பியபோது..

"இது இடைக்கால அமைதிதான் என்பதை எவ்வாறு மறந்தீர்கள்.." என பதில் வினாவை எழுப்பினான் நரசிம்மவர்மன்..

"மக்களின் அமைதி வாழ்வு முக்கியமல்லவா மன்னவரே..?"

"அதி முக்கியம்தான்.. அதைப்போல வாதாபியில் சிறை பட்டிருக்கும் நம் நாட்டு மக்களை சிறை மீட்பதும் அதி முக் யம்தான்.. மறைந்து விட்ட மன்னரும் இதையே வலியுறுத்தினார்.. எம் தந்தையின் இறுதி நொடிகளில் யாம் அவருக்கு வாக்களித்திருக்கிறோம்.. வாதாபியின்

மீது படையெடுத்துச் சென்று நம்நாட்டு மக்களை விடுவிப்போம் என வாளின் மீது ஆணையிட்டிருக்கிறோ எமது சத்தியத்தை யாம் நிச்சயம் நிறைவேற்றுவோம்.."

மன்னவன் தீர்ப்பு... அந்த மகேசனின் தீர்ப்பு..! எதிர்த்து உரைப்பவர் எவர்...? அத்துடன் சாளுக்கிய நாட்டில் சிறை பட்டிருந்த பல்லவர்களின் குடும்பங்களும் காஞ்சியில் தானே வசிக்கின்றன..? அவர் தம் இல்லங்களில் நிலவும் சோகச்சூழலை அண்டை இல்லங்களில் வசிப்போர் அறிய மாட்டாரா..?

வாதாபியின் மீதான படையெடுப்பு முடிவு சய்யப்பட்டு விட்டது..

ஏகாம்பரேஸ்வரரின் ஆலயத்திலிருந்து வெளியில் வந்தாள் பல்லவநாட்டின் பட்டத்துராணியான வானமா தேவி.. ரதத்தில் ஏறுவதற்கு அவள் முனைந்த போது..

"வந்தனம் அரசி..!" என்று அங்கே வந்து நின்றார் அமைச்சர்..

"வந்தனம் அமைச்சரே..! ஈசனை தரிசிக்க வந்துள்ளீரா..?"

"ஆம் அரசி..! கூடவே தம்மையும் சந்திக்க விழைந்தோம்.."

வானமாதேவியின் பிறை வடிவ நெற்றியில் எழிலான சுருக்கங்கள் கோடிழுத்தன.. கரத்திலிருந்த பூக்குடலையை அருகிலிருந்த சேடிப் பெண்ணிட கொடுத்து விட்டு.. கோவில் பிரகாரத்தை நோக்

நடந்தாள்.. சேவகர்களும்.. சேடிப்பெண்களும் தள்ளியிருக்க.. பிரகாரத்தின் அருகே வந்தவள் உடன் வந்த அமைச்சரை ஏறிட்டாள்..

"யாது விவரம் அமைச்சரே..? உரையுங்கள்.."

"அரசியாரே..! நாடிருக்கும் நிலையில் தற்போதைய வாதாபி படையெடுப்பைத் தள்ளிப் போடுவது உசிதமான ஒன்றாகும்.. இதை அரசரிடம் எத்துனையோ முறை எடுத்துரைத்து விட்டேன்.. அவர் செவி சாய்க்க மறுக்கிறார்.. காலம் சென்ற மன்னர் இடைவிடாத போரில் ஏற்பட்ட காயங்கள் ஆறாமல் இறந்தே போய் விட்டார்.. நிலமை இப்படியிருக்க.. போரில் ஏற்பட்டுள்ள சிதிலங்களை சரி படுத்தி பல்ல நாட்டை அமைதியில் ஆழ்த்துவது அவசியமான ஒன்றல்லவா..?"

"மெய்தான்.. ஆயினும் அமைச்ச ..! வாளேந்தும் அரசரால் அதை ஒய்வெடுக்க வைக்க இயலாது... போரில்லாத அரசர்குல வரலாறில்லை.. காலஞ்சென்ற மன்னவரின் இறப்பிற்கான நியாயத்தைப் பெற மன்னவர் போர் முனை செல்ல வேண்டியது அவசியமல்லவா..?"

"ஆயினும் அரசியாரே..! நடக்கப் போகும் போர் காலம்சென்ற மன்னவரின் இறப்பிற்கான நியாயத்தைப் பெறுவதற்காக நடத்தப் படுவதல்ல.. அங்கே சிறை பட்டிருப்பவர்களை மீட்கவும் நடத்தப்படுவது.."

அமைச்சரின் கூர்மையான பார்வையில் பொருள் பொதிந்திருந்தது.. உரைக்காமல் அவர் எதை உரைக்கிறார்

என்பதனை தெள்ளத் தெளிவாக புரிந்து கொண்டா வானமாதேவி..

"சிவகாமியின் சிறை மீட்பைப் பற்றித்தானே தாம் உரைக்க விரும்புகிறீர்..?"

"ஆம் அரசி..! மன்னர் மனம் மாறி தங்களை மணந்ததே காலம் சென்ற மன்ன..ரின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டுதான்.. அவ்வாறிருக்க.. சிவகாமியை சிறை மீட்பதில் அவசரம் வேண்டாம் என யா கருதுகிறோம் அரசியாரே..! சில காலம் அவகாசம் எடுத்தபின்பு சிவகாமியை சிறை மீட்கச் செல்லலாமே..? இதில் நாட்டின் நலன் மட்டுமல்ல.. அரசியாரின் நலனும் அடங்கியுள்ளது.."

பூடகமான அமைச்சரின் உரை தீட்சண்யமான வானமாதேவியின் பார்வைக்கு முன்னால் பணிந்து நின்றது..

"சிவகாமியை சிறை வைத்துத்தான் எமது நலனை யாம் மேம்படுத்திக் கொள்ள வேண்டுமெனில் அத்தகைய நலனே எமக்கு வேண்டாம் அமைச்சரே..!"

"அரசியாரே...!"

"அனைத்தும் அறிந்தே யாம் என்னவரை மணந்தோம்.. அவர் மனதில் யாது உள்ளது.. என்றறிய யாம் விரும்பவில்லை.. அங்குள்ள இடம் எமக்கானதா... அல்லது.. சிவகாமிக்கானதா என்ற சம்சயமும்.. சஞ்சலமும் எமக்கில்லை.. அவ்விடம் எவருக்கு உரியதாக இருந்தாலும்..

மன்னரின் கடமையென்ற ஒன்று இருக்கின்றது.. அது காதலுக்காக இருப்பினும் சரி.. மக்களுக்காக இருப்பினும் சரி.. கடமை கடமையே.. அரசர் அதை ஆற்ற முனையும் போது யாம் அதில் குறுக்கிட மாட்டோம்.."

உரை முடிந்தது என்பதற்கு அடையாளமாக சிரம் அசைத்து விட்டு கம்பீரமாக நடந்து தேரேறினாள் வானமாதேவி.. ஓர் அரசரின் மகளாக.. ஓர் அரசனின் மனைவியாக.. எதை உரைக்க வேண்டுமோ அதை மட்டுமே அவள் உரைத்தாள்..

'எப்படிப்பட்ட பெண்குல திலகத்தை பல்லவநாடு மகாராணியாக அடைந்திருக்கின்றது..!'

அமைச்சர் வியந்து போனார்.. நடப்பதை ஏகாம்ப ரேஸ்வரரின் பாதங்களில் சமர்ப்பிக்க ஆலயத்துக்குள் பிரவேசித்தார்..

அரண்மனைக்குத் திரும் ய வானமாதேவி அந்தப்புரம் நோக்கிச் சென்றாள்.. எதிர்பட்ட கவின் மலர்தேவி உக்கிரத்துடன் வானமாதேவியை முறைத்தாள்.. அவள் நரசிம்மவர்ம பல்லவனின் தங்கையாவாள்.. அவளுடைய தாய் மகேந்திரவர்ம பல்லவரின் இரண்டாவது தேவியாவார்.. ஒரு தாய் வயிற்றில் உதிக்காவிடினும்.. ஓர் தந்தைக்கு மக்களாகப் பிறந்தவர்கள் அவர்கள்..

"அமைச்சர் உரைத்ததை அரசியார் செவி சா
வில்லையாமே..."

"ஆம் தேவி.. மன்னருக்கு அறிவுரை உரை
ார்..?"

"அவன் தேவி..! இதை மறந்தாயா..? நரசிம்மவர்மனுக்கு அரசர் குல கௌரவத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது.. நடனமாதை காதலித்தான்.. இப்போது அவளை சிறை மீட்க படையெடுத்துச் செல்கிறான்.. இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய நீயோ அவனுக்கு வெற்றி திலகமிட்டு போருக்குச் சென்று வா என அனுப்பி வைக்க முனைகிறாய்.. இது நன்மைக்கான அறிகுறியல்ல.."

கவின்மலர்தேவியின் கோபத்திற்கு விடை உரைக்காமல் வானமாதேவி அமைதியாக நின்றாள்.. கவின் மலர்தேவி உக்கிரத்துடன் அகன்று விட்டாள்..

---

***ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'***



## 22

***வாது புரிய நீ அழைத்தாலும்..***
***காதலுடன் தான் நான் வருவேன்..***

என்னதான் கையேந்தி பவனின் டிபன் சாப்பிடுவதைப் போல தாமோதரன் மண்டியிட்டுக் கையேந்தினாலும் அசைந்து கொடுக்க மறுத்தாள் நீரஜா..

தங்கக் கம்பி என்று அவள் எண்ணிக் கொண்டிருந்தவன் தகரக் கம்பியாகக் கூட இல்லாமல் போய் விட்டானோ என்ற அவளின் சந்தேகத்தில் அவனை கூறு போட்டுவிடும் கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தாள்..

"இங்கே மட்டும் என்ன செய்கிறேனா..? தீர விசாரிச்சுக்கிட்டுத்தானே இருக்கேன்..?"

"நீங்க..? தீர விசாரிக்கறிங்க..? ஏங்க நீங்க சிரிப்பை மூட்டறிங்க..? இதுக்குப் பேர்தான் தீர விசாரிக்கிறதா..? நீங்களா ஒன்னை முடிவு பண்ணிக்கிட்டு.. அதிலேயே அசையாம நின்னுக்கிட்டு என்னைக் குற்றவாளிக் கூண்டிலே ஏத்தறதுக்குப் பேர்தான் விசாரணையா..? குட் ஜோக்.."

"வேற என்ன செய்யலாம்னு நினைக்கறிங்க.. சார்கிட்ட டயலாக் எழுதி வாங்கி.. அதில இருக்கிறதை படிச்சுக் காட்டறதுக்குப் பேர்தான் விசாரனைன்னு சொல்ல வர்றீங்களா..?"

"அப்படியும் சொல்லலை.. கொஞ்சமாவது என் சைடில என்ன சொல்றேன்னு காது கொடுத்துக் கேளுங்கன்னுதான் சொல்றேன்.."

தாமோதரனின் அங்கலாய்ப்பில் பேச்சை நிறுத்தினாலும் அவனை உர்ரென்று முறைத்தபடிதான் உட்கார்ந்திருந்தாள் நீரஜா..

அவன் மீதான நீரஜாவின் ஆளுமையில் உரிமை உணர்வு நிறைந்திருந்ததை தாமோதரனால் இனம் காண முடிந்தது.. அந்த கண்டு கொள்ளலே அவனுக்கு இனித்தது..

மனதுக்குப் பிடித்த பெண்.. மற்ற பெண்களைப் பார்க்கிறானா என்று திட்டித் தீர்ப்பதைக் கேட்பதுதான் எத்தனை சந்தோசமான விசயம்..! அவள் மொத்தினாலும் வாங்கிக் கொள்ளலாமே..

"இந்தா உட்கார்ந்திருக்கிற உங்க அருமை அண்ணன் கிட்டேயே கேட்டுப் பாருங்க.."

"எதைக் கேட்கச் சொல்கிற..?"

"உனக்கும் எனக்கும் பேச்சில்லை.. வாயை மூடிக்கிட்டு இரு.."

"அப்புறம் எதுக்கா என்கிட்ட கேட் சொல்கிற..?"

"அதை உன் தங்கைகிட்டச் சொல்லிக்கறேன்.."

"சொல்லிக்க.. எனக்கென்ன போச்சு..? பிரண்டாச்சே. ஹெல்ப் பண்ணலாமேன்னு கேட்டேன்.."

"நீ பண்ணின ஹெல்ப்பே போதும்.."

"அப்படிங்கறே.."

"ஆமாம்கறேன்னு சொல்ல மாட்டேன்.. ஆல்ரெடி இந்த டயலாக்கை நிறையப் பேரு சுட்டுட்டாங்க.."

"அதனால உன்னோட பேவரிட் டயலாக்கெல்லாம் உன்னோடது இல்லைன்னு ஆகிருமா..? விட்டுத தொலைடா.. என்னதான் மாஞ்சு மாஞ்சு மாத்தி யோசிச்சு அவங்க சொன்னாலும் கேட்கிறவங்க அதையெல்லாம் உன்னோட டயலாக்குன்னுதான் கேட்டுக்கிட்டு இருக்கா டா.. கன்னத்திலே மருஒட்டினா மாறு வேசமாம்டா மச்சி.. கண்டுக்காதே.."

"வேற வழி..? அதைத்தான் செய்துகிட்டு இருக்கேன்.. இப்ப உன் தங்கைக்கு விளக்க சொல்லனும்.. நீ வாய் மேல விரலை வைக்கறியா..?"

சித்தார்த்தனை அரட்டி விட்டு நிரஜாவின் பக்க திரும்பினான் தாமோதரன்.. நம்பாத பார்வையுடன்

அமர்ந்திருந்தவளை அள்ளிக் கொள்ள வேண்டும் போல அவனுக்கிருந்தது.. அதை கண்களில் வெளிப்படுத்தியபடி விளக்கத்தை தொடர்ந்தான்..

"இவனோட ரிசைன் பண்ணிட்டுப் போன செக்கரட்டரி யோட மூஞ்சி எப்படியிருந்ததுன்னு கூட எனக்குத் தெரியாதுங்க.. இவனை இல்லேன்னு சொல்லச் சொல்லுங்க பார்க்கலாம்.."

"இல்லேன்னு சொல்லத்தான் செய்வேன்.. அது எப்படிடா என் கம்பெனியின் ஜி.எம்மா இருக்கிறவனுக்கு என் செக்கரட்டரியோட மூஞ்சி எப்படியிருந்ததுன்னு தெரியாமப் போகும்..? அந்த மூஞ்சியைப் பார்த்து நீ பேசினதே இல்லேன்னு வேணும்னா சொல்லலாம்.."

"கேட்டுக்கிட்டிங்களா..?"

தாமோதரன் கேட்டதில் கொஞ்சமாக மலையிறங்கினாள் நீரஜா..

"அப்புறம் எதுக்காக அந்த லேடி ரிசைன் பண்ணினதுக்கு நீங்க கொலைவெறியானீங்க..?"

சிந்துபாத்தின் கன்னித்தீவைப் போல அவளது சந்தேகங்கள் தீரவே மாட்டேனென்று அடம் பிடித்தன.. அதில் சோர்ந்து போனவனாக தலையில் கை வைத்தான் தாமோதரன்..

"அந்த மகராசி ரிசைன் பண்ணிட்டுப் போய் தொலைஞ்சதினாலேதானேங்க இந்த பிரஹஸ்பதி இண்டர்வியூக்கு கார்டு அனுப்பினான்..?"

"யாருக்கு..?"

"அப்ளை பண்ணினவங்களுக்குத்தான்.."

"அதில் உங்களுக்கு என்ன பிராப்ளம்..?"

"என்னத்தைன்னு சொல்லுவேன்..?"

தாமோதரனுக்கு தலையை வலித்தது.. ஓரிரு வார்த்தைகளில் கூறிவிடக் கூடிய விவரமல்ல அது.. மர்ம நிழலுடன் கூடிய ஒரு பெண்ணை மகாபலிபுரத்தின் ஐந்து ரதக் கோவிலில் சித்தார்த்தன் சந்தித்திருக்கிறான்.. அவளை சந்தித்த தினத்திலிருந்து அவனது செய்கைகள் அத்தனையும் விசித்திரமாக இருந்து தொலைக்கின்றன.. மகாபலிபுரச் சந்திப்பு மகாபலிபுரத்தோடு போகாமல் சித்தார்த்தனின் கம்பெனி வரைக்கும் வந்துவிட்டது.. அதைத் தடுத்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் தாமோதரன் இருக்கிறான்..



## 23

*நான் செதுக்கும் சிற்பத்தில்..*
*நீயே சிற்பமானாய்..*

எவர் உரைக்கும் செவி சாய்க்காத பல்லவ மன்னன் நரசிம்மவர்மன் சாளுக்கியர்களின் தலைநகரமான வாதாபியை நோக்கிப் படையெடுத்து விட்டான்..

நரசிம்மவர்மனின் தீர்மானத்தையும், அவனுடைய படை காஞ்சியை விட்டுப் புறப்பட்டு விட்ட செய்தியையும்

ஒற்றன்கொண்டு வந்த போது.. வழக்கப்படி நாகநந்தி புலிகேசிபோல உடையணிந்து மகிழ்ந்து மந்திராலோசனை மண்டபத்தில் நடைபயின்று கொண்டிருந்தான்..

சாளுக்கிய அரசின் அரியணையை எவ்விதம் கைப்பற்றுவது.. அதில் மன்னனாக அவன் அமரும் போது சிவகாமியை பட்டத்து மகிஷியாக எவ்விதம் அமர வைப்பது என்பன போன்ற நாட்டுக்குகந்த நற்பலனான திட்டங்களை அவன் மனதுக்குள் வகுத்துக் கொண்டிருந்தபோ தான் ஒற்றன் செய்தி கொண்டு வந்தான்.. மந்திராலோசனை மண்டபத்தின் மாடத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த நாகநந்தியை..

"மன்னர் பெருமானே..!" என்று ஒற்றன் அழைத் வைக்க அகம் மகிழ்ந்து போனான் நாகநந்தி..

"ஆம்.. யாம் மன்னனேதான்.. இந்த சாளுக்கிய நாட்டின் அரியணைக்கு உரியவன்தான்.." என்றபடி அவன் திரும்பினான்..

'யாதடா இது..?' என்றாகி விட்டது ஒற்றனுக்கு..

மன்னரை.. மன்னர் என்று அழைத்ததிற்கு அக மகிழ்ந்து போகிறவனா சாளுக்கிய மன்னன் புலிகேசி..?

'சிறிது தினங்களாக இவ்வாறுதான் நிகழ்கிறது.. மன்னர் ஏடா கூடமாக உரைத்து வைக்கிறார்.. ஏதுவாகி இருக்கக் கூடும்..?'

அதை ஏது என்று ாளுக்கிய அரசனிடம் ஒற்றன் வினவிவிட முடியுமா..? வினவினா புலிகேசி

விடையளித்து விட்டுத்தான் வேறு பணியைப் பார்ப்பானா..? வினவியவனின் சிரத்தை கொய்து விட மாட்டானா..?

ஆதலினால் அடக்கி வாசித்த ஒற்றன் வெகு பவ்யமாக.. நரசிம்மவர்மனின் படையெடுப்பைப் பற்றி உரைத்தான்..

ஒரெழுத்துக்கூட விடுபட்டுவிடாமல் உணக்கையாக அனைத்தையும் செவிமடுத்து விட்டு..

"ஆகட்டும் போ.." என்று விடை கொடுத்தான் நாகநந்தி..

'அவ்வளவுதானா..?' ஒற்றனுக்கு சிகையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது..

இதுபோன்ற செய்தியை செவிமடுத்தால் புலிகேசி மன்னர் உடனடியாக மந்திராலோசனைக் கூட்டத்தைக் கூட்டி விடுவாரே.. நாடெங்கும் யுத்த முழக்கத்தைப் பரவச் செய்து விடுவாரே.. தற்போது அமைதி காப்பதன் பிண்ணனி யாதுவாக இருக்கக் கூடும்..?

"அதிகமாக சிந்தனை செய்யாதே ஒற்றனே.. நாகநந்தியின் குரலில் ஒற்றனுக்கு தூக்கிவாரிப் போட்டது..

"செய்தியை உரைப்பது மட்டுமே உமது பணி.. அதை பரிசீலனை செய்து நாட்டைக் காக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது எமது பணி.. ஆதலால் தாம் பணியை முடித்து விட்ட நிம்மதியோடு இல்லம் போய்ச் சேரலாம்.. மனையாட்டியை அழைத்துக் கொண்டு தொலைதூரப்

பயணம் செல்ல அனுமதியளிக்கும்படி சென்றமுறை இறைஞ்சினாயே..?"

"ஆம் அரசே..! எமக்குப் பெண் கொடுத்த மாமனார் மலைநாட்டில் வசிக்கிறார்.. ஊர்த்திருவிழாவிற்கு வருகை தரவேண்டுமென ஓலை அனுப்பியுள்ளார்.."

மக்குக்கூட ஓலை வருகிறதா..? பேஷ்.. பேஷ்.."

"மன்னிக்க வேண்டும் அரசே...! அண்டை இல்லத்தவனின் சகோதரியை அதே மலைநாட்டில் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார்கள்.. தங்கையைப் பார்க்கச் சென்றவனிடம் எமது மானமார் மடல் வரைந்து கொடுத்தனுப்பியுள்ளார்.."

"அச்சம் வேண்டாம் ஒற்றனே..! அரசுப் பணியில் இருப்பவன்.. மாமனார் வீட்டில் விருந்துண்ணப் போகக் கூடாதென்ற நியதி ஏதும் உள்ளதா..? நீ செ ˙ .."

"ஆயினும் அரசே..! யுத்தம் மூண்டு விட்ட இவ்வேளையில் யாம் எவ்வாறு விருந்துண்ணச் செ இயலும்..?"

"ஏன் இயலாது..? நீயென்ன வாள்பிடித்து யுத்த களத்தில் குதிக்கப் போகிறாயா..? அல்லதானே.. ஒற்றனுக்கு யுத்த களத்தில் யாது பணி..? அவ்வாறு பணி புரிய வேண்டிய நிர்பந்தம் உருவானால் மற்ற ஒற்றர்களை யாம் ஏவிக் கொள்வோம்.. நீ மகிழ்வுடன் உன் மனையாட்டி, குழந்தைகளுடன் மலை நாட்டிலுள்ள உனது மாமனாரின் இல்லத்திற்கு விருந்துண்ணச் செ ˙ ..."

"தங்கள் சித்தம் எனது பாக்கியம் அரசே.."

குழப்பத்துடன் சிரம் தாழ்த்தி வணங்கி விட்டு புறப்பட யத்தனித்தான் ஒற்றான்.. அரை நாழிகைகூட விடுப்புத் தராத புலிகேசி மன்னனா பல தினங்கள் விடுப்பளித்து மலைநாட்டு விருந்துக்கு சென்றுவர அனுமதி அளிக்கிறார்..? அதுவும் நாட்டில் யுத்தம் மூண்டிருக்கும் சூழலில் ஒற்றனுக்கு விடுப்பளிக்கிறாரா..?

'யாதடா இது..?'

சுவரில் மோதிக் கொள்ள விழைந்தது அவன் மனம்.. அங்கேயே மோதினால் புலிகேசி மன்னன் அவனை ஆய்ந்து விடுவான் என்பதினால் அரண்மனையின் சுற்றுச் சுவருக்குப் போய் மோதிக்கொள்ள உத்தேசித்தான் அவ்வொற்றன்..

"நில்..." நாகநந்தியின் குரல் அவனை தடுத்து நிறுத்தியது..

'யாது ஆனது..? மன்னர் மனம் மாறி விட்டாரா..? ஆஹா..! மன்னர் மாறவில்லை.. எப்போதும் போல கடும் சித்தத்துடன்தான் உள்ளார்.. யாம்தான் குழம்பி விட்டோ மலைநாட்டின் மாமனார் இல்ல விருந்து எங்கே பயணித் விடப் போகிறது..? யுத்தம் முடிவுற்ற பின்பு சென்றால்.. வருகைதராதே என்று மாமனாரின் இல்லக் கதவுகள் மூடி விடவா போகின்றன..? யாம் பணியைப் பார்ப்போ

வதனம் தெளிந்து நின்றவனின் கரங்களில் பொற்காசுகள் அடங்கிய முடிச் ட்ட பட்டுப் பையை போட்டான் நாகநந்தி..

"அரசே..?...!" ஒற்றன் மயங்கி விழப் போனான்..

"தம்து கடமைக்கான எமது அன்புப்பரிசு..! பெற்றுக் கொள்.."

"அதற்குத்தான் ஊதியம் அளிக்கறீர்களே அரசே..!"

"ஊதியம் அளித்தால் பரிசளிக்கக் கூடாது என்ற நியதி உள்ளதா..? யாம் அளிக்கும் பரிசில் மகிழ்ந்து போகாமல் வினா எழுப்புகிறாயா..?"

நாகநந்தியின் உறுமலில் ஒற்றனின் சப் ஒடுங்கிப் போனது..

"அல்ல அரசே..!" அவசரமாக பொற்கிழியை இறுக்கிப் பிடித்துக் கொண்டான்..

"தம் சேவையில் மகிழ்ந்தோம்.. தக்க சமயத்தில் உரிய தகவலை உரைத்தாய்.. உனக்கு வெகுமதி அளிக்க வேண்டாமா..?"

இதற்கான விடையாக யாதை உரைப்ப எனத் தடுமாறிப் போனான் ஒற்றன்.. ஆம் என்றாலும் தவறு.. அல்ல என்றாலும் அரசர் அளிக்கும் வெகுமதியை மறுப்பதாக வந்து முடியும்..

'வில்லங்கமான இந்த வினாவிற்கு எவ்விதம் விடையளிப்பேன்..?'

ஒற்றனுக்கு மலைப்பாக இருந்தது.. அவன் செய்த நற்பலனோ.. அல்லது அவனது மனையாட்டி செய்த நற்பலனோ நாகநந்தி அத்துடன் விட்டு விட்டான்..

"பொன்னைப் பத்திரப் படுத்திக் கொள்.. மலை நாட்டில் வசிக்கும் மாமனாரின் இல்லத்துக்கு நெடும் காலத்திற்குப் பிறகு விருந்தாடச் செல்கிறாய்.. உனக்கும், உன் மனையாட்டிக்கும், குழந்தைகளுக்கும் ஆடை ஆபரணங்களை வாங்கிக் கொள்.. உனது மாமனாரின் இல்லத்தைச் சேர்ந்தவர்களுக்கு வெகுமதிகளை வாங்கிக் கொள்.. கால் நடையாக பயணிக்காமல் ஓர் ரதத்தை விலைக்கு வாங்கி.. அதில் பயணப்படு.. உன் இல்லமும் மகிழும்.. உனக்குப் பெண் கொடுத்த மாமனாரின் இல்லமும் மலைத்து விடும்.."

மனித மனங்களின் சூட்சுமங்களை அறிந்து வைத்திருப்பதில் கை தேர்ந்தவன் நாகநந்தி.. இச்சை யில்லாத மனிதர் இப்புவியில் உண்டா..? ஒற்றன் என்ன இச்சைக்கு அப்பாற்பட்ட துறவியா..? அரியணையைத் துறந்து துறவறம் மேற்கொண்ட நாகநந்தியே சிவகாமியின் மீதுள்ள இச்சையினால் அகம் மாறி.. தடம் மாறி நிற்கும் போது.. சாமானிய ஒற்றன் தடம் மாற மாட்டானா..?

'அவ்வாறெல்லாம் இவ்வாழ்வை சுகிக் இயலுமா..?'

ஒற்றனின் கையிலிருந்த பொற்கிழியில் இருந்த பொற்காசுகளின் கனம் ஏன் இயலாது எனக் கேட்டது..

"புதிய ஆடை, புதிய ஆபரணம், புதிய ர ம், ஆஹா.. ஆஹா.. கலக்கப் போகிறாய் ஒற்றனே..!"

நாகநந்தியின் கேலி உரையில் ஒற்றனின் அகத்தில் சொப்பனம் விரிந்தது.. பற்பல சொப்பனங்களோடு அவன்

நாகநந்தியின் பாதம் பணிந்த விடைபெற்று.. போரை மறந்து ரதம் வாங்க ஓடினான்..

'போர் பற்றிய செய்தியை இனி எவ்விதம் அறிவாய் புலிகேசி..?' நாகநந்தியின் குரூர மனம் வன்மத்துடன் நினைத்துக் கொண்டது..

அரண்மனையில் உலா வந்தவனை எதிரில் வந்த புலிகேசி கண்டான்.. வதனம் சுளித்து நாகநந்தியின் சிரம் முதல் பாதம்வரை பார்வையால் அளந்தான்..

"இந்த வேடம் தரிக்கும் பணியை நீ விடுவதாக இல்லையா..?"

"இல்லையென்று உரைத்தால் யாது செய்ய உத்தேசித்திருக்கிறாய் புலிகேசி..?"

"ம்ஹீம்.. உன்னுடன் உரையாடுவது வீண்.. நீ திருந்த மாட்டாய்.. என்னதான் ஒப்பனை செய்து ஆடை அலங்காரங்களுடன் பவனி வந்தாலும் உன் கோட்டான் வதனத்தை அந்த நடனமாது திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாள்.." புலிகேசி இகழ்ச்சியுடன் உரைத்தான்..

அதில் நாகநந்தி வெகுண்டான்..

"அவ்வாறா புலிகேசி..? என் வதனம் கோரவதனம்..! கோட்டான் வதனம்..! உன் வதனம் என்ன மன்மதனின் வதனமா..? நம்மிருவரின் வதனங்களும் ஒன்று போல உள்ளதை அறிந்தவன்தானே நீ..?" இடித்துரைத்தான் நாகநந்தி..

"இவ்வாறு வழக்காட எவ்வாறு இயல்கிறது..? றவறம் பூண்டவன் இல்லறத்தை நாடுகிறாய்.. அதுவும் மனம் விரும்பாத ஓர் மங்கையிடம் மண்டி போடுகிறாய்.. வெட் ..! வெட்கம்..!"

"அது எமக்கு அற்று விட்டது என்றே முடிவெடுத்துக் கொ ' .."

"முடிவெடுப்பது எதற்கு..? அதுதானே மெய்..?"

"அவ்வாறே இருக்கட்டும்.. சிவகாமி.. என் காதலி..! அவளிடம் காதலை யாசிப்பதில் எமக்கு யாதொரு தயக்கமும் இல்லை.."

"எக்கேடும் கெட்டுப்போ.. எமக்கென்ன ஆனது.. வழியை விடு.."

"நீண்டதூரப் பயணமோ..?"

"ஆம்.. அஜந்தாவின் கலாச்சார விழாவிற்கு விருந்தினனாகச் செல்கிறேன்... தினப்படி பணிகளில் மனம் சலிப்புற்று உள்ளது.. அதற்கு புத்துணர்வு ஊட்ட இதுபோன்ற மகிழ்வுகள் தேவையல்லவா..?"

"ஆம்.. ஆம்.. தேவைதான்.. நீ புறப்படு.."

இடக்காக வழி அனுப்பியவனின் விழிகளில் தெரிந்த விசமத்தில் புலிகேசி தேங்கி நின்றான்.. அவனிடமிருந்து நாகநந்தி ஏதையோ மறைக்கிறான் என்று அவனுக்குத் தோன்றியது..

'அது என்னவாக இருக்கக் கூடும்..

புலிகேசியின் அறிவில் மணியொலித்தது.. அதை கண்டுகொண்ட நாகநந்தி வதனத்தை இயல்புடன் வைத்துக் கொண்டான்..

"என்னிடமிருந்து எதையும் மறைக்க யத்தனிக்கிறாயா..?"

அவனிடமே விவரம் வினவினான் புலிகேசி..

"அல்லவே அல்ல சகோதரனே..!"

அப்பாவியாய் வதனத்தை வைத்துக் கொண்டு கரம் விரித்தான் நாகநந்தி.. எதையோ அவன் மறைக்கிறான் என்பதை யூகித்து விட்டாலும் அது போர் பற்றிய செய்தியாக இருக்கக் கூடும் என்று சொப்பனத்திலும் நினைத்துப் பார்க்கவில்லை புலிகேசி.. வழக்கம் போல நாகநந்தி அரியணையைக் கைப்பற்றுவதைப் பற்றி ஏதேனும் திட்டம் வகுத்திருக்கக் கூடும் என்ற நினைவுடன் அவன் அஜந்தாவின் கலாச்சார விழாவிற்கு பயணப்பட்டு விட்டான்..

மன்னன் இல்லாத வேளையில் வாதாபியை நரசிம்மனின் படைகள் சூழ்ந்து கொண்டன.. யுத்தம் பற்றிய செய்தியை அறிந்த சிவகாமியின் வதனத்தில் மகிழ்ச்சி ததும்பியது..

"எமை விட்டு நீங்குவதில் தமக்கு இத்துணை மகிழ்ச்சியா சிவகாமி..?"

அந்த நிலையிலும் சகிக்க முடியாமல் காதல் உரைகளைப் பேசி அவளை சோதித்தான் நாகநந்தி..

வெறுப்புடன் வதனம் திருப்பிக் கொண்ட சிவகாமியிடம்..

"யாம் நினைத்திருந்தால் நரசிம்மனின் படையெடுப்பைப் பற்றி புலிகேசியிடம் உரைத்திருக்க இயலும்.. யாம் அவ்விதம் செய்யவில்லை.. யாதென்று அறிவாயா சிவகாமி..? தம்மையும் தம் நாட்டு மக்களையும் சிறைபிடித்துத் துன்புறுத்தும் இந்த புலிகேசி அழிய வேண்டும்.. அதன் பொருட்டே நரசிம்மனின் படையெடுப்பைப் பற்றி யாம் புலிகேசியிடம் உரைக்காமல் மறைத்து வைத்தோம்.. இப்போதாவது உன்மீது நான் கொண்டுள்ள கரை கானாத காதலைப் பற்றிப் புரிந்து கொள்வாயா சிவகாமி..?" என்று தொடர்ந்து உரையாற்றி வதைத்தான்..

'நீ என்ன வேண்டுமானாலும் மொழிந்து கொள் என் செவிகள் அதை ஏற்றுக் கொண்டால்தானே..?' என்று அவன் உரைப்பதை செவி மடுக்காமல் இருக்கப் பிரயத்தனம் செய்தாள் சிவகாமி..

அவனா விடுவான்..? பிரசங்கத்தை நிறுத்தாமல்..

"புலிகேசியின் மறைவுக்குப் பின் சாளுக்கிய நாட்டின் அரியணை எமக்குத்தான் சிவகாமி.. தம்மையே எமது பட்ட மகிஷியாக யாம் ஏற்போ  எந்த நாட்டில் நீ சிறையிருந்தாயோ.. அந்த நாட்டிற்கே மகாராணியாக நீ மாறலா  " என்று ஆசை காட்டலானான்..

அவன் உரைத்த உரையின் கூர்மை தாங்காமல் சிவகாமியின் செவிகளில் குருதியே பெருக்கெடுத்து விடும்

போல ஆகிவிட்டது.. இருகரம் கொண்டு செவிகளை மூடிக் கொண்டவளின் வதனத்தில் பிரதிபலித்த கொலை வெறியில் நாகநந்தி ஒருவழியாக தனது உரையை திறுத்தினான்..

அஜந்தாவின் கலாச்சாரவிழாவில் உல்லாசம் கொண்டாடிக் கொண்டிருந்த புலிகேசிக்கு வாதாபியை நரசிம்மனின் படைகள் சூழ்ந்து விட்டதைப் பற்றிய செய்தி வந்து சேர்ந்தது.. அவன் விரைந்து திரும்பி வந்து வாதாபியின் நகர் எல்லையில் கோட்டை வாசலில் நரசிம்மனின் படைகளைச் சந்தித்தான்.. போர் தொடங்கியது.. கொடூரமான யுத்தம்.. களைக்காமல் போர் புரிந்த புலிகேசி மரண காயங்களுடன் பாசறைக்கு திரும்பினான்.. மரணம் நெருங்கிவிட்டதை புரிந்து கொண்டவன்.. மற்றவர்களை அழைக்க யத்தனிக்கையில் பாசறையின் வாசலை மூடிவிட்டு ஓர் உருவம் திரும்பியது.. அவனை அணுகியது.. அங்கிருந்த தீப்பந்தத்தையும் அணைத்து விட்டது.. புலிகேசியின் மஞ்சத்திற்கு அருகே ஏற்றி வைக்கப்பட்டிருந்த சிறு அகல் விளக்கின் ஒளியில் வந்தவனை அடையாளம் கண்டு கொண்டான் புலிகேசி..

“நாகநந்தி..?”

“யாமேதான்.. எவரை அழைக்க விழைந்தாய்..?”

“அமைச்சரையும்.. படைத்தலைவரை அழைத்ததாக உரைத்து அழைத்து வா..

“எதன்பொருட்டு..

"தோல்வியை ஒப்புக் கொள்ள வேண்டிய நிலைக்கு நம்நாடு தள்ளப்பட்டு விட்டது.. நரசிம்மனின் படையெடுப்பைப் பற்றிய தகவல் எனக்கு முன்னரே கிடைத்திருந்தால் போரின் முடிவு மாறியிருக்கும்.. அவ்வாறு அல்லாது வாதாபியை நரசிம்மனின் படைகள் சூழ்ந்து விட்டன.. யாமும் உயிரை விடப் போகிறோம்.. இனியும் நரசிம்மனின் வெற்றியை ஒப்புக் கொள்வதில் நாம் தாமதம் செய்தால் நரசிம்மன் வாதாபியை தரை மட்டமாக்கி விடுவான்.."

"ஆக்கட்டுமே.. உமக்கென்ன வந்தது..?"

"நாகநந்தி.. இது எம் நாடு.."

"நீ இறக்கப் போகிறவன்.."

"அதற்காக மரணிக்கும் தறுவாயில் என் நாட்டு மக்களின் நலனைக் காக்க ஆவன செய்யாமல் மரணிக்கச் சொல்கிறாயா..? அது இயலாது.. எனக்கு எனது நாடும்.. நாட்டு மக்களின் நலனும் அதி முக்கியமானவை.."

"நாடும்.. நாட்டு மக்களும் நாசமாய் போகட்டும்.. எமக்கு அதைப் பற்றி யாதொரு கவலையும் இல்லை.. நீ தோல்வியை ஒப்புக்கொண்டால் சிவகாமியை அவன் சிறை மீட்டு விடுவான்.."

"பாதகா..! உன் ஆசைக்கா ாட்டை பலியா போகிறாயா..?"

"ஆம்.."

நாகநந்தியின் குரூர வதனத்தில் பிடிவாதம் நிலவியது.. செயல்பட முடியாத இயலாமையுடன் புலிகேசி

மரணித்து விட்டான்.. கண்ணெதிரே இறந்து விட்ட சகோதரனின் சடலத்தை மற்றவர்கள் அறியா வண்ணம் அப்புறப்படுத்தி விட்ட நாகநந்தி புலிகேசி போல வேடமணிந்து போருக்கு வந்தான்.. சினம் கொண்ட நரசிம்மனின் வாள் வீச்சில் அவனது வேடம் வெளிப் பட்டது.. நரசிம்மன் வாதாபியை தீக்கிரையாக்கும் உத்தரவை பிறப்பித்தான்.. நாகநந்தியை துறவி யென்பதால் கொல்லாமல் விட்டுவிட்டான்.. தப்பியோடிய நாகநந்தி அனைவரின் கண் பார்வையிலும் மறைந்து கானகம் புகுந்து விட்டான்.. பற்றியெரிந்த தீயில் வாதாபி நகரம் அழிந்தது..

சிவகாமியின் சபதம் நிறைவேறியது..

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 23

*தொடர்ந்து வரும் நிழல்மீது..*
*துளியளவு சந்தேகம்..*

நீரஜாவின் வில் போன்ற புருவங்கள் வளைந்து நெளிந்து தாமோதரனை சோதித்து வைத்தன.. அவள் சும்மா ஓர் பார்வை பார்த்தாலே அவன் தாங்க மாட்டான்.. இந்த லட்சணத்தில் இப்படியெல்லாம் வில்லேந்தும் புருவங்களை வளைத்து நெறித்தால் தாங்குவானா..?

"ஏங்க ஐப்ரோவைப் போட்டு அந்தப் பாடுபடுத்தறிங்க.. விட்டிருங்க.."

நீரஜாவின் புருவங்கள் படும் பாட்டைக் காணச் சகிக்காமல் சிபாரிசு செய்தவனை யார் நீ.. என்று பார்வைத்தாள் நீரஜா..

அதில் இடிந்து போன தாமோதரனை..

"இப்ப மட்டும் புதுசா பார்க்கிறதைப் போல சீன் ஈட்டறியேடா.. இவ எப்பவுமே உன்ன அப்படித்தான் பார்த்து வைக்கிறா.." என்று எடுத்துக் கொடுத்தான் சித்தார்த்தன்..

'அப்படியா..?'

தாமோதரனின் விழிகள் கேட்ட கேள்விக்கு நீரஜாவின் விழிகளில் வந்து போன மின்னல்கள் மேஜிக் வேலை செய்து அவன் உடலுக்குள் மின்சாரத்தைப் பாய்ச்சின.. அவன் ஒரு மார்க்கமாக மந்திரித்து விட்ட கோழியைப் போல ஆகிப் போனான்..

"இவன் ஒருத்தன்.. இவ முன்னாலே அடிக்கடி கரண்ட் கம்பியைத் தொட்டுட்டவன் போல ஜெர்க் ஆகி வைப்பான்.." அலுத்துக் கொண்டான் சித்தார்த்தன்..

நீரஜா தலையை சாய்த்து தாமோதரனைப் பார்த்து வைத்தாள்.. அந்தப் பார்வையைக் கவ்விக் கொண்ட தாமோதரனின் பார்வை.. என் வார்த்தைகளைக் கொஞ்சம் கேளேன் என்று இறைஞ்சியது.. அவளின் புருவங்கள் பரத நாட்டியம் ஆடி வைத்தன.. சித்தார்த்தன் என்ற ஒருவன் அங்கே இருக்கிறான் என்பதை மறந்து அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் விழுங்குவதைப் போல பார்த்துக் கொண்டிருந்தில்..

"நான் வேணும்னா காரில் ஒரு டிரைவ் போயிட்டு வந்திரட்டுமா..?" என்று கேட்டான் சித்தார்த்தன்..

நீரஜாவின் முகம் சிவந்துவிட்டது.. தாமோதரன் சங்கடப்பட்டுப் போனான்..

"டேய்ய்.. வந்திருக்கிறது உன் தங்கைடா.."

"எனக்கு.. நீ இன்ட்ரொடுயூஸ் பண்ணி விடுகிறயா..? பிறந்ததில இருந்தே.. அதாவது அவ பிறந்ததில இருந்தே இவதான் என் தங்கைன்னு எனக்குத் தெரியும்டா.. மச்சி.. ஸோ.. இந்த அறிமுகப் படலத்தையெல்லாம் வேற எங்கேயாவது போய் வைச்சுக்க.."

"தங்கைகிட்ட பேசற பேச்சாடா இது..?"

"அண்ணன் பிரண்ட இவ ஏன் அரட்டிப் பார்க்கிறா..? இதுக்குப் பதில் சொல்லிட்டு மத்த அட்வைஸை பண்ணு.."

"அது.. அது.. அது.."

தாமோதரன் வார்த்தைகள் தந்தியடிக்க நீரஜாவைப் பார்த்தான்.. அவள் முகத்தில் லேசாக கோடிட்டு மறைந்த செம்மையில் அவன் மனம் தடுக்கி விழுந்தது.. இனி வரும் நாள்களுக்கு இது போதும் என்று அவன் இதயம் ஜொள்ளியது.. அந்தச் சந்தோசத்துடன் அவன் நண்பனிடம் எகிறினான்..

"இவங்க அரட்டினதை நீ பார்த்தியா..?"

"பார்த்துக்கிட்டுத்தானடா இருக்கேன்.."

"இவங்களுக்கு பூப்போல மனசு..!"

வார்த்தைகளுக்கு வலிக்குமோ என்று மிக மென்மையாக தாமோதரன் ஜொள்ளிய விதத்தில் நீரஜாவே நிமிர்ந்து 'அப்படியா..?' என்ற ஓர் பார்வையை பார் வைத்தாள்..

"பார்த்தாலும் பார்த்தேன்.. உன்னைப் போல அண்டப்புளுகன்.. ஆகாயப் புளுகனை நான் பார்த்ததே இல்லைடா..? இவளுக்காடா பூப்போல மனசு..? இரும்புத் திரைங்கிற வார்த்தையையே இவளைப் பார்த்துத்தான் உருவாக்கினாங்களாம்.."

"அப்படின்னு தமிழ்மொழி வந்து உன்கிட்டச் சொல்லுச்சா..?"

"தமிழ்மொழி சொல்கிறது இருக்கட்டும்.. இப்ப எனக்கு செகரட்டரியா உனக்கு வேண்டப்பட்ட பெண்ணைத்தான் அப்பாயிண்ட் பண்ணனும்னு நீ பிடிவாதம் பிடிக்கிறயே.. அதைப்பத்தி நீரஜாகிட்ட என்னத்தச் சொல்லப்போற..? நீயே கேளு நீரு.."

'மாட்டி விட்டுட்டானா..? இப்பத்தான் நெருப்பா இருந்தவ நீராய் மாறி கொஞ்சம் கொஞ்சம் பார்த்து வைச்சா.. அது இவனுக்குப் பொறுக்கலியே.. நீரும்மா..! நீ, நீரும்மா.. நெருப்பா ஆகாதே..

தாமோதரனின் மனது மன்றாடியதை நீரஜாவின் மனது திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.. பெண்.. அதிலும் தாமோதரனுக்கு வேண்டப்பட்ட பெண் என்பதில் அவள் மலையேறி விட்டாள்..

"அப்படியா சேதி..?"

"எப்படியும் செய்தியில்லைங்க நீரஜா.. அவசரப்பட்டு எந்தவொரு முடிவுக்கும் வந்துராதீங்க.. நான் அப்பாவி.."

"இப்படிச் சொல்லியே எத்தனை பெண்களை ஏமாத்தினீங்க..?"

"ஏங்க இப்படி மனச்சாட்சி இல்லாம கேட்டு வைக்கறிங்க..? என்னைப் பார்த்தா பெண்களை ஏமாத்தற பித்தலாட்டக்காரன் மாதிரியா தெரியுது..?"

நீரஜாவின் நெருப்பைக் கக்கிய விழிகள் நான் பெண்ணில்லையா என்று கேட்டன. என்னை நீ ஏமாற்றவில்லையா என்று குற்றம் சாட்டின..

"இதுக்கு மேலே தாங்க மாட்டேங்க.." தாமோதரன் சரணடைந்தான்..

"உண்மையைச் சொல்லிடறேங்க.."

அவன் என்னவோ சித்தார்த்தனை மயக்க வந்த மோகினியைப் பற்றிய உண்மையைத்தான் சொல்லப் போவதாக சொன்னான்.. அதையறியாத நீரஜா வேதனையுடன் விழிகளை இமைகளால் மூடிக் கொண்டாள்..

தாமோதரனின் ஒப்புதல் வாக்குமூலத்தைக் கேட்கப் போகும் துயரம் அவள் முகத்தில் அப்பிக்கிடந்ததில் தாமோதரனுக்கு தலையில் மடேர்.. மடேரென அடித்துக் கொள்ள வேண்டும்போல இருந்தது..




*துயர் துடைக்க சிறை மீட்ட மன்னவனே -*
*மீளாத்துயர்தனில் தள்ளிவிட்டான்..*

சிவகாமி மகிழ்வின் உச்சத்தில் இருந்தாள்.. அவளை சிறை வைத்திருந்த வாதாபி நகரம் அவள் செய்த சபதத்தின்படி தீக்கிரையாகி விட்டது.. அவளுடைய ஆருயிர் காதலன் நரசிம்மவர்மன் சிவகாமியின் பொருட்டு அவளை சிறை மீட்க படையெடுத்து வந்தான்.. வாதாபியை தீக்கிரையாக்கினான்.. புலிகேசியை போர் புரிந்து கொன்றான்.. நாகநந்தியை வென்று நாட்டை விட்டே துரத்தி விட்டான்.. அவளை சிறை மீட்க வந் கொண்டிருக்கிறான்..

"வாருங்கள்.. சுடுநீர் ஆயத்தமாக உள்ளது.. நீராடி.. வாசனைத் திரவியங்களைப் பூசி.. புத்தாடை அணிந்து.. புதுமலர்களைச் சூடி.. ஆபரணங்களை அணிந்து தங்களை அழகு படுத்திக் கொள்ளுங்கள்.."

சேடிப்பெண்கள் அழைத்தனர்..

'ஆம்..' சிவகாமி எழுந்தாள்..

அவள் வதனத்தை நிலைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள்.. பொலிவிழந்த இந்த வதனத்துடனா நரசிம்மனை அவள் எதிர் கொள்வது..?

விரைவில் தன்னை அழகுபடுத்திக் கொண்டாள்.. அவள் மனம் விம்மியது.. எந்த நகரில் அவள் சிறையிருந்தாளோ.. அந்த நகரை அவளுடைய நரசிம்மவர்மன் வென்று விட்டான்.. எவர் பொருட்டு சிவகாமி சபதம் செய்தாளோ.. அந்தப் பல்லவ நாட்டின் குடிமக்களை நரசிம்மவர்ம பல்லவன் சிறைமீட்டு விட்டான்.. இதோ.. சற்றுப் பொழுதில் அவளைக் காண அவன் வந்துவிடுவான்..

'அவனிடம் எவ்விதம் உரையாடுவது..?'

சிவகாமி மனதுக்குள் வார்த்தைகளைக் கோர்த்து மாலையாக்க முனைந்தாள்... ஒரு வார்த்தைகூட உருப்படியாக அவளுக்குச் சிக்கவில்லை.. அவனைக் கண்டதும் நிச்சயமாக அவள் பேச்சிழந்து போவாள் என்பதனை அவள் மனம் சுட்டிக்காட்டியது.. மௌனத்தில் உறைந்து போவாள்..

*"பிரிந்தவர் மீண்டும் சேர்ந்திடும்போது..*
*அழுதால் கொஞ்சம் நிம்மதி..*
*பேச மறந்து சிலையாய் இருந்தால்..*
*பேச மறந்து சிலையாய் இருந்தால்..*
*அதுதான் தெய்வத்தின் சன்னதி..*
*அதுதான் காதல் சன்னதி..*
*காதல் சிறகை காற்றினில் விரித்து..*
*வானவீதியில் பறக்கவா..?*
*கண்ணில் நிறைந்த காதலன் மார்பில்..*
*கண்ணீர் கடலில் குளிக்கவா..?"*

சிவகாமி சுழன்றாடி அபிநயத்துப் பாடினாள். அளவற்ற மகிழ்ச்சியிலே 'பிச்சி'யினைப் போல தனக்குத் தானே பேசி.. நகைத்துக் கொண்டவளை விசித்திரமாகப் பார்த்து தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள் சேடிப் பெண்கள்..

"ராஜாதி ராஜ.. ராஜ மார்த்தாண்ட... ராஜகுலதிலக.. பராக்கிரமம் பொருந்திய.. பல்லவகுல மகாராஜா நரசிம்மவர்ம பல்லவர் வருகை புரிகிறார்.."

சிவகாமி இருந்த மண்டபத்தின் வாசலில் உற்சாகமான ஓங்கிய குரல் கேட்டது.. சிவகாமி ஓடிப் போய் சாளரத்தின் வழியாக எட்டிப் பார்த்தாள்.. மண்டபத்தின் படிகளை இரண்டிரண்டு படிகளாக தாவிக் கடந்து வருகைதந்து கொண்டிருந்த நரசிம்மவர்மன் அவளைப் பார்க்கவில்லை.. அவள் மனம் .சிணுங்கியது..

'யாம் எங்கேயென அவர் விழிகள் துழாவ வில்லையே..

நரசிம்மவர்மன் வந்து விட்டான்.. சிவகாமி இதழ்கள் துடிக்க அவனை ஏறெடுத்துப் பார்த்தாள்.. அவன் வதனத்தில் கடுமை நிலவியது.. அவளைப் பார்க்காமல் அவன் வேறு திக்கில் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவன் காலடியில் மண்டியிட்டு கண்ணீரை உகுத்தாள் சிவகாமி..

"எமது வாக்குப்படி சிவகாமியின் சபதத்தை நிறைவேற்றி விட்டோம்.. இனியாவது வாதாபி நகரை விட்டு பல்லவ நாட்டிற்கு புறப்பட ஆயத்தமாகச் சொல்வாயாக.."

அவளிடம் உரைக்காமல் அருகிலிருந்த படைத் தலைவனிடம் உரைத்துவிட்டு சடுதியில் அங்கிருந்து அகன்றான் நரசிம்மன்..

'யாது இது..?' சிவகாமி ஸ்தம்பித்து விட்டாள்..

அவளை சிறைமீட்க போர்புரிந்தவன்.. அவள் வதனத்தைக் கூட காண மறுத்து வெறுப்புடன் விலகிச் செல்கிறானே..?

திகைப்புடன் படைத்தலைவனை நோக்கினாள்.. சகோதர வாஞ்சையுடன் அவளைப் பார்த்த படைத் தலைவனின் வதனத்தில் நிலவிய பரிதாபத்தில் அவள் இதயம் துணுக்குற்றது..

"விரைந்து திரும்ப வேண்டும் சகோதரி.. எவ்வினாவிற்கும் உரிய காலத்தில் உமக்கு விடை கிட்டும்.. இப்போது புறப்பட ஆயத்தமாகு.." கனிவுடன் உரைத்தான் படைத்தலைவன்..

காத்திருந்த ரதத்தில் ஏறிக் கொண்டாள் சிவகாமி.. பல்லவநாட்டை நோக்கி பட்டுத் துணிகள் கொண்டு மூடப்பட்ட அந்த ரதம் பறந்தது.. படைகளுடன் நரசிம்மவர்மன் முன்னே சென்றான்..

வெற்றியுடன் நாடு திரும்பிய மன்னவனை விழாக் கோலத்துடன் காஞ்சி மாநகரம் வரவேற்றது.. கோட்டையின் மதிற் சுவர்களில் கொம்புகள் முழங்கின.. மங்கல வாத்தியங்களுடன் கோட்டையின் கதவுகள் திறந்தன.. வெற்றித் திலகமிட அரண்மனைப் பெண்டிர் காத்திருக்கும்

செய்தி கிட்டியதால் நரசிம்மன் அரண்மனைக்குச் சென்றுவிட்டான்.. பரிவாரங்கள் அவனைப் பின்பற்ற.. படை வீரர்கள் கலைந்து தத்தம் இல்லங்களுக்கு விரைந்தனர்.. இல்லந்தோறும் அவர்களை வரவேற்க ஆரத்தி காத்திருந்தது.. நகர் முழுவதும் உற்சாகம் கரை புரண்டோடியது.. வாண வேடிக்கைகள் வானைத் தொட்டன.. ஆடல்.. பாடல் என காஞ்சிமாநகரின் வீதிகள் களை கட்டின.. ஆலயங்களின் சிறப்பு வழிபாட்டை அறிவுறுத்தும் ஆலயமணிகள் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்தன.. நகர் முழுவதும் உற்சாகக் குரல்களின் கலவையொலி இனிய சங்கீதம் போல எதிரொலித்துக் கொண்டிருந்தது..

சிவகாமி மட்டும் தனித்து நின்றாள்..

அவளை அழைத்துவந்த பரிவாரங்கள் அவளை விட்டுப் பிரிந்து போய் விட்டன.. உடன் வந்த படைவீரர்கள் தத்தம் இல்லம் புகுந்து விட்டனர்.. எவர்பொருட்டு சிவகா சபதம் செய்தாளோ.. அந்த சிறைமீண்ட பல்லவர்களும் தங்களின் இல்லத்தவர்களுடன் கலந்து விட்டனர்.. நரசிம்மவர்மன் அரண்மனைக்குப் போய் விட்டான்..

சிவகாமி எங்கு செல்வாள்..?

"மகளே.." ஆயனரின் மெலிந்த குரலில்..

"தந்தையே.." என்று திரும்பினாள் சிவகாமி..

"வா மகளே. மண்டகப்பட்டிற்குச் செல்லலாம்.."

அவ்வளவுதானா..? காஞ்சி மாநகரில் அவள் இருக்க முடியாதா..? மண்டபப் பட்டுத்தான் அவளது வாசஸ்தலமா..

"செல்வோம் தந்தையே.." கம்மிய குரலுடன் சொன்னாள்..

ரதத்தில் வந்து இறங்கியவள் நடைபயணமாக தந்தையுடன் நடந்து மண்டபப் பட்டை அடைந்தாள்.. அவர்களது சின்னஞ்சிறிய இல்லத்தில் துயில் கொள்ள முனைந்த போது அவளது இமையோரமாக கண்ணீர் வழிந்தது..

கண்களுக்கு எட்டாத தொலைவில் வாதாபியில் அவள் சிறையிருந்தபோது அவளது மனதுக்கு நெருக்க மானவனாக நரசிம்மவர்மன் அவளுடனே இருந்தான்..

இன்றோ அவன் சற்றுத் தொலைவிலுள்ள காஞ்சியில்தான் இருக்கிறான்.. இருப்பினும் ஏனோ அவன் சிவகாமிக்கு எட்டாத தொலைவில் பிரிந்து சென்று விட்டதைப் போல அவள் மனம் பதைத்தது.

அது எதனால்..?

"தந்தையே.." துயிலின்றி புரண்டு படுத்த அவள் அழைத்தாள்..

"சொல் மகளே.." என்றார் ஆயனர்..

"யாம் இந்நாட்டை விட்டு நீங்கியிருந்த காலத்தில் புதிதாக நிகழ்ந்த நிகழ்வுகளைக் கூறுங்களேன்.."

'எதை உரைக்க..?' ஆயனரின் இதயம் கனத்தது..

"மல்லையின் கடற்கரைக் குன்றை ஐந்து ரதச் சிற்பக் கோவில்களாக நம் மன்னர் நரசிம்மவர்மர் செதுக்கிக் கொண்டிருக் றார் அம்மா..

"அவர் கலைகளின் காதலன்.."

நாணத்துடன் உரைத்தாள் சிவகாமி.. அவள் இதயம் மென்மையானது..

"மெய்தான் குழந்தாய்.. அந்த ஐந்து ரதக் கோவில்களும் அவரைப் பொறுத்தவரையில் நினைவுச் சின்னமாம்.. எதற்கான நினைவுச் சின்னமென்றுதான் எமக்குத் தெரியவில்லை.."

சிவகாமிக்குத் தெரிந்திருந்தது.. அவள் மனதில் ரகசிய மகிழ்வு வந்தது.. விடியலின் போது அவள் எழுந்து கடற்கரைக்குச் சென்றாள்.. கடலலைகள் தாலாட்டிய சிறு குன்றின்மீது அந்த ஐந்துரதக் கோவில் வடிவமைக்கப் பட்டிருந்தது..

'பனி இன்னமும் முழுமை அடையவில்லையோ..

சிவகாமி அந்த ரதக்கோவிலைச் சுற்றிச் சுற்றி வந்தாள்.. எதன் பொருட்டு அக்குன்றில் நரசிம்மவர்மன் ரதக்கோவில்களை கட்டியிருக்கிறான் என்ற ரகசியத்தில் அவள் மனம் உறைத்திருந்தது.. அந்தக் குன்று எதற்கான நினைவுச்சின்னம் என்பதில் அவளது விழியோரம் மயக்கமும், இதழோரம் குறுநகையும் உதித்தன..

இயற்கையான பாறையை மேலிருந்து கீழ்நோக்கிச் செதுக்கித் தோற்றுவிக்கப்பட்ட ஒற்றைக்கல் கோவில் அது.. தேர் போல காட்சி தந்ததால் அதற்கு 'ரதம்.. என்று நாமம் சூட்டப்பட்டதாக ஆயனர் அவளிடம் சொல்லியிருந்தார்.. அக்கோவில்களின் மேல்பகுதி

விமானம் என்று அழைக்கப்படுகிறதாம்.. ரதக் கோவில்களில் கருவறை இருந்தன.. கருவறைக்கு இருபுறமும் வாயில் காப்போர்களாக துவாரபாலகரின் சிலைகள் வடிக்கப்பட்டிருந்தன..

ஐந்துரதக் கோவில் மாமல்லனின் அரிய கலை படைப்பாக இருந்தது.. ஐந்து ஒற்றைக்கல் கோவில்களும்.. சில விலங்கு சிற்பங்களின் தொகுதியும் அடங்கிய ஐந்து ரதங்கள் தெற்கிலிருந்து வடக்காக சரிந்த சிறு குன்றிலிருந்து செதுக்கப் பட்டிருந்தன..

மிகவும் பெரிதும்.. அழகானதுமான முதல் ரதத்தை அவள் சுற்றி வந்தாள்.. மூன்று தளங்கள் இருந்தன.. மேலே உள்ள இரண்டு தள்ங்கள் முடிக்கப் பட்டிருந்தன.. தரைத்தளம் முழுவதுமாக செதுக்கப் படவில்லை.. மேலே இருந்த இரு தளங்களிலும் ஒவ்வொரு கருவறை இருந்தது.. அதனுள் சோமாஸ்கந்தரின் சிற்பம் வடிவமைக்கப் பட்டிருந்தது.. அவைதவிர இரு தளங்களின் சுற்றுகளிலும் மிக அற்புதமான சிற்பங்கள் நிரம்பியிருந்தன.. மேலே இருந்த தளங்களுக்குச் செல்ல படிக்கட்டுக்கள் செதுக்கப்பட்டிருக்கவில்லை.. அந்தக் குன்றிலேயே பிறந்து வளர்ந்த சிவகாமிக்கு படிக்கட்டுக்கள் தேவைப் படவில்லை.. அவள் மிக எளிதாக.. சிற்பங்களில் கை பதித்து எம்பி மேலேறிவிட்டாள்..

தரைத்தளத்தின் கருவறை குடையப்படாமல் இருந்தது.. அதன் எட்டு மூலைகளிலும் அர்த்த நாரிஸ்வரர்.. ஹரிஹரன்.. சுப்பிரமணியன்.. பைரவன் வடிவில் சிவன்..

மேலும் இருசிவன்.. பிரம்மன்.. நரசிம்மவர்மப் பல்லவன்.. முதலானோரின் சிலைகள் செதுக்கப்பட்டிருந்தன..

நரசிம்மவர்மனின் சிறப்புப் பெயர்கள் பல்லவ கிரந்த எழுத்துக்களில் தரைத்தளம் முழுவதிலும் பொறிக்கப் பட்டிருந்தன.. அர்த்த நாரீஸ்வரர் சிற்பமும் அங்கிருந்தது..

சிவகாமி தரைத்தளத்தில் சாய்ந்து, நரசிம்ம வர்மனின் சிறப்புப் பெயர்களின் மீது சிரம் வைத்து இதழ் பதித்தாள்..

'என்னவனே...!'

அவள் தேகம் நரசிம்மவர்மனின் அண்மையைத் தேடியது.. இல்லம் திரும்பியவள் நீராடி புத்தாடை அணிந்து.. குழல் முடிந்து.. அதில் மலர் சூடி.. காஞ்சியை நோக்கிப் புறப்பட்டாள்..

"ஏகாம்பரேஸ்வரை தரிசித்து விட்டு வருகிறேன் தந்தையே.."

ஆயனர் மௌனமாக ஒப்புதலுடன் சிரத்தை அசைத்தார். சிவகாமி சென்றபோது கோவிலில் மக்கள் கூட்டம் குறைந்து காணப்பட்டது.. அவள் சன்னதிக்குள் செல்ல முனைந்தபோது கோவிலுக்குள் பரபரப்பு தென்பட்டது..

"மன்னர் நரசிம்மவர்மர் ஏகாம்பரேஸ்வரை தரிசனம் செய்ய வருகை தந்திருக்கிறார்.. விலகுங்கள்.."

சிவகாமியின் மனம் படபடத்தது.. அவள் ஆவலுடன் டி.. கோவில் பிரகாரத்தின் தூண் மறைவில் நின்று

கோவில் வாசலை ஆவலுடன் பார்த்தாள்.. அவள் விழிகள் நரசிம்மவர்ம பல்லவனைத் தேடின..

கோவில் வாசலில் ரதம் வந்து நின்றது.. நரசிம்மவர்மன் முதலில் இறங்கினான்.. இறங்கியவன் திரும்பி ரதத்திலிருந்து இறங்க ஓர் மாதரசிக்கு கரம் நீட்டினான்..

'எவர் அது..? நரசிம்மவர்மனின் அன்னையோ..?'

அல்ல என்பது மக்களின் வாழ்த்தொலியிலிருந்து புலப்பட்டது..

"வாதாபிவென்ற மன்னர்..! பல்லவகுலச் சக்கர வர்த்தி..! நரசிம்மவர்ம பல்லவர் வாழ்க...! பல்லவரின் மகாராணி..! மன்னரின் பட்டமகிஷி..! வானமாதேவி வாழ்க..!"

'என்ன...????...!!!'

சிவகாமியின் செவிகள் ஸ்தம்பித்தன.. அவளது நடை தளர்ந்தது.. விழிகள் இருண்டன.. அவள் இதயத்தின் மூலையில் கூரிய அம்பு பாய்ந்ததில் அவள் அக்கணமே மனதளவில் மரணித்தாள்..

வானமாதேவியுடன் இணைந்து நடந்து வந்த நரசிம்மவர்ம பல்லவன் சிவகாமியின் பார்வையை சந்தித்து விட்டான்.. அவளின் அதிர்ந்த பார்வை அவன் உயிரைக் குடித்தது.. மனதின் மூலையில் ஏற்பட்ட வலி அவனது அகம் முழுவதும் ஆக்ரமித்து அவனை வேதனையுறச் செய்தது..

'பாவி..!' அவன் இதயம் குமுறியது..

'இது போல நிகழ்ந்துவிடக் கூடாது என்பதற்க்காகத் தானே உனைத் தேடி வந்து அழைத்தேன்..? நீ மட்டும் சபதம் எனும் சிறையில் உன்னை பிணைத்துக் கொள்ளாமல் இருந்திருந்தால் அன்றே நமக்குள் மணம் நிகழ்ந்திருக்குமே.. இவ்வாறு எட்டி நின்று உரிமையற்றவளைப் போல நீ பார்க்க.. நான் உயிர்துடிக்க விலகிப் போகும் நிலை விளைந்திருக்காதே..

"தமையனுக்கு சன்னதி செல்லும் வழி மறந் போனதோ..?"

அடுத்து வந்த கவின்மலர்தேவியின் அதட்டலான தொனியில் வானமாதேவி நரசிம்மவர்மனின் வதனம் பார்த்தாள்.. வதனம் கண்டு அவள் அவனது அகம் காணும் முன்னரே அவன் வதனம் திருப்பி சன்னதிக்குள் விரைந்தான்..

சிவகாமியின் அருகே வந்த கவின்மலர்தேவி கர்வத்துடன் மிடுக்காக் அவளைப் பார்த்தாள்..

"அரசர் குலத்துக்கும்.. ஆடல் குலத்துக்கும்.. விண்ணுக்கும்.. மண்ணுக்கும் உள்ள தொலைவு என்பதனை மறவாதே.. நரசிம்மவர்மனின் தேவியாக பாண்டியகுல இளவரசி வானமாதேவி வருகை புரிந்து விட்டாள்.. அவனது பட்டமகிஷியாக அரியணையும் ஏறி விட்டாள்.. இளவரசன் நரசிம்மவர்மனை உனது கடை கண் பார்வையில் கட்டிப் போடலா' மன்னரா நரசிம்மவர்மன் வானமாதேவியின் கணவன்.. அவளுக்குச் சொந்தமானவன்.. அவனை நீ ஏறெடுத்தும் பார்க்க இயலாது.. இதுவே நீ இன்றுள்ள நிலை.. புரிந்து நட.."

சிவகாமி எப்படி நடப்பாள்..? அதற்கான சக்திதான் அவளை விட்டு விடைபெற்று விரைந்தேகி விட்டதே.. நரசிம்மவர்மனை இழந்தபின்பு எதன் பொருட்டு அவள் உயிர் வாழ்வாள்..?

சிவகாமி மயங்கிச் சரிந்தாள்.. கவின்மலர்தேவி விலகி நடந்தாள்.. ஏகாம்பரேஸ்வரரின் ஆலய மணி உரக்க ஒலித்து சிவகாமியின் மயக்கத்தை தெளிவித்தது..

"ஈசனே..!" சிவகாமி விம்மினாள்..

"போதும்..! இவ்வுலக வாழ்வின் மீதான பற்றை நான் அறுத்துக் கொண்டேன்.. இற்றுப் போன என் காதல் மனம் இறந்து விட்டது.. இனி மீதிருக்கும் வாழ்வை உம் காலடியில் கழிக்கப் போகிறேன்.. ஏகாம்பரேஸ்வரா..! நடனத்தை உபாசித்து.. தம் சன்னதியில் நடனமாடி மானிடர் ஏறெடுத்தும் பார்க்க அஞ்சும் பக்த சிரோண்மணியாக இந்த சிவகாமி வாழ்தல் வேண்டும் அய்யனே.. தம் காலடியில் யாம் சரணம்..!"

நரசிம்மவர்மன் வானமாதேவியுடன் ஏகாம்பரேஸ்வரரை தரிசனம் செய்து முடித்து வெளிவந்தபோது.. சிவகாமி சன்னதியின் முன்பாக தனை மறந்து நடனமாடிக் கொண்டிருந்தாள்.. அவள் விழிகள் நரசிம்மவர்மனை வெறுமையுடன் எவரையோ நோக்குவதைப் போல பற்றற்று நோக்கின..

"நம் பல்லவ நாட்டின் நடனசிரோண்மணி சிவகாமிச்செல்வி ஏகா பரேஸ்வரருக்கே தம் வாழ்நாளை

அர்ப்பணித்து விட்டாள் அரசே..! இனி அவள் கடவுளுக்கே சொந்தமானவள்.."

அர்ச்சகரின் வாய்மொழியில் நரசிம்மவர்மன் அதிர்ந்து நோக்கினான்.. அங்கிருந்த மானிடரை மறந்து.. விழிகள் எங்கோ ஓர் மோன நிலையில் சஞ்சரிக்க..

*"பித்தா..! பிறைசூடி..!*
*பெருமானே..! அருளாளா..!"*

என்று ஏகாம்பரரேஸ்வரரைத் துதித்துப் பாடியபடி ஆடிக் கொண்டிருந்த சிவகாமி தனது காதலை நிரூபணம் செய்து விட்டாள்..

அவளது வாழ்வில் நரசிம்மவர்மன் இல்லையென்று ஆனவுடன் துறவறம் பூண்டு ஏகாம்பரேஸ்வரரின் சன்னதியில் சேவை செய்து தன் வாழ்நாளைக் கழிக்க உத்தேசித்து விட்டாள்..

கடற்கரைக் குன்றின் ஐந்து ரதக்கோவில் அப்ப நரசிம்மவர்மப் பல்லவனின் இதயத்தில் ஏறி அமர்ந் விட்டது..

மனம் கனக்க.. விழிகள் பனிக்க.. அவன் சிவகாமியைப் பிரிந்து நடந்தான்.. இப்பிறவியில் சிவகாமியும் அவனும் சேர முடியாது என்பதில் அவன் மனம் பித்துப் பிடித்ததைப் போல ஆனது..

காஞ்சியில் ஏகாம்பரேஸ்வரரின் ஆலயமணி சிவகாமிக்கு அடைக்கலம் கொடுப்பதைப் போல ஒலித் க் கொண்டே இருந்தது..

முதல் ஸ்வரமான 'சந்தம் தந்த சொந்தம்..' நிறைவுற்றது.. அடுத்து இரண்டாவது ஸ்வரமான 'ரிதம் அற்ற ஸ்வரம்..' இசைக்க வந்து கொண்டிருக்கிறேன்..

<u>பின்னுரை :</u>

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுகுன்றம் வட்டம், மகாபலிபுரத்தில் உள்ள கடற்கரை சிற்பங்களை 1984-ல் 'உலகப் பண்பாட்டுச் சின்னம்.. என்று யுனெஸ்கோ அறிவித்தது..

7-ம் நூற்றாண்டில் பல்லவ நாட்டின் முக்கிய துறைமுகமாக விளங்கிய நகரம் இது.. மகாபலிபுரமான இது.. நர ம்மவர்ம பல்லவனின் சிறப்புப் பெயரான மாமல்லன் என்பதனைக் குறிக்கும் மாமல்லபுரமாகவும் அழைக்கப் படுகின்றது..

பல்லவ அரசன் நரசிம்மவர்ம பல்லவனே மாமல்லபுரத்தில் சிற்பக் கோவில்களை கட்ட ஆரம்பித்தவன்.. இங்குள்ள ஐந்து ரதக் (பஞ்சபாண்டவ) கோவில்களை அவனே கட்டினான்.. சிறுகுன்றின் மீது மாமல்லனால் கட்டப்பட்ட ரதக்கோவில் அது..

நரசிம்வர்மனான மாமல்லனின் காலத்துக்குப் பின்பு அவருடைய பேரன் பரமேஸ்வரன் மாமல்லபுரத்தில் இருந்த பாறைகளில் கடற்கரைச் சிற்பக்கட்டுமானங்களை கட்ட ஆரம்பித்தான்.. பரமேஸ்வரனின் மகனான இரண்டா நரசிம்மவர்மன் என அழைக்கப்பட்ட

ராஜசிம்மன் அக்கட்டுமானங்களை தொடர்ந்து கட்டி முடித்து வைத்தான்..

கணேசபுரமும்.. கடற்கரைக் கோவில்களும் ராஜசிம்மனால் கட்டப்பட்டவையே..

பல்லவர்களின் கட்டிடக் கலையையும்.. சிற்பக் கலையையும்.. காலங்கள் கடந்தும்.. இப்புவி உள்ளளவும் நினைவுறுத்திக் கொண்டிருக்கும்.. மாமல்லபுரத்துச் சிற்ப கட்டுமானங்களை பல்லவர்களே உருவாக்கினார்கள்..

மாமல்லபுரத்தின் கடற்கரைக் கோவில்களின் கட்டுமானமே பிற்காலக் கோவில்களுக்கு முன் மாதிரியாக விளங்கின..

ராஜராஜ சோழன் கட்டிய தஞ்சையின் பெரிய கோவிலும்.. ராஜேந்திர சோழன் கட்டிய கங்கை கொண்ட சோழபுரத்தின் கோவிலும்... இக்கோவில்களை முன் மாதிரியாக வைத்துக் கட்டப்பட்டவையே..

மாமல்லபுரத்தின் கதையைச் சொல்லி முடித்து விட்டேன்.. பல்லவர் காலத்தின் கதை இத்துடன் முடிகின்றது.. கல்கி ஐயா அவர்களின் 'சிவகாமியின் சபதம்.. புதினத்தில் வந்த சில கதாபாத்திரங்கள் இதில் வராமல் இருக்கலாம்.. புதிதாக சில பாத்திரங்கள் இப்புதினத்தில் புனையப் பட்டிருக்கலாம்.. எதுவாக இருப்பினும்.. கல்கி அவர்களின் ஆன்மாவும்.. தமிழ் பெருமக்களும் என்னை மன்னித்தருள வேண்டும்..

புதிய முயற்சி இது.. புதிதான முயற்சிகளுக்கு என்றுமே நமது 'கல்கி' ஐயாவின் வாழ்த்துக்களும்.. ஆசிர்வாதமும் தடையறக்கிட்டும் என்ற நம்பிக்கையுடன் அவர் கதையை எடுத்துக் கையாண்டுவிட்டேன்..

இனி அடுத்து வரும் 'ரிதம் அற்ற ஸ்வரத்தின்.. நாயகன்.. நாயகியாக.. பொன்னியின் செல்வனின் ஆதித்த கரிகாலனும்.. நந்தினி தேவியும் வருகை தரவிருக் கிறார்கள்..

இக்கதையை விட அக்கதையில் மாற்றங்கள் நிறைந்திருக்கும்.. எனது கோணத்தில் நந்தினி உயிர் பெற்று உலா வரப்போகிறாள்.. அவள் பக்கத்து நியாயங்கள் கல்கியின் கூற்றுப்படியே தெளிவுறச் சித்தரிக்கப்பட உள்ளன..

பல்லவர்களுக்கு விடைகொடுங்கள்.. சோழர்கள் வருகைபுரிய காத்திருக்கிறார்கள்..

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



# 24

*காலங்கள் கடந்தும் உன்னடி தொடரும்*
*நிழலாக என்றுமே நானிருப்பேன்..*

பெண்கள் எப்போதுமே கசப்பான உண்மை களைவிட இனிமை நிறைந்த பொய்களையே விரும்புவார்கள் என்று தாமோதரனின் உல்லாச நண்பன்

ஒருவன் போகிற போக்கில் கூறிய பொன்மொழி அவன் மனதில் எதிரொலித்தது.. சித்தார்த்தனைத் தவிர்த்து சில நண்பர்கள் அவனுக்கு உண்டு.. அதே போல தாமோதரனைத் தவிர்த்து பல நண்பர்கள் சித்தார்த்தனுக்கும் உண்டு..

அப்படியா ப்பட்ட நண்பர்களின் ஒருவன் உரைத்தது உண்மையாக இருக்கக்கூடுமோ என்று தாமோதரனுக்குத் தோன்றி வைத்தது..

உண்மையைச் சொல்லு.. உண்மையைச் சொல்லு.. என்று அவனை பிராண்டி எடுத்த நீரஜா.. ஆகட்டும் உண்மையைச் சொல்கிறேன் என்று அவன் ரெடியானதும்.. கண்களை துயரத்துடன் இறுக்கி மூடிக் கொண்டதில் அவன் உண்மையாகவே தலையில் அடித்துக் கொண்டான்..

"கஷ்டம்..! இப்ப என்னத்துக்கு இப்படி போஸ் கொடுக்கறிங்க..?"

"வேற என்ன செய்யனும்னு நினைக்கறிங்க.. நீங்க சொல்லப் போகிற காதல்கதையைக் கேட்டு ஆஹான்னு மகிழ்ந்து போகனுமா..?"

"காதல் கதையா..? ஹலோ.. `பனைக் குதிரையை ஓவரா பறக்க விடாதீங்க.. கொஞ்சம் தட்டி வையுங்க.. எனக்கு எந்தக் காதல்கதையும் இல்லை.."

தாமோதரனின் எரிச்சலான தன்னிலை விளக்கத்தில் விழிதிறந்து அவனையே இமைக்காமல் நீரஜா பார்த்து வைத்ததில்..

'இது என்னத்துக்காக..?' என்ற திகில் தாமோதரனைப் பற்றிக் கொண்டது..

"ஓ.." அவள் திரும்பவும் 'ஓ' போட்டாள்..

'இந்த 'ஓ..' எந்த 'ஓ..'?' தாமோதரன் திரும்பவும் மண்டை காய்ந்தான்..

"உங்ககிட்ட எந்தக் காதல் கதையும் இருக்காதுதான்.." நீரஜா சொல்லிய விதத்தில் தாமோதரன் கதி கலங்கிப் போனவனாக..

"ஐயையோ.." என்று அலறினான்..

'பேசுவதையும் பேசிவிட்டுக் கூப்பாடா போடுகிற' என்று கொலைவெறியுடன் அவனை முறைத்த நீரஜாவிடம்..

"நான் அப்படி மீன் பண்ணலைங்க..?" என்று அழ ாட்டாத குறையாக விளக்கம் சொல்லப் போனான்..

"என்ன மீன் தாமு..? விரால் மீனா..? வஞ்சிர மீனா..?"

கன்னத்தில் கை வைத்து அவர்களின் வாக்கு வாதத்தை செவி மடுத்துக் கொண்டிருந்த சித்தார்த்தன் வெகு அக்கறையாக வினவி வைத்தான்..

"அதை உன் வீட்டு சமையல்கார' கேளுடா.."

"கேட்டுட்டாப் போச்சு... அதுக்கேண்டா நீ பண்ணையில போட்ட மீன் துண்டத்தப் போல இப்படிப் பொரியற..?"

"டேய்..! நண்பா..! சித்தார்த்தா..! கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு இருடா.."

"இல்லைன்னா..?"

"போதிமரத்துக்குப் போ.."

"புத்தனாகிற ஆசையெல்லாம் எனக்குக் கிடையாது.."

"அதெப்படி இருக்கும்.. நீதான் லேப்டாப்புல அமானுஷ்யத்தப் பத்தி ஆராய்ச்சி பண்ணுகிறவானச்சே.. அதையாவது நோண்டு.."

"நீதான் அப்ஜெக்ட் பண்ணினியே.."

"அது அப்ப.. இது இப்ப.."

"இப்ப எனக்கு மூடு மாறிருச்சு.. ஏன் நிறுத்தி விட்ட நீரு..? உன் சண்டையை கன்டினியு பண்ணு.."

"அண்ணா..! வேணாம்.. நான் கடுப்பில் இருக்கேன்.. உலகத்துல எத்தனை பேர் இருக்காங்க.."

"அதுக்கென்ன நீரு..?"

"உனக்கு உயிர் நண்பன்னு பிரண்டு பிடிக்க இவர்தான் கிடைச்சாரா..?"

"ம்ஹூம்.. விதி வலியது சிஸ்டர்.."

"உன்னாலேதான்.. உன் பெஸ்ட் ரண்டுக்கிற தினாலதான் நான் இந்த மூஞ்சிகூடல்லாம் பேச வேண்டியிருக்கு.."

"ஐ கான்ட் பிலிவ் திஸ்.."

"எதை மீன் பண்ற..?"

"இவன் காத்து உனக்கும் அடிக்குதா..? மீனை விடு.. விசயத்துக்கு வா.. இவன் என் பிரண்டுங்கிறதுக்காகத்தான் உனக்கு இவன்மேல சாப்ட் கார்னர் வந்துச்சா..?"

"சாப்ட் கார்னரா..? இவர் மேலா..? நோ.. நோ.."

நீரஜா தாமோதரனை முறைத்த முறைப்பில் நிச்சயமாக மிருதுத்தன்மை இல்லை.. விட்டால் கல்லைத் தூக்கி அவன் தலையில் போட்டு விடும் கடினத் தன்மைதான் இருந்தது..

"அதானே.. உங்களுக்காவது.. என்மேலே சாப்ட் கார்னர் இருக்கிறதாவது.. அதெல்லாம் சுத்த ஹம்ப ஹார்டு கார்னர் வேணும்னா இருக்கும்.."

அவளையே தீர்க்கமாக பார்த்தபடி.. தீர்மானமாக பேசிய தாமோதரனின் பார்வையைச் சந்தித்த நீரஜாவின் மனம் அவன் வார்த்தைகளில் புண்பட்டது.. அதை அவளது கண்கள் உணர்த்தியதில் அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. யுகம்.. யுகமாய் அவளை அறிந்தவனைப் போன்ற உணர்வைக் கொண்டது அப்பார்வை..

அப்பார்வையில் பிணைந்த தனது பார்வையினை மீட்க முடியாமல் தவித்துப் போனாள் நீரஜா..

அப்பார்வைக்குப் பின்னால் மறைந்திருக்கும் ஈயங்கள்தான் என்ன..?

மன்னன் மகள்..! மாளிகையில் வசிப்பவள்..! ஓட்டு வீட்டில் வசிக்கும் ஓர் சாமான்யனின் மீது சொந்தம் கொள்வாளா என்ன..?

வானத்து விண்மீனை அண்ணாந்து பார் ாம்.. அதன் அழகினை வியக்கலா அந்த அளவுக்குத்தான் மண்மீனால் முடியும்.. அதன் அருகினில் நீந்த ஆசை கொண்டால் முடியுமா..?

தாமோதரன் அவ்வாசையைக் கொள்ளவில்லை.. வானத்து விண்மீனை தரைக்கு அழைக்க நினைக்கவில்லை.. வானத்தில் நீந்திவிட பேராசைப் படவில்லை..

அவனுக்கான எல்லைகளை என்றுமே அவன் டந்ததில்லை.. அந்த எல்லைகளைச் சுற்றித் தன் பார்வையினால் நீரஜா வேலியிட்டபோது விருப்பத்துடன் அதில் சிக்கிக் கொண்டான்.. வேலியைத் தாண்ட விழைந்ததில்லை.. அது எதனால் என்ற ஆராய்ச்சிக்குள் போக நினைத்ததுமில்லை..

அது விடுபட விரும்பாத வியூகமாக இருந்தது.. அந்த வியூகத்தில் அவனை சிறைபிடித்த நீரஜாவின் மனதில் என்னதான் உள்ளது என்று ஆராயும் வேலைகளை அப்புறத்தில் தள்ளிவிட்டு.. நீரஜாவைப் பின்தொடரும் ஆட்டுக்குட்டியைப் போல ஆகிப் போனான் தாமோதரன்..

இது குறித்த சித்தார்த்தனின் கேலிகளுக்கும் கிண்டல்களுக்கும் அவன் கவலை கொண்டதில்லை..

"ஏண்டா இப்படி இருக்க..?"

"என்னவோ இருக்கேன்.."

"உனக்கு நான் பாஸா இல்லை என் தங்கை பாஸா..?"

"எதுக்குக் கேட்கிற..?"

"நான் ஒன்றைச் சொல்லி அதுக்கு எதிரா என் தங்கை ஒன்றைச் சொன்னா நீ அவ சொன்னதைத்தான் செய் முடிக்கிற.. தாமு.. இது சித்தார்த்தன் குருப் ஆஃப் கம்பெனிஸ்.. நீரஜா குருப் ஆஃப் கம்பெனிஸ் இல்லை.."

"அதாண்டா எனக்கும் ஆச்சரியமா இருக்கு.."

"எது..?"

"உன் தங்கைக்கு இருக்கிற அறிவுக்கும், ஆர்கனைசிங் பவருக்கும் இந்நேரத்துக்கு அவங்க நீரஜா குருப் ஆஃப் கம்பெனிஸை ஆரம்பிச்சிருக்கனுமில்ல..? ஏன் ஆரம்பிக்கல..?"

"என்னை உனக்கு போஸ்ட் மேனா ஆக்கறியா..?"

"ஏண்டா..?"

"இந்தக் கேள்வியை அவகிட்டக் கேளு.. அவளுக்குத் தான் அறிவும் ஆர்கனைசிங் பவரும் இருக்கு. என் மண்டையில களிமண்தான் இருக்கு.. வந்துட்டான் பேச.."

"உனக்கேண்டா இத்தனை பொறாமை..?"

"பேசாதே.. சொல்லிட்டேன்.. அவ கம்பெனி ஆரம்பிச்சா நீ என் கம்பெனியில இருந்து கழண்டுக்கிட்டுப் போயி அவ கம்பெனியில ஜி.எம்மா ஆகிருவ போல.."

இதைச் சொல்லும் சித்தார்த்தனை இமைக்காமல் பார்க்கும் தாமோதரன் ஒர்நாளும் அதை மறுத்துச் சான்னதேயில்லை..

நண்பர்களைப் பிரிக்கும் பாவத்தைக் கட்டிக் கொ வேண்டாம் என்று நீரஜா தனிக் கம்பெனியை ஆரம்பிக்கும் ஐடியாவை மேற்கொள்ளவே இல்லை.. அதற்கான காரணமாக அவள் நிருபமா குருப் ஆஃப் கம்பெனிஸை சுட்டிக் காட்டினாள்..

"அப்பாவோட கம்பெனியை கவனிக்கிறதுக்கு அவருக்கு ஒத்தாசையா நான் இருந்தாகனும். நீதான் தனிச்சு நிக்கனும்னு தனிக் கம்பெனியை ஆரம்பிச்சு அப்பாவை தனியே விட்டேன்னா என்னாலயும் அதுபோல சுயநலமா யோசிக்க முடியாது.."

இதுதான் நீரஜா..! அவள் தனித்தன்மையுடன் இருந்தாள்.. அதே சமயத்தில் தன் தாய்தந்தையரின் பாரம்பர்யப் பெருமைகளையும், தொழில்களையும் கட்டிக் காப்பவளாகவும் இருந்தாள்.. நிருபமா குருப் ஆஃப் கம்பெனீஸில் விவேகானந்தனுக்கு அடுத்த இடத்தில் 'ஜாயின்ட் எம்.டி' என்ற பதவியுடன் நிர்வாகப் பொறுப்பேற்று வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருந்தாள்.

"அவங்க சாதிக்கப் பிறந்தவங்கடா சித்தார்த்..."

"நீ என்னை சோதிக்கப் பிறந்தவண்டா தாமு.."

"உங்க ஸ்டேட்டஸை மெயின்டெயின் பண்றதில கவனமா இருக்காங்க பாரு.. அங்க நிக்கிறாங்கடா அவங்க.."

"நீ அவளுக்கு காவடி தூக்கறதிலேயே கவனமா இரு.."

என்னதான் சித்தார்த்தன் இடித்துரைத்தாலும் தாமோதரன் நீரஜாவுக்கு பூப்போட்டு வணங்குவதை நிறுத்தவே மாட்டான்..

அதற்கான பிரதிபலனாக எதையுமே அவன் எதிர் பார்க்கவில்லை. நீரஜாவின் ஒர் சிறு பார்வைக்கும் தன்னையும் அறியாமல் அடிபணிந்தான் தாமோதரன்..

அந்தப் பார்வையின் சுழல் வீச்சில் காலங்காலமாய் அவனைப் பிணைத்திருக்கும் இரும்புப் பிணைப்பு வெளிப்படுவதன் மாயம்தான் என்ன..?

***ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'***

இரண்டாம் ஸ்வரத்தில் தொடர்ந்து வரும்..